# அன்பு மொழி கேட்டு விட்டால்



1

'ரொம்ப அழகா இருக்குடீ. இந்த முத்துமாலை விலையும் குறைவா இருக்கு. செயற்கை மாதிரியே தெரியலைடி, வாங்கிக்க' என்றாள் சாரதா.

பூங்கோதையின் பக்கத்து வீட்டுக்காரப் பெண். அவளது சிநேகிதியும் கூட.

'வேண்டாம். சாரு இதை வாங்கறதுக்கு நல்லதா ரெண்டு புத்தகம் வாங்கிக்குவேன்' என்றாள் பூங்கோதை.

'ஆரம்பிச்சுட்டாடா ஏய்! உங்க வீட்ல இருக்கறதே நாலு ரூம். அதுலயும் புத்தகக் கடை பரப்பிட்டீன்னா.. நாளைக்கு உன்னைப் பாக்க வர்ற மாப்பிளை ஓடியே போயிடுவான்' என்றாள் சாரதா.

'அதென்னமோ.. நிஜம்தான்..' என்றாள் பூங்கோதை.

சாரதா கண்களைச் சுருக்கிக் கொண்டு ஒரு நிமிடம் பார்த்தாள். இவள் பழைய பூங்கோதை இல்லை. இரண்டு மாதங்களாகவே ஏதோ ஒரு மாற்றம் தெரிகிறது. கண்களில் தெரியும் குளிர்விக்கும் பார்வை. சுறுசுறுப்பு. எதற்கெடுத்தாலும் வாதம் செய்யும் பாங்கு எல்லாம் எங்கே போயிற்று.

'என்னடி.. பூங்கோதை உலக அதிசயம். நான் சொன்னதை உடனே ஒத்துக்கிட்டே?' என்றாள்.

'உண்மைதானே? அதனால ஒத்துக்கிட்டேன்.'

'என்னம்மா அந்த அதிசயமான உண்மை?' என்றாள் சாரதா கிண்டலாக.

'என்ன உண்மைன்னா நமப ஊர் ஆம்பளைங்களுக்கு அறிவார்ந்த பெண்களை ரசிக்கப் பிடிக்கும். ஆனா, அவர்களை வாழ்க்கைத் துணையாத் தேர்ந்தெடுக்கப் பிடிக்காது' என்றாள்.

சாரதா பதில் சொல்ல வாயைத் திறந்தாள். அதற்குள் பதில் வேறொரு இடத்தில் இருந்து வந்தது.

'வெல் ஸெட் மிஸ் பூங்கோதை' என்று.

திரும்பிப் பார்த்தாள்.

மதுசூதனன் புகழ் பெற்ற லாயர் கோவை நகரில்.

அப்போதைக்கு அவர்கள் நின்று கொண்டிருந்தது. கோபியில் ஒரு நகைக் கடையில் செயற்கை முத்துக்களாலான ஆபரணங்கள் விற்கும் கடை.

பூங்கோதை புன்னகைத்தாள்.

'சார்... வணக்கம்! நீங்க.. எங்கே.. இங்கே?'

'வழக்கம் போலத்தான்.. தோட்டம் பாத்துட்டுப் போலாம்னு வந்தேன். அப்புறம் எப்படி இருக்கீங்க!' என்றான் இயல்பாக.

'இருக்கேன்.. சார்..' என்றாள்.

அவன் கண்கள் அவளை ஊடுருவிப் பார்த்தன. அவளும் நேர்ப்பார்வை பார்த்தாள். அவன் பார்வையில் 'ஏன் இப்படியாச்சு?' என்ற கேள்வி இருந்ததென்றால், 'என் பக்கம் தவறு ஏதும் இல்லை' என்ற பதில் அவள் பார்வையில் இருந்தது.



அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

'பூங்கோதை. நான் எப்பவும் உங்க பிரண்ட்தான் நீங்க எப்பவும் எந்த உதவிக்கும் வரலாம்' என்றான்.

'தேங்க்ஸ்.. சார் தெரியும். நீங்க.. வேற மாதிரின்னு.. எனக்கும் தெரியும்.' என்றாள் பூங்கோதை.

இரண்டு பேரும் மிகத் திறமையாகத் தாங்கள் பேசிக் கொள்கிற விஷயம் அவர்களுக்கு மட்டுமே புரிகிற மாதிரிப் பேசிக் கொள்வதை சாரதா ஒரு ஆச்சரியத்தோடு கவனித்துக் கொண்டிருந்தாள்.

'நான் டிராப் பண்ணட்டுமா?' என்று அவன் கேட்க.

'ஐயோ! சார். அப்படியெல்லாம் சட்டுன்னு கார்ல போய் இறங்கினா எங்கம்மாவுக்கு ஹார்ட் அட்டாக்கே வந்துடும்..' என்றாள்.

'ஐயய்யோ... அவர்களுக்குக் கடவுள் நீண்ட ஆயுள் கொடுக்கட்டும்' என்று சிரித்தான். அவளும் சிரித்தாள்.

இரண்டு பேரும் பேசிக் கொள்ளட்டும் என்று சாரதா சற்று விலகிச் சென்று நகைகளைப் பார்வையிட ஆரம்பித்தாள்.

பூங்கோதையுடன் பேசியபடியே அவளை ஒரு மூலைக் கருகில் அழைத்துச் சென்றான். பிறகு மெல்லிய குரலில்.

'பூங்கோதை பூவேந்தனுக்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கறேன். அவன் கல்யாணம் ஃபிக்ஸ் ஆனதுக்கப்புறம் நா அவனைச் சந்திக்கவேயில்லை. இப்பக் கூட ஒண்ணு மில்லே. நா அவன்கிட்டே பேசறேன்.''

'வேண்டாம் சார்!'

அவன் மேலும் தீவிரமான குரலில்.

'விடக்கூடாது.. பூங்கோதை. நீங்க மட்டும் ஸ்ட்ராங்கா.. நின்னீங்கன்னா, கேஸ் போட்டு அவன் மானத்தை வாங்கிரலாம். நான் சாட்சி சொல்றேன்..' என்றான்.



அவள் அவனை வேதனையுடன் பார்த்தாள். பிறகு கசப்பானதொரு புன்னகையுடன் சொன்னாள்.

'சார்! நான் சொல்றேனேன்னு தப்பா நினைக்காதீங்க.. உறவுகள்.. இயல்பா.. மனசின் ஆழத்தில் இருந்து வரணும். அதில கொஞ்சம்.. சந்தேகம்.. வந்தாலும்.. அது சரி வராது.. ஒரு விஷயத்துல நான் சந்தோஷமா இருக்கேன். இந்த மட்டும்.. இப்பவே ஆள் எப்படின்னு தெரிஞ்சுதேன்னு.. இன்னொரு விஷயத்துல நான் என் மேலயே கோபமா இருக்கேன்.. எப்படி ஆள் தரா தரம் தெரிஞ்சுக்காம நான் இதுல சிக்கினேன்னு.. சார்.. ருத்ரன் சொல்றாரு.. திருமணம் செய்து கொள்ள.. முடிவெடுக்கும்போதுதான்.. உண்மையான.. காதல்.. ஆரம்பிக்குதாம்.. நல்ல வேளை.. அப்படி ஒரு முடிவுக்குப் பின்னே காயப்படற நிலைமை.. இல்லாம.. இப்பவே.. தப்பிச்சேனேன்னு..' என்றாள்.

அவன் அவள் உணர்வுகளைப் புரிந்து கொண்டவனாக அமைதியாகக் கேட்டு உள்வாங்கிக் கொண்டான்.

'ஆனா அதுக்காக.. நான் மூலைல முடங்கிர மாட்டேன் சார்!' என்றாள் பூங்கோதை அழுத்தமாக.

'தட்ஸ்.. தி ஸ்பிரிட்' என்று பாராட்டினான்.

'பை தென்.. இப்பவும் சொல்றேன்.. உங்களுக்கு.. ஏதாவது ஹெல்ப்.. வேணும்னா எப்ப வேண்ணா.. கேளுங்க..',என்று விசிட்டிங் கார்டு நீட்டினான்.

வாங்கிக் கொண்டாள்.

இரண்டு எட்டு எடுத்து வைத்தவன் திரும்பி வந்து..

'எனக்கு.. பூவேந்தனோட பழகினதுல கிடைச்ச.. ஒரே.. ரிவார்ட்.. என்ன தெரியுங்களா பூங்கோதை? உங்களோட நட்புதான்' என்றான்.

தலையை ஆட்டி விடை பெற்றுக் கொண்டு கிளம்பினான்.



அதற்குப் பிறகுதான் சாரதா வந்து அவளோடு சேர்ந்து கொண்டாள்.

'யாருடி... அது?' என்றாள்.

'நண்பர்!' என்றாள் பூங்கோதை சுருக்கமாக.

கையிலிருந்த விசிட்டிங் கார்டைப் பார்த்தாள். மதுசூதன னுடைய விசிட்டிங் கார்டைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் தனக்கு எங்கே வரப் போகிறது என்று எண்ணிக் கொண்டாள்.

அப்போது அவளுக்குத் தெரியவில்லை. அவசியம் விரைவில் வரப் போகிறது என்று.

★ ★ ★

**த**ரையில் மெத்தை விரித்துப் படுத்திருந்தாள் பூங்கோதை.

கோபியை அடுத்து ஒரு சின்ன கிராமம். அப்பாவும், அம்மாவும் அவ்வப்போது கிடைக்கிற வேலைகளைச் செய்து வந்தார்கள் விவசாயக் கூலிகள்.

அவள் சொந்த முயற்சியில் பிடிவாதம் பிடித்து ஒரு பட்டப் படிப்பை முடித்திருந்தாள். கோபியில் ஒரு புகழ் பெற்ற வக்கீலிடம் உதவியாளராய் இருந்தாள். அவரோடு தொடர்புடையவர்தான் மதுசூதனன். அவளது சீனியர் லாயர் முத்துசாமி.. ஈரோட்டுக்குப் போய் விடுவார். அவள் தான் அலுவலக நடைமுறைகளைப் பார்த்துக் கொண்டாள்.

ஓரளவு சம்பளமும் கொடுத்தார். அந்தக் கிராமத்து வாழ்க்கைக்கு அது போதுமானதாக இருந்தது. இப்போதெல்லாம் அம்மாவைக் கூலி வேலைக்கு அனுப்ப அவள் சம்மதிப்ப தில்லை. அப்பா மட்டும் போய் வருவார். அதுவும் கூட கடினமான உழைப்பில்லாமல் ஒரு மேற்பார்வை மாதிரி ஏதாவது வேலைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

இப்படித்தான் ஒரு நாள்!

பூவேந்தனைச் சந்தித்தாள்.

அன்றைக்கு முத்துசாமி கொடுத்த வேலையெல்லாம் முடித்து விட்டாள். பிறகு வழக்கம் போல் ஒரு ஆங்கில நாவலை எடுத்துப் படிக்க ஆரம்பித்திருந்தாள்.

மில்ஸ் அன்ட் பூன், பார்பரா கார்ட்லஸ்ட் பெரி மேஸன் என்று எதையாவது படிப்பாள். அவளுடைய கல்லூரிப் பேராசிரியர் சொன்னார். ஆங்கிலம் சரளமாகப் பேச வேண்டு மென்றால் நிறையப் புத்தகங்கள் வாசிக்க வேண்டுமென்று அதிலிருந்து ஒரு லெண்டிங் லைப்ரரியில் சேர்ந்து புத்தகங்கள் எடுத்து வாசிக்க ஆரம்பித்திருந்தாள்.

பூவேந்தன் ஒரு பிஸினஸ் புள்ளி. நிறையப் பவர்லூம்கள் வைத்துத் துணிமணிகள் தயாரித்துக் கொண்டிருந்தான். பேச்சில் தீர்க்கமான சிந்தனைகள் தொனிக்கும்.

'மேடம்! இதெல்லாம்.. என்ன கதைகள் போலியான கற்பனைகள். வாழ்க்கையைச் சந்திக்கிற மாதிரியான.. சிந்தனைகளை வளர்த்துக்கணும்.. மேடம்! ஃப்ரெட்ரிக் ஃபோர்சித்.. ஜெஃப்ரி ஆர்ச்னனர்ல்லாம் படிங்க.. கதை வேணுமா.. சிட்னி.. ஷெல்டன், இர்விங். வாலஸ்.. படிங்க.. செய்திகள் வேணும்னா.. நம்ம.. டான்.. பிரவுன்.. படிங்க.. பாஸிடிவ் திங்கிங் வேணுமா.. உதயமூர்த்தி.. படிங்க.. நார்மென் வின்சென்ட்.. பீல்.. காப்மேயர் ஷிவ்.. கேரா.. எல்லாம் படிங்க..' என்று அவன் பேசப் பேச அவள் கண்ணிமைக்க மறந்து கேட்டாள்.

தீர்க்கமான சிந்தனை. நடைமுறைக்கு ஏற்ற கருத்துக்கள் என்று ஒரு வியப்பு.

நட்பாக மலர்ந்தது!

சில நேரம் மணிக்கணக்கில் அமர்ந்து வாதம் செய்வார்கள். அவனுக்கும் அவள் நட்பு பிடித்திருந்தது.



'மேடம்! நீங்க கிராமத்தில் பூத்த லில்லி.. மாதிரி..' என்றான் ஒரு நாள்.

அவனோடு சேர்ந்துதான் அவள் தன் பொது அறிவை வளர்த்துக் கொண்டாள்.

'அந்தக் காலத்துலயெல்லாம்.. ரென் அண்ட் மார்ட்டின்னு கிராமர் புக் அதவச்சு ஆங்கிலத்தைக் கரைச்சுக் குடிப்பாங்க..' என்றான் ஒரு நாள்.

'அந்தக் காலத்துலயா? சரிங்க தாத்தா..' என்றாள் அவள் கிண்டலாக.

அவன் குறும்பாக.. 'மேடம்.. யார் சொன்னது.. நான் தாத்தான்னு.. இளைஞன்.. கொய்ட்.. யங்.. எல்லா.. இளைஞர்களைப் போலவும்.. எனக்கும்.. எல்லா.. எண்ணங்களும் உண்டு..' என்றான்.

பேச்சு இப்படித் திரும்பும் என்று எதிர்பார்க்காத அவள் என்ன பேசுவது என்று திகைக்க வழக்கம் போலவே தீர்க்கமாகத் தான் அவளை விரும்புவதைச் சொன்னான்.

அவள் விழித்தாள்.

'சார்! நான் ரொம்ப வசதி குறைவான.. குடும்பத்துப் பொண்ணு காதல் எல்லாம் எனக்கு லக்ஸுரி' என்றாள்.

அவன் சிரித்தான்.

'காதல் யாருக்குமே லக்ஸுரி கிடையாது மேடம்! உலகம் முழுக்க.. எல்லா.. உயிரினங்களுக்கும் பொதுவான.. விஷயம்..' என்றான்.

மெதுமெதுவாக அவளும் தன் சம்மதத்தை வெளியிட்டாள்.

ஓராண்டு முழுவதும் நட்புத் தொடர்ந்தது இரண்டு நாட்களுக்கு ஒரு முறையாவது ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிக் கொண்டு எட்டிப் பார்த்து விட்டுப் போவான்.



அவளுக்கும் அவன் வந்து பார்க்காத நாளெல்லாம் நேரமே ஓடாது போலிருக்கும். எல்லாவற்றையும் மறந்து விடுவாள். இன்னொரு வகையில் இந்தக் காயம் அவள் மனத்தைப் பக்குவப்படுத்தியதோ என்று கூடத் தோன்றியது.

இந்த மதுசூதனனைப் பார்த்திருக்கவே வேண்டாமோ என்று தோன்றியது.. பேருக்கு ஏதோ ஒர தொங்கட்டானை மட்டும் வாங்கிக் கொண்டு வீடு வந்தார்கள்.

மறக்க நினைத்திருந்த நினைவுகளெல்லாம் குபுகுபு வென்று நீரூற்றுப் போல் கிளம்பியது.

படுக்கையில் படுத்தவள் அந்தக் கடந்த காலச் சிந்தனை களில் ஆழ்ந்து போனாள்.

ஆனால், என்ன ஆச்சரியம்!

அந்தக் கோபம், வருத்தம் எல்லாம் வடிந்து போய் ஏதோ ஒரு வெளியாள் டாகுமென்டரி படம் பார்ப்பது போல் மனத்திரையில் காட்சிகள் ஓடுவதை அவள் ஒரு வெற்று மனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.



2

தொட்டுப் பார்த்தாலே நல்ல காய்ச்சல் தெரிந்தது.

'பாரு, புள்ளே. நல்லாக் கொதிக்குது. நீ ஒண்ணும் இன்னைக்கு வேலைக்குப் போக வேண்டாம் என்னொ?' என்றாள் பச்சையம்மாள்.

அவளால் எழுந்திருக்கவே முடிய வில்லை. எனவே, அவளுக்கும் வேறு வழியிருக்கவில்லை.

'சரிம்மா' என்று முணுமுணுத்தாள்.

கண்ணயர்ந்து விட்டாள்.



நான்கு நாட்கள் பகலா, இரவு என்றே தெரியாத நிலையில் காய்ச்சலில் கிடந்தாள். ஐந்தாம் நாள் தான் ஓரளவு தெம்பு வந்தது.

பச்சையம்மாள் கஞ்சி காய்ச்சிக் கொண்டு வந்து கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

'கொஞ்சம்.. குடிச்சுக்க சாமி.. என்ற ராசாத்தியில்ல.. கண்ணுமணியில்ல. பொன்னுமணியில்ல..' என்று.

'போம்மா.. இன்னைக்கும் கஞ்சியா.. நல்லா சுருக்குன்னு.. காரமா.. குழம்பு வச்சுக் குடும்மா..' என்று சிணுங்கினாள் பூங்கோதை.

'சரி வச்சுத் தாரேன்.. இப்ப இதைக் குடிச்சுக்க... நாளைக்கு நீ கேக்கற மாதிரி வச்சுத் தாரேன்..' என்றாள்.

'ஆமா.. உன்ற புள்ளைய மடியிலே போட்டுத் தாலாட்டி சோறூட்டு' என்று கிண்டல் செய்தான் நாட்ராயன். அவள் தந்தை. ஆனாலும் ஒரு சின்னத் தட்டில் எலுமிச்சை ஊறுகாய்த் துண்டைக் கழுவிக் கொண்டு வந்து வைத்தான்.

'இந்தா.. இதைக் கொஞ்சமாத் தொட்டுகிட்டு.. கஞ்சியை லபக் லபக்குன்னு குடிச்சுப் போடு... நடக்கறதுக்குத் தெம்பு.. வேணுமல்லோ' என்றான்.

அவள் ஒரு வழியாகச் சமாதானம் ஆனாள். கஷ்டப்பட்டுக் கொண்டே கஞ்சியைக் குடித்து முடித்தாள்.

அன்றைக்கு மாலைதான் மெதுவாக வந்து வீட்டுக்கு முன்பாக இருந்த அந்த இடத்தில் ஒரு சேரைப் போட்டுக் கொண்டு அமர்ந்து இருந்தாள்.

தனக்குப் பிடித்த அந்த நாவலாசிரியையின் நாவலைப் படித்துக் கொண்டிருந்தாள். வீட்டைச் சுற்றிலும் செடிப்புதர் களாலான வேலி. முன்னால் இரண்டு மூலைகளிலும் இரண்டு தென்னை மரம். ஒரு பக்கத்தில் ஒரு முருங்கை மரம். அதுபோக

நான்கைந்து பூச்செடிகள் என்று வைத்திருந்தார்கள். பின்னால் இருந்த இடத்தில் வாழை மரம் வளர்ந்திருந்தது. ஒரு பக்கம் பாகற்காய்ப் பந்தலில் தொங்கியது. இரண்டு மூன்று ரோஜாச் செடிகள் என்று வைத்திருந்தார்கள்.

ஓட்டு வீடு.

ஒரு சின்னச் சமையலறை. ஒரு சின்ன அறை. இரண்டு அறைகளில் நீளத்துக்கும் சேர்ந்து ஒரு கூடம். வெளியே வந்தால் இரண்டு பக்கமும் திண்ணை. இதுதான் அவர்கள் மாளிகை.

அந்தக் கூடத்தில் ஓரத்தில் இரண்டு ஸ்டீல் ராக்குகளில் அவளுடைய புத்தகங்கள் அந்தக் குக்கிராமத்துக்கு அது ஒரு மிக அதிசயமான விஷயம்.

பூங்கோதை அவ்வளவு சீக்கிரம் யாருக்கும் புத்தகம் இரவல் கொடுக்க மாட்டாள். புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்கக் கூடிய ஆளா என்று பார்த்துத்தான் கொடுப்பாள்.

அவளுடைய லாயர்தான் அந்த விஷயத்தில் அவளுக்கு முன்னோடி. அவர் அப்படித்தான். தன் புத்தகங்களை யாருக்கும் கொடுக்க மாட்டார். சட்டம் சம்பந்தமான புத்தகங்கள்.

'என் ஆபீசுக்கு வாங்க. எவ்வளவு நேரம் வேண்ணாலும் உட்கார்ந்து படிங்க.. ரெஃபரன்ஸ் எடுங்க.. எனக்கொண்ணும் ஆட்சேபணையில்லை.. ஆனா, புத்தகம் மட்டும் வெளியே குடுக்க மாட்டேன்' என்பார்.

அதற்கேற்ற மாதிரி ஒரு வட்ட மேஜை. அதைச் சுற்றி மூன்று சேர்கள் என்று கூடப் போட்டு வைத்தார். அப்படி வந்தவன்தான் பூவேந்தன். பி.எஸ்ஸி முடித்திருந்தான். வக்கீல் படிப்புக்கு என்ட்ரன்ஸ் எழுத வேண்டும் என்ற எண்ணத்தில் வந்தான்.



அதற்குத் தேவையான புத்தகங்களும் அங்கே வாங்கிப் போட்டிருந்தார் முத்துசாமி. ஆனால், அந்த ஆண்டு அவனுக்குக் கிடைக்கவில்லை. அதனால் தபாலில் எம்.பி.ஏ. சேருகிறேன் என்று சேர்ந்து விட்டான். எனினும் அடிக்கடி வந்து அங்கே வருகிற லாயர்களிடம் பேசிக் கொண்டிருப்பான்.

அப்படிப் பழகியதுதான் பூங்கோதையிடம். அவள் புத்தக ஆர்வம் பார்த்துத்தான் பிடித்துப் போனது.

நாவலில் ஆழ்ந்து போயிருந்த பூங்கோதை வாசல் தட்டியை யாரோ நகர்த்துவது தெரியத் திரும்பினாள் பூங்கோதை.

தயக்கத்துடன் நின்று கொண்டிருந்தாள் ஐந்தரை அடி உயரத்தில்.. ஆகிருதியாக நிற்கிற இளைஞனைப் பார்த்தவுடன் பச்சையம்மாள் 'அதாரு.. யாருங்கோ? உங்களுக்கு யாருங்கோ.. வேணும்?' என்று வந்தாள் பரபரப்பாக.

ஒரு நிமிடம் மலைத்துப் போய் நின்ற பூங்கோதை சுதாரித்துக் கொண்டாள்.

'அம்மா.. அவரு.. வக்கீலய்யாவுக்கு.. ரொம்ப வேண்டிய வரு..' என்றாள்.

'வாங்க.. சார்.. உள்ளே வாங்க?' என்று அழைத்துப் போனாள்.

'அப்படியா.. சாமி?' என்று பச்சையம்மாவும் உள்ளே வந்தாள். அவசர அவசரமாக அவள் கலக்கிக் கொண்டு வந்த மோரை வாங்கிக் குடித்தான்.

'என்ன.. ஆச்சு.. கோதை?' என்றான். அவள் புன்னகைத்தாள்.

'காய்ச்சல்.. எழுந்திரிக்கக் கூட முடியலே' என்றாள்.

'ஓ..!' என்றான்.

உடனே அவள் அவசரமாக 'ஒண்ணும் பயப்படறதுக் கில்லே...' என்றாள்.



'இன்றைக்குத்தான் முத்துசாமி அங்கிள் சொன்னார். அவருதான்.. முடிஞ்சாப் போய்ப் பாத்துட்டு வாப்பா.. எனக்கும் போகவே நேரம்.. கிடைக்கலேன்னார்..' என்றான் உரத்த குரலில். ஆனால் அவளுக்கு மட்டும் தெரியும்படியாகக் கண் சிமிட்டினான்.

அவள் புன்னகைத்துக் கொண்டாள்.

அவள் புத்தக அலமாரியைப் புரட்டிப் பார்த்தான். கண்களில் பாராட்டுத் தெரிந்தது. சற்று நேரம் இருந்து விட்டுப் புறப்பட்டான்.

அவள் வாசல் வரை வந்து வழியனுப்பினாள்.

அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில்.

'ரெண்டு நாள் சமாளிக்க முடிஞ்சுது. அதுக்கப்புறம்.. முடியலே.. எனக்கு ஒரு போன் பண்ணியிருக்கலாம்.. இல்லே?' என்றான்.

'நானே முடியாமல் கிடந்தேன்..' என்றாள். 'அதுதான் போன் செய்ய முடியல..' என்றாள்.

'சரி.. எப்ப வரே?' என்றான் ஏக்கத்துடன்.

'வந்தர்றேன்.. இன்னும்.. ரெண்டு நாள்ல' என்றாள்.

'இன்னும்.. ரெண்டு நாளா?' என்று அவன் பெரிதாகக் கவலைப் படுவதைப் பார்த்துச் சிரித்தாள்.

'சிரிக்காதே! என் கஷ்டம்.. உனக்குப் புரிய மாட்டேங்குது' என்று கடுப்பாகச் சொல்லி விட்டுப் போகிற அவனை அவள் ஒரு விதப் பெருமையுடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

அந்தப் பழைய நினைவு வந்து மோதிய கணத்தில் லேசான ஒரு வலி மனதில் தோன்றியது.

ஏதோ.. ரெண்டு நாள் பார்க்காமல் இருக்கவே கஷ்டப் பட்டவன்.. இன்றைக்கு மாறிப் போனான்.



பார்த்தே மூன்று மாதங்களுக்கு மேல் இருக்கும் என்று எண்ணினாள். கூடவே.. பார்க்காததே.. நல்லது.. என்று எண்ணிக் கொண்டாள்.

சில பேருடைய கவர்ச்சி முகமூடி மறைந்து உள் விகாரம் தெரியும்போது எவ்வளவு சலிப்பாகப் போய் விடுகிறது என்பதை அறிந்து கொண்டவள் நான்.. இனிமேல்.. எனக்குக் கடந்த காலம். ரப்பரால்.. அழிக்கப்பட்ட காலம்.. நிகழ் காலம்தான்.. நிஜம்.. இதில் பொய்யான கனவுகளின் போலி யில்லை. நிதர்சனம் புரிந்து விட்டது. எந்த ராஜகுமாரனும் வந்து நேரில் தூக்கிக் கொண்டு போய் விடப் போவதில்லை என்று உண்மை புரிந்த ரணம் உள்ளுக்குள் இருக்கிறது. இனி யெதற்குக் கனவு.. கவலை.. இன்றைக்கு மகிழ்ச்சியாக இருக்கிற வழியைப் பார்ப்போம்' என்றெண்ணிக் கொண்டாள்.

உறக்கம் வந்து கண்களைத் தழுவ.. மனப்போராட்டம் ஓய்ந்த நிம்மதியில் உறங்கினாள்.

★ ★ ★

மறுநாள் காலை.

'ஏம்புள்ளை, உன்ற அம்மாளுக்கு எவன் புள்ளே பச்சை யம்மான்னு பேரு வச்சவன்' என்றான் நாட்ராயன்.

'வேறு யாராயிருக்கும்.. உன்னைய மாதிரியே விவர மில்லாத அவங்கப்பனாயிருக்கும்' என்றாள் பூங்கோதை.

அப்பாவும் மகளும் சிரித்தார்கள். பூங்கோதையே தொடர்ந்து 'ஏப்பா.. எதுக்குக் கேட்கிறே?' என்றாள்.

'இல்லே.. பச்சையம்மான்னு பேரு வச்சாலும் வச்சாங்க.. ரெண்டு நாளைக்கு ஒருக்கா பச்சைப்பயறு கடைஞ்சர்றா..' என்றான் நாட்ராயன்.

பூங்கோதை தன் தகப்பனின் நகைச்சுவையை ரசித்துச் சிரித்தாள். அன்றைக்கு அலுவலகம் போவதாக முடிவெடுத் திருந்தாள்.

'குடும்மா.. நான் கடையறேன்' என்று வாங்கிக் கொண்டு கடைய ஆரம்பித்தாள்.

மீண்டும் சிந்தனை ஓடியது. நேற்று மதுசூதனன் தனது பழைய சிந்தனைகளையெல்லாம் கிளப்பி விட்டு விட்டார் என்று எண்ணிக் கொண்டாள். முன்பு ஒரு முறை இதே போல் காய்ச்சல் வந்த போது பூவேந்தன் வந்து போனதெல்லாம் நினைவுக்கு வந்தது. மதுசூதனனும் அவர்கள் அலுவலகத் திற்கு வருவதுண்டு. முதன் முதலில் அவனை அழைத்து வந்தது பூவேந்தன்தான். இருவரும் பள்ளித் தோழர்களாம். ஆனால், இரண்டு மூன்று முறை வந்ததற்குப் பிறகு அவளது வழக்கறிஞர் முத்துசாமியும் அவனும் உறவினர்கள் என்று கண்டு பிடித்தார்கள். அவரை மாமா என்று அழைக்க ஆரம் பித்தான்.

உண்மையில் பூங்கோதைக்குக் கூட அவர் தூரத்து உறவினர்தான். அந்த உறவில்தான் குடும்பம் கஷ்டப்படுகிறதே என்று இந்த வேலை போட்டுக் கொடுத்திருந்தார். ஆனால், அவள் வேலை கற்றுக் கொண்ட விதம். சூடிகையாய் இருப்பது எல்லாமும் அவருக்குப் பிடித்துப் போனது.

முத்துசாமியும், மதுசூதனனும் பேசிக் கொண்டால் வெகு நகைச்சுவையாய் இருக்கும். உரிமையாகப் பேசுவார். பூவேந்தனின் அப்பா அவருக்கும் பால்ய நண்பர். பூவேந்தனின் அப்பா பெயர் பாலசுப்ரமணியன்.

'பூவேந்தன் குடும்பத்துக்கும் அவர்கள் பங்காளி குடும் பத்துக்கும் நிலத்தகராறு காரணமாக ஒரு வழக்கு நடந்து கொண்டிருந்தது. ஒரு நாள் முத்துசாமி அவனிடம் கேட்டார்.

'ஏம்ப்பா... வேந்தா.. எதுக்கு இப்படி கேஸ் இப்படி இழுத்துக்கிட்டுக் கிடக்கோணும். பேசாம காம்ப்ரமைஸ் பண்ணி விடேன்..' என்றார்.

அப்போது மதுசூதனனும் உடன் இருந்தான்.



'ஏம் மாமா. அப்புறம் எப்படி உங்களுக்கு ஃபீஸ் வர்றது? எப்படியோ எங்க கேஸ் முடியறதுக்குள்ள இந்த பில்டிங்கை நீங்க விலை பேசிடுங்க..' என்றான் பூவேந்தன் சிரித்துக் கொண்டு.

'அட.. அவ்வளவு நாள் எதுக்கு? உங்க மாதிரி நூத்துக் கணக்கான இளிச்சவாயன்கள் என்றகுட்ட இருக்காங்க. ஃபார் யுவர் இன்ஃபர்மேஷன். இந்த பில்டிங்குக்கு நான் அட்வான்ஸ் எப்பவோ... குடுத்தாச்சு..' என்றார்.

எல்லாரும் சிரித்தார்கள். பூங்கோதை தன்னுடைய இருக்கையில் இருந்தபடியே இந்தப் பேச்சுக்களைக் கேட்டு ரசித்துக் கொள்வாள்.

பூவேந்தன் தொடர்ந்து 'மாமா.. நானும் ஒரு காம்ப்ரமைஸ் செய்யலாம்னுதான் நினைச்சேன்.. என்ன ஆச்சு தெரியுமா?' என்று ஆரம்பிக்க.

'ம்..!' என்று கதை கேட்கிற மாதிரி நடித்து கன்னத்தில் கை வைத்தான் மதுசூதனன்.

பூவேந்தன் லேசாகச் சிரித்து அவன் தோளில் ஒரு தட்டுத் தட்டி விட்டுத் தொடர்ந்தான்.

'எங்கப்பாவும், பெரியப்பாவும் ஒரு வழியா சமாதானத் துக்கு வந்துட்டாங்க.. அன்றைக்கு அவங்கவங்க வீட்டுக்குப் போனப்ப வீட்டுகள்ல பெரிய மகாபாரதமே நடந்துருக்கு. எங்கப்பா எங்க வீட்டுக்கு வந்தவுடனே எங்கம்மா போர்க் கொடி தூக்கியாச்சு. அவ.. அந்தக் கண்ணம்மா.. ரெண்டாவது மகள் கல்யாணத்து நிச்சயத்துக்கு.. ஊரையெல்லாம் கூப் பிட்டுப் போட்டு நம்மளைக் கூப்பிடல.. அவங்ககூட சமா தானமா?'ன்னாங்க. இப்படியே அங்க போட்ட சாம்பிராணி யில எங்கப்பா சிலிர்த்துகிட்டாச்சு..' என்று நிறுத்தினான்.

'ம்.' அப்புறம் உங்க பெரியப்பா என்ன சொல்றாரு?' என்றார் சம்பந்தம்.



பூவேந்தன் மறுபடியும் சிரித்தார்.

'அங்கயும்.. அதே நிலமைதான். எங்க பெரியம்மா வேற விதமா.. ஆரம்பிச்சுட்டாங்க மணி மணியா ரெண்டு பசங்களைப் பெத்து வச்சிருக்கேன். அவ.. அந்த கமலாத்தா கண்ணம்மா.. என்ன புள்ளைங்களா பெத்து வச்சிருக்கா.. ஒண்ணு கருங்குரங்கு. இன்னொண்ணு செங்குரங்குன்னு எல்லாத்துகிட்டயும் சொல்லியிருக்கா. அவ கூட சமாதானமா? உப்புப் போட்டுச் சாப்பிடலயா.. நீங்க? என்று புடிச்ச புடியில் அவரும் மாறிப் போனார். அன்னையிலிருந்து ரெண்டு பேரும் ஒருத்தர் எதுக்கால ஒருத்தர் வர்றதேயில்லை. சமரசப் பேச்சு அப்படியே அந்தரத்துல நிக்குது..' என்றான் பூவேந்தன்.

சற்று நேரம் கனமான அமைதி நிலவியது. அதற்குள் பூங்கோதை இடைமறித்து.

'சார்! இதுக்குத்தான் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் சொல்றாரு. ஈகோவே கூடாதுன்னு..' என்றாள்.

அதற்கு முத்துசாமி 'அவருக்கென்னம்மா சொல்லிப் போடு வாரு. அவரு கூடவே இன்னொண்ணும் சொல்லியிருக்கணும். ஈகோ இல்லாம இருக்கணும்னா கல்யாணம் பண்ணாம இருக்கணும்னு' என்றார்.

இளைஞர்கள் இருவரும் சிரித்தார்கள். மதுசூதனன் தொடர்ந்து.

'தப்பாச் சொல்றீங்க மாமா! கல்யாணத்துக்கு அப்புறம்.. ஈகோவாவது.. சுயமரியாதையாவது.. அதெல்லாம் பேசினா.. டெபாசிட்டே போயிடுமில்லே!'' எனவும் மறுபடியும் சிரித் தார்கள்.

பூவேந்தன் ஜாடையாக பூங்கோதையைப் பார்க்க அவள் அவசரமாகப் புத்தக ஷெல்ஃப் பக்கம் திரும்பி புத்தகங்களை அடுக்க ஆரம்பித்தாள்.



அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

பூவேந்தன் கிளம்பினான். மதுசூதனன் முத்துசாமியிடம் 'மாமா.. எனக்கு அந்தப் புத்தகம்.. வேணுமே ரெண்டு நாளைக்கு' என்றான்.

'போப்பா.. நான் வெளியே புத்தகமே.. குடுக்கறதில்லே!' என்றார் கண்டிப்பாக.

'மாமா! ப்ளீஸ்! சரி.. வேணும்னா.. இந்தப் புத்தகத்தை அதுக்கு ஈடாக் குடுக்கறேன்.. ஒரே வாரத்துல அதைக் கொண்டு வந்து குடுத்துட்டு வாங்கிக்கறேன்..' என்றான் கெஞ்சுதலாக. வேறு ஒரு புத்தகத்தை நீட்டினான்.

முத்துசாமி சிரித்து விட்டார். 'பயங்கரமான ஆளுங்கப்பா.. சரி.. சரி.. எடுத்துட்டுப் போ..' என்றார் கிளம்பினார்.

பூங்கோதைக்கு ஒரே ஆச்சரியம்.

'சார்..' எங்க லாயர் இப்படியெல்லாம் யாருக்கும் குடுக்க மாட்டார்' என்றாள். அதற்குள் அவன் கொடுத்த புத்தகங்களை வாங்கிப் பார்த்தவள்.

'சார்.. இதுவும்.. ரேர் புத்தகம்தான்.. இது எங்ககிட்டே.. இல்ல.. என்றாள்.

மதுசூதனன் கண் சிமிட்டினான்.

'கோதை மேடம்! இது என்கிட்டே ரெண்டு காப்பி இருக்கு.. பாக்கலாம் லாயர் மாமா.. எப்படி அவரோட புத்தகத்தைத் திருப்பி வாங்கறார்ன்னு..' என்று கலகலவென்று சிரித்தான்.

அப்போது பூங்கோதை சொன்னாள்.

'சார்.. இதுக்குத்தான் ஒரு வெளிநாட்டு அறிஞர் சொன் னாராம்.. யாருக்குமே நான் புத்தகம் கடன் குடுக்கறதில்லே.. ஏன் தெரியுமா? என் வீட்டு லைப்ரரியில நான் வச்சிருக்கிற புத்தகங்கள் எல்லாமே கடன் வாங்கின புத்தகங்கள்தான்னு' என்றாள்.

மதுசூதனன் சிரித்தான். 'கோதை.. மேடம் நான் சும்மா.. சொன்னேன். புத்தகம் முழுக்க ஜெராக்ஸ் எடுத்துட்டு ரெண்டு நாள்ல குடுத்தர்றேன்' என்று சொல்லிப் போனான். அதெல்லாம் நினைவு வர சிரித்துக் கொண்டாள்.

பச்சைப் பயறு கடைந்து முடித்து விட்டாள்.

அம்மா.. டிபன் பாக்ஸில போட்டுடு' என்று புறப்பட்டாள்.

ஏழரை மணிக்கு அலுவலகத்தில் இருக்க வேண்டும். இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது என்று ஏதோ புத்தகத்தை எடுத்துக் கொண்டிருக்கையில்,

'அம்மிணி, உன்றகுட்டப் பேசோணும்' என்று வந்து நின்றான் நாட்ராயன்.

'சொல்லுப்பா..' என்றாள்.

சொன்னான்.

அன்றைக்கெல்லாம் சிந்தனையிலாழ்ந்து விட்டாள்.



3

காலை ஏழரை மணிக்கே அவள் அலுவலகத்துக்கு வந்துவிட வேண்டும். அன்றைக்கு அவள் செய்ய வேண்டிய வேலைகளைச் சொல்லி விட்டு. அன்றைய வழக்கு விவரங்களைச் சேகரித்துக் கொண்டு புறப்பட்டு விடுவார் முத்துசாமி.

அதற்குப் பிறகு அலுவலகம் அவள் பொறுப்பில்தான். முதலில் வருகிறவர்களைப் பார்த்துப் பேசி, கேஸ் விவரங்களைக் கேட்டுக் கொண்டு அவர்களது வழக்கறிஞர் எப்போது வருகிறார் எனத் தெரிந்து கொண்டு அவர்களுக்கு விவரங்கள் சொல்வது எல்லாமே அவள்தான்.

அவளும் இப்போது தபாலில் பி.ஜி.எல். கோர்ஸில் சேர்ந்திருந்தாள். பழைய தீர்ப்புக்கள் பற்றிய புத்தகங்கள்



ஆர்வமாகப் படித்துக் குறிப்பெடுத்து வைக்கிறாள். பூவேந்தனின் நட்பு தனக்குள் ஒரு கனவுலகைப் படைத்துத் தன் ஆளுமையையே சிதைத்து விட்டதோ என்ற அச்சத்தில் இருந்து இப்போதுதான் மெல்ல மெல்ல மீண்டு கொண்டிருக்கிறாள். ஆனாலும் அவ்வப்போது நினைவுகள் தொல்லை தரத்தான் செய்கின்றன.

அன்றைக்கு லாயர் கொடுத்திருந்த விவரங்களை கம்ப்யூட்டரில் ஃபீட் செய்து கொண்டிருந்தாலும் மீண்டும் மனக்குதிரை பிய்த்துக் கொண்டு ஓடியது அன்றைக்கொரு நாள்.

'ஹலோ, என்ன அங்கிள் இல்லையா!' என்று வந்தான் பூவேந்தன்.

'இல்லே! இன்னைக்குக் கோயமுத்தூர் போயிருக்கிறார்' என்றாள் பூங்கோதை.

'அப்ப.. வசதியாப் போச்சு!' என்றான்.

'என்ன வசதியாப் போச்சு!' என்றாள் பூங்கோதை.

'வேறெதுக்கு? பூவேந்தனும், பூங்கோதையும் சேர்ந்து பூப்பூவா பூந்தோட்டம் போட வேண்டியதுதான்' என்றான் பூவேந்தன்.

'கடைசியில.. ப்பூ.. விஷயம் இவ்வளவுதானான்னு வெறுத்துப் போயிடப் போகுது' என்றாள் பூங்கோதை. பாதி உண்மையும், பாதி பொய்யுமாய்.

இருவரும் சிரித்தார்கள்.

'பூங்கோதை. அப்படியெல்லாம் வெறுத்துப் போகிற அளவுக்கு விட்டுர மாட்டேன்' என்றான் பூவேந்தன்.

அந்த நேரம் பூங்கோதையின் முகம் மாறியது. தீவிரமான முக பாவத்துடன் சொன்னாள்.

'வேந்தன்.. எனக்குக் கொஞ்சம் பயமாத்தான் இருக்கு. இந்த மாதிரி ரொமான்ஸ் எல்லாம் எனக்குக் கட்டுப்படியாகாத விஷயம். அதுலயும் உங்க லெவல் வேற. எங்க லெவல் வேற. அதனால, கல்யாணம்னு ஒண்ணு ஆகற வரைக்கும் நான் எந்தக்



கற்பனையும் வச்சுக்கறதில்லேன்னு ரொம்ப உறுதியாய் இருக்கேன்..' என்றாள்.

'அது உன்னிஷ்டம். ஆனா, நான் கற்பனை பண்றதை நீ தடுக்க முடியாதே?' என்றான்.

அவள் சற்றே வேதனையுடன் அவனைப் பார்த்தாள்.

'ப்ளீஸ்.. அன்டர்ஸ்டான்ட் பண்ணிக்குங்க. உண்மையாவே நீங்க சீரியஸா இருந்தீங்கன்னா.. சீக்கிரம்.. உங்கப்பா கிட்டே பேசுங்க.' என்றாள்.

'செஞ்சுருவோம்...' என்றான் சுலபம்போல்.

பிறகும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அவள் அன்றைக்கு ஏதோ வாரப் பத்திரிகையில் படித்த ஜோக்குகளைச் சொல்ல இருவரும் கலகலவெனச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரம்!

கைத்தறி வேஷ்டியும் வெள்ளை முழுக்கை சட்டையும், கைத்தறித் துண்டும் தோளில் அணிந்த அந்தப் பெரியவர் வந்தார்.

பூவேந்தனுக்கு உறவினர்!

இரண்டு பேரையும் ஒரு நிமிடம் குறுகுறுவென்று பார்த்து விட்டு,

'அட... என்றா! வேந்தா! என்னமோ வக்கீலாகப் போறேன்னாங்கன்னு பார்த்தா.. இந்த.. வக்கீல் ஆபீசுப் புள்ளைகிட்ட வாயடிச்சுகிட்டிருக்கு?' என்றார்.

அவன் சிரித்துச் சமாளித்தான்.

'மாமோவ்.. இந்தம்மா.. பாதி வக்கீலு.. தெரியுங்களா? அதான்.. சும்மா.. பேசிகிட்டிருந்தேன்' என்றான்.

'ஓஹ்ஹோ!' என்றார் பெரியவர். அந்த ஓஹ்ஹோவில் ஏகப்பட்ட அர்த்தம் பொதிந்து கிடந்த மாதிரி இருந்தது பூங்கோதைக்கு.



அவர் தனக்குத் தேவைப்பட்ட விவரங்களை அவளிடம் கேட்டு பெற்றுக் கொண்டு போனார்.

'கோதை! பெருசு.. போய்.. எங்கப்பா கிட்டே சொன்னாலும்.. சொல்லும்.. அதுவும் நல்லதுக்குத்தான். நா.. எப்படிடா.. ஆரம்பிக்கறதுன்னு இருந்தேன்' என்று லேசு போலச் சொல்லிவிட்டுப் புறப்பட்டாலும் பூவேந்தன் குரலில் கவலை தொனித்தது.

அவன் லேசாகச் சொல்லி விட்டுப் போனாலும் விஷயம் அவ்வளவு லேசாகவும் முடிந்து விடவில்லை.

★ ★ ★

அன்றைக்கு மாலை!

சகோதரன் குமரேசனின் குழந்தைகளுடன் சற்று விளையாடி விட்டு உள்ளே நுழைந்தான் பூவேந்தன்.

'டேய்! வேந்தா.. இங்க வா!' என்றார் பாலசுப்பிரமணியன்.

'என்னங்கப்பா!' என்று போனான்.

தனக்குத் தகவல் கிடைத்த நாளிலிருந்து ஒரு வாரமாக அவனைக் கண்காணித்த பின்புதான் அவன் தந்தை அவனிடம் பேச விழைகிறார் என்பது அவனுக்குப் புரியவில்லை.

'ஏம்ப்பா! நீ யென்னமோ முத்துசாமியோட ஆபீசுக்கு அடிக்கடி போறியாமா? பேசிக்கறாங்க' என்றார்.

'ம்.. அப்பப்ப போறதுதான். ஏனுங்கப்பா?' என்றான்

'இல்லே! நான் கேள்விப் படறது ஒண்ணும் அவ்வளவு சரியில்லையே?' என்றார்.

அவன் மௌனமாக நின்றான்.

'அங்க வேலை செய்ற புள்ளைகிட்ட எந் நேரமும் பேசிக்கிட்டிருக்கறான்னு எனக்கு நியூஸ்' என்றார். குரலில் கடுமை.

'அப்பா..' என்று இழுத்தான்.

'ம்..!' என்றார் உறுமலாக.

'அப்பா.. கோதை ரொம்ப புத்திசாலிப் பொண்ணு.. நல்ல.. பொண்ணு.. அதான்..' என்று மேலும் இழுத்தான்.

'வெறும் பேச்சு மட்டும்தானா? இல்ல.. வேற ஐடியா.. எதுவும்.. இருக்கா?'

அவன் மௌனமாக நின்றான்.

'ம்..!' என்று மறுபடியும் உறுமினார்.

பிறகு,

'இத பாரு வேந்தா! உன்ற அண்ணி இருக்காளே.. அதாண்டா குமரேசன் பொஞ்சாதி.. எவ்வளவு நகை போட்டுட்டு வந்தா.. தெரியுமா? நூத்தைம்பது பவுனு.. பதினைஞ்சு ஏக்கரா நிலம் சீதனம்.'

அவன் நெற்றியில் சுருக்கங்கள் படிந்தன.

'அப்பா..' என்று ஏதோ சொல்ல ஆரம்பிக்கையில் 'இரு.. நா.. பேசிப் போடறேன்.. உன்ற அக்காளுக்கு... அப்பவே.. நான் நூறு பவுன்.. போட்டேன்..' என்றார்.

அவன் குறுக்கிட்டு 'அப்பா, கோதை ஏழையாயிருந்தாலும்.. கெட்டிக்காரி..' என்றான்.

'அங்கதான்.. வம்பே.. ஆரம்பிக்குது. இப்ப நான் எதுக்கு குமரேசன் பொஞ்சாதியையும் உன்ற அக்காளையும் பத்திச் சொன்னேன். இந்த ரெண்டு பேரும்.. சும்மா.. யிருப்பாங்களா.. போகவர.. அந்தப் புள்ளைய சாடை பேசுவாங்க. கெட்டிக்காரப் புள்ளை.. சும்மாயிருக்குமா? உன்ற குட்ட.. சண்டைக்கு வரும்.. அப்புறம்.. என்னாகும் தெரியுமா? தொல்லை தாங்காம டைவர்ஸ் செஞ்சானே.. அந்த ஆறுமுகத்துக் கதைதான்..' என்றார்.

பூவேந்தன் முகத்தில் தோன்றிய குழப்பத்தைப் பார்த்தார்.

'சரி.. சரி.. போ போயி.. நல்லா யோசனை பண்ணு. எடுத்தேன்.. கவுத்தேன்னு செய்யறதுக்கு.. நாம ஒண்ணும் அன்னாடங் காய்ச்சிக.. இல்லே' ஊருக்குள்ளார பெரிய குடும்பம்.. யோசிச்சுச்.. செய்யி..' என்றவர்.. 'அப்புறம்..



அப்படியே.. கல்யாணம் செஞ்சு வச்சா.. நாளைக்கு எல்லாரு கிட்டயும் என்ன சொல்லுவே? எங்க மாமனார் விவசாயக் கூலி.. மாமியா.. ஆடு மேய்க்கறவள்னா.. போடா.. போயி ஆகற வேலையைப் பாரு..' என்றார்.

அவன் நகர்ந்தான்.

மகனின் முகத்தில் தோன்றிய குழப்பத்தைக் கண்டு அவரும் சிந்தனையிலாழ்ந்தார். உண்மையில் அவனை அசைத்துப் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான்.. அவர் கேள்விகள் கேட்டது. ஆனால், அவன் ஆடிப் போன விதம் பார்த்து.. அவரது அனுபவ அறிவு தெளிவான ஒரு முடிவுக்கு வந்தது.

அப்பாவின் கேள்விகள் பூவேந்தனை உலுக்கி விட்டது என்றே சொல்ல வேண்டும். அதிலும் அவர் சொன்ன உதாரணம் அவனை ரொம்பவே யோசிக்க வைத்தது. ஆறுமுகம் வீட்டை எதிர்த்துக் கொண்டு தகுதிக்குக் குறைவான இடத்தில் திருமணம் செய்தான். அப்பா சொன்ன மாதிரி வீட்டில் ரணகளம்தான். கடைசியில் அந்தக் காதல் அற்பாயுசில் முடிந்து.. டைவர்ஸில் புதையுண்டு போனது.

பூவேந்தனின் உள்ளத்தில் பூங்கோதையைத் திருமணம் செய்து கொண்டால் தான் எதிர்கொள்ள வேண்டிய விஷயங்கள் குறித்து முதன் முதலாக அச்சம் எழுந்தது. அதற்குத் தகுந்தாற்போல் அவன் அப்பா வேறு மேலே மேலே கேள்விகளை வீசினார்.

அடுத்த நாள் கேட்டார்!

'ஏண்டா.. மாமனார்.. வூடுன்னு போய் அந்த குச்சு வீட்லயா.. பண்டிகை விசேஷம்னு தங்குவே?' என்றார்.

அவன் எல்லாவற்றுக்கும் மௌனத்தையே பதிலாகத் தந்தான். ஆனாலும், அவன் அப்பா நிறுத்தவில்லை.

அடுத்த நாள்!



'அடேய்! பூவு, அந்தப் புள்ளையோட அப்பனும், அம் மாவும் நம்ம காட்டுக்கே வந்து வேலை செஞ்சவங்கதான். அப்ப அவங்களையெல்லாம் நான் சம்பந்திகன்னு சொல்லிக் கோணுமாக்கும்? அதுக்கு உப்புப் போட்டுச் சோறு உன்கறதை நிறுத்திப் போடலாம்' என்றார்.

இரண்டு நாள் கழித்து!

'உனக்கென்னடா.. புஸ்தகம். படிக்கற புத்திசாலிப் புள்ளை யாய் பார்க்கோணும்.. அவ்வளவுதானடா? நான் கொண்டாந்து பத்துப் புள்ளைகளை வரிசையா நிறுத்துவண்டா! அதனால இந்த இழவெல்லாம்.. வுட்டுப் போடு என்னொ..!' என்றார்.

பூவேந்தன் தன் சகோதரனிடம் பேசினான். அவனுக்குப் பாவமாக இருந்தது.

தந்தையிடம் வந்தான்.

'அப்பாவ்! நம்மட குட்ட வேணும்கற பணம் இருக்குது. எதுக்குப் பாவம். அவனைப் போட்டு வறுத்தெடுக்கறீங்க?' என்றான்.

அதற்கு அவன் அப்பா சொன்ன பதில் அவன் நெற்றிப் பொட்டில் அறைந்தாற் போல் தாக்கியது.

அன்று மாலை!

அண்ணா என்று வந்த பூவேந்தனிடம் குமரேசன்.

'டேய்! பூவு! ராசா! நம்மளை இதுல இழுக்காதடா! அப்பன் கேக்கற கேள்விக்கு நம்மளால பதில் சொல்ல முடியல. உனக்கு வேணுங்கறது என்னொன்னு நீயே.. பார்த்துக்க..' என்றான்.

குமரேசன் இப்படிச் சொன்னவன் சும்மா இருக்காமல் அதைத் தன் மனைவியிடமும் பகிர்ந்து கொண்டான். யாருக்கும் சொல்லக் கூடாது என்று மிரட்டி வைத்தான். ஆனாலும் சொல்லி விட்டானே! அது எவ்வளவு பெரிய தவறு என்பதையும், அதனால் குடும்பத்தில் என்னென்ன குழப்



பங்கள் விளையப் போகிறது என்பதையும் அன்றைக்கு அவன் அறிந்து கொள்ளவில்லை.

★ ★ ★

யோசித்து யோசித்துத் தலையே வெடித்து விடும்போல் ஆகிவிட்டது பூவேந்தனுக்கு.

தான் நினைத்த அளவுக்குத் தன்னால் தந்தையிடம் எதிர்த்துப் பேச இயலவில்லை என்பது அவனுக்குப் புரிந்தது.

அவன் அப்பா அவனிடம் எடுத்து வீசிய கேள்விகளில் எல்லாம் அர்த்தம் இருந்தது. அவனுக்குப் புரிந்தது. அதற்கான தெளிவான விடைகள் தன்னிடம் இல்லை என்பதும் புரிந்தது.

அவனது அறிவு சீர்தூக்கிப் பார்க்க ஆரம்பித்தவுடனே உணர்வுகளின் வீரியம் குறைந்தது. எதிர்காலம் பற்றிய கேள்விகளும் வாழ்க்கையின் நிதர்சனங்களும், நிஜங்களும் அவன் முகத்தில் மோதி அறைந்தன.

வாழ்க்கையில் எல்லா உணர்வுகளையும் அறிவு கொண்டு அலசி விட முடியாது என்பது அன்றைக்கு அவனுக்குப் புரியவில்லை.

யாரிடம் பேசுவது? புரியவில்லை. இறுதியில் பூங்கோதை யிடம் பேசுவது என்று முடிவு செய்தான்.

தன் தந்தை தன்னைச் சாடுவதையும் தன் சகோதரனின் உதவியை நாடியதையும், ஆனால் குமரேசன் ஒதுங்கிக் கொண்டதையும் விவரமாகச் சொன்னான்.

பூங்கோதை வயதுக்கு மீறிய பக்குவத்துடன் முகத்தில் உணர்வுகளைக் காட்டாமல் அதையெல்லாம் வாங்கிக் கொண்டாள். பிறகு.

'நீங்க.. என்ன சொன்னீங்க?' என்றாள். அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

'அப்பா.. முன்னால என்னால வாயைத் திறக்கவே.. முடியல.. என்னத்தைப் பேச?' என்றான்.

'ஓ!...' என்றாள் அடங்கிய குரலில்.

'சரி.. விடு.. ஏதாவது வழி கண்டு பிடிப்போம்!' என்றோ..

'எப்படியாவது நடத்திக்குவோம்..' என்றோ.. 'பயப்படாதே' 'என் முடிவில எந்த மாற்றமும் இல்லே..!' என்றோ சொல்வான் என்று எதிர்பார்த்தாள்.

அப்படிப்பட்ட வார்த்தைகள் அவனிடம் இருந்து வரவில்லை.

அப்போது அவளுக்கு ஒன்று புரிந்தது.

அவன் அப்பா.. எழுப்பிய கேள்விகள்.. அவருடையது மட்டுமல்ல.. இப்போது.. அவனுடையதாகவும்.. ஆகிவிட்டன.. என்று.

அவளும் நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

'சரிங்க.. யோசிப்போம்..!' என்றாள்.

அவனும் விட்டால் போதும் என்ற உணர்வுடன்

'அப்ப.. நான் வரட்டா?' என்று கிளம்பினான்.

அவள் தலையாட்டினாள்.

போகிற அவன் முதுகை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள்.



4

பூங்கோதைக்கு அன்றிரவு உறக்கம் பிடிக்கவில்லை. 'அவசரப்பட்டு விட்டோமோ?' என்ற கேள்வி பிரம்மாண்டமாக எழுந்தது.

'நாம இரண்டு பேரும் சேர்ந்திருக்கோணுங்கறதுதான் முக்கியம். மத்த



எல்லாத்தையும் சமாளிச்சுக்கலாம்மா.. பூங்கோதை' என்று அவன் ஒரு வார்த்தை உறுதியாகக் கூறி இருந்தால், அவளுக்காக அவன் சகோதரி.. என்ன அண்ணி என்ன.. இன்னும் எத்தனை பேர் ஜாடை பேசி வம்பிழுத்தாலும் அவளால் பொறுத்துக் கொண்டு போயிருக்க முடியும். ஆனால், அவனுக்கே சந்தேகம் தோன்றி விட்டது போலிருக்கும்போது இந்த வாழ்க்கை எங்கே கொண்டு போய் விடும்?

அவள் எப்போதோ கேட்ட கதை ஒன்று நினைவுக்கு வந்தது. ஒரு முறை இராமன் விட்ட அம்பு ஒன்று தவறுதலாக ஒரு தவளையின் மேல் பாய்ந்து விட்டதாம். அப்போது இராமன் வருத்தப்பட்டு 'ஒரு குரல் கொடுத்திருக்கலாமே?' என்று தவளையைக் கேட்டானாம். அதற்குத் தவளை 'மத்தவங்களால துன்பம்னா இராமனைத்தான் கூப்பிடுவேன். இராமன் கையாலயே அம்பு பாயும் போது யாரை உதவிக்கு கூப்பிடுவேன்?' என்றதாம். அது மாதிரி பூவேந்தன் உறுதியாக நின்றால் அவனுடைய துணையோடு எத்தனையோ சமாளிக்கலாம். ஆனால், அவனுக்கே உறுதி இல்லை என்றால் இந்த உறவில் எப்படி மகிழ்ச்சி ஏற்பட முடியும் என்று எண்ணினாள். இத்தனை துக்கத்திலும் தனக்கு உதாரணம் வேறு தோன்றுகிறதே என்று கசப்புடன் புன்னகைத்துக் கொண்டாள்.

'அப்புறம்.. கல்யாணமானா... ஆளுக்கொரு பக்கம்.. புஸ்தகம்.. படிச்சுகிட்டு உட்காந்துக்குவீங்களாக்கும். யாரு சோறாக்கறது?' என்று வேறு கேட்டாராம் பூவேந்தனின் தந்தை.

அவளுக்கு சிரிப்பும், அழுகையும் ஒரு சேர வந்தது.

யோசித்தாள்.. வெகுவாக யோசித்தாள். வெகு நேரம் யோசித்தாள். பிறகு ஒரு காகிதத்தை எடுத்தாள்.

*'அன்பு நிறை நண்பருக்கு,*

*உங்களை நான் முழுமனத்தோடு இந்த பந்தத்திலிருந்து விடுவிக்கிறேன். தங்கள் பெற்றோர்களுக்கு எது மகிழ்ச்சியைத்*



*தருமோ, எது தங்கள் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு உகந்ததோ... அதையே செய்யுங்கள்.*

*அன்புடன்*

**பூங்கோதை**

என்று எழுதினாள்.

மறுநாள் தபாலில் அனுப்பினாள்.

உள்ளூர ஒரு நப்பாசை இருந்தது. அந்தக் கடிதம் கண்டவுடன் அவன் வருவான். தன்னிடம் சண்டை போடுவான். 'உன்னை யார் இப்படி எழுதச் சொன்னது?' என்று உரிமையோடு கோபித்துக் கொள்வான் ஒரு எண்ணம் ஒரு ஓரத்தில் இழையோடிக் கொண்டிருந்தது.

அது கனவாகவே கரைந்து போனது. அவன் வரவேயில்லை.

★ ★ ★

பூவேந்தன் கையில் கடிதம் கிடைத்தபோது இரண்டு நாட்களாகி இருந்தது.

அதற்கு முதலில் அப்பாவின் கையில் சிக்கியது. ஓஹ்ஹோ..! வூட்டுக்கே கடுதாசி போடற நிலைமையாப் போச்சா?' என்று குதித்த தந்தைக்கு அடுத்தவருக்கு வந்த கடிதத்தைப் பிரித்துப் பார்க்கக் கூடாது என்ற அடிப்படை நாகரீகம் கூடத் தெரியவில்லை.

கடிதத்தைப் பிரித்துப் படித்தவுடன் ஆனால் சிந்தனையில் ஆழ்ந்து விட்டார்.

'புள்ளை.. புத்திசாலியாத்தான்.. தெரியறா!' என்று எண்ணிக் கொண்டார். ஆனால் மகன் வந்தவுடன் நீட்டினார்.

'இத பாருடா! அந்தப் புள்ளையே நீ உன்ற வழியைப் பாத்துக்கன்னு எழுதிப் போட்டா. அப்புறம்.. என்னடா..!' என்றார்.



பூவேந்தன் எதுவும் பேசவில்லை.

ஒரு பக்கம் ஒரு விடுதலை உணர்வு தோன்றியது. இன்னொரு பக்கம் ஆழ்ந்த வருத்தமும் தோன்றியது.

அதற்குப் பிறகு அவன் வாழ்க்கையில் நடந்தது எல்லாம் அவனுடைய முடிவுகளுக்கு அப்பால் போய் விட்டது.

★ ★ ★

டெலிபோன் மணி அடித்தது.

பூங்கோதை திடுக்கிட்டாள். கடந்த கால நினைவுகள் எல்லாம் ஏதோ ஒரு படம் போல் ஓடி மறைய. ஒரு நீண்ட பெருமூச்சுடன் நிலவுலகுக்கு வந்தாள்.

இப்போது மூன்று மாதங்களாகி விட்டன.

அடுத்த மாதம் பூவேந்தனுக்குத் திருமணம் என்ற செய்தி கேட்டபோது மட்டும் லேசாக மனதில் ஒரு வலி ஏற்பட்டது.

இதை வெறும் நட்பாகவே நிறுத்தியிருந்தால் நன்றாயிருந்திருக்கும் என்று தோன்றியது. அதைவிட வருத்தத்திற்குரியது என்னவென்றால் அவள் இல்லாத ஒரு நேரம் பார்த்து வந்து லாயருக்குப் பத்திரிகை கொடுத்திருந்தான். அவளுக்கும் ஒன்று அவரிடமே கொடுத்து விட்டுப் போயிருந்தான்.

இப்போதெல்லாம் அவளுக்கு இந்த எல்லா விஷயங்களையும் வெளியாள் போல் பார்க்கிற பக்குவம் வந்திருந்தது.

டெலிபோன் ரிசீவரை எடுத்தாள். வழக்கறிஞர் அந்தப் பக்கம் இருந்து ஏதோ முக்கியமான தகவல் கேட்டார். மற்ற எல்லாவற்றையும் தூக்கி ஒரு புறம் வைத்து விட்டு வேலையில் ஆழ்ந்தாள்.

★ ★ ★

அன்றைக்கு வேலை நிறைய இருந்தது.

காலையில் தந்தை கேட்ட விஷயம் வேறு உள்ளே ஓடிக் கொண்டே இருந்தது. வழக்கறிஞரிடம் பேச வேண்டும் என்று காத்திருக்கிறாள். பேச நேரம் அமையவில்லை.

ஆறரை மணி வாக்கில் அவள் தயங்கி நிற்பதைப் பார்த்து.

'என்ன.. கோதை?' என்றார்.

'சார்.. அப்பா..!' என்று இழுத்தாள். அவர் முகத்தைத் தயக்கத்துடன் பார்த்தாள்.

'சொல்லும்மா..!' என்றார்.

'இல்லே! அப்பா.. ஏதாவது ரெண்டு மாடு வாங்கி கொடுத்தா.. பால் வியாபாரம் செஞ்சுக்கறேன்கறாரு..' என்றாள்.

'ஏதாச்சும்.. பணம் வேணுமா?' என்றார்.

'இல்லைங்க சார். பணம் நான் சேமிச்சு வச்சிருக்கேன். மாடு வாங்கிக் குடுத்தரலாம். ஆனா.. சொஸைட்டி மூலமா போனா, நல்லதுங்கறாங்க' என்றாள்.

அவர் புன்னகைத்தார்.

'சரி.. விடு.. ஏற்பாடு செய்துடுவோம்..' என்றார்.

சொன்னது போலவே கடனில் நான்கு மாடுகள் வாங்க ஏற்பாடு செய்து கொடுத்தார். மிஞ்சிய பணத்தில் மகள் அப்பாவுக்கு ஒரு டி.வி.எஸ். 50 வாங்கித் தர விரும்புவதை அறிந்து குறைந்த விலையில் செகண்ட் ஹாண்ட் வண்டி ஒன்று வாங்கிக் கொடுத்தார்.

அது மட்டும் அல்லாமல்.

'பாரு.. கோதை. உனக்கு வண்டி ஓட்டத் தெரியுமா?' என்றார்.

சின்ன வயதிலேயே சைக்கிள் ஓட்டி பழகியிருந்தாள்.

'சைக்கிள் ஓட்டத் தெரியும் சார்!' என்றாள்.

'அப்புறம்.. என்ன. உங்கப்பன் வண்டியையே ஓட்டிப் பழகு. உனக்கு நான் ஆயிரம் ரூபா கூடச் சம்பளம் தரேன்.



மாசம் எண்ணூறு கட்டினாப் போதும். டி.வி.எஸ். ஸ்கூட்டி கிடைக்குது வாங்கிக்குவியாம்' என்றார்.

அவள் உற்சாகமானாள்.

ஒரே வாரத்தில் கற்றுக் கொண்டாள்.

கோபியிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அந்தக் கிராமத்திலிருந்து காலை ஆறே முக்காலுக்குக் கிளம்பி விடுகிறாள். இப்போது ஏழு மணிக்கே வந்து விடுவதால் முத்துசாமிக்கு மகிழ்ச்சி.

மாலை அவர் வந்து விட்டால் சற்று விரைவிலேயே அனுப்பி விடுவார்.

வீட்டில் மாடுகள் பராமரிப்புக்கு அம்மாவுக்கும் அவளுக்கும் நேரம் ஒதுக்க வேண்டியிருந்தது. அலுவலகத்தில் நேரம் கிடைத்தால் பி.ஜி.எல். தொடர்பான புத்தகங்கள் படிக்க ஆரம்பித்திருந்தாள்.

எந்தச் சிந்தனையும் தன்னைத் தாக்கி விடக்கூடாது என்பதில் படு கவனமாகத்தான் இருந்தாள். நாட்கள் தான் எவ்வளவு வேகமாக ஓடுகிறது?

நாளைக்கு பூவேந்தனுக்குத் திருமணம்.

பெண் ஈரோட்டிலிருந்தாம். இப்பொழுதெல்லாம் கிராமங்களில் கூட பெரிய வீட்டுக் கல்யாணங்களில் முதல் நாளே ரிசப்ஷன் வைக்கிற வழக்கம் புதிதாக உருவாகியிருந்தது. எண்ணினாள். ஆனால், இன்னொரு மனது கேட்டது. எதற்காக ஓட வேண்டும்? தானாக அவனைத் தேடிப் போனோமா? அவனே வந்தான். அவனே விலகி விட்டான்.. நல்லவேளை.. இந்த மட்டில் அவன் நிலையற்ற குணம் புரிந்ததே..' என்று எண்ணிக் கொண்டாள்.

அவளது லாயர் முத்துசாமி அன்று வெளியூர் போயிருந்தார்.



என்ன முயன்றும் பிற்பகல் ஆக ஆக நெஞ்சில் துக்கம் பொங்குவதை அவளால் தடுக்க முடியவில்லை. தன் பாட்டுக்குப் புத்தகம் படிக்கவும், வேலை செய்யவும் ஆக இருந்த தன் வாழ்க்கையில் நுழைந்து குளத்தில் கல்லைப் போட்டாற் போல் குழப்பி விட்டு இன்றைக்கு அவன் வழியைப் பார்த்துக் கொள்கிறான் என்று எண்ணியவுடன் கண்ணீர் பொங்கியது.

தனிமை நாடினாள்.

பொங்கி அழுதாள். வெடித்து அழுதாள். ஒரு விதமாக அழுகை அடங்கியதும் வாஷ் பேசினில் முகம் கழுவிக் கொண்டு வெளியே வந்தாள்.

திடுக்கிட்டாள்.

அங்கே மேஜைக்கு அந்தப்புறம் மதுசூதனன் அமர்ந்திருந்தான்.

புன்னகையை வலிய வரவழைத்துக் கொண்டாள்.

'மது சார்! உங்க பிரண்டுக்குக் கல்யாணம். நீங்க அங்கே இருக்க வேண்டாமா' என்றாள்.

'அவன் கிடக்கிறான். ஹிப்பாகிரட். நான் மாமாவையும், உங்களையும் பாக்கத்தான் வந்தேன்..' என்றான்.

'ஓ..!' என்றாள்.

'போகப் போறதில்லையோ?' என்றாள்.

'போகணும்' என்றான் சலிப்பாக.

'போகலேன்னா.. எல்லாரும் கேள்வி கேட்பாங்க.. பதில் சொல்லணும். உங்க விஷயம் எனக்கும் பூவேந்தனுக்கும் மட்டும்தான் தெரியும்.' போகலேன்னா காரணம் என்னன்னு ஒவ்வொருத்தனுக்கும் பதில் சொல்லணும். அப்படிச் சூழ்நிலையை அவாய்ட் செய்யவாவது போயித்தான் ஆகணும்' என்றான்.



அவள் புன்னகைத்தாள்.

அவனுக்குப் பாவமாகப் போனது.

'ஏன்.. பூங்கோதை.. உங்களுக்கும்.. அவனுக்கும் ஏதாவது பிராப்ளமா?' என்றான்.

அவள் பெருமூச்சு விட்டாள். 'ஒரு பிராப்ளமும் இல்லை. பிராப்ளம்னா.. என் வசதியின்மைதான்.. அவங்களுக்கேத்த.. ஃபாமிலி பேக் கிரவுண்ட்.. இல்லை.. அவ்வளவுதான்' என்றாள்.

'அவன் அதை முன்னாடியே யோசிச்சிருக்கணும்' என்றான் கோபமாக.

'தப்பு.. அவர் மேலே இல்லை.. சார்.. என் மேலேதான்.. நான்தான் இதையெல்லாம்.. யோசிச்சிருக்கணும்..' என்றாள்.

கோதை மேடம்.. வாழ்க்கையில இது மாதிரி.. இழப்புக்கள்.. ஏற்படறது சகஜம்தான்.. இது ஒரு சலனம். விபத்துன்னு எடுத்துக்கிட்டு.. வாழ்க்கையை எதிர்த்து நின்னு.. ஜெயிச்சுக் காட்டணும்..' என்றான்.

அவள் புரிந்து கொண்டாற்போல் தலையாட்டிக் கொண்டாள்.

'சார்.. நான் சம்மதம் சொன்னபோது மனசாரத்தான் சொன்னேன்.. ஆனால் அதைக் குறிச்சு.. எந்த விதக் கற்பனையும் வச்சுக்கறது இல்லேன்னு.. தெளிவா இருந்தேன். அதனால சமாளிப்பேன்னு.. வச்சுக்குங்க. ஆனா.. இது ஒரு நட்பாகவே மட்டும் இருந்திருந்தா.. நட்பு என்றைக்கும் தொடர்ந்திருக்கும். அது ஒண்ணுதான்.. வருத்தம்..' என்றாள்.

அவன் ஒருவிதமான வியப்புடன் அவளைப் பார்த்தான்.

'கவலைப்படாதீங்க.. இதைவிட உயர்வான நட்பு. ஆத்மார்த்தமான.. நட்பு உங்களுக்குக் கிடைக்கும். ஏன்.. நானே.. இனிமே உங்களோட க்ளோஸ் பிரண்டுன்னு வச்சுக்குங்க..' என்றான்.

அவள் நெகிழ்ச்சியுடன் அவனைப் பார்த்தாள் 'தாங்க்ஸ்.. சார்!' என்றாள்.

அந்த நேரம்!

போன் ஒலித்தது. லாயர் முத்துசாமி பேசினார்.

'அம்மா.. நான் எக்கச்சக்கமா.. இங்கே மாட்டிகிட்டேன். நாளைக்கு சாயங்காலம் வரை வர முடியாது போலிருக்கு. வீட்டுல, ஒரு பிரசண்ட் வாங்கி வச்சிருக்கேன். நீயே பூவேந்தன்... ரிசப்ஷன் அட்டெண்ட் பண்ணி என் சார்பாக குடுத்தர்றியா?' என்றார்.

பூங்கோதை இதை எதிர்பார்க்கவில்லை. திகைத்தாள்.

'சரிங்க.. சார்!' என்றாள்.

வெளிறிப் போன அவள் முகம் பார்த்து மதுசூதனன் 'என்ன விஷயம்' என்று கேட்டான்.

சொன்னாள்.

மதுசூதனன் அவள் முகத்தை ஆழமாகப் பார்த்தான்.

'என்ன செய்யப் போறீங்க?' என்றான்.

அவள் ஒரு கணம் யோசித்தாள். பிறகு முகத்தில் உறுதி தெரிய.

'போய்த்தான்.. ஆகணும் சார்!' என்றாள்.

அவன் முகத்தில் ஒரு மாற்றம் தெரிந்தது.

'நான் என் காரில கூட்டிட்டுப் போகவா?' என்றான்.

'வேண்டாம்.. சார்! ஏழைக்கேத்த எள்ளுருண்டை என் ஸ்கூட்டி.. இருக்கு.. சார்!' என்றாள்.

'ஓ..!' என்றான்.

'சரிங்க.. சார்! அப்ப இப்பக் கிளம்பினாதான் லாயர் வீட்டுக்குப் போய் பிரசண்ட் கலெக்ட் பண்ணிகிட்டு.. எங்க வீட்டுக்குப் போய் ரெடியாகி வர முடியும்..' என்றாள்.



ஆபீஸைப் பூட்டி விட்டு வெளியே வந்தார்கள்.

'களுக்'கென்று சிரித்தாள்.

'என்ன?' என்பது போல் அவன் பார்க்க..

'இல்லே.. இன்னைக்கு வீட்டுக்குக் கைகாலோட சேர்ந்து போவானான்னு தெரியல!' என்றாள்.

'ஏன்?' என்றான் வியப்புடன்.

இல்லே.. வேந்தனோட அப்பா.. நான் ஏதோ கலாட்டா செய்ய வந்திருக்கேன்னு.. நெனச்சு.. ஆளை விட்டு அடிச்சுத் துரத்தாம.. இருந்தா.. சரி..' என்றாள்.

சிரித்தான்.

தன் துன்பத்தையே நகைச்சுவையாக்கி சிரிக்கிற அந்த இளம் பெண்ணைப் பார்த்தவுடன் மதுசூதனன் நெஞ்சம் உருகிப் போனது.

'பயப்படாம.. வாங்க! நாங்கள்ளாம் இருக்கோமில்ல..' என்றான்.

'பயமா? இனி நீண்டு கிடக்கப் போற என்னோட வாழ்க்கையைப் பார்த்தே நான் பயப்படலை. இதுக்குப் பயப்படுவேனா?' என்று வண்டியை ஸ்டார்ட் செய்கிறவளை ஒரு பாராட்டுப் பார்வையுடன் பார்த்தான்.

அவள் அதைக் கவனிக்கிற மனநிலையில் இல்லை.

கடைசியாக விளையாட்டுப் போல் அவள் சொல்லி விட்டுப் போகிற வார்த்தைகள் அவன் நெஞ்சில் ஆணியடித்தாற் போல் பதிந்து போனது.

வாழ்க்கையின் விசித்திரத்தை எண்ணி ஒரு பெருமூச்சோடு புறப்பட்டான்.





5

மதுசூதனன் மணமகன் அறைக்குள் எட்டிப் பார்த்தான்.

இளைஞர்களான உறவினர்களின் நடுவே அமர்ந்திருந்த பூவேந்தன் திரும்பிப் பார்த்தான். முகம் மலர்ந்தான்.

'டேய்! மது!' என்று எழுந்து வந்தான். அருகில் வந்தவுடன் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டான்.

'மது, வரமாட்டியோன்னு நெனைச்சேன் இரண்டு. மாச மாவே அவாய்ட் பண்றே?' என்றான்.

மதுசூதனன் அதை அலட்சியம் செய்தவனாக. 'வேந்தா.. ஒரு முக்கியமான விஷயம் பேசறதுக்காக வந்தேன். பூங்கோதை ரிசப்ஷனுக்கு வர்றாப்ல..' என்றான்.

'ஓ!' என்று முகம் இருண்டான் பூவேந்தன்.

அந்தக் கணத்தில் இகழ்ச்சிப் புன்னகை ஒன்று தோன்றியது மதுசூதனனின் முகத்தில். ஆனால் சட்டென்று மறைத்துக் கொண்டான்.

'அதான்... அதுக்காகத்தான் நான் முன்னால வந்தேன். லாயர் மாமா.. ஊர்ல இல்லை. அவரு கண்டிப்பாய் போயாகணும்னு சொல்லிட்டதால.. வருது.. மற்றபடி வேறெந்தப் பிரச்சினையும்.. செய்யப் போறதில்லே.. தெரியுதா? நீ உங்கப் பாவைத் தயார் செய்து வை.' என்றான்.

'சரிடா..!' என்றான் பூவேந்தன் உள்ளடங்கிய குரலில். பிறகு விளக்கம் சொல்வது போல் 'டேய்! மது! எங்களுக்கு மேரேஜானா கோதைக்கும்.. நிம்மதியான வாழ்க்கை குடுக்க முடியாத சூழ்நிலை..' என்று ஆரம்பிக்க.

'ஓ...கே! ஓ..கே! அதெல்லாம் பேசறதுக்கு இது நேரம் இல்லே. நீ மத்த விஷயங்களைப் பாரு' என்றபடி நகர்ந்து விட்டான்.



சற்று நேரம் கழித்து அப்பாவை அழைத்து பூவேந்தன் முணுமுணுவென்று பேசுவதை ரிசப்ஷன் ஹாலில் இருந்த கடைசி வரிசையில் அமர்ந்து உணர்ச்சியற்ற பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் மதுசூதனன்.

★ ★ ★

என்னதான் தைரியமாகக் கிளம்பிவிட்டாலும் பூங்கோதைக்கு உள்ளூர நடுக்கமாக இருந்தது.

மண்டப வாசலில் ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு கொக்கியில் மாட்டி வைத்திருந்த கிஃப்ட் பொட்டலத்தை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

பூவேந்தனின் தந்தை பாலசுப்பிரமணியன் எதையும் காட்டிக் கொள்ளாமல்,

'வா.. அம்மிணி!' என்று வரவேற்றார். அவள் வணக்கம் சொன்னாள்.

அந்த நேரம் எங்கிருந்தோ வந்து மதுசூதனன் 'வாங்க..! வாங்க!' என்று அவள் அருகில் நின்று கொண்டான்.

ஆண்களும், பெண்களுமாய்க் கலந்த கூட்டமாக இருந்ததனால் இருவரும் அருகருகே கடைசி வரிசையில் அமர்ந்து கொண்டார்கள்.

மணப்பெண் தீபா.. அழகாக இருந்தாள். நெஞ்சைப் பந்து போல் வேதனை அடைக்கப் பூங்கோதை பூவேந்தனை சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

படபடப்பு அடங்க சற்று நேரமாயிற்று.

மதுசூதனன் சாதாரணமாக முகத்தை வைத்துக் கொண்டு

'ரிலாக்ஸ்! ரிலாக்ஸ்!' என்று மெல்லிய குரலில் ஆசுவாசப் படுத்தினான்.

அவள் மெதுவாக நிதானத்துக்கு வந்தாள். பத்து நிமிடத்துக்கு பின் கூட்டம் குறைவாக இருந்த நேரத்தில்,

'சார்! பிரசண்ட் பண்ணிட்டுக்கிளம்பறேன் சார்! லேட்டாகுது..' என்றாள்.

'சரி.. போங்க! நா கொஞ்சம் கழிச்சுப் பின்னாலே வர்றேன்..'

முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாமல் நிதான நடையுடன் நடந்தாள் பூங்கோதை.

மேடையில் ஏறினாள்.

பூவேந்தன் உயிரோட்டம் இல்லாத புன்னகையுடன்,

'வாங்க!' என்றான்.

'விஷ் யூ எ வெரி ஹேப்பி மாரிட் லைஃப் சார்' என்று நீட்டினாள். 'லாயர் அனுப்பி வைச்சார்' என்றாள்.

அவன் விதிர்விதிர்த்துப் போன முகத்துடன் வாங்கிக் கொண்டான்.

மதுசூதனன் மெதுவாக வந்து பின்னால் நின்று கொண்டான்.

அந்த நேரம் மேடைக்கு வந்த பாலசுப்பிரமணியம் பூங்கோதையை ஊடுருவிப் பார்த்தார். அந்தப் பார்வையை பூங்கோதை நேரடியாக சந்தித்ததை மதுசூதனன் ஒருவித வியப்புடன் பார்த்தான்.

'ஏனம்மிணி! ஒரு போட்டோவுக்கு நிக்கிறது?' என்றார் பாலசுப்பிரமணியம். குரலில் ஒரு விதமான கேலி தொனித்தது.

'சொன்னதுக்காக ரொம்ப நன்றிங்க. ஐயா நிறையப் பெரிய வங்க வந்துருக்காங்க. போட்டோவுக்கு நிக்கிற அளவுக்கு.. நா ஒண்ணும் பெரிய ஆள் இல்லைங்க. ஐயா.. எனிஹேவ். தாங்க்ஸ்' என்று கைகூப்பினாள்.

திரும்பி பூவேந்தனைப் பார்த்துத் தலையசைத்தாள். கம்பீரமாக மதுசூதனனை நோக்கித் திரும்பினாள்.

'சார்! நீங்க கேட்ட அந்தக் கேஸ் கட்டை எடுத்து வச்சிருக்கேன்' என்று பேசியபடி நடந்தாள்.



அவள் நாடகம் புரிந்து கொண்ட அவனும் சட்டென்று 'ஆமாங்க.. அது ரொம்ப முக்கியமான.. கேஸ்ங்க' என்றபடி அவளுடன் இணைந்து நடந்தான்.

பாலசுப்பிரமணியமே உள்ளுக்குள் மெச்சிக் கொண்டார்.

இரண்டு பேரும் சற்று தூரம் நடந்திருப்பார்கள். விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார்கள். வெளியில் வந்ததும் 'பூங்கோதை! நல்லா சமாளிச்சீங்க..' என்றான்.

'தாங்க்ஸ்!' என்றாள்.

'நீங்க காலையில் வரப்போறதில்லையா?' என்றாள்.

'இல்ல.. கோதை..' எனக்கு அவன் மேல ரொம்பக் கடுப்பு..' என்றான்.

அவள் புன்னகைத்தாள். 'சார்! அது முடிந்து போன சாப்டர். நா வீட்ல இருந்து புறப்படும்போது கொஞ்ச நேரம் தியானத்துல உட்கார்ந்து மனசைத் தெளிவாக்கிக்கிட்டேன். என்ன இருந் தாலும் நாம வேந்தன் சாருக்கு பிரண்ட்ஸ். அவரோட வாழ்க்கை நல்லபடியா அமையணும்னு நாமளே நினைக்கலன்னா எப்படி? அவருக்காவது லைஃப் நல்லா அமையட்டும்னு ஆத் மார்த்தமா வேண்டிக்கிட்டுத்தான் புறப்பட்டேன்' என்றாள்.

அவன் மலைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்னவோ.. தெரியலை வேந்தனோட க்ளோஸ் பிரண்ட்ஸ் யாரும் அவ்வளவு இன்வால்வ் ஆகலை. நீங்களாவது கூட இருந்து நடத்தி வைங்க..' என்றாள்.

வண்டிகள் நிறுத்தியிருந்த இடத்துக்கு வந்தார்கள். தெரு வெறிச்சோடிக் கொண்டிருந்தது.

'கோதை.. நீங்க தனியாப் போக வேண்டாம்' என்றான். அப்போது குமரேசன் எங்கிருந்தோ வந்தவன் 'அம்மிணி! சாப்பிட்டுட்டுப் போலாம்' என்றான்.

ஓரிருமுறை அவர்கள் அலுவலகத்திற்கு வந்திருக்கிறார். எனவே தெரியும்.



'இல்லைங்கண்ணா லேட்டாயிடும் நான் தனியா ஊருக்குல போகோணும்..' என்றாள்.

'இரம்மணி! ஒரு டம்ளர் காபியாவது சாப்பிடு..' என்று எடுத்து வர நகர்ந்தான்.

'குமரேசண்ணா. அப்படியே எனக்கும்.. நானும் கிளம் பறேன்..' என்றான் மதுசூதனன்.

'அட... நீயிரு.. நீ எதுக்குக் கிளம்பறே?' என்றபடி அவன் நகர.

'இல்லல்லே.. நான் காலையில வர்றேன்...' என்றான்.

அந்த இடைவெளியில் பாலசுப்பிரமணியம் அவர்கள் அருகில் வந்து நின்றார்.

பரிவு கலந்த குரலில் 'அம்மிணி! காபியினாலும் சாப்பிடு' என்றார்.

அவள் சரியென்று தலையசைத்தாள். என்ன நினைத்தாரோ என்னவோ

'அம்மிணி! சில நேரத்துல பெரியவங்க செய்யறது.. முன்னால கசப்பா.. இருக்கும்.. பின்னாடி புரியும்..' என்றார்.

அவள் அதற்கும் பொதுவாகப் புன்னகைத்து வைத்தாள்.

அதற்குள் காபி வர இருவரும் குடித்து முடித்தார்கள்.

அவள் வண்டியை முன்னே ஓட்ட, அவன் இணையான வேகத்தில் பின்னாலேயே ஓட்டிக் கொண்டு வந்தான்.

ஊர் எல்லை வந்தவுடன் ஹார்ன் அடித்தான். வழியெங்கும் இருள் சூழ்ந்திருந்த போதும் மின்மினிப் பூச்சிகளை அந்த நேரத்திலும் ரசித்தான் மதுசூதனன்.

வண்டியை நிறுத்தினான்.

அவளும் வண்டியைத் திருப்பிக் கொண்டு வந்தாள்.

'சார்!' வீட்டுக்கு வந்துட்டுப் போங்க!' என்றாள்.

'இல்லம்மா... இந்நேரத்துல இப்படி வரக்கூடாது இன் னொரு நாளைக்கு வர்றேன்..' என்றான்.



'சார்!' என்றாள் ஆழ்ந்த குரலில்.

'ம்.' என்றான்.

'ரொம்பத் தாங்க்ஸ்... சார்.. உங்க மாரல் சப்போர்ட்டுக்கு..' என்றாள்.

'ஓ.. தட்ஸ் மை டியூட்டி' என்று குட்நைட் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

வண்டியைத் திரும்ப ஓட்டிக் கொண்டு வரும்போது பூங் கோதையைப் பற்றிய பாராட்டுணர்வு மனதிற்குள் தோன்றியது.

'ஒரு போட்டோவுக்கு நிக்கிறது?' என்ற நக்கலான கேள்வி யில் நான் வெற்றி பெற்று விட்டேன் பார் என்ற கர்வம் தொனித்தது என்றால் அவள் அதை எதிர் கொண்ட விதம் அவனுக்குள் ஒரு மரியாதையை ஏற்படுத்தியது.

அந்தக் கணத்தில் அவள் ஏதோ பத்ம வீயூகத்தில் சிக்கிக் கொண்ட அபிமன்யுவைப் போல் நின்று கொண்டிருந்தாள்.

கள்ளங் கபடமற்ற கிராமத்து முகம். ஆனால் அறிவின் தீட்சண்யம் வீசும் கண்கள்.

பூவேந்தன் எப்படிப்பட்ட ஒரு நல்ல பெண்ணை இழந்து விட்டான் என்று எண்ணிக் கொண்டான்.

மறுநாள் காலையில்!

திருமணத்தில் அவன் பூவேந்தனுடன் இருந்து திருமணத்தை நடத்திக் கொடுத்தான்.

திருமணமும் முடிந்தது.

அதே நேரத்தில் தன் மனத்தில் தோன்றி விடுகிற எந்த வேதனை மிகுந்த எண்ணமும் அவனுடைய வாழ்க்கையைப் பாதிக்கக் கூடும் என்ற அச்சத்தில் 'இறைவா! மன்னிக்கிற மனப்பான்மையைக் கொடு!' என்று வேண்டிக் கொண்டு கந்தர் கலிவெண்பாவையும், கந்தசஷ்டி கவசத்தையும் படித்துக் கொண்டு பூங்கோதை அந்த சின்னப் பூஜை அலமாரியின் முன் அமர்ந்து கொண்டிருந்தாள்.

'ரொம்பத் தாங்க்ஸ்பா! மது' என்று பூவேந்தன் நன்றி சொன்ன போதுதான் அவன் சொன்னான்.

'சொல்லப் போனா நான் உனக்காக வர்லடா. நாமெல்லாம் வேந்தனுக்கு பிரண்ட்ஸ் நாமளே வேந்தனுடைய வாழ்க்கை நல்லாயிருக்கனும்னு நினைக்கலைன்னா, வேற யார் நினைப்பா? நீங்க போய் இருந்து நடத்திக் குடுக்கணும்னு கோதை ரிக்வெஸ்ட் பண்ணுச்சுடா.. அதுக்காக வந்தேன்..' என்றான்.

நாலு அறை ஒன்றாக வாங்கினாற் போல் அவன் முகம் சுருங்குவதை மதுசூதனன் ஆழ்ந்து பார்த்தான்.

ஒரு குரூரத் திருப்தி கூடத் தோன்றியது. உடனே மீட்டுக் கொண்டான்.

'சரி.. விடு! போனது போகட்டும்.. இனியாவது ஹேப்பியாய் இரு..' என்றான்.

அந்த நேரம் மணமகள் தீபா அங்கே வர 'என்னங்கண்ணி! கொஞ்ச நேரம் கூட இவனை விட்டுட்டு இருக்க முடியலை யாக்கும் அப்ப.. நான் கிளம்பறம்ப்பா..' என்று வேடிக்கை பேசி விடை பெற்றுக் கொண்டாள்.

மண்டபத்தை விட்டு வெளியேறுகிற நேரம் 'குமரேசன் வந்தான். அதுவரை மனதுக்குள் அடக்கி வைத்திருந்ததைக் கேட்டே விட்டான் மதுசூதனன்.

'குமரேசண்ணா! எல்லாருமாச் சேர்ந்து ஒரு சின்னப் பொண்ணோட பாவத்தை சம்பாதிச்சுட்டீங்களே! நீங்களாவது தலையாட்டிருக்கக் கூடாதா? அப்பா.. இப்படித் தப்புப் பண்ணிப் போட்டாங்களே?' என்றான்.

குமரேசன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

'மது! நான் தலையிடலேன்னு நினைச்சயா? அப்பாகிட்டே.. போய்க் கேட்டேன். அதுக்கு அப்பா.. என்ன சொன்னாரு தெரியுமா? அடேய்! உன்ற தம்பி யாரு என்ன சொன்னாலும் சரி.. நா அந்தப் புள்ளையத்தான்.. பண்ணுவேன்னு



சொல்லியிருந்தா.. நானே பண்ணி வச்சிருப்பேன். நா நாலு கேள்வி கேட்டவுடனே குளம்பிப் போய் உட்கார்ந்துகிட்டான். நாளைக்கு ஊரு பூராவும் பேசுமே! எப்படிச் சமாளிப்பான்? வேண்டாமடா.. இது சரி வராதுங்கறாரு.. நான் என்ன செய்ய' என்றான்.

அதனால்தான் அப்பா பெரியவங்க செய்யறது பின்னாடி நல்லதா இருக்கும்னு சொன்னாரோ என்று எண்ணிக் கொண்டான்.

குமரேசன் தொடர்ந்தான்.

'தம்பி! நான் சொல்றேன்னு நினைச்சுக்காதே' படிச்ச வங்கல்ல பாதிப்பேரு கோழைக. இவனும் அந்த மாதிரித்தான். படிச்ச கோழை' இதே படிக்காதவனா.. இருந்தா.. அந்தஸ்து.. என்னப்பா அந்தஸ்துன்னு.. மண்ணு வெட்டியைத் தூக்கிட்டுக் கிளம்பியிருப்பானல்லோ!' என்றான்.

மதுசூதனனுக்கு பேசுவதற்கு ஒன்றும் இருக்கவில்லை.

'விடப்பா! அந்தப் புள்ளை தப்பிச்சுதுன்னு வச்சுக்க. ஆனா.. அதுகிட்ட இதையெல்லாம் சொல்லிப் போடாதே!' என்றான் குமரேசன். பெருமூச்சுடன் விடைபெற்றுக் கொண்டான்.

வெளியே வந்தவுடன் பூங்கோதையைப் போய்ப் பார்க்க லாமா என்று நினைத்தான். ஆனால் பிறகு மனம் மாற்றிக் கொண்டான்.

இப்போது அவளுக்குத் தனிமைதான் நல்லது. சில துக்கங்களை அவரவர் அனுபவித்துத்தான் மீள வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

காரை ஓட்டிக் கொண்டே யோசித்தான். பூவேந்தன் செய்தது மிகப் பெரிய தவறு எனப் புரிந்தது.

அவளுடைய அலுவலகத்துக்கே போய்ப் பழகி சலனத்தை வளர்த்து இப்போது சந்தர்ப்பவாதியாய் நழுவிக் கொள்வ தற்குக் காரணம் தேடிக் கொள்கிறான்.




குமரேசன் சொன்னதுதான் சரி. நல்ல வேளையாக அவள் தப்பித்தாள்.

வாழ்க்கையின் மிகப் பெரிய கொடுமைகளில் ஒன்று நிராகரிப்பு. அதை அந்தச் சின்னப் பெண். இளந்தளிரைப் போல் தோற்றம் அளிக்கிற இளம் பெண் தாங்கிக் கொண்ட விதம் அவன் மனதில் பதிந்தது.

அதே சமயத்தில் இன்னொரு உருவம் மனத்தில் தோன்றியது.

இப்படி ஒரு நிராகரிப்பைத் தாங்கிக் கொள்ள முடியாமல் சமாளிக்கத் தெரியாமல் தன்னையே தொலைத்துக் கொண்ட அன்பின் வடிவம்!

நினைத்தவுடன் நெஞ்சில் பாறாங்கல்லை வைத்தாற் போல் பாரம் ஏறிக் கொண்டது.



6

வேலை நிறைய வைத்துக் கொண்டாள் பூங்கோதை. வீட்டுக்கு வந்த பின்பும் அப்படித்தான் உழைத்தாள்.

அன்றைக்கு சாரதா வந்தாள்.

'கோதை! என்னடி எப்பப் பாரு பிஸியாயிருக்கே. ஆளைக் காணறதே யில்லை. பேசக் கூட முடிய மாட் டேங்குது...' என்றபடியே உள்ளே வந்தாள்.

'சாரு!' என்று முகம் மலர்ந்தாள் பூங்கோதை.

'அப்பாடா! எங்க என்னை மறந்தே போயிட்டியோன்னு நினைச்சேன்.' என்றாள் சற்றே கோபத்துடன்.

'இல்ல.. சாரு! எனக்குக் கொஞ்சம் வேலை. இங்க அப்பா. அம்மாவுக்கும் உதவி செய்ய வேண்டி இருந்தது. அதான்..' என்றாள்.



பூவேந்தனுக்குத் திருமணம் முடிந்து ஒரு மாதம் ஆகி யிருந்தது.

மெது மெதுவாக அந்த விஷயத்திலிருந்து மீண்டாள் பூங்கோதை.

லாயரைச் சந்திக்க வந்து செல்கிற எத்தனையோ பேரில் அவனும் ஒருவன் என்ற நினைப்பையே மனதில் பதியச் செய்து கொள்ள வேண்டும் என்று எண்ணி அதில் ஓரளவு வெற்றியும் பெற்றாள்.

தன் மனத்துக்கே பயிற்சி கொடுத்துக் கொண்டாள். திடீ ரென்று அவன் தன்னெதிரில் வந்து நின்றாள் தான் நிலை மையை எப்படிக் கையாள்வோம் என்றெல்லாம் கற்பனை செய்து ஓரளவுக்கு தேறிக் கொண்டாள்.

இப்போதெல்லாம் அவன் எதிரில் வந்தால் கூட பெரிய பாதிப்பு எதுவும் இருக்காத அளவில் மனம் தயாராகி விட்டதை அறிந்தாள்.

பி.ஜி.எல். பாடங்களுக்கு நேரம் ஒதுக்கினாள். நல்ல புத்தகங்களை மீண்டும் படிக்கத் துவங்கினாள். ஆச்சரியம் என்னவென்றால் மதுசூதனன் அடிக்கடி போன் செய்து விசாரித்ததுதான்.

அவள் படிப்புப் பற்றிய விஷயங்களைக் கேட்டுக் கொண் டான். ஊக்குவித்தான்.

இடையிலே ஒன்றிரண்டு முறை வந்து விட்டுக் கூடச் சென்றான்.

ஒரு நாள்!

மாலையில் வந்தான்.

அன்றைக்கு அவனிடம் நின்று போவதற்குக் கூட அவளுக்கு நேரம் இருக்கவில்லை.

சற்று நேரம் கழித்துத்தான் அவனிடம் வந்து பேசினாள்.

பிறகு அலுவலகம் பூட்டும் போது அவன் லாயருடன் வெளியே போக அவள் வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

மறுநாள் காலை!

பதினோரு மணியிருக்கும்!

அன்றைக்கு லாயர் கோர்ட்டுக்குப் போகவில்லை.

'ஏம்மா... கோதை!' என்றார்.

'சார்!' என்று வந்து நின்றாள்.

'வேலை ரொம்ப அதிகமாயிருக்கா?'

அவள் மௌனமாக நின்றாள்.

'சரி! ஒண்ணு செய்! உனக்கே தெரிஞ்ச பொண்ணு யாராவது இருந்தா.. சேத்துக்கோ. கூட மாடப் பழக்கி விடு' என்றார்.

அப்போது அவளுக்கு சாரதாவின் நினைவுதான் வந்தது.

'சரிங்க.. சார்!' என்று சொல்லிவிட்டு வந்தாள்.

சாரதாவும் பி.ஏ. முடித்திருந்தாள். ஏதாவது வேலை கிடைக்காதா என்று தேடிக் கொண்டிருந்தாள்.

கிராமத்தில் அதுவும் பி.ஏ.வுக்கு என்ன வேலை கிடைக்கப் போகிறது என்று நொந்து போயிருந்தாள்.

அது இப்போது நினைவுக்கு வரவும் 'சாரதா! எங்க ஆபீசுல வேலைக்கு வர்றியா?' என்றாள்.

'ஆஹா! இதென்னடி கேள்வி? கரும்பு தின்னக் கூலியா? உங்க ஆபீசுல உன்கூட வேலை செய்யக் கசக்குமா?' என்றாள்.

'சரி.. உங்க அம்மா, அப்பாகிட்டே சொல்லிட்டு.. நாளைக்கே எங்க ஆபீசுக்கு வா.. லாயர்கிட்டே பேசி முடிச்சர்லாம்..' என்றாள் பூங்கோதை உற்சாகமாக.



சாரதாவின் குடும்பம் ஓரளவுக்கு வசதியான குடும்பம். ஆனாலும் சாரதாவுக்கு சுயமாக ஒரு சம்பாத்தியம் இருந்தால் நல்லதுதானே என்ற எண்ணம்.

அவளும் இப்போது பூங்கோதையுடன் வண்டி ஓட்டிப் பழகி இருந்தாள். அதனால் பூங்கோதையுடன் போய் வருவதில் சிரமம் ஒன்றும் இருக்காது என்று யோசித்தாள்.

'சரிடி.. நான் இப்பவே போய்.. எங்க அம்மா.. அப்பாகிட்டே பேசறேன்' என்றாள் நகர்ந்தாள்.

'சாரு! சம்பளம் என்னன்னு கேட்டா?' என்று பூங்கோதை சொல்ல.

'இதபாரு. கோதை, சம்பளம் பத்தி எனக்குக் கவலையே இல்லை. வெளியுலகம் பாக்கணும் தெரிஞ்சுக்கணும். அவ்வளவுதான்.' என்று வேகமாகப் போனாள்.

பூங்கோதை சிரித்தபடியே கையிலிருந்த பால் கேனை உள்ளறையில் கொண்டு போய் வைத்து விட்டு வெளியே வந்தாள்.

'உள்ளே வரலாமா?' என்று கேட்டபடி மதுசூதனன் நின்றிருந்தான்.

★ ★ ★

'வெரிகுட்.. கலெக்ஷன்! என்று புத்தகங்களை லேசாகப் புரட்டி விட்டுத் திரும்பிப் பார்த்துச் சிரித்தான்.

'எப்படியிருக்கிங்க. கோதை?' என்றான்.

'நல்லாயிருக்கேன்.. சார்!' என்றாள் நிறைவான புன்னகையுடன்.

'சார் சாப்பிடறீங்களா?' என்றான்.

சம்பிரதாயத்துக்காகத்தான் கேட்டாள். ஆனால் அவன் 'ஓ..! அதுக்கென்ன சாப்பிடலாமே?' என்று கூறவும் பூங்கோதை சற்றுத் திணறி விட்டாள்.

'ஒரே நிமிஷம்.. உப்புமா.. செஞ்சர்றேன்' என்று அவள் வெங்காயம் வெட்ட அரிவாள் மணையைத் தூக்க.

'நோ.. நோ! உங்க வீட்ல இப்ப என்ன இருக்கோ.. அதைக் குடுங்க.. சாப்பிடறேன்' என்றான்.

அவள் தயக்கத்துடன் 'சார்' சூடா வடிச்ச சாதம்.. அப்புறம்.. அப்புறம்..' என்றாள்.

'ம்.. சொல்லுங்க!' என்றான் சிரிப்புடன்.

'சுண்டக் குழம்பு' என்றாள்.

'ஓ! அப்படீன்னா?' என்றான்.

'சார்! தினம் மீந்து போன குழம்பு. ரசம். காய்.. எல்லாத்தையும் ஒரு மண் சட்டியில கொட்டி கோட்டடுப்புல வச்சிடுவோம். அது சுண்டி...' என்று அவள் பேச.

'கோட்டடுப்புன்னா?' என்று கேட்டான்.

'அதான்.. சார்.. பக்க வாட்டு அடுப்பு..' என்றாள். காட்டினாள்.

அவன் எழுந்து வந்து பார்த்தான்.

'அந்தக் குழம்பு சுண்டி.. கிரேவி மாதிரி ஆயிடும். ஆனா.. டேஸ்ட்டா.. இருக்கும்.. சார்' என்றாள்.

'அப்ப சரி.. குடுங்க' என்றான்.

அவள் ஒரு தட்டின் மேல் அளவாக வாழையிலை வெட்டிப் போட்டு சுடுசாதம் சுண்டக் குழம்பு. கத்தரிக்காய் பொரியலும் பரிமாற.



'ம்.. சுப்பர்ப்.. நல்லாயிருக்கு!' என்று சுவைத்து உண்டான் சேரில் அமர்ந்தபடியே.

'அதாரம்மிணி! கார்ல வந்திருக்கறது?' என்றபடி வந்தான் நாட்ராயன். பின்னாலேயே அவன் மனைவியும் வந்தாள்.

'அப்பா! என்ன நீ! ஏழு மணிக்கே வர்றேன்னே?' என்றாள்.

'என்னா.. பண்றது? போன இடத்துல நேரமாயிப் போச்சு..' என்றான்.

'அப்பா... இவரு.. நம்ம லாயருக்கு ரொம்ப சொந்தக்காரரு.. பேரு.. மதுசூதனன்' என்று அறிமுகப்படுத்தினாள்.

மதுசூதனன் தட்டைக் கையில் வைத்தபடி 'வணக்கம்' என்றான்.

'வணக்கமுங்க.. அய்யா!' என்றான் நாட்ராயன். பிறகு மகளிடம் 'அடப்புள்ளே! இந்த சுண்டக் குழம்பையா.. ஊத்தினே? வேற ஏதாவது செய்யறதுக்கு என்னொ?' என்றான்.

மதுசூதனன் இடையில் புகுந்து.

'இல்லயில்லே.. நாந்தான் வேண்டாம்ண்ணேன். இதுவே.. ரொம்ப டேஸ்டா இருக்கு..' என்றான்.

நாட்ராயனும், பச்சையம்மாளும் சிரித்தார்கள்.

'நிஜமாத்தான். டவுன் பக்கம் இப்படி ஐட்டம் எல்லாம் கிடைக்காதில்லே' என்றான்.

பிறகு பொதுப்படையாக சற்று நேரம் பேசினார்கள். அதற்குப் பிறகு அவன் மெதுவாக.

'இல்லே! உங்ககிட்டே எனக்கு ஒரு ஹெல்ப் வேணும்!' என்றான்.

'சொல்லுங்க!' என்றான் நாட்ராயன்.

'இங்கே.. உங்க ஊருக்குள்ள ஒரு பத்து ஏக்கரா.. விலை பேசியிருக்கேன். இன்னும் விலை முடிவாகலை. எதுக்கும்



நாட்ராயனைக் கேட்டுக்கோ. விலை நிலவரம் கரெக்டாத் தெரியும். ஊருக்குள்ளே அவருக்குத் தெரியாத ஆளுங்களே.. இல்லை.. அப்படீன்னார். முத்துசாமி மாமா.. அதான்.. வந்தேன்!' என்றான்.

'ஐயோ! நானென்னங்க. அவ்வளவு பெரிய ஆளா? கூலிக்காரன்' என்றான் நாட்ராயன் வெட்கத்துடன்.

'அதென்ன... அப்படிச் சொல்றீங்க? உழைப்பாளின்னு சொல்லுங்க..' என்றான் மதுசூதனன்.

பூங்கோதை ஒரு வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'யாரோட பூமி?' என்றான் நாட்ராயன்.

சொன்னான்.

'ஓ.. கந்தப்பனோட பூமிங்களா? நல்ல பூமிங்க. அது.. உள்ளயே வாய்க்கால் ஓடுது. நஞ்சை பூமிங்க.. முப்போகம் எடுக்கலாங்க' என்றான் நாட்ராயன் உற்சாகமாக.

'ஆமா! நிலம் பிடிச்சு.. எனக்கு' என்றான்.

'விலை.. என்ன சொல்றாங்க?' என்றான்.

சொன்னான்.

நாட்ராயனின் முகத்தில் சிந்தனை ரேகைகள் படிந்தன.

'கொஞ்சம் ஜாஸ்தியாத் தெரியுதுங்களே?' என்றான்.

'எனக்கும் அப்படித்தான்.. தெரியுது. கொஞ்சம் விலை. குறைக்கற மாதிரித் தெரிஞ்சா.. இன்னும் பத்து ஏக்கராவையும் சேத்து வாங்கிக்கலாம்னு பாக்கறேன்..' என்றான்.

'அப்படீன்னா.. பேசலாமுங்க.. கந்தப்பனும் ஈரோட்டில ஏதோ வீடு கட்டறேன்.' இனி விவசாயம். வேண்டாம்னு



பாக்கறேன்னு சொல்லிகிட்டு இருந்தாப்ல. அப்ப.. உறைச்சு நில்லுங்க. குடுத்துருவாப்ல..' என்றான்.

'நீங்க.. வந்து பேசி முடிக்கறீங்களா?'

'ஓ! அதுக்கென்ன? நீங்க உங்க விலையைச் சொல்லுங்க. நான் பேசிப் பாக்கறேன்' என்று தகவல்கள் வாங்கிக் கொண்டான்.

'பேசி வைங்க.. நான்.. ரெண்டுநாள்ல வர்றேன்..' என்று கிளம்பினான்.

மூவரும் வாயில் வரை சென்று வழியனுப்பினார்கள்.

'தம்பி ரொம்ப வசதியான மாதிரித் தெரியுது. இருந்தாலும் எவ்வளவு பணிவு. தன்மை' என்று மாய்ந்து மாய்ந்து புகழ்ந்தார்கள். நாட்ராயனும் பச்சையம்மாளும்.

பூங்கோதை புன்னகைத்துக் கொண்டாள்.

★ ★ ★

**சா**ரதா ஆபீசுக்கு வந்தது பூங்கோதைக்கு உதவியாக இருந்தது மட்டுமல்லாமல் சளசளவென்று அவள் பேசுகிற பேச்சில் தனிமையை முற்றிலும் தவிர்க்க முடிந்தது.

மெல்ல மெல்ல மனது சமனப்பட்டது. இடையிலே இரண்டு மூன்று முறை மதுசூதன்ன் வந்து விட்டுப் போனான்.

பூவேந்தன் வீட்டு வழக்குக்காக இப்போது பூவேந்தன் வருவதில்லை. குமரேசன்தான் வந்தான்.

குமரேசன் எப்போதும் போல் அன்பாகப் பேசி விட்டுப் போவான்.

அவளும் பொதுப்படையாக 'எல்லாரும் நல்லா இருக்கீங்களா? வேந்தன் சார் நல்லாயிருக்காரா?' என்று கேட்டுக் கொள்வாள்.

நாட்ராயன் மூலமாக நிலத்தை விலை பேசி முடித்தான் மதுசூதனன்.

மூன்று மாதங்களில் கிரயம் செய்து கொள்வதாகப் பேச்சு.

அன்றைக்கு வந்தவன் லாயரிடமும் பேசிக் கொண்டிருந்து விட்டு அவளிடமும் பேசிக் கொண்டிருந்தான்.

ஏதோ ஒரு சிவில் கேஸ் அது பற்றி முத்துசாமியிடம் விவரித்துக் கொண்டிருந்தான். அப்போது பழைய தீர்ப்பு ஒன்றைப் பற்றிச் சொன்னாள் பூங்கோதை.

ஒரு நிமிடம் கண்கள் மின்ன அவளைப் பார்த்த மதுசூதனன் முத்துசாமியைப் பார்த்துச் சிரித்தான்.

'ஐயோ! மாமா ஜாக்கிரதை.. இவங்க விட்டா உங்க இடத்தையே பிடிச்சிடுவாங்க. போலிருக்கு..' என்றான்.

அவரும் புன்னகைத்தார்.

'மது அப்படி நம்ம பொண்ணு நமக்கே போட்டிக்கு வந்தா.. சந்தோஷம்தானேப்பா..' என்றார் முத்துசாமி.

'பேசாம.. நீங்க.. எல்.எல்.பி. செய்யுங்க. எங்க ஊருக்கு.. வந்துடுங்க. எனக்கு இப்படி ஒரு உதவியாளர் தேவையிருக்கு..' என்றான் விளையாட்டுப் போல்.

முத்துசாமி சீரியஸாகச் சொன்னார்.

'ஆமப்பா.. நான் கூட நினைக்கறதுண்டு... நம்ம கோதை. திறமைக்கு.. உன்னை மாதிரி.. ஒரு பெரிய லாயர்கிட்டே வேலை செஞ்சா.. நல்லாயிருக்கும்' என்று.

'மாமா! இந்தக் கிண்டல்தானே.. வேணாங்கறது நீங்க.. பெரிய லாயர் இல்லையா.. என்ன?' என்றான் மதுசூதனன்.

'ஐய்யோ..! அதுக்குச் சொல்லலைப்பா.. அங்க.. நிறைய எக்ஸ்போஷர் கிடைக்கும்' அதுக்குச் சொன்னேன்..' என்றார்.

எங்க ஊர்க்காரங்க.. வம்பு வழக்கு.. ஜாஸ்தி செய்வாங்க அப்படீங்கறீங்களா?' என்று அவன் மேலும் வம்பிழுத்தான்.

அவர் சிரித்து விட்டார்.



'அட விடப்பா? இதுக்காக நாம ரெண்டு பேரும்.. வழக்காடு மன்றம். நடத்தணுமா என்ன? நாமளே வழக்குப் போட்டுகிட்டு இருக்கக் கூடாதுப்பா.. யாரையாவது ரெண்டு பேரைப் போட வச்சு.. அதுலதான்.. நாம.. லாபம் பார்க்கணும்.' என்று சிரித்தார்.

இரண்டு பேரும் ரசித்துச் சிரிப்பதைப் பார்த்து சாரதாவும், பூங்கோதையும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

பேச்சுத்தான் இப்படி என்றாலும் முத்துசாமி முடிந்தவரை வழக்குகளை சுமுகமாகவே முடிக்கப் பார்ப்பார் என்பது பூங்கோதைக்குத் தெரியும்.

அன்றைக்குப் புறப்படும்போது மதுசூதனன் பூங்கோதையிடம் வந்து,

'பூங்கோதை, மேடம்! நான் சீரியஸாத்தான் சொல்றேன். நீங்க கோயமுத்தூர் வர்றதுன்னா சொல்லுங்க.. நீங்கதான்.. எனக்கு.. பி.ஏ.' என்றான் கேலி போல்.

'போங்க.. சார்! நா எதுக்கு இந்த ஊரை விட்டு ஓடணும். இது எங்க ஊரு சார்!' என்றாள் அவளும் கேலி போல்.

அன்றைக்கு அவளுக்குத் தெரியவில்லை. இந்த ஊரை விட்டுச் செல்ல வேண்டிய அவசியம் சீக்கிரமே வரும். அதுவும் சொல்ல வொண்ணாத வேதனையுடன் வெளியேற வேண்டி வரும் என்று.



7

ஒரு போட்டோ ஆல்பம் நடுநாயகமாக அமர்ந்திருக்க தீபாவைச் சுற்றி நான்கைந்து பெண்கள் அமர்ந்திருந்தார்கள்.

'தீபாதான்.. உங்கூட்ல செல்லப் புள்ளையாட்ட இருக்கு..' என்றாள் ஒருத்தி.

'ஆமா மூணு பசங்களுக்குப் பின்னாடி பொறந்த ஒரே பெண்ணல்லோ?' என்றாள் மற்றொருத்தி.

'ஆமா! எங்கூடாட்டமா? நாங்க நாலு பேருமே பொட்டப் புள்ளைகளாப் போனோம்' என்றாள் குமரேசனின் மனைவி பொன்மணி.

தீபாவுக்குப் பெருமையாக இருந்தது. ஆனால், அதற்குள் பொன்மணி மேலும் தொடர்ந்து,

'ஆனா, ஒரு விஷயத்துல எனக்கு ரொம்பப் பெருமை. எங்கூட்டுக்காரரு அந்த ராமபிரான் மாதிரி.. என்னைய பொண்ணுப் பாத்த அன்னைக்கே முடிவு பண்ணிட்டாங்களாமா! நான்தான் அவரு பொஞ்சாதின்னு..' என்றாள்.

'அடடா! இதைய நூறாவதுதடவை சொல்றாடா நெத்தியில எழுதி ஒட்டிகிட்டு நட' என்றாள் மற்றொருத்தி.

எல்லாரும் சிரித்தார்கள்.

அதற்குள் குமரேசன் வர கூட்டங் கலைந்தது.

'என்னொ? பொழப்புக் கிழப்பு ஒண்ணும் இல்லையாக்கும். மாநாடு போட்டாச்சு' என்றான் குமரேசன் சிரித்துக் கொண்டு.

'இல்லீங்க.. மாமா' நம்ம தீபா அதோட போட்டோவெல்லாம் காட்டுச்சுங்களா பாத்துக்கிட்டிருந்தமுங்க..' என்றாள் பொன்மணி.

இருவரும் நகரவும், தீபாவும் ஆல்பத்தை எடுத்துக் கொண்டு நகர்ந்தாள்.

அறைக்கு வந்த பின் தான் தீபாவுக்கு தோன்றியது பொன்மணியின் பேச்சில் ஏதோ செய்தி இருந்த மாதிரி அவளுக்குத் தோன்றியது.

கிராமத்துப் பெண்களை லேசாக எண்ணிவிட முடியாது. ஜாடை மாடையாக எல்லாவற்றையும் சொல்லி விடுவார்கள்.



'அவளுடைய கணவன் இராமபிரான் மாதிரியாமே. எல்லாருடைய கணவன்மார்களும் என்ன கிருஷ்ண பரமாத்மாக்களா? சே.. சே.. அந்த வார்த்தைக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அநாவசியமாக. இல்லாததையெல்லாம் கற்பனை பண்ணிக் கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

அந்த நேரம் பூவேந்தன் வந்தான்.

பூவேந்தன் எதையும் காட்டிக் கொள்ளாமல் பழகினாலும் உள்ளே ஒரு உறுத்தல் இருந்து கொண்டே இருந்தது. எல்லா சமயங்களிலும் மனது தீபாவையும், கோதையையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டது.

தீபா.. என்னமோ படித்த பெண் என்றார்கள். புத்தகம் படிக்கிற பெண் என்றார்கள். ஆனால், அவள் படிக்கிற புத்தகங்கள் எல்லாம் சராசரியானவை. அதிலும் ஒரே பெண்ணாக வளர்ந்தவள் என்பதால் நிறைய சலுகைகள் எதிர்பார்த்தாள். அது கிடைக்காதபோது பெரியவர்களிடம் எதையும் காட்ட முடியாமல் அவனிடம் அவன் கோபத்தைக் காட்டினாள். அவனும் பொறுமையாக.

'பாரு! தீபா. நாம நினைக்கிற மாதிரியே எல்லாம் நடக்காது. இது கூட்டுக் குடும்பம். இங்கே அட்ஜஸ்ட் பண்ணித்தான் போகணும்..' என்பான்.

அவள் முணுமுணுத்துக் கொள்வாள்.

'மாமா!' என்று வந்தாள் தீபா.

அவன் புன்னகைத்தான்.

'என்ன தீபா?' என்றான்.

'மாமா! அதென்ன? உங்கண்ணி எப்பவும் பொடி வச்சுப் பேசுவாங்களோ?' என்றாள்.

'ஏன்?' என்றான் சிந்தனையுடன்.



அவள் சற்றுமுன் நடந்த உரையாடலைச் சொன்னாள்.

பூவேந்தனின் முகம் இருண்டது.

'அதென்ன? இவங்க வீட்டுக்காரர் ராமபிரானாமே? அப்ப எங்க வீட்டுக்காரர் அப்படியில்லேன்னு அர்த்தமா?' என்றாள் வேகமாக.

'விடு.. தீபா.. கிராமத்துக்காரங்க.. அப்படித்தான்.. இருப்பாங்க.. நீ பெருசா எடுத்துக்காதே' என்று அப்போதைக்கு ஆசுவாசப்படுத்தினான்.

அவனுக்குத் தன் விஷயம் அண்ணிக்குத் தெரிந்திருக்கும் என்பதே தெரியவில்லை. அதனால் பெரிதாகக் கவலைப் படவில்லை. ஆனால் தீபாவோ, பொன்மணியோ அதோடு விஷயத்தை விடுபவர்களாக இருக்கவில்லை என்பது அப்போதைக்கு அவனுக்குத் தெரியவில்லை.

பூவேந்தன் பேச்சை மாற்றுவதற்காக 'சரி.. உன் ஆல்பம்.. காட்டு பார்ப்போம்' என்று அமர்ந்தான்.

அவளும் ஆர்வமாகக் காட்ட ஆரம்பித்தாள். அவளோடு இணைய நிறைய போட்டோக்களில் ஒரு பெண் நின்றிருந்தாள். நெருங்கிய தோழியாம். கனகா என்று பெயராம்.

'இவங்க நம்ம.. கல்யாணத்துக்கு வந்திருந்தாங்களா?' என்றான்.

அவள் முகம் வாடியது. 'இல்லை!' என்றாள்.

'ஏன்?' என்றான்.

அவள் முகத்தில் ஒருவிதமான கோபத்துடன் 'ஏன்னா! அவ இப்ப உயிரோட இல்லை' என்றாள்.

'ஓ..!' என்றான் உள்ளடங்கிய குரலில். சற்று நேரம் கனத்த மௌனம் நிலவியது. பிறகு அவளே.

'கனகா தற்கொலை செஞ்சுகிட்டா?' என்றாள்.



பூவேந்தனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

'ஏன்?' என்றான்.

'ஏன்னா அவகிட்டே ஒருத்தன் பழகினான். கடைசி நேரத்திலே.. வசதியான பொண்ணு கிடைச்சவுடனே.. இவளை உதறிட்டான்.. கனகாவாலே தாங்க முடியலை.. ஆனா.. இதுல சங்கடமான விஷயம் என்னன்னா அப்படி ஒரு ஆள்கிட்டே பழக்கம் இருந்ததை என்கிட்டயே மறைச்சுட்டா.. தெரிஞ்சிருந்தா.. சாக விட்டிருக்க.. மாட்டேன்.. எனக்கும், அவங்க பேரண்ட்ஸுக்கும் லெட்டர் எழுதி வச்சுட்டு செத்துப் போனா..' என்றாள்.

குரலில் கோபமும், வருத்தமும் ஏகமாய்த் தொனித்தது.

'யாருன்னு தெரிஞ்சுதா?' என்றான். பூவேந்தன் குரலே எழும்பாத ஒரு குரலில்.

'அது தெரியலை! ஆனா, அவ இடத்துல நான் இருந்தா, அந்தத் துரோகியை சட்டைக் காலரைப் பிடித்து இழுத்துப் போட்டுக் கொலை செஞ்சுட்டு நான் ஜெயிலுக்குப் போயிருப்பேனே ஒழிய. அவளை சாக விட்டிருக்க மாட்டேன்' என்றாள் ஆவேசத்துடன்.

பூவேந்தன் நெஞ்சில் கத்தி பாய்ந்தாற்போல் உணர்ந்தான். மெதுவாகத் துணிச்சலைத் திரட்டிக் கொண்டு,

'தீபா! வாழ்க்கைன்னா எல்லாந்தான் இருக்கும். அந்த ஆளுக்கு என்ன சூழ்நிலையோ!' என்றான்.

'நீங்க ஆம்பளையாச்சே! நீங்க அப்படித்தான் பேசுவீங்க. அந்தப் புத்தி ப்ரபோஸ் பண்றதுக்கு முன்னாலே இருந்திருக்கணும். ஆயிரம் காரணம் சொன்னாலும் துரோகம் துரோகம்தான். கத்தி பொன் கத்தியா இருந்தா.. காயம் இல்லாமல் போயிருமா?' என்றாள்.

பூவேந்தன் எதுவும் பேசவில்லை. காலம் தன் மனைவியின் வாயாலேயே பூங்கோதை கேட்டிருக்க வேண்டிய கேள்விகளைக் கேட்கச் செய்கிறது என்று எண்ணிக் கொண்டான்.

'சரி.. தீபா.. எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு..' என்று மீண்டும் வெளியே கிளம்பி விட்டான்.

அன்றைக்குத் துவங்கிய தலைவலியின் தீவிரம் அவனுக்கு அப்போது புரிந்திருக்கவில்லை.

★ ★ ★

ஒரு மாதம் போயிருக்கும்.

இந்த ஒரு மாதத்திற்குள்ளாகவே பொன்மணிக்கும் அவளுக்கும் இடையே லேசான ஒரு விரிசல் மின்சார இழையாக ஓடிக் கொண்டிருந்தது.

தீபா செல்லமாக வளர்ந்தவள். தன்னைக் காட்டிலும் படித்தவள். வசதியானவள் என்பதெல்லாம் பொன்மணிக்குள் லேசான ஒரு புகைச்சலைத் தோற்றுவித்திருந்தது என்று சொல்ல வேண்டும். உன்னைக் காட்டிலும் எல்லா விதத்திலும் தான் உசத்தி என்று காட்டுவதற்கு அவளுக்கு ஏதோ ஒன்று தேவையாக இருந்தது.

அன்றைக்குத்தான் தீபா இயல்பாக இறந்து போன தன் தோழியைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். பொன்மணியிடம் பூவேந்தன் விவகாரம் பற்றி யாரிடமும் சொல்லக் கூடாது என்று வாக்குறுதி வாங்கியிருந்தான் குமரேசன். என்ற போதும் பொன்மணியால் விஷயத்தை அடக்கி வைத்துக் கொள்ள முடியவில்லை. கொட்டி விட்டாள்.

முழுவதும் கேட்ட தீபா திகைத்துப் போய் உட்கார்ந்து விட்டாள்.

பொன்மணி ஏதோ ஓர் உந்துதலில் சொல்லி விட்டாளே தவிர பிறகு பயந்து போய் விட்டாள்.



'ஐயோ! நான் சொல்லியே இருக்கக் கூடாது. எங்க வீட்டுக்காரருக்குத் தெரிஞ்சா என்னைக் கொலையே பண்ணிடுவாரு. தீபா சொல்லிப் போடாதே!' என்று அழுதே விட்டாள்.

தீபாவின் முகத்தில் கசப்புடன் கூடிய ஒரு புன்னகை படர்ந்தது.

'பரவாயில்லக்கா.. நான் சொல்ல மாட்டேன்' என்றாள்.

முகம் வாடியவளாய் தங்கள் அறைக்குள் எழுந்து போனாள்.

பூவேந்தன் அன்றைக்கு ஏதோ உரம் வாங்கப் போயிருக்கிறான் என்றார்கள். இரவு வருவதற்கு நேரமாகியது.

தீபா சாப்பிடாமலே இருந்தாள். எட்டு மணி வாக்கில் பொன்மணி வந்து.

'ஐயோ! தீபா.. நீ இப்படி உட்கார்ந்திருக்கறதைப் பார்த்தா எனக்குப் பயமாயிருக்கு.. என்னைக் காட்டிக் குடுத்திராத. இங்க எனக்கு ஏதாவது பிரச்சினையானா, நா என்ற பொறந்த வூட்டுக்குப் போயிர வேண்டியதுதான். அப்புறம் கிணறோ.. குளம் குட்டையோ பாக்க வேண்டியதுதான். இன்னும் ரெண்டு தங்கச்சிக கண்ணாலத்துக்கு இருக்காளுக..' என்று அழுத விதம் பார்த்த தீபாவுக்குப் பாவமாகப் போனது.

'சரிக்கா.. உங்களை நான் காட்டிக் குடுக்க மாட்டேன்.. கவலைப்படாதீங்க..' என்றாள்.

'சரி! அப்ப சாப்பிட வா!' என்றாள்.

'இல்லே.. அவரு வரட்டும்!' என்றாள். ஒரு வழியாக பொன்மணியை அனுப்பி வைத்தாள்.

பூவேந்தன் வந்தான்.

அவனுக்கு உணவு பரிமாறினாள். அவன் அமைதியாகச் சாப்பிட்டான்.



எப்பொழுதுமே அவன் தன்னிடம் கலகலப்பாகப் பேசுவதில்லை. உள்ளுக்குள் ஏதோ இழந்தவன் மாதிரியே இருக்கிறான் என்பது போன்ற அவனுடைய நடத்தையைக் கூர்ந்து கவனித்தாள்.

தங்கள் அறைக்கு வந்தவுடன் பூவேந்தன் 'தீபா! நீ சாப்பிட்டியா?' என்றான்.

அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

பார்வையின் வித்தியாசம் புரிந்து கொண்ட பூவேந்தன்.

'ஏம்ப்பா! நீ சாப்பிடலயா? போய்ச் சாப்பிடு' என்றான்.

அவள் அதை அலட்சியப் படுத்தியவளாக,

'பூங்கோதைங்கறது யாரு?' என்றாள்.

அவன் அதிர்ந்து நின்றான்.

பதில் சொல்லவில்லை.

'கேக்கறேன்... இல்லே? சொல்லுங்க' என்று அவள் குரல் உயர்த்தினாள்.

அவன் அவளை வெறித்துப் பார்த்தான்.

★★★

'ப்ளீஸ், தீபா! அன்டர்ஸ்டான்ட் பண்ணிக்க வாழ்க்கையில நாம நினைக்கறதெல்லாம் நடந்துடுமா? பூங்கோதையை எனக்குப் பிடிச்சிருந்ததுதான். ஆனா, அப்பா ஒத்துக்கலை. அதை மீறி நான் நடக்க விரும்பலை. அவ்வளவுதான் சாப்டா முடிஞ்சு போச்சு.. அதை ஏன் பெரிசு.. பண்றே?' என்றான்.

தீபா வெறித்துப் பார்த்தாள்.

'பாருங்க.. மாமா' நான் கேக்கற கேள்விக்குப் பதில் சொல்லுங்க.. அந்தப் பூங்கோதை.. நீங்க.. இருக்கற இடம் தேடி வந்து உங்ககூடப் பழகினாங்களா?'



'இல்லே!' என்றான் சுரத்தேயில்லாமல் -

'அப்ப.. நீங்கதான் அங்கே போய்ப் பழகியிருக்கீங்க.'

அவன் பேசவில்லை.

'எத்தனை நாளாப் பழக்கம்!'

'ரெண்டு வருஷமா.'

'அட ஆண்டவா! ரெண்டு வருஷம்' என்றாள். பிறகு கல்யாணம் பண்ணிக்கற மாதிரி விருப்பம் இருக்குனு அவங்க முதல்ல சொன்னாங்களா, நீங்க முதல்ல சொன்னீங்களா!'

'ப்ளீஸ்! இதையெல்லாம் எதுக்கு இப்ப அலசணும். விட்டுடு' என்றான் பூவேந்தன் வேதனையுடன்.

'இல்லல்லே.. எனக்கு விஷயம் தெரியணும் அட்லீஸ்ட்.. இனிமேலாவது நமக்குள்ளே ஒளிவு மறைவு இல்லாம இருக்கணும்' என்றாள் காட்டமாக.

அவன் நீண்ட ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு

'நாந்தான் முதல்ல சொன்னேன்' என்றான்.

'அப்ப.. ஏன் நிலைமை மாறுச்சு?' என்றாள்.

'கோதை சீக்கிரம் அப்பாகிட்டே.. சொல்லுங்க'ன்னு சொன்னதுனால அப்பாகிட்டே சொன்னேன். அப்பா.. கடுமையா ஆட்சேபம் பண்ணினாரு. இப்படி நிலைமையிருக்குன்னு அவகிட்டே சொன்னேன். அவதான்.. அவதான்.. உங்க அப்பா சொல்படியே கேளுங்கன்னு.. லெட்டர் எழுதிப் போட்டுட்டா..' என்றான்.

'ஓ!..' என்றாள்.

சற்று நேரம் கனத்த மௌனம் நிலவியது. பிறகு தீபா அவன் எதிர்பாராத அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

'உங்க அப்பா அப்ஜெக்ட் செய்யறாருன்னு சொன்ன நீங்க. நாம எப்படியாவது பிரச்சினைகளைச் சமாளிப்போம் கஷ்டப்

பட்டாலும் பரவாயில்லை கல்யாணம் செஞ்சுக்கலாம்னு அவங்ககிட்டே ஒரு தடவையாவது சொன்னீங்களா?' என்று கேட்டாள்.

பூவேந்தனால் நேரடியாக அவளைப் பார்க்க முடியவில்லை. வேறு எங்கோ பார்த்தபடி 'இல்லை!' என்றான்.

அவள் கசப்பாகச் சிரித்தாள். 'அதுக்கப்புறம்.. அவங்க அப்படியொரு லெட்டர் எழுதிப் போடாமே.. என்ன செய்வாங்க..' என்றாள்.

'மாமா! இப்படி துரோகம் பண்ணிப் போட்டீங்களே!' என்று தழுதழுத்தாள்.

'தீபா! மணவறையில உட்கார்ந்த பொண்ணும் மாப்பிள்ளை மார்றதெல்லாம் உலகத்துல நடக்குது. என் மேலயே தப்பாவே இருக்கட்டும். நடந்து முடிஞ்சதை இனி மாத்த முடியாது. விட்ரு! அப்பாவையாவது திருப்திப் படுத்த முடிஞ்சுது. உன்னை மனசாரத்தான் ஏத்துகிட்டேன்' என்று பலவிதமாகத் தன்னை நியாயப்படுத்துகிற அவன் வாதங்களை அவள் வெறுமையான பார்வையுடன் கேட்டுக் கொண்டாள்.

பிறகு என்ன நினைத்தாளோ எழுந்து போய்ச் சாப்பிட்டு விட்டு வந்தாள். அவனிடம் மேற்கொண்டு அவள் பேசவில்லை.

பூவேந்தனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

இரவில் மெதுவாக அவள் கையைத் தொட்டு,

'தீபா!' என்றான் ஏதோ சமாதானம் சொல்வது போல்.

'பேசாதீங்க.. மாமா!' என்றாள்.

அவன் கையை விலக்கிக் கொண்டான்.

'என்ற கனகா மாதிரியேதான் அந்தப் பூங்கோதையும். மாமா! சும்மாயிருக்கிற மனசைச் சலனப்படுத்தி, ஆசை காட்டி



அப்புறம் விலகறதுங்கறது எவ்வளவு கொடுமை தெரியுங்களா!' என்றாள் சொல்லவொண்ணாத வேதனையுடன்.

'தீபா!' என்று அவன் அவளைத் தன் பக்கம் திருப்ப முயற்சி செய்ய.

'தொடாதீங்க.. மாமா! நெஞ்சில கை வச்சுச் சொல்லுங்க.. இப்ப இந்த ஒரு மாசத்துல.. அவங்களை நினைக்காம உங்களால இருக்க முடிஞ்சுதா? அப்ப.. கடமைக்காக.. என்னத் தொட்டிருக்கீங்க.. அவங்களை.. ஒரு விதமாகக் காயப் படுத்தியிருக்கீங்கன்னா.. என்னை வேற விதமா.. அவமானப் படுத்திட்டீங்க.. ஐயோ..! என்ற.. பணத்துக்காக.. என்ற குடும்ப. அந்தஸ்துக்காக.. என்னைக் கல்யாணம் பண்ணியிருக்கீங்க.. எனக்காக.. இல்லை.. எனக்கு அருவருப்பா.. இருக்கு.. மாமா.. இனிமே.. என்னைத் தொடாதீங்க..!' என்று கதறி அழுகிற தன் மனைவியைப் பார்த்தபடி கன்னத்தில் நாலு அறை வாங்கினாற் போல் அமர்ந்து விட்டான் பூவேந்தன்.



8

மூன்று மாதங்கள் ஓடிவிட்டன.

பூங்கோதைக்கு அன்று வேலை நிறைய இருந்தது.

சாரதா வேறு விடுமுறை எடுத்திருந்தாள்.

சாரதா இருந்தாலாவது சளசளவென்று பேசிக் கொண்டிருப்பாள். சிரித்துக் கொண்டிருப்பார்கள். சாரதாவின் சளசளப்பும் தேவையாகத்தான் இருந்தது. இன்றைக்கு லாயரும் வரவில்லை. சென்னையில் ஹைகோர்ட் லாயர் ஒருவருடன் அவருக்கு தொழில் தொடர்புகள் இருந்தன. ஒரு முக்கியமான வாடிக்கையாளரை சென்னை லாயரிடம் அறிமுகப்படுத்தி விட்டு வர வேண்டிய அவசியம் இருந்தது என்று போயிருந்தார்.



'சரி! வேலைகளை முடிப்போம்' என்று கம்ப்யூட்டரில் ஆழ்ந்தாள். வழக்குகளைப் பற்றிய முக்கிய விவரங்களை அவள் தனக்குப் புரிகிற வரையில் கம்ப்யூட்டரில் பதிந்து வைத்துக் கொள்வாள். அந்தப் பணியில் ஈடுபட்டிருந்தாள்.

இப்போது குடும்ப நிலையில் கொஞ்சம் முன்னேற்றம் இருந்ததால் ஓரளவு மனநிறைவில் இருந்தாள்.

மதுசூதனன் நிலத்தைக் கிரயம் செய்து விட்டான். இருபது ஏக்கரும் வாங்கிவிட்டான். அவளுக்கு நெகிழ்ச்சியை ஏற்படுத்திய விஷயம் என்னவென்றால் அவளுடைய அப்பாவை அந்த ஊரில் ஒரு முக்கியஸ்தனாக மாற்றிக் காட்டியதுதான்.

நாட்ராயனுக்கு வசதி இல்லை என்ற போதும் அவள் உறவினர் மத்தியில் அவருக்கு ஒரு மதிப்பு இருந்தது. அதே போல் ஊரில் பெண்கள் எல்லா நல்ல விஷயங்களுக்கும் கெட்ட விஷயங்களுக்கும் பச்சையம்மாளிடம் ஆலோசனை கேட்டுக் கொளவார்கள்.

நாட்ராயனைத் தன்னுடைய காரிலேயே இரண்டு மூன்று முறை அழைத்துக் கொண்டு போய் கந்தப்பனிடம் விலை பேசியதும், நாட்ராயன் அங்கிள் சொன்னா சரி என்று அவனுக்கு மதிப்புக் கொடுத்ததும் அவனுக்குப் புதியதொரு அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

கந்தப்பன்தான் நாட்ராயன் குடும்பத்தாரிடம் சொன்னான்.

'மதுசூதனன்.. யாருன்னு நெனச்சீங்க... கோயமுத்தூர்ல பெரிய லாயராக்கும். ஆருமே அட்டெண்ட் பண்ண மாட்டேன்னு சொன்ன ஒரு கொலைக்கேஸை அட்டெண்ட் பண்ணி ஜெயிச்சவனாக்கும். கொலை செஞ்ச ஆளு பெரிய ஆளு. உன்னால முடிஞ்சதைப் பாத்துக்க போப்பான்னுட்டான். தெரியுமா?' என்ற அவன் மாய்ந்து மாய்ந்து மதுசூதனன் பற்றிச் சொல்லவும்தான் அவர்களுக்கே புரிந்தது. ஆனால் அவன் தங்களிடம் எளிமையாகப் பழகுவது குறித்து அவர்களுக்கு ஆச்சரியம்.



மதுசூதனனின் ஆதரவு மட்டும் இருந்திருக்கா விட்டால் பூவேந்தனின் துரோகம் அவளைத் தின்றிருக்கும்.

மதுசூதனன் அதோடு நிற்கவில்லை.

நாட்ராயனிடம் வேறு ஒரு உதவியும் கேட்டான். உண்மையில் சொல்லப் போனால் அது அவன் அவர்களுக்குச் செய்யும் உதவி என்றுதான் சொல்ல வேண்டும்.

விவசாயம் பற்றி அவனுக்கு எதுவும் தெரியாதாம். அவனுடைய அப்பாவுக்கும் கோபிக்கருகில் நிலம் இருக்கிறதாம். தானும் தன்னுடைய சுய சம்பாத்தியத்தில் அதே ஏரியாவில் நிலம் வாங்க வேண்டுமென்று அவனுக்கு விருப்பமாம். அதனால்தான் வாங்கினானாம். அவனுடைய அப்பாவுக்கு அங்கேயும் இங்கேயும் பார்த்துக் கொள்ள முடியாதாம். அதனால், நாட்ராயனும் பச்சையம்மாளும் நிலத்தைப் பார்த்துக் கொண்டால் சௌகரியமாய் இருக்குமாம்.

இதைக் கேட்டவுடன் நாட்ராயன் மலைத்துப் போனான்.

மதுசூதனன் தொடர்ந்து 'நீங்க உங்க பால் வியாபாரத்தையும் பார்த்துக்கலாம். அங்க இருக்கற வீட்லயே ஒரு பாதியில் இருந்துக்கலாம் தடுப்புச் சுவரு போட்டுக் குடுத்துர்றேன். அந்தப் பக்கம் நான் வந்தாத் தங்கறதுக்கு..!' என்றான்.

நாட்ராயன் பூங்கோதையைப் பார்த்தான். அவளிடமிருந்து எதுவும் பதில் வராமல் போகவே 'கொஞ்சம் யோசிச்சுச் சொல்லட்டுங்களா?' என்றான்.

அவன் புன்னகைத்தான். 'கொஞ்சமென்ன! நல்லா யோசிச்சு.. ஒரு மாசத்துக்குள்ள சொல்லுங்க..' என்று சொல்லியிருந்தான்.

அது பற்றி வேறு முடிவெடுக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

சட்டென்று முடிவெடுக்க பயமாக இருந்தது. அதனால் தினமும் அதுபற்றிப் பேசினார்கள். ஆனால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

பிற்பகல்!

ஐந்து மணியிருக்கும்!

இன்றைக்கு வேண்டுமானால் சீக்கிரம் போகலாம் என்று எண்ணிக் கொண்டு ஃபைல்களை எல்லாம் ஒழுங்கு படுத்தினாள்.

புறப்படலாம் என்று எண்ணியபோது வாசலில் நிழலாடியது.

நிமிர்ந்து பார்த்தவள் ஒரு கணம் திகைத்துப் போனாள்.

பூவேந்தன் நின்றிருந்தான்.

அவள் 'வாங்க!' என்று சொல்லவில்லை. ஆனால், வந்தான்.

இளைத்திருந்தான். முகத்தில் பழைய களையில்லை.

'வெளியே போ!' என்று சொல்லலாமா என்று நினைத்தாள். அதற்குள் அவன் சொன்ன வார்த்தைகள் அவளைத் தாக்கின.

வெறித்துப் பார்த்தாள்.

அவள் அவனை 'உட்காருங்க!' என்று சொல்லாத போதும் உட்கார்ந்தான்.

தொடர்ந்து பேசினான்.

அவள் அதே வெறித்த பார்வையுடன் கேட்டுக் கொண்டு நின்றாள்.

★ ★ ★

இரண்டு மாதங்களுக்குப் பிறகும் நிலைமை அதே போலத்தான் இருந்தது.

தீபா விறைப்பாகவே இருந்தாள்.

பூவேந்தனும் முதலில் கோபமாகவே இருந்தான். பிறகு மெதுவாக மனதைத் தேற்றிக் கொண்டான். ஒரு நாள் மாலை.

'தீபா! வாழ்க்கைன்னா விளையாட்டில்லே!' என்று ஆரம்பித்தான்.

அவள் அவனைப் புழுவைப் பார்ப்பது போல் பார்த்தாள்.



'அதேதான்.. நானும் சொல்றேன்..' என்றாள். அவன் பதில் சொல்லத் தெரியாமல் எழுந்தான். தொடர்ந்தாள்.

'என்ற பிரண்டு கனகா செத்துப் போனப்ப அவளோட அம்மா அப்பா எத்தனை வேதனைப் பட்டாங்க தெரியுமா?' என்றாள்.

'இங்க.. பாரு.. இங்க அப்படியொண்ணும் கோதை செத்துப் போயிடலை. அதோட அவங்க அம்மா அப்பாவுக்கும் எதுவும் தெரியாது..' அவள் சமாதானமாகவில்லை.

'அப்ப.. அந்தப் பொண்ணு யாருகிட்டயும் சொல்லிக்கக் கூட முடியாம.. எவ்வளவு வேதனைப் பட்டிருக்கும்..' என்றாள்.

'நீங்க நெனச்சா.. மனசை மாத்திக்குவீங்க நாங்க. உங்க இஷ்டத்துக்கெல்லாம் தாளம் போடோணுமாக்கும்..' என்றாள்.

அவன் கடுப்பானான்.

'இங்க.. பாரு.. தீபா.. நம்மூருல ஒரு ஆம்பளைக்கு எத்தனை பொம்பளைகளோட வேணுமானாலும்.. தொடர்பு இருக்கலாம்.. ஆனா, கல்யாணம்னு ஒருத்தியைப் பண்ணி கிட்டான்னா.. ஒழுக்கமா.. இருந்தாப் போதும்.. தெரியுமா?' என்றான்.

'ஆஹஹ்ஹா' ஏன்னா நீங்க.. ஆம்பளை! நாங்க அப்படி யிருந்தா.. நீங்க ஒத்துக்குவீங்களா?' என்றாள் ஆவேசமாக.

அவன் கோபத்துடன் கையை ஓங்க.. சற்றும் தயங்காமல் கையை உறுதியாகப் பிடித்து நிறுத்தினாள்.

'இதுக்கெல்லாம் பயப்படற ஆள்.. நான் இல்லே.. கல்யாணம்னா என்ன தெரியுமா? வாழ்க்கை ஒப்பந்தம்.. அந்த ஒப்பந்தத்தையே நீங்க.. பொய்யாய்ப் பண்ணியிருக்கீங்க.. உங்களை எப்படி வாழ்க்கை பூரா.. நம்பறது?' என்றாள்.



'அப்ப.. டைவர்ஸாவது.. பண்ணித் தொலை.. எங்க அப்பனுக்கு.. படிச்சுப் படிச்சுச் சொன்னேன். கேக்கலை, அந்தஸ்து வெங்காயம்னு உன்னையக் கொண்டு வந்துதள்ளிப் போட்டாரு' என்றான் பூவேந்தன் கடுங்கோபத்துடன்.

அப்போதுதான் தீபா வெறி வந்தவள் போல் சிரித்தாள்.

'மாமா! நான் ஏன் இப்பவும் இந்த வீட்ல இருக்கேன் தெரியுமா! என்ற மூணு அண்ணன்மார்களும் அவ்வளவு ஆசையா இந்தக் கல்யாணத்தைச் செஞ்சு வச்சாங்க.. அவங்க மனசு நோகக் கூடாதேன்னுதான்.. இந்த விஷயம் மட்டும் தெரிந்தது. நொறுங்கிப் போயிடுவாங்க.. வெட்டுப்பழி. குத்துக் கொலைதான் நடக்கும். அதனாலதான் நான் இங்க இருக்கேன். ஆனா.. உங்க வாரிசு.. என்ற வயித்துல பொறக்க வுட மாட்டேன். நீங்க எனக்கு செஞ்ச துரோகத்துக்கு பழி வாங்காம விடமாட்டேன் 'இனிமே நீங்க.. கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரிதான்.' என்றாள்.

காளிபோல் நிற்கிற அவளைப் பார்த்து பூவேந்தன் செயலற்றுப் போனான்.

மற்றவர்கள் முன்னிலையில் எதையும் காட்டிக் கொள்ள மாட்டாள். ஆனால், தனிமையில் வார்த்தைகளால் குத்திக் குதறியெடுத்தாள்.

பொறுக்க முடியாத சூழ்நிலையில்தான் பூவேந்தன் அந்த முடிவுக்கு வந்தான்.

சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். அன்று பூங்கோதை தனியாக இருப்பதை அறிந்து வந்தான்.

உள்ளே வந்தவன் எடுத்தவுடனே அந்த வார்த்தைகளைச் சொன்னான். பிறகு தனக்கும் மனைவிக்கும் இடையே உள்ள பிரச்சினைகளைக் கொட்டித் தீர்த்தான்.

★ ★ ★



'கோதை இப்பவே புறப்படு.. ஒரு கோயில்ல வச்சு உன்ற கழுத்தில தலியக் கட்டிப் போடறேன்' என்றான்.

கோதையின் வெறித்த பார்வையைப் பார்த்த பின் முழுவதும் சொன்னான். பிறகு கடைசியாக.

'நா ஆம்பளை எத்தனை நாளைக்கு இவளோட ஆட் டத்தைப் பொறுத்துக்கறது. நம்ம கல்யாணம் நடந்தாத்தான்.. எங்கப்பனுக்கும் புத்தி வரும்.. அவளுக்கும் கொழுப்பு அடங்கும்' என்றான் ஆவேசமாக.

பூங்கோதை ஒன்றும் பேசவில்லை.

'என்ன.. நான் கேக்கறேன்? பேசாம இருக்கறே?' என்றான்.

'முதல்ல.. அவங்களைக் கல்யாணம் பண்ணிகிட்டு.. என்னைய அவமானப் படுத்தினீங்க. இப்ப.. என்னையக் கல்யாணம் பண்ணிகிட்டு அவங்களை அவமானப் படுத்தப் போறீங்களாக்கும்?' என்றாள் இறுக்கமான குரலில்.

அவன் சட்டென்று அமைதியானான்.

'இப்பவும்.. பூங்கோதை மேலே பிரியத்துனால நீங்க வர்லை. உங்க கௌரவத்துக்காக வந்திருக்கீங்க.. ஒரு வேளை.. தீபா.. உங்களோட ஒத்துப் போயிருந்தா.. என் நினைப்பே... வந்திருக்காதில்லே?..' என்றாள்.

இப்போது வெறித்துப் பார்ப்பது அவன் முறையாயிற்று. 'அப்படியே.. வந்திருந்தாலும்.. அவங்க பணமும் அந்தஸ்தும் அதை முழுங்கியிருக்கும்.. இல்லே?' என்றாள் நேரான பார்வையுடன்.

'இல்லே..!' என்று அவன் ஆரம்பிக்க அவள் கையுயர்த்தினாள்.

'நாம ரெண்டு பேர் செஞ்ச முடிவாவது நம்ம ரெண்டு பேருக்குள்ள நடந்த ஒப்பந்தம். ஆனா, கல்யாணங்கறது ஊரே கூடி. பெரியவங்க முன்னால போடற ஒப்பந்தம். அதைக் காப்பாத்த வேண்டியது.. உங்க கடமை' என்றாள்.

அவன் குரலை உயர்த்தினான் 'என்னங்கடி.. ரெண்டு பேரும். விளையாடறீங்களா?' என்றான்.

'மிஸ்டர் பூவேந்தன்!' என்றாள் பூங்கோதை. அவன் திகைத்து நின்று விட்டான்.

'முடிஞ்சு போன எந்த உறவையும் பேசிகிட்டு இங்க.. வராதீங்க.. இனியாவது.. உங்க.. லைஃபை.. உருப்படி பண்ணப் பாருங்க..' என்றாள்.

'அவகிட்டே கெஞ்சச் சொல்றியா?' என்றான்.

'அது உங்க தலைவலி. அதைப் பத்தி எனக்குக் கவலை யில்லே. ப்ளீஸ்.. கெட் அவுட்' என்றாள் கையை வெளியே காட்டியபடி.

தன்னுடனான நட்பைத் துறந்த அந்தக் கணத்தை விட இப்போது பூவேந்தன் மேல் அவளுக்கு வெறுப்பு மண்டியது.

'எப்படிப்பட்ட சுயநலவாதி இவன்!' என்ற எண்ணம் தோன்றியது.

அந்தக் கணத்தில் அவன் முகத்தில் தோன்றிய குரோதம் பார்த்த அவள் மனதில் மேலும் வெறுப்பு தோன்றியதே தவிர அச்சம் வரவில்லை.

அவன் அங்கேயிருந்த சேரை உதைத்துவிட்டுப் போவதை அவள் சம்பந்தமில்லாதவள் போல் பார்த்தாள். ஆனால் அவன் போனதற்குப் பிறகு தன் சக்தியெல்லாம் வடிந்தாற் போல் உணர்ந்தாள்.

மேஜையில் தலை கவிழ்ந்து வெடித்து அழுதாள்.

போன் மணி அடித்தது. லாயரோ என்று நினைத்து எடுத் தாள். மதுசூதனன்.

அந்தப் புறம் அவன் குரல் கேட்டதும் மேலும் கேவிக்கேவி அழுதாள்.

'ஹலோ! கோதை.. என்ன.. என்ன ஆச்சு?' என்றான் அவன் பதட்டமாக.



'அந்த.. ஆள்.. அந்த ஆளு..' என்றாள் பேச முடியாமல்.

'யாரு? எந்த! ஆளு!' என்றான்.

'அதான்.. அந்தப் பூவேந்தன்.. வந்தாப்ல.. வந்து..!' என்று நடந்ததையெல்லாம் சொன்னாள்.

அவன் பூவேந்தனை வாய்க்குள் திட்டிக் கொள்வது தெளிவாகக் கேட்டது.

தொடர்ந்தாள்.

இறுகிப் போன முகத்துடன் அவன் விஷயம் வாங்கிக் கொண்டான்.

'அவன்.. என்னை.. எவ்வளவுக் கேவலமா.. நினைச் சிருந்தா.. இப்படி வந்து கேட்டிருப்பான். இவன்.. கூப்ட்டா.. நான் போய்த் தாலியைக் கட்டிக்குவனா.. அவ்வளவுக்கு புத்தியில்லாதவளா.. அவ்வளவு சீப்பா?' என்று பொங்கிப் பொங்கி அழுகிற.. அவளை ஆசுவாசப்படுத்தினான்.

'காம்டவுன்.. கோதை.. நா உங்களை ரொம்ப தைரிய சாலின்னு நினைச்சுகிட்டிருக்கேன்.' என்றான்.

மெல்ல அடங்கினாள். பிறகு இன்னொன்றும் சொன்னாள்.

'ஓ...கே! ஓ..கே! பாக்கலாம் என்ன செய்யறதுன்னு.. நான் இப்ப அங்க வரத்தான்.. புறப்பட்டுக்கிட்டிருக்கேன்.. நேர்ல பேசுவோம்.. சரியா..' என்றான்.

''ம்..!' என்றாள் புறங்கையால் கண்ணைத் துடைத்தபடி.

அவன் சிந்தனையுடன் ரிசீவரை வைத்தான்.



## 9

'ஹலோ! சொல்லுங்க..!' என்றாள் பூங்கோதை.

'லாயர் மதுசூதனன் இருக்காருங்களா?' என்றது அந்தப் பக்கத்துக் குரல்.

'ப்ளீஸ்.. ஹோல்ட் ஆன்!' என்றாள் மதுசூதனனுக்கு இணைப்புக் கொடுத்தாள்.

கோயமுத்தூருக்கு வந்து கொஞ்ச நாட்களாகி இருந்தது. அந்த மாலை! பூவேந்தன் வந்து விட்டுப் போன அந்த மாலை.

பூங்கோதை வெடித்து அழுததைக் கேட்ட மதுசூதனனின் மனம் மிகவும் பாதிக்கப்பட்டது. முழுக் கோபமும் பூவேந்தன் மேல் திரும்பியது. ஆனால், இப்போது அவனை 'டீல்' செய்வது அல்ல முக்கியம் பூங்கோதையை ஆறுதல் படுத்த வேண்டியதே முக்கியம் என்று எண்ணிக் கொண்டவனாகப் புறப்பட்டான்.

இரண்டு நாட்கள் தன்னுடைய எல்லா வேலைகளையும் ஜூனியர் லாயர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து விட்டு அவன் கிளம்பினான்.

தான் புதிதாக வாங்கியிருந்த தோட்டத்திலேயே தங்கினான்.

முகம் வாடிக் கிடந்த பூங்கோதையின் மாசு மருவற்ற முகம் பார்க்கப் பார்க்க அவன் மனத்தில் வருத்தம் மேலிட்டது.

'இந்தச் சின்னப் பெண்ணைப் போய் இப்படி வாட்டு கிறானே இந்தப் பேய்ப்பயல் அவனை..' என்று கறுவிக் கொண்டான்.

பூங்கோதையின் பெற்றோர்களிடம் பேசி அவர்களை வயலைப் பார்த்துக் கொள்ளச் சொன்னான்.

'என்ன.. அங்கிள்.. நான் கேட்டுப் பத்து நாளாச்சு.. ஒரு பதிலும் சொல்லலே' என்றான்.

'இல்லைங்க.. சார் பூங்கோதை முடிவுதான்.. எங்க முடிவு..' என்றான் நாட்ராயன்.

பூங்கோதையும் கண்ணமர்த்தி சம்மதம் தெரிவித்தாள். பிறகு சற்று நேரம் விவசாயம் பற்றித் திட்டம் போட்டார்கள்.



பிறகு சற்றுத் தனிமை கிடைத்தபோது பூங்கோதை கண்கள் கலங்க.

'சார்! எனக்கு வேற எங்கயாவது வேலை வாங்கித் தாங்க.. அங்க.. கோயமுத்தூர்ப் பக்கம் வந்தர்றேன்.. வர வர எனக்கு இந்த ஊரேப் பிடிக்கலை..' என்றாள்.

அவன் வாஞ்சையாய்ப் புன்னகைத்தான்.

'ஏன் வேற எங்கயோ எதுக்கு வேலை பாக்கணும் எங்க.. ஆபீசுக்கே.. என்.பி.ஏ.. வாவே வந்தர்றது..' என்றான்.

அவள் மலைத்துப் போனாள்.

'நிஜமா.. சீரியஸாச் சொல்றீங்களா?' என்றாள்.

'ம்..!' என்றான் அமர்த்தலாக.

அவள் உடனடியாகப் பதில் சொல்ல முடியாமல் திணறுவதைப் பார்த்து விட்டு.

'ஓகே..! ஒரு நாள் முழுக்க.. யோசியுங்க.. அப்புறம் பதில் சொல்லுங்க.. நல்ல சம்பளம்.. தங்க இடவசதி.. எல்.எல்.பி. படிக்கறதுக்கு.. ஆக.. செலவு.. எல்லாம் தரேன்' என்றான்.

'சார்.. இப்ப.. எனக்கு வேண்டியதெல்லாம்.. நிம்மதி..' என்றாள் பூங்கோதை.

'அது.. வெளியே.. கிடைக்காது மேடம் உள்ளே.. இங்கே.. தான் இருக்கு' என்று மார்பின் இடப்புறத்தைத் தட்டிக் காட்டினான். மேலும் தொடர்ந்து 'அது நாம விஷயங்களை எப்படி எடுத்துக்கறோம்ங்கறதைப் பொறுத்து இருக்கு!' என்றான்.

அவள் அவன் சொன்னதின் அர்த்தம் புரிந்தவளாய்த் தலையாட்டிக் கொண்டாள். அந்தக் கணத்தில் அவளுக்குத் தெரிந்தது மதுசூதனன் கீழ் வேலை செய்வது உண்மையில் நல்ல அனுபவமாக இருக்கும் என்று. எனினும் அவள் அந்த ஒரு நாள் டைமை மாற்றிக் கேட்கவில்லை.



'தீர யோசித்தாள் பின் முடிவெடுத்தாள். ஆனாலும் ஒரு தயக்கம்.

'மது சார்! சீனியர் கிட்டே எப்படிச் சொல்றது?' என்று தயங்கினாள்.

'அதை நான் பார்த்துக்கறேன்' என்று சொல்லிவிட்டான்.

என்ன சொன்னாளோ தெரியவில்லை. அவரும் மகிழ்ச்சி யாகவே கையில் ஒரு தொகை கொடுத்து அனுப்பி வைத்தார்.

இப்போதைக்கு ஒரு லேடீஸ் ஹாஸ்டலில் தங்க வைத்திருந்தான்.

இரண்டு நாட்களாக வேலையும் செய்து விட்டாள்.

★ ★ ★

'உள்ளே வரலாமா?'

எட்டிப் பார்த்த மதுசூதனனைப் பார்த்தவுடன் கமலக்கா வுக்கு ஒரே ஆச்சரியம். மகிழ்ச்சி.

'அடடே! அதான் வானம் மப்பும் மந்தாரமுமாய் இருக்கா. எப்பவும் இந்தப் பக்கம் வந்தா என் வீடு இருக்கறதே.. உனக்கு ஞாபகம் வராதே.. தம்பி!' என்றார் உரிமையோடு.

இப்ப வந்திருக்கேனேன்னு சந்தோஷப்படுங்களேன் அக்கா..' என்றான்.

'சரி! அப்படித்தான் சந்தோஷப்பட்டுக்கணும் வா.. வா.. உட்காரு..' என்றார்.

அமர்ந்தான்.

பிறகு அவர் முகம் பார்த்துப் புன்னகைத்தான்.

'அக்கா! ஒரு ஹெல்ப்!' என்றான். 'அப்படிப் போடு! என்னடா விசேஷம்ன்னு பார்த்தேன்' என்று கமலா மறுபடியும் சிரித்தார்.



'என்னக்கா செய்யலாம். எல்லாரும் உங்களை மாதிரி... ஃபுல் டைம் சோஷியல் வொர்க்கரா இருக்க முடியாதே தொழிலையும் பாக்கணுமே' என்றான்.

'ஐயோ! பின்னே! நீங்கள்ளாம் தொழிலைச் செய்து பணம் சம்பாதிச்சாத்தானே.. நாங்கள்ளாம் அப்பப்ப நன்கொடை கேட்க முடியும்' என்றான்.

'அப்புறம் காபி போடவா?' என்றார்.

'ம்..!' என்றான்.

எப்போதும் அவசரமாக எட்டிப் பார்த்து விட்டு ஓடுகிறவன் அன்றைக்கு விச்ராந்தியாக அமர்ந்திருப்பதே அவருக்கு ஆச்சரியம்.

தனக்கும் ஒரு கப்பை எடுத்துக் கொண்டு எதிரில் அமர்ந்தார்.

'அப்புறம்? ஊர்ச்சண்டை. அடிதடி. வம்பு வழக்குகள் எல்லாம் எந்த அளவில் இருக்கு' என்றார்.

'அந்தக் கடைசியா.. சொன்னீங்களே... வழக்கு அது மட்டும்.. நல்லாப் போயிட்டிருக்கு. மத்த விஷயங்களுக்கும் நமக்கும் சம்பந்தமில்லைப்பா..' என்றான்.

இருவரும் சிரித்தார்கள்.

'என்ன.. மது? முப்பதை எட்டியாச்சு.. எப்பக் கல்யாணம்?' என்றார் கமலா.

'செய்யணும்.. கொஞ்ச நாள் சுதந்திரமா இருந்துக்கறேனே' என்றான். மெதுவாக விஷயத்துக்கு வந்தான்.

'அப்புறம்.. அக்கா.. நீங்க.. எப்பவும் சொல்வீங்களே.. இந்தப் போர்ஷன் உங்களுக்கு ரொம்பவும் பெரிசுன்னு.. அதான் அந்தக் குறையைத் தீர்த்தர்லாம்னு முடிவு..' என்றான்.

'ஏன்? போர்ஷனை ரெண்டாகப் பிரிச்சுறப் போறியா?' என்றார்.

'அக்கா.. நாங்கள்ளாம் ரொம்ப நல்லவங்க. அவ்வளவு சீக்கிரம் பிரிக்க மாட்டோம் முடிஞ்சா சேத்து வைப்போம்..' என்றான்.

மறுபடியும் சிரித்தார்கள்.

'சொல்லுப்பா!' என்றார்.

சொன்னான்.

'அக்கா! கிராமத்துல இருந்து ஒரு பிரில்லியண்ட்டான பி.ஏ. நமக்கு வந்திருக்காப்பல. நல்ல பாதுகாப்பான இடத்திலே.. தங்க வைக்கணும். யோசிச்சேன்.. இந்தப் போர்ஷன்ல உங்களோட தங்க வச்சுட்டா.. உங்களுக்கும் துணை.. இருக்கும்.. நல்ல விதமான எக்ஸ்போஷரும் அந்தப் பொண்ணுக்கும் கிடைக்கும்' என்றான்.

சுருக்கமாகப் பூவேந்தன் பற்றிச் சொன்னான்.

'இந்த மாதிரி ஆளுங்களைக் கையைக் காலை உடைக்கணும்..' என்று கமலம்மா கோபப்படுவதைப் பார்த்துப் பரிவுடன் சிரித்தான்.

'அக்கா.. அவனும்.. நம்ம பிரண்டாய்ப் போயிட்டான். என்ன செய்யறது? ஆனா, கோதைகிட்டே நல்ல டேலண்ட் இருக்கு. அது நடந்து போன விஷயங்களை நினைச்சு நினைச்சு புழுங்கிச் சாக வேண்டிய பொண்ணில்லே. நிறைய வெற்றிகளைச் சந்திக்க வேண்டிய பொண்ணு' என்றான் மதுசூதனன் சிந்தனை வயப்பட்டவனாக.

'சரிப்பா.. எனக்கொண்ணும் பிரச்சினையில்லை. நீயே இவ்வளவு தூரம் புகழ்ந்தா நல்ல பொண்ணாத்தான் இருக்கணும்.. எனக்கும் ஒரு குடும்பம்..ன்னு இருந்தா.. அதை வயசிலே ஒரு பொண்ணு இருந்திருக்குமில்லே..' என்றார்.

அவன் உடனே அவர் முகம் பார்த்துச் சொன்னான்.

'அக்கா.. ஒரு கண்டிஷன்' என்றான்.

'என்ன?'

'ஓவரா இன்ஃபுளுயன்ஸ் பண்ணி, அப்புறம் கோதை நானும் கமலக்கா மாதிரி ஃபுல்டைம் சோஷியல் வொர்க்கரா



தான் ஆவேன்ங்கற லெவலுக்குக் கொண்டு போயிராதீங்க. அப்புறம் அவங்க அம்மா.. அப்பா.. என்ன உண்டு இல்லைன்னு பண்ணிடுவாங்க..' ஒரே பொண்ணு! கல்யாணம் பத்தி நிறையக் கனவுகள் வச்சிகிட்டிருக்காங்க!'

அவர் புன்னகைத்தார். 'மது! சில உணர்வுகள் இயற்கையா வரணும். காதல் மாதிரித் துறவுலயும் ஒரு பிடிவாதம் இருந்தாத் தான் நடக்கும். அதனாலே நீ அப்படியெல்லாம் பயப்படத் தேவையில்லை' என்றார்.

'அது உண்மைதான்' என்று ஒத்துக் கொண்டான்.

உண்மையில் மதுசூதனனுக்குச் சொந்தமான வீடுகளில் ஒன்றில்தான் கமலம்மா குடியிருந்தார். மதுசூதனனுக்கு அவனது தாத்தா ஒரு பெரிய காம்பவுண்டில் வாடகைக்குக் குடித்தனங்கள் கிட்டத்தட்ட முப்பது நாற்பது இருக்கிற மாதிரி சொத்தெழுதி வைத்திருந்தார். வாடகை மட்டுமே அறுபதாயிரம் எழுபதாயிரம் என்று வந்தது.

நடுத்தரக் குடும்பங்கள் குடியிருக்கிற மாதிரியான ஒரு சின்னக் காலனி என்றே சொல்லலாம். அதிலே கமலம்மாவுக்கு அவன் ப்ரீயாக வீடு கொடுக்கக்கூடத் தயாராயிருந்தான். ஆனால் அவர் ஒத்துக் கொள்ளவில்லை. ஆசிரியராக இருந்து வாலண்டரி ரிடையர்மெண்ட் வாங்கிக் கொண்டவர். பென்ஷன் தொகை வந்தது. அதனால் பெயருக்கு ஒரு எழுநூற்றைம்பது ரூபாய் வாடகையாக வாங்கிக் கொண்டான். சொல்லப் போனால் அங்கே இன்னொருவரைக் குடியமர்த்துகிறேன் என்று கட்டளை போலக் கூடச் சொல்லலாம். ஆனால், அவன் கமலம்மாவை மதித்தான்.

'சரிப்பா! எப்படிக் கூட்டிட்டு வரே?' என்றார்.

அவன் குறும்பு செய்த குழந்தையைப் போல் சிரித்தான்.

'அக்கா! எப்படியும் நீங்க ஒத்து வருவீங்கற தைரியத்துல டிரைவரைக் கூட்டிட்டு வரச் சொல்லியிருக்கிறேன்..' என்றான்.

'அடப்பாவிப் பயலே!' என்று சிரித்தார் கமலக்கா.

அதே நேரம்!

என்ன விவரம் என்றே தெரியாமல் பூங்கோதை அந்த வீட்டுக்குள் கேள்விக்குறியான ஒரு பார்வையுடன் நுழைந்தாள்.

'வாங்க கோதை!' என்று வரவேற்றான். பரஸ்பரம் அறிமுகப்படுத்தினான்.

வீட்டைக் காட்டினான்.

வீடு வித்தியாசமான அமைப்பில் இருந்தது. முன்னறை ஒன்று, ஐந்துக்கு பதினொன்று என்ற அளவில். வலது கோடியில் ஒரு அறைக்கதவு வழியாக நுழைந்தால் எட்டுக்குப் பத்து என்ற அளவில் ஒரு அறை.

அந்த வரிசையில் வரிசைப் போர்ஷனாக இருந்ததால் ஜன்னல் இருந்தது.

முன்னறையிலிருந்து இடது பக்கம் ஒரு நடவை இருந்தது. அதில் நுழைந்து போனால் அடுத்து ஒரு அறை. அதே எட்டுக்குப் பத்து என்று அளவில் அந்தப் பாதை முடிகிற இடத்தில் முன்னறையை விடச் சற்று பெரியதாக ஒரு சமையலறை வலது ஓரத்தில் பாத்ரூம் டாய்லெட்.

கோதைக்குப் பிடித்தது.

இரண்டு படுக்கையறைகளிலும் முன்னாலே இருக்கிற அறையை அவளுக்குக் கொடுத்து விடுவதாகச் சொன்னார். அங்கேயே ஒரு ஸ்டீல் கட்டில் இருந்தது.

மளமளவென்று பேசி முடித்துக் கொண்டார்கள். வாடகை, எலெக்ட்ரிக் பில் எல்லாவற்றிலும் பாதி.. பாதி.. என்றார்கள்.

'ஆமாங்க.. மது.. சார்! அந்த லேடீஸ் ஹாஸ்டல் சாப்பாடு.. நல்லாவேஇல்லை..இங்கயானாநானேசமைச்சுடுவேன்..'என்றாள்.

'என்னமோ.. செய்ங்கப்பா.. பத்திரமான இடத்துல சேத்திருக்கேன்.. பாத்துக்கங்க..' என்றான்.



'இரண்டு நாட்களுக்குப் பிறகு வந்து விடுவதாகப் பேசி முடித்துக் கொண்டார்கள்.

திரும்பவும் லேடீஸ் ஹாஸ்டலுக்குக் கொண்டு விடுவதற்காக அவனே வந்தான்.

'மது சார்! ரொம்பத் தாங்க்ஸ். உங்களோட மாரல் சப்போர்ட் மட்டும் இல்லேன்னா நான் என்னவாகி இருப்பேன்னு எனக்கேத் தெரியாது' என்றாள் பூங்கோதை.

'ஒண்ணும் ஆகியிருக்க மாட்டீங்க.. நான் இல்லேன்னா.. வேற யாராவது வந்து ஹெல்ப் செஞ்சிருப்பாங்க' என்று அவன் அந்த விஷயத்தை எளிதாக்கி விட்டான்.

'சார்!' என்றாள்.

'ம்..!'

'சார்! ஈவ்னிங் டைம்ல ஒரு ஒன் அவர் ஸ்போக்கன் இங்கிலீஷ் கிளாஸ் போறேன் சார். அப்புறம் கொஞ்சம் கம்ப்யூட்டர் கிளாஸ்க்கும் போய் அறிவு அதிகப்படுத்திக் கணும்' என்றாள்.

'செய்ங்க..!' என்றான்.

லேடீஸ் ஹாஸ்டலுக்குள்ளேயே வந்தான். பொறுப்பாளர் ஓடி வந்து அவனிடம் சற்று நேரம் பேசினார்.

புறப்படும் போது பூங்கோதை 'சார், இங்க வந்து பார்த்ததுக்கப்புறம் தான்.. நீங்க.. எப்படிப்பட்ட பெரிய லாயர்ன்னு புரியுது..' என்றாள் மலைப்புடன்.

'ஐயோ! கோதை திரும்பத் திரும்ப இப்படிச் சொன்னீங்கன்னா.. ஏதோ வயசானவன் மாதிரி.. ஒரு ஃபீலிங் வருது..' என்றான்.

சிரித்துக் கொண்டே நகர்ந்து விட்டான்.

லேடீஸ் ஹாஸ்டல் பொறுப்பாளர் சொன்னார். 'எத்தனையோ பாதிக்கப்பட்ட பொண்ணுங்களுக்கு நியாயம் கிடைக்கற மாதிரி செஞ்சிருக்காரு. வேலை வாங்கிக் குடுத்துருக்காரு. ரொம்பக் கெட்டிக்காரர்' என்று.

'அப்படித்தாங்க.. என் மேலயும் ஒரு அனுதாபம்..' என்று பூங்கோதை மனதுக்குள் எண்ணிக் கொண்டாள். வாய் விட்டுச் சொல்லவில்லை.

அன்றிரவு!

படுக்கையில் படுத்துக் கொண்ட வண்ணம் சிந்தனையி லாழ்ந்தாள்.

ஒரு ஆறு மாதத்திற்குள் தன் வாழ்க்கையில் எத்தனை மாற்றங்கள்' ஆனால். பாவம் பூவேந்தனும் சித்திரவதைப் படுகிறான் போலும். ஏனோ அவளுக்கு அவன் மேல் அனு தாபம் வரவில்லை. அதே சமயம் கோபமும் வடிந்திருந்தது.

ஒரு விஷயத்துக்காக அவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். அவன் மூலமாகத்தானே மதுசூதனின் அறிமுகம் கிடைத்தது.

வாழ்க்கை திசை மாறியிருக்கிறது. இனிமேல் தன் வாழ்க்கை லட்சியம் எல்எல்பி முடித்து நல்ல வழக்கறிஞராகி எத்தனை எத்தனை பெண்களுக்கு முடியுமோ அத்தனை பெண்களுக்கு உதவி செய்வதுதான் என்று எண்ணிக் கொண்டாள்.

காலம் அவள் வாழ்க்கையில் எத் தனையோ சோதனைகளை. மாற்றங் களை வைத்துக் கொண்டு காத்திருக் கிறது என்று அன்றைக்குப் புரியவில்லை.



10

'இது உன்னோட சின்ன சாம் ராஜ்யம். இது என்னோட சின்ன சாம் ராஜ்யம். பிடிச்சிருக்கா' என்று காலை



யில் காபி டம்ளரை அவள் கையில் கொடுத்து விட்டு தன்னறைக்கு அழைத்துப் போன கமலக்காவை அந்தக் கணமே அவளுக்குப் பிடித்துப் போனது.

'போதும், போதும், இதுக்கு மேலே என்ன வேணும்.' என்றாள் புன்னகையுடன்.

'சமைப்பியோ?' என்றார்.

'நல்லா சமைப்பேன். ஆனா, எனக்கு உங்க டவுன் சமையல் அதென்ன ஃபிரைட் ரைஸ். நான் சென்னா பட்டோரா இப்படியெல்லாம் தெரியாது. கிராமத்துச் சமையல் நல்லாத் தெரியும். சாம்பார், புளிக்குழம்பு, வெந்தயக்குழம்பு, எண் ணெய்க் குழம்பு, வறுவல், பொரியல், அவியல்.. என்று அவள் அடுக்க அவர் சிரித்து.

'ராகிக்களி செய்யத் தெரியுமா?' என்றார்.

அவள் ஆச்சரியமாப் பார்க்க.

'சொல்லும்மா?' என்றார்.

'ம்.. நல்லாச் செய்வேன். ராகிக்களி சாமையரிசிச் சாப்பாடு. சோள தோசை. சோளப்பணியாரம். ஆப்பம்.. என்று மீண்டும் அடுக்கினாள்.

'குட்.. குட்! அதெல்லாம் செய்யலாம் சாப்பிடலாம் ஓ.கே.. வா!' என்றார்.

'ஓ.கே..!' என்றாள்.

'அதெல்லாம்தான்.. ரொம்பச் சத்துள்ள விஷயங்கள். ஆனா, என்ன! எனக்கு இந்த ராகிக்களி மட்டும் கிண்ட வர்றதில்லே!' என்றார் கமலம்.

'ரொம்ப சிம்பிளா ஒரு முறை இருக்கு.. சொல்லித் தரட்டுமா? அதுவும் இந்த கேஸ்.. அடுப்பிலே.. ரொம்ப ஈஸி..' என்றாள்.



'ம்.. சொல்லு.. சொல்லு..' என்றார். உற்சாகமாக.

ராகி மாவைக் கொஞ்சம் தண்ணி விட்டுக் கரைச்சு கூழ் பதத்துக்குத் தயார் பண்ணிட்டு அப்புறம் களி கிண்டினா ரொம்ப ஈஸியா வரும். கட்டி சேராது. சீக்கிரமும் ஆகும்..' என்றாள்.

'அப்ப சரி! இப்ப செய்வமா?' என்றார்.

'சரி! நான் குளிச்சுட்டு வந்துடறேன்' என்று நகர.

'சீக்கிரம் வா.. அதுக்குள்ளே நான் இட்லி வார்த்து சட்னி மிக்ஸியில அரைச்சுடறேன். அது காலைல டிபனுக்கு. ராகிக் களியும் கீரையும் பகல் சாப்பாடு..' என்றார்.

அவள் புன்னகையுடன் ஒத்துக் கொண்டாள்.

அன்றைக்கு பஸ்ஸில் அலுவலகம் போனாள். கமலக்கா அந்த வழியாகப் போனதால் வழியும் காட்டிக் கொடுத்தார்.

ஸ்கூட்டியைக் கொண்டு வந்து விட வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

அலுவலகம் போனதும் எல்லாம் மறந்து போனது.

உண்மையில் மதுசூதனன் இவ்வளவு பெரிய லாயராக இருக்கக் கூடும் என்று அவள் நினைக்கவில்லை.

இந்த இருபத்தேழு இருபத்தெட்டு வயதுக்கு எப்படி இப்படிப் பிரபலம் என்றால் தடாலடியான இரண்டு மூன்று வழக்குகளில் இறங்கிப் பெற்ற வெற்றிதான் காரணம் என்றார்கள்.

இரண்டு பேர் ஆண்கள் ஜுனியர் லாயர் ராகவன். காந்தி நாதன் என்று. ஒரே ஒரு பெண் லாயர் ராதா என்று.

இவளை நேரடியாகப் பி.ஏ. என்று போட்டது எல் லாருக்கும் வியப்புத்தான். ஆனால் மதுசூதனின் சுறுசுறுப்புக்கு இணையாக அவள் பணியாற்றியது கண்டு 'பாஸ்! சும்மாவா செலக்ட் செய்திருப்பாரு!' என்று எண்ணிக் கொண்டார்கள்.



ஒரு மணியிருக்கும்!

எல்லாரும் சாப்பிடக் கிளம்பினார்கள்.

மதுசூதனன் கிளம்பவில்லை. அன்றைக்கு அவன் கோர்ட் டுக்குப் போய் விட்டு விரைவிலேயே வந்து விட்டான்.

அடுத்த இரண்டு நாட்களில் ஒரு சிக்கலான வழக்கு விசாரணைக்கு வருகிறதாம். அது தொடர்பாகக் கொஞ்சம் விவரங்கள் சேகரிக்க வேண்டும் என்று புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

அவன் கிளம்பவில்லையே என்று அவளும் அமர்ந்திருந் தாள். அப்போதுதான் நினைவு வந்தவனாக நிமிர்ந்து பார்த்து.

'கோதை! சாப்பிடப் போகலியா?' என்றான்.

'இல்லே சார்! உங்களுக்குத் திடீர்னு ஏதாவது தேவையா இருந்தா?

'இல்லல்லே! ஒண்ணும் தேவையில்லே' என்றவன் முகம் சற்றே இளகினாற் போல் ஆனது.

'அப்புறம்! இன்றைக்கு என்ன? சொந்த சமையலா? என்ன ஐட்டம்?' என்றான்.

அவள் தயக்கத்துடன் புன்னகைத்தாள். பிறகு.

'ராகிக்களி செஞ்சு கீரை கடைந்தோம்' என்றாள்.

'வ்வாட்?' என்றான் கண்கள் தெறிக்கிறாற் போல் பார்த்து.

'ஐயய்யோ' என்ன சார் அப்படிப் பார்க்கறீங்க. ரெண்டுமே மனுஷங்க.. சாப்பிடற ஐட்டம்தான்' என்றாள்.

அவன் சட்டென்று சிரித்து விட்டான்.

'ம்ஹூம்! அப்படியா?' என்றான். 'அப்ப சரி! நான் சாயங்காலம் வரேன் சூடா செஞ்சு வைங்க!' என்றான்.

'ஓ.. ஷ்யூர்!' என்றாள் பூங்கோதை.

சிரித்துக் கொண்டே அவள் டிபன் பாக்ஸுடன் வெளியே வர ராகவனும், காந்தியும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

ராகவன் இளைஞன். காந்திநாதன் நடுத்தர வயதுக்காரர் நேர்மையானவர். மன நிம்மதியுடன் வேலை செய்ய வேண்டும் என்பதற்காகவே மதுசூதனனிடம் வேலைக்குச் சேர்ந்தாராம். ராதா சொன்னாள்.

இன்னும் இரண்டு பேர் வந்தால் கூட வேலையிருக்கும் என்கிற அளவுக்கு வழக்குகள் வந்து குவிந்தன. மதுசூதனன் தான் தேர்ந்தெடுத்து ஒத்துக் கொண்டிருந்தான். தான் வாதிட வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இருக்கிற வழக்குகளுக்கு மட்டுமே அவன் ஆஜராவான். ஓரளவுக்கு அவனிடம் பணி புரிபவர்களுக்கெல்லாம் நன்றாகவே வருமானம் கிடைத்தது.

இத்தனை வேலைப்பளுவுக்கு நடுவிலும் அவன் தனக்காக நேரம் ஒதுக்கியது.

பிரச்சினைகள் தீர்க்க உதவியது. இவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்த போதுதான் பூங்கோதைக்கு மலைப்பாக இருந்தது. ஆனால், ஏனோ இங்கே வேலைக்குப் போனதற்குப் பிறகு அவனிடம் ஒரு பயம் ஏற்பட்டிருந்தது. கொஞ்சம் விலகி நின்றாள். ஒரு விதமான பணியும் ஏற்பட்டிருந்தது. அவனும் அதைக் கண்டு கொள்ளவில்லை.

★ ★ ★

'மறுபடியும் களி கிண்டறே யாருக்கு?' என்றார் கமலக்கா.

சொன்னாள்.

'மது சார் எவ்வளவு பிஸி தெரியுங்களா கமலக்கா. ஆனா, இத்தனைக்கும் நடுவே எனக்காக ஒரு பிரச்சினைக்கு நேரம் ஒதுக்கித் தீர்த்துக் கொடுத்தார். தெரியுங்களா?' என்றாள் வாஞ்சையாக.



அவர் புரிந்து கொண்டவராகத் தலையசைத்தார்.

'ஆமா! அக்கா இந்த நாட்ல பெண்கள் பல விதத்திலும் ஒடுக்கப்படறாங்க. காயப்படுத்தப் படறாங்க. ஆனா, இங்கே மாதிரி பக்குவப்பட்ட பெண்கள் வேற எங்கயும் பார்க்க முடியாதுக்கா.. அப்படீம்பான்' என்று சொன்னார்.

அவனுக்காக சின்னதாக ஒரு மேஜை விரிப்பு போட்டு டேபிள் கூட தயார் என்றார்கள். பேசிக் கொண்டே செய்தார்கள்.

'ஆனா இந்தா காம்பவுண்டுக்கு அவன் ரெண்டு மூணு வேலை வச்சுக்கிட்டுத்தான் வருவான். ரவுண்ட்ஸ் பாத்த மாதிரியும் ஆச்சு. வேற சில காரணங்களுக்காகவும் வருவான். இப்ப... உனக்காகவும்' என்றார்.

'ஓஹோ!' என்று கேட்டுக் கொண்டாள். பூங்கோதை.

பேசிக் கொண்டிருக்கும்போதே அவன் வந்து சேர்ந்தான். பூங்கோதை அன்று அதிகாலையில்தான் அந்த வீட்டுக்குக் குடி பெயர்ந்திருந்தாள்.

'என்ன கோதை! முதல் நாள் அனுபவம் எப்படி? என்றான் சிரித்துக் கொண்டே.

'நல்ல அனுபவம் சார்! கமலக்கா மாதிரி ஒருத்தரோட இருக்கறது ரொம்பவே சந்தோஷமா இருக்கு' என்றாள்.

'அது சரி! அதென்ன முதல் நாள் சமையலை ஸ்வீட் கிவீட்ன்னு அமர்க்களப்படுத்தியிருப்பீங்கன்னு பார்த்தேன்.. ராகிக்களிங்கறிங்க..' என்றான் ஆச்சரியமாக.

'அதுதான் சர்ப்ரைஸா பூங்கோதைக்கு கூடத் தெரியாம நான் செஞ்சு வச்சிருக்கேன் லட்டு.' என்று தட்டில் எடுத்து வைக்க பூங்கோதை மகிழ்வாகப் பார்த்தாள்.

'தனியா இருந்து பழகிய ஆளுக்குத் துணையா ஒருத்தரை அதுவும் நல்ல பெண்ணா கொண்டு வந்து விட்டிருக்கியே.. அதுக்குத் தாங்க்ஸ்' என்றார் கமலக்கா.



இரண்டு பேரும் தன் வருகைக்குக் கொடுக்கிற முக்கியத்துவம் பார்த்து மனம் நெகிழ்ந்தாள் பூங்கோதை.

சற்று நேரம் பொதுப்படையாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு ராகிக்களியை மிகவும் ஆசையாகச் சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டான்.

அவர்களும் மகிழ்வாக வழியனுப்பினார்கள்.

சற்று நேரம் அவளும், கமலம்மாவும் எப்படி செலவினங்களைப் பகிர்ந்து கொள்வது என்பது பற்றிப் பேசிக் கொண்டார்கள். இருவருக்கும் பிடித்த உணவு வகைகள் ரசனைகள் என்று பரிமாறிக் கொண்டார்கள்.

மதுசூதனன் புறப்படும்போது 'பூங்கோதை உங்க அம்மாவும், அப்பாவும் இன்னைக்கு போன் செய்வாங்க. கமலக்காவோட நம்பர் குடுத்திருக்கேன்..' என்று சொல்லிப் போனான்.

அதற்காகக் காத்திருந்தாள்.

போன் வந்தது. 'கோதை எப்படி கண்ணு இருக்கறே?' என்று அன்புடன் கேட்ட பச்சையம்மாளின் குரல் கேட்டுக் கண்களில் கண்ணீர் மல்கியது.

முதல் முறையாகத் தாய் தந்தையரை விட்டு நான்கைந்து நாட்கள் பிரிந்திருக்கிறோம் என்பது புரிய குரல் கலங்கியது.

'அம்மா, நல்லாயிருக்கேன்ம்மா. வேலை பிடிச்சிருக்கு. இப்ப சார் தங்கறதுக்கும் இடம் ஏற்பாடு செய்து குடுத்துட்டாரு..' என்றாள்.

'சொன்னாரு.. தங்கம். நாங்களும் இங்க தோட்டத்துக்கே வந்து போட்டோம். இங்கயும் போன் ஏற்பாடு செஞ்சு குடுத்துட்டுப் போட்டாரு. எப்ப வேண்ணாலும் பேசிக்கலாமல்லோ. நீயி நேரத்துக்கு சாப்பிடு கண்ணு. எவ்வளவு தெரிஞ்சுக்கோணுமோ.. அவ்வளவு தெரிஞ்சுக்க.. என்னொ?' என்றாள் பச்சையம்மாள்.



'சரிம்மா!' என்றாள். அதற்குப் பிறகு நாட்ராயன் பேசினார்.

'அம்மிணி! உடம்பைப் பாத்துக்க. சின்னையாகிட்டே வேலையில நல்ல பேரெடுக்கோணும் என்னொ?' என்றார்.

'சரிப்பா!' என்றாள். உணர்ச்சி வசப்பட்டு நிற்கிற அவள் நிலை பார்த்துக் கமலா போனை வாங்கி,

'கவலைப்படாதீங்கய்யா! என்ற மகளாட்ட நான் பாத்துக்குவேன்...' என்று உறுதி அளித்தார்.

படுக்கையில் படித்தபடி யோசித்தாள். ஒரே வாரத்தில் தன்னுடைய வாழ்க்கையில்தான் எவ்வளவு மாறுதல்கள். ஏற்பட்டுவிட்டன என்றெண்ணியபோது அவளுக்கு மகிழ்வதா, வருத்தப்படுவதா என்றே புரியவில்லை. அன்றைக்கு பூவேந்தனிடம் தான் கேட்ட கேள்வியை நினைத்து இப்போது அவளுக்குச் சிரிப்பு கூட வந்ததா.

'என்கிட்டே அந்தஸ்து இல்லே. அறிவு மட்டும் போதாதுன்னு தீபா. இப்ப தீபா நீங்க நினைச்ச அளவுக்கு முட்டாளில்லேன்னவுடனே மறுபடியும் பூங்கோதையா? அப்புறம் என்ன? கதவைத் திறடி பாமா. என் காலு வலிச்சுப் போச்சு. கதவைத் திறடி. ருக்குன்னு மாத்தி மாத்திக் கெஞ்சிகிட்டு நிப்பீங்களாக்கும்?' என்று தான் காட்டமாகக் கேட்டவுடனே அவன் மிதப்பாக.

'நான் ஆம்பளை. நான் எதுக்குக் கெஞ்சோணும்' என்று பதில் சொன்னதும் நினைவு வந்தது.

அந்தக் கணத்தில் தான் முதன் முதலாக அவன் மேல் வெறுப்பு வந்தது. தன் தவறுகளுக்கு அவன் வருந்தவில்லை. ஆனால் நியாயம் கற்பிக்கிறான். கடவுள் ஏதோ பேரேடு வைத்திருக்கிறார் போலத்தான் இருக்கிறது. இல்லாவிட்டால் தீபாவைப் போல ஒரு மனைவி வந்திருப்பாளா? இப்படி வறுத்தெடுத்திருக்கிறாளே என்று தோன்றவும் ஒரு புறம் சிரிப்பு மலர்ந்தது.

பலதையும் எண்ணிக் கொண்டே உறங்கிப் போனாள்.

இரவு இரண்டு மணியிருக்கும்! திடீரென ஒரு ஓசை கேட்டது. ஒரு பெண்ணின் குரல். ராகம் போட்டுப் பாடியது. அபஸ்வரமாகவும் இல்லை. ஆனால் ராகமும் இல்லை. அது ஓலம் போலவும் இருந்தது. இசை போலவும் இருந்தது.

இதென்ன? பாட்டா! ஓலமா!

பூங்கோதை திடுக்கிட்டுப் போய் எழுந்து அமர்ந்தாள்.

முகமெல்லாம் வியர்த்து விட்டது. கரண்ட் நின்று விட்டதா என்று பார்த்தாள். ஃபேன் ஓடிக் கொண்டிருந்தது.

அந்தக் குரலில் தெரிந்த ஏதோ ஒரு சோகம் நெஞ்சைப் பிசைவது போல் இருந்தது.

ஆத்மாவுக்குள்ளிருந்து எழுகிற ஒரு ஏக்கம் அதில் தொனிப்பது போல் அவளுக்குத் தோன்றியது.

திகைப்பும், மலைப்புமாக அந்த இசை போன்ற ஓலம் ஓயும் வரை அவள் அமர்ந்து விட்டாள்.



## 11

'ஆமா, வெட்டிப் போட்டுத்தான் வந்திருக்கிறேன். இப்ப என்னங்கறே? அப்புறம், நீயெல்லாம் வக்கீல்னு எதுக்கு இருக்கறது?' என்று தடாலடியாய் பேசுகிற சென்னியப்பனை எவ்வித உணர்ச்சியும் காட்டாமல் பார்த்தான் மதுசூதனன்.

'மாமா! இதென்ன விளையாட்டு நாயமாட்டாம் பேசறீங்க. நீங்க உங்க பங்காளியை வெட்டறதை ஊரே பாத்திருக்கு. அந்தக் கூட்டத்துல உங்களுக்கு வேண்டியவங்களும் இருந் திருப்பாங்க. அவங்களுக்கு வேண்டியவங்களும் இருந்திருப்



பாங்க. ரெண்டு பக்கமும் ரெண்டு பேராவது சாட்சிக்கு வருவாங்கல்லோ! எதுக்கு இந்த வேலை செஞ்சீங்க!' என்றான்.

'மது! அவன் என்னையப் பேசியிருந்தா பரவாயில்லைப்பா. வீட்டுப் பொம்பளைங்களைப் பேசறானப்பா. எப்படிப் பாத்துகிட்டுப் பேசாம நிக்கறது.'

'அவன்தான் வேணும்னே பேசியிருக்கானே. உங்களை இப்படிச் சிக்க வைக்கோணும்னே பேசியிருக்கான். நீங்களும் சிக்கிக்கிட்டு இங்க வந்து இப்படி நிக்கறீங்க..' என்றான்.

'சரி! என்னதான் சொல்றே! இப்ப!' என்றார் சென்னியப்பன் கோபமாக. சுற்றிலும் நான்கைந்து பேர் நின்றிருந்தார்கள்.

அறையின் அந்த மூலையில் பூங்கோதை ஒரு விதமான அதிர்ச்சியுடன் நின்று கொண்டிருந்தாள்.

மதுசூதனன் ஒரு நிமிடம் டேபிள் வெயிட்டை உருட் டினான். பிறகு சொன்னான்.

'மாமா! தண்டனையைக் குறைக்கலாம். அதுவும் அவனுக்கு எதுவும் ஆகாம, இருந்தா! பேசாம சரண்டராயிருங்க. நாளைக்கு பெயில்ல எடுத்தர்றேன்..' என்றான்.

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'வேற வழியே இல்லையா?' என்றார்கள். 'இல்லை!' என்றான் உறுதியாக.

'போங்க.. நேரம் செய்யாதீங்க. பின்னாடியே காந்தி சாரை அனுப்பறேன்' என்றான்.

'மது! நாளைக்கு சனிக்கிழமை. அப்புறம் ஞாயிறு.'

'ரெண்டு நாள் அட்ஜஸ்ட் பண்ணிக்குங்க. அவங்களும் இப்பக் கோபமா இருப்பாங்க. உள்ள இருக்கறதுதான்.. நல்லது..' என்றான்.

மறுபடியும் விழித்தார்கள்.



'நான் சொல்றதைக் கேளுங்க. அந்த சரவணனுக்கு எதுவும் ஆகாம இருக்கணுமேன்னு கடவுளை வேண்டிக்குங்க..' என்றான்.

அவர்கள் அடுத்த அறையில் போய் சற்று நேரம் விவாதித்து விட்டு வந்தார்கள். அவன் அலட்டிக் கொள்ளாமல் அடுத்த ஃபைலைப் பார்த்துக் கொண்டிருந்தது அவளுக்கு ஆச்சரியம்.

'என்ன முடிவு செஞ்சீங்க?' என்றான்.

'சரி! நீ என்ன சொல்றயோ அப்படி?' என்றார் சென்னி யப்பன்.

அவர்கள் அறையை விட்டு வெளியேறுகிற நேரம் அவர் களில் நடுத்தர வயதாக இருந்த ஒருவரை அழைத்தான்.

'கந்தசாமியண்ணே! நீங்க மட்டும் அப்புறமா.. வாங்க..' என்றான்.

சற்று நேரம் கழித்து அவர் வந்தார். நடந்த விவரங்களைத் துருவித் துருவிக் கேட்டான். வெட்டுப்பட்ட சரவணன் மற்றும் பரமேஸ்வரனும், சென்னியப்பன் குடும்பமும் பங்காளிகள்.

வாய்த்தகராறு முற்றி வெட்டுக்குத்தில் முடிந்திருந்தது. கந்தசாமி வந்து சேருவதற்குள் சரவணன் அட்மிட் ஆகியிருந்த ஹாஸ்பிட்டலில் யாரையோ தெரிந்தவர்களைப் பிடித்து நிலவரம் தெரிந்து கொண்டான்.

கந்தசாமியிடம் சொன்னான். 'அண்ணே! நான் ஹாஸ் பிட்டல்லே விசாரிச்சேன். சரவணன் பிழைச்சுக்குவானாம். தொடைமேலே காயமாம். கொஞ்சம் ஏமாந்திருந்தா வம்பாயிருக்குமாம். என்னண்ணே! இந்தப் பிரச்சினை என்னைக்குத்தான் தீர்றது? தேவர்மகன் கமல்ஹாசன் மாதிரி யாராவது கடைசியில வசனம் பேசிக்கிட்டு ஜெயிலுக்குப் போனாத்தான் தீருமா!' என்றான் வேதனையுடன்.

'அப்பவும் தீராது. அதெல்லாம் சினிமாவுலதான் நடக்கும் ஆனா, ஒண்ணு உண்மை. ரெண்டு குடும்பத்தையும் தட்டி



விட்டுகிட்டு ஒரு கூட்டமே அங்கே பொழைக்குது. இவுனு களுக்கு யாரு புரிய வக்கிறது? ஆனா, இந்தத் தடவை பரமேஸ் வரன் பேசினது கொஞ்சம் அதிகம்தான். எப்பேர்ப்பட்ட வனுக்கும் கோபம் வரும்..' என்றார் கந்தசாமி.

'ஏதாவது செய்வமா!' என்றான் மதுசூதனன்.

'என்னத்தைப்பா செய்வே?' என்றார் ஆச்சரியமாக.

மதுசூதனன் தன் திட்டத்தைச் சொன்னான். கந்தசாமி ஆச்சரியமாக வாயைப் பிளந்தார்.

'நடக்கற காரியமாப்பா!' என்றார்.

'பிசிறில்லாம நான் நடத்திக் காட்டறேன். நீங்க மட்டும் ஒத்துழைப்புக் குடுங்க..' என்றான்.

'சரியப்பா!' என்றார் உற்சாகமாக.

ஏதோ மர்ம நாவல் படிப்பது போன்ற பாவனையுடன் பார்த்த பூங்கோதையை அவன் கண்டு கொள்ளவேயில்லை.

★ ★ ★

சனிக்கிழமை!

பிற்பகல் நான்கு மணியிருக்கும்,

'ஹலோ!' என்ற மதுசூதனனின் குரலுக்கு அந்தப்புறம் 'ஹலோ!' என்று பரமேஸ்வரன் மறுமொழி கொடுத்தான்.

'அண்ணா! நான் லாயர் மதுசூதனன் பேசறேன்' என்றான்.

'அடடே! மதுவா! ஏப்பா நீதான் சென்னியப்பனுக்காக ஆஜராகப் போறேன்னு பேசிக்கறாங்க. இது நியாயமா?' என்றார் ஆதங்கத்துடன்.

'அண்ணா! அதை அப்புறம் பார்க்கலாம். இப்ப நான் பேசறது ரொம்ப முக்கியமான விஷயம். சரவணனோட குழந்தை லதா வீட்டுக்கு வந்துட்டாளான்னு தெரிஞ்சுகிட்டு எனக்கு போன் பண்ணுங்க..!' என்றான் வைத்து விட்டான்.

ஐந்து நிமிடங்களில் போன் வந்தது. இப்போது பரமேஸ்வரன் பதட்டமான குரலில் பேசினார். 'எதுக்குப்பா கேட்டே? வீட்டுக்கு வர்லையாம். ஸ்கூல்ல விசாரிச்சா கொஞ்ச நேரத்துக்கு முன்னயே டிரைவர் வந்து கூட்டிட்டுப் போனதாச் சொல்றாங்க. என்னப்பா நடக்குது?' என்றார்.

'அண்ணா! நான் சொல்றதைக் கேட்டுப் பதட்டப்படாதீங்க. எனக்கு போலீஸ்ல இருந்து இன்சைட் இன்பர்மேஷன் கிடைச்சுது. குழந்தையை ரெண்டு மூணு பேரு கடத்தி செட்டி பாளையத்துக்குப் பக்கத்துல ஒரு வீட்டுல வச்சிருந்திருக் காணுங்க. செட்டிபாளையம்னவுடனே நான் சென்னியப் பண்ணனோட தம்பி வேலுகிட்டே ஹெல்ப் கேட்டேன். அவன் உடனே கந்தசாமியண்ணனைத் துணைக்குக் கூட்டி கிட்டுப்போய் குழந்தையை மீட்டுட்டான். செட்டிபாளையத்துல இருந்து எனக்கு போன் பண்ணினாங்க. நான் என் பி.ஏ.வையும் சோஷியல் வொர்க்கர் கமலம்மாவையும் அனுப்பிக் குழந்தையைக் கூட்டிட்டு வரச் சொல்லியிருக்கேன். என்னோட ஆர்.எஸ்.புரம் கெஸ்ட் ஹவுஸ்ல இருக்காங்க. நீங்க அங்க வர்றீங்களா?' என்றான்.

'ஓ!' என்றார் சுரத்தேயில்லாமல். ஆனால் புறப்பட்டார்.

★ ★ ★

பூங்கோதை. கமலம் மற்றும் டிரைவர் பொறுப்பில் இருந்த குழந்தை மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டுதான் இருந்தாள். கந்தசாமியும் அங்கே இருந்தார். மதுசூதனனும் இருந்தான்.

பரமேஸ்வரன் மூஞ்சியே இல்லாமல் என்பார்களே அப்படி ஒரு முகத்தோடு வந்தார்.

'வாப்பா!' என்றார் பரமேஸ்வரன்.

'வேலு எங்கே?' என்றார் பரமேஸ்வரன்.



'அவன் போயிட்டாம்ப்பா!' என்றார் கந்தசாமி.

'என்ன நடந்தது?' என்றார் பரமேஸ்வரன்.

'நீ குழந்தையையே கேளு!' என்றார் கந்தசாமி.

'குட்டித் தங்கம்! என்னடா நடந்துச்சு?' என்றார் பரமேஸ்வரன்.

'பெரிப்பா! ரெண்டு பேர் வந்தாங்க.. மீசை.. தாடி எல்லாம் இருந்துச்சு. ஒரு ஆளு எனக்கு ஃபைவ் ஸ்டார் சாக்லேட் குடுத்தாரு. பெரிப்பா கூட்டிட்டு வரச் சொன்னாரு. பாப்பான்னு சொன்னாரா? நானும் போனேன். அங்கே ஒரு வீட்ல இருந்தோம். அங்க இன்னும் ஒருத்தர் இருந்தாரு' என்றாள் குழந்தை.

'அடிச்சாங்களாம்மா? ஏதும் மிரட்டினாங்களா?' என்றான் மதுசூதனன்.

'இல்லே அங்கிள். ஆனா போன் பண்ணி ரெண்டு லட்சம் கேட்கணும். பழியை அவங்க மேலே போட்ரலாம்னு என்னமோ பேசிகிட்டாங்க..' என்றது குழந்தை.

பரமேஸ்வரனும், கந்தசாமியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'யாருன்னு தெரிஞ்சுதா?' என்று கேட்டார் பரமேஸ்வரன்.

'இல்லை நானும் சென்னியப்பன் தம்பி வேலுவும் போனப்ப குழந்தையை உன் ரூம்ல விளையாட விட்டுட்டு முன்னாடி இருந்தானுங்க. கிட்டத்தட்ட முகத்தை மறைச்சு குல்லாய் போட்டு கிட்டு இருந்தானுங்க. அப்புறம் தாடி மீசை வேற. வேலுவைப் பார்த்துக் கொஞ்சம் பயந்துட்டானுங்க. சார்! நாங்க போயிடறோம். பெரிசு பண்ணாதீங்கன்னு ஓடியே போயிட்டானுங்க' என்றார்.

'இதெல்லாம் சரி. வேலு அவனுங்ககிட்டே என்ன சொன்னாப்ல. அதையும் சொல்லுங்க.. கந்தசாமிண்ணா!' என்றான் மதுசூதனன்.



'டேய்! மரியாதையா குழந்தையை விட்டுட்டு ஓடிப் போயிருங்க'ன்னான். அதுக்கு அவனுங்க 'ஏன் சார்! உங்களுக்குத்தான் அவங்க ஆகாதவங்களாச்சே'ன்னாங்க. உடனே வேலு 'டேய்! நாங்க பங்காளிங்க அடிச்சுக்குவம் கூடிக்குவம் அதுக்காக அடுத்தவனுக்கு விட்டுக் குடுப்பமா!' அப்படீன்னான் அரிவாளை எடுத்தான் பாரு. அவனுங்க கெஞ்சிக் கேட்டு ஓடிப் போயிட்டானுங்க. நானும் 'விட்டுத் தொலையப்பான்னு சொல்லலேன்னா, மறுபடியும் அங்க ஒரு வெட்டுக் கேஸ்தான்' என்றார்.

பரமேஸ்வரன் முகத்தில் ஈயாடவில்லை. கந்தசாமியும், மதுசூதனனும் முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள்.

குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு கனத்த மௌனத்தில் அமர்ந்திருக்கிற பரமேஸ்வரனிடம் பக்குவமாகச் சொன்னான் மதுசூதனன்.

'அண்ணா! சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க உங்க கிராமத்துல ரெண்டு குடும்பமும் பெரிய குடும்பம். ரெண்டு குடும்பமும் எனக்கு வேண்டியவங்க. நீங்க அடிச்சுகிட்டீங் கன்னா. மூணாவது ஆளுக, ஒண்ணுத்துக்கும் ஆகாதவன் எல்லாம் பூந்து விளையாடறாங்க.. பாருங்க..' என்றான்.

அவர் ஒன்றும் பேசவில்லை.

அவன் தொடர்ந்தான்.

'மது சார்! இந்தப் பாழாப் போன கோபம் என்னை இங்க கொண்டு வந்து தள்ளிடுச்சு. சரவணன் பொழச்சுக்குவான் தானேன்னு சென்னியப்பண்ணன் இப்ப சங்கடப்படறாரு. விட்ருங்கண்ணே எல்லாத்தையும்' என்றான்.

பரமேஸ்வரன் நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

'இப்ப என்னதான் செய்யணுங்கறே?' என்றார் உள்ளடங்கிய குரலில்.



'கேஸை வாபஸ் வாங்குங்க. நான் சமரசம் பேசறேன். பிரச்சினைகளைப் பேசி முடிச்சுக்குங்க' என்றான்.

'செரியப்பா! நான் திங்கட்கிழமை புகாரை வாபஸ் வாங்கறேன். நானுந்தான் அப்படியெல்லாம் பேசியிருக்கக் கூடாது. எழவு இந்தக் கோபம் வந்தா கண்ணு, மண்ணு தெரியறதில்லே' என்றார்.

எழுந்தார்.

வாசல்வரை போய் வழியனுப்பினான். கந்தசாமியும் உடன் சென்றார்.

திரும்பி உள்ளே நுழைந்தால் கமலக்கா வெறித்த பார்வையோடு அமர்ந்திருந்தார். 'மது! பயங்கரமான ஆளுப்பா!' என்று சிரித்தார்.

'என்னக்கா.. பண்றது? விட்டா ரெண்டு தலைமுறைக்குக் கேஸ் நடத்திகிட்டே இருப்பாங்க. வாழ்க்கை எவ்வளவு முக்கியமான விஷயம். அதுல செய்யறதுக்கு எவ்வளவோ நல்ல விஷயங்கள் இருக்கு இல்லே?' என்றான்.

'ஆமப்பா!' என்றார் கமலக்கா சிம்பிளாக. தொடர்ந்து.

'அதுக்காக.. இவ்வளவு ரியலா நடத்தணுமா?' என்றார்.

'ஆமக்கா, வேற வழியில்லே. நாம யார் சொல்லியும் நம்பலே ஆனா, குழந்தை சொன்னவுடனே நம்பினாரு பாத்திங்களா. அதனாலதான் அந்தக் குழந்தை முன்னாடி எல்லாம் நடத்தினோம். ஆனா, வேலு பதைச்சுப் போய் வந்ததும் அடுத்தவனுக்கு விட்டுக் குடுக்க மாட்டோம்னு சொன்னதும் நிஜம். எனக்கு இந்த ரெண்டு குடும்பத்தோட மென்டாலிட்டியும் தெரியும். அதனாலதான் பிரச்சினை பெரிசாகாம பாத்துகிட்டேன்.' என்றான்.

'எப்படியோ உனக்கு ஃபீஸ் கிடைக்கிற சான்ஸ் போச்சு' என்று கமலம் சிரிக்க.

'எனக்கு ஃபீஸ் போனா என்னக்கா. ரெண்டு குடும்பத்துக்கு பீஸ்.. அமைதி.. கிடைக்குமில்லே' என்று சிரித்தான்.

பூங்கோதை அமைதியாக நிற்பதைப் பார்த்து 'என்ன பூங்கோதை? நீங்க ஒண்ணும் சொல்லக் காணோம்' என்றான்.

'எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலே.. சார்!' என்றாள்.

'ஒண்ணும் சொல்ல வேண்டாம். காபி வருது குடிச்சிட்டுப் புறப்படுங்க. ஆபீஸ் போயிட்டு அப்புறம் வீட்டுக்குப் போக லாம்' என்றான்.

புறப்பட்டார்கள்.

கமலம் அந்த ஏரியாவில் ஏதோ வேலை என்று போனார்.

அலுவலகத்திற்கு வந்தபின் வேலை சரியாக இருந்தது.

கடந்த ஒரு நாள் பரபரப்பில் தான் அவனிடம் சொல்ல நினைத்திருந்த அந்த விஷயத்தையே மறந்திருந்தாள் பூங்கோதை.

அலுவலகத்திலிருந்து அவள் புறப்படுவதற்கு முன்பு சற்று நேரம் நடந்த நிகழ்வுகளைப் பற்றிப் பேசினார்கள்.

'சூப்பர் ஆக்டிங் சார்!' என்று பூங்கோதை சிரிக்க அவனும் புன்னகைத்தான்.

அப்போதுதான் அவள் சொன்னாள்.

'சார்! நான் நேத்தே சொல்லணும்னு நெனச்சேன். மறந் துட்டேன் எங்க வீட்ல.. நடுராத்திரியிலே.. ஒரு பாட்டு மாதிரிக் குரல் கேட்குது சார்' என்றாள்.

அவன் முகத்தில் அவளால் புரிந்து கொள்ள முடியாத மாற்றங்கள் ஏற்பட்டன.

'சார்! அது பாட்டு இல்லே. ஓலமும் இல்லே. ஆனா, ஆத்மாவிலிருந்து... அடி வயித்துல இருந்து, அந்தக் குரல் வர்ற மாதிரி எனக்கு ஒரு ஃபீலிங்.. சார்' என்றாள்.



அவன் சட்டென்று எழுந்து ஜன்னல் பக்கம் திரும்பி நின்று கொண்டான்.

அவள் அவன் மௌனம் பார்த்து 'சார், ஏதும் தப்பாச் சொல்லிட்டேனா?' என்றாள்.

அவன் திரும்பினான். முகத்தில் சொல்ல வொண்ணா வேதனை நிறைந்திருந்தது.

'கோதை! அடிவயித்தில் இருந்து குரல் வருதுன்னு சொன்னீங்களே! உங்க இலக்கியம் சொல்லுதே புலியிலிருந்து போதிய குகை போலன்னு சொல்லுவீங்களே.. அது மாதிரி அந்த வயிறுதான்.. என்னைப் பெத்த வயிறு. அவங்க.. என்.. அம்மா! என்னைப் பெத்தவங்க!' என்றான் வறண்ட குரலில்.

பூங்கோதை அதிர்ந்து போய் நின்றாள்.



12

'உனக்கே நாலு பேருக்கு வாடகைக்கு விடற மாதிரி வீடுகள் இருக்கையிலே நீ எதுக்கு இங்கே வந்து ஹாஸ்டல்ல இருக்கோணும்.

ஓங்கு தாங்காக இருந்த அந்தப் பெரியவர் அதட்டலான குரலில் கேட்க ஒரு நிமிடம் திகைத்துப் போய்ப் பார்த்தான் மதுசூதனன்.

லாயர் படிப்புக்காக என்ட்ரன்ஸில் தேர்வாகிச் சேர்த் திருந்தான். ஹாஸ்டலில் மூன்று மாதங்களாகத் தங்கிப் படித்துக் கொண்டிருக்கிறான். இப்போது என்ன இந்தப் பெரியவர் இப்படி வந்து கேட்கிறாரே என்று ஒரு வித வியப்புடன் பார்த்தான்.

'முதல்ல.. நீங்க.. யாரு? அதைச் சொல்லுங்க!' என்றான் சற்று அடக்கமான குரலிலேயே.



'நானா! நானு உங்க அம்மாவைப் பெத்த அப்பன்.. நீ என்ற மக வயித்துப் பேரன்.'

'என்ன உளர்றீங்க!' என்றான் தன்னையும் மீறிக் காட்டமாக.

'நான் உளறலே. உண்மையைச் சொல்றேன். உனக்குப் பதினெட்டு வயசு முடிஞ்சு போச்சு. இனிமே நாங்க யாருக்குமே பயப்படத் தேவையில்லை. நீயும் பயப்படத் தேவையில்லை' என்றார் மறுபடியும்.

'புரியலே' என்றான்.

'விவரமாச் சொன்னாத்தானே புரியும். என் பேரு திருநாவுக் கரசு. உங்க அப்பாவுக்கு போன் பண்ணி இப்படித் திருநாவுக்கரசுன்னு ஒரு பெரியவரு வந்து கூப்பிடறாரு. போகலாமான்னு கேளு. அப்புறம் பேசலாம்' என்றார்..

பக்கத்தில் இருந்த போன் பூத்தைக் காட்டினார்.

அவன் அவரை ஒரு விதமாகப் பார்த்து விட்டு போன் செய்தான். அப்பாவிடம் கேட்டான்.

'அப்பா யாரோ பெரியவர் பேரு திருநாவுக்கரசு, அப்படீங்கறாரு. உனக்குப் பதினெட்டு வயசாயிடுச்சு. இனிமே யாருக்கும் பயப்பட வேண்டியதில்லே வா.. என்னோட.. அப்படீங்கறாரே' என்றான்.

அந்தப் பக்கம் ஒரு நிமிடம் கனத்த மௌனம் நிலவியது. பிறகு கலங்கிய குரலில்.

'மது! உன்னுடைய நன்மைக்காக சில விஷயங்களை யெல்லாம் உனக்குச் சொல்லலை. அவரு சொல்றது நிஜம்தான். உன் தாத்தாதான். கூப்பிட்டாப் போ. போயி அவங்க சொல் றதையெல்லாம் கேட்டுக்க. அப்புறம்.. விவரமாப் பேசலாம்' என்று வைத்தார்.

அவன் வெளியே வந்து பெரியவரிடம் சொல்ல. அவர் வெற்றிப் பெருமிதத்துடன் 'சொன்னேன் இல்ல!' என்றார்.



கையசைத்தார். கார் வந்து நின்றது.

'வார்டன்கிட்டே சொல்லீட்டு வர்றேன்' என்று போனான். அவன் எதிர்பாராதது என்னவென்றால் வார்டனுக்கு அந்தப் பெரியவரைத் தெரிந்திருந்தது. அவரே வந்து பேசி வழியனுப்பி வைத்தார்.

அதே நேரம்!

முகத்தில் மண்டிய வேதனையுடன் ரிசீவரைக் கீழே வைத்தார் அருணாச்சலம்.

அவர் முக பாவம் பார்த்த விஜயா அருகில் வந்து 'என்னங்க?' என்றார்.

'விஜயா தயாராயிக்க. மனசளவு எந்த இடி வேண்ணாலும் தாங்கிக்கிற அளவுல தயாராயிக்க' என்றார்.

'ஏன், அப்படிச் சொல்றீங்க!'

'மாமா மதுவை ஹாஸ்டல்ல போய்ப் பார்த்திருக்காரு. வீட்டுக்குக் கூப்பிட்டிருக்கிறாரு. அவனும் போன் பண்ணி எங்கிட்ட கேட்டான். எத்தனை நாளைக்கு மறைக்க முடியும்? போயிட்டு வான்னுட்டேன்..' என்றான்.. தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்.

விஜயா அவரைச் சற்று நேரம் ஆழ்ந்து பார்த்தார். பிறகு

'எனக்கு நம்பிக்கையிருக்குங்க.. அவன் கண்டிப்பா என்னையத் தேடி வருவான். அப்படி நம்மளை விட்டுட்டுப் போயிர மாட்டான்..' என்றார். என்றாலும் வெகு நேரம் இருவரும் மௌனமாக அமர்ந்து விட்டனர்.

இருவருக்குள்ளும் எத்தனையோ எண்ணங்கள் கேள்விகள் வருத்தங்கள். அவரவருக்கான நியாயங்கள். ஆனால் அவற்றை எவ்வளவு தூரம் பேசினாலும் எல்லா முடிவும் மதுசூதனனின் கையில்தான் இருக்கிறது என்று இருவருக்குமே புரிந்தது.

'அம்மா.. பசிக்குதும்மா.. இன்னைக்கு நிறையப் படிக் கணும் சீக்கிரம் எதையாவது சாப்பிடக் குடும்மா' என்று குரல் கொடுத்துக் கொண்டு வந்த இளைய மகன் கதிர்வேலன் குரல் கேட்டவுடன் இருவரும் முக பாவங்களை மாற்றிக் கொண்டு எழுந்தார்கள்.

★ ★ ★

'என்னைப் பெத்த ராசா' என்று தன்னைக் கட்டிக் கொண்டு அழுகிற அந்த வயதான பாட்டியின் கைப்பிடியில் புரிந்தும் புரியாமலும் திணறிக் கொண்டு நின்றான் மதுசூதனன்.

'ப்ளீஸ்! நீங்க யாரு. விவரம் சொல்லுங்க.. எனக்கு ஒண்ணும் புரியலே.' என்றவனை அமர வைத்து விவரம் சொன்னார்கள்.

பூமியே தலைகீழாகச் சுற்றுவது போல் உணர்ந்து வெறித்த பார்வையுடன் அமர்ந்து விட்டான் மதுசூதனன்.

★ ★ ★

'கௌரி, கௌரி!' என்று குரல் கொடுத்துக் கொண்டு வந்தார் அருணாச்சலம்.

'இருங்க.. வர்றேன்!' என்று பூஜையறையில் இருந்து குரல் வந்தது.

'போச்சுரா! பூஜை ரூம்க்குள்ள போயாச்சா! அவ்வளவுதான்!' என்று முணுமுணுத்துக் கொண்டு கையிலிருந்த மல்லிகைப் பூப்பந்தைப் பார்த்தான்.

'மாப்பிளே! கௌரி பூஜை முடிச்சுட்டு வந்துடுவா. நீங்க சாப்பிட வாங்க.' என்று வந்தார் மாமியார் மருதாத்தாள்.

அருணாச்சலம் கையிலிருந்த பூவை நீட்டினான். 'சாமிக்கு!' என்றான்.

'ஓ!' என்று அவர் அதைக் கொண்டு போய் பூஜையறையில் இருந்த கௌரியிடம் கொடுத்து விட்டு வந்தார்.



டைனிங் டேபிளில் போய் அமர்ந்தான்.

மாமனார் வேறு குறுக்கும் நெடுக்குமாய் நடக்கையில் நெளிந்தபடியே அமர்ந்து சாப்பிட்டு முடித்தான். பிறகு,

'அத்தை! நான் மேலே ரூமுக்குப் போறேனுங்க' என்று போய் விட்டான்.

அருணாச்சலம் ஹெல்த் டிபார்ட்மென்டில் ஆய்வு செய்கிற வகையில் பணியில் இருந்தான்.

திருநாவுக்கரசு மிகப் பெரிய செல்வந்தர். ஒரு மகனும், மகளும் என்று மகிழ்ச்சியாகத்தான் இருந்தார். ஆனால், ஐந்தாண்டுகளுக்கு முன் மகனை ஒரு விபத்தில் இழந்து விட்டார். அதிலிருந்து மகளின் படிப்பைக் கூட நிறுத்தி விட்டு வீட்டில் வைத்துக் கொண்டார்.

படித்த மாப்பிள்ளை வேண்டுமென்று, அருணாச்சலத்தின் குடும்பம் கீழ் நடுத்தரக் குடும்பமாக இருந்தபோதும் தேடித் திருமணம் செய்து வைத்தார்.

திருமணப் பேச்சின் போதே அவர்கள் வீட்டில்தான் இருக்க வேண்டுமென்று நிபந்தனை. பெரிய இடம் கிடைக்கிறதே யென்று முதலில் அவர்கள் குடும்பத்திலும் எல்லாருக்கும் மகிழ்ச்சிதான். ஆனால், திருமணத்திற்குப் பிறகுதான் அதிலுள்ள சிரமங்கள் புரிந்தன அருணாச்சலத்திற்கு.

அவர்களுக்கென்று மாடிப் போர்ஷனை ஒதுக்கிக் கொடுத் திருந்தார்கள் என்ற போதும் விரும்பிய நேரத்தில் விரும்புகிற மாதிரித் தனிமை அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதிலும் கௌரி பெற்றோர் மேல் எல்லையற்ற பாசம் வைத்திருந்தாள்.

இரண்டு பேருக்குமே திருநாவுக்கரசைக் கண்டால் பயம். இத்தனைக் கிடையிலும் இரண்டாமாண்டில் ஒரு குழந்தை பிறந்தது.

மதுசூதனன் என்று பெயர் வைத்தார்கள். இப்போது குழந்தைக்கு ஓராண்டு நிறைவாக இருந்தது. இதுவரையில்



குழந்தை குழந்தை என்று எல்லோரும் குழந்தை வளர்ப்பு மும்முரத்தில் இருந்தார்கள்.

அன்றைக்கு மேலே வந்த கௌரி கணவனின் பார்வை பார்த்ததும் ஒன்றும் தெரியாதவள் போல் இருந்தாள்.

என்னவோ தெரியவில்லை. அருணாச்சலத்துக்குத் தன் மனைவியின் கம்பீரம் பார்த்து உள்ளூரச் சற்று பயம்தான். அதனால் தடாலடியாக எதுவும் செய்யத் தயங்குவான்.

அன்றைக்குக் குழந்தை உறங்கியவுடன் மெதுவாக அவளைத் தன்னருகில் இழுத்தான்.

'கௌரி!' என்றான் குழைந்த குரலில்.

'ம்..!' என்றாள்.

'சாயங்காலம்.. ஆசையா.. மல்லிப்பூ வாங்கிட்டு வந்தேன்.. வந்தா.. மாமியாரம்மா.. எதுக்க நிக்கறாங்க. பூஜைக்குன்னு குடுத்துட்டேன்' என்று சிரிக்க.. அவளும் சிரித்தாள்.

'தெரியும். அதான்.. சாமிக்கும் படைச்சுட்டு.. அதுலயும் கொஞ்சம் எடுத்துத் தலையில சூடிகிட்டேன்' என்றாள்.

'அதுதான்.. வாசம் இழுக்குது..!' என்றான் அருணாச்சலம் கிறக்கக் குரலில்.

'ஆமா! இழுக்கறதுக்கு.. உங்களுக்கு ஏதோ ஒரு காரணம்' என்று முணுமுணுத்தாள்.

'ஹேய்! நீ என்னைப் புரிஞ்சுக்கவே மாட்டேங்கறே. இங்க.. ஒரு சுதந்திரமும் இல்லே. தனியாப் போயிடலாம்..' என்றான் ஏக்கமாக.

'போகலாம்தான்.. ஆனா, அண்ணா இருந்திருந்தான்னா.. நிலைமை வேற. அவனும் இல்லாம.. என்னையும் பிரிஞ்சு இருக்க மாட்டாங்களே.. அதை நினைச்சுத்தான்.. கவலைப் படறேன்..



'அதுசரி! போ! என்னைப் பத்தி மட்டும் கவலைப்பட்றாதே.. என்ன?' என்றான் கோபமாக.

'என்னங்க.. இப்படிக் கோபிச்சுக்கறீங்க! நாலையும் பாக் கணும்தானே. எப்படியும் உங்களுக்கு டிரான்ஸ்ஃபர் வரும் தானே? அப்ப அதைச் சாக்காட்டிப் போய்க்கலாம். அதுக் குள்ளே மதுவும் கொஞ்சம் பெரியவனாயிடுவான்' என்று சமாதானம் செய்தாள்.

டிரான்ஸ்ஃபர் வந்தது.

அவர்கள் நினைத்த மாற்றம் மட்டும் நிகழவில்லை.

பழனிக்கும் பக்கத்தில் ஏதோ ஊருக்கு மாற்றல் வந்தது.

'மாப்பிளே! ஒரு ரெண்டே மாசம் இருக்கட்டும். அப்புறம் அனுப்பறோம்.' என்றார்கள். யாருக்கும் ஒன்றும் பேச முடியவில்லை.

வாரம் தோறும் வந்து விட்டுப் போனான். ஆறு மாதங்கள் வரை வாரம் தோறும் வந்தான். எங்காவது வெளியே போவார்கள்.

அதற்குப் பிறகு பதினைந்து நாளைக்கொரு முறை வந்தான்.

மறுபடியும் அனுப்பச் சொல்லிக் கேட்டான்.

'மாமா! அனுப்பி வைங்க!' என்றான்.

அவனிடம் ஒன்றும் பேசவில்லை. அவளிடம் தனியாக அழுதார்கள்.

கௌரிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அன்புக்கு இடையே சிக்கிக் கொண்டு தவித்தாள்.

அந்தக் கோபத்தில் மாதம் இரண்டு முறையென்று வருகையைக் குறைத்தான். அதுவும் வந்தால் மகனிடமே அதிக நேரம் செலவழிப்பான்.

கணவனின் கோபம் புரிந்தது கௌரிக்கு. ஆனால், கம்பீர மாகவே இருந்து பழகியவளுக்கு இறங்கி வரத் தெரியவில்லை. கணவனைத் தக்க வைத்துக் கொள்கிற சாகசமும் தெரிய வில்லை.

ரெண்டு வருடங்களுக்கு மேல் இந்தப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

ஒருமுறை தன் ஆழ்ந்த வருத்தத்தை வெளியிட்டு விட்டுப் போனவன் தொடர்ந்து மூன்று மாதங்கள் வரவில்லை.

மாமனாரும் வீம்பு பிடித்தார்.

கௌரி மௌனக் கண்ணீர் வடித்தபடி வேண்டாத தெய்வங் களையெல்லாம் வேண்டிக் கொண்டிருந்தாள்.

மூன்று மாதங்களுக்குப் பின் வந்தான். முன்பிருந்த கோபம் குறைந்திருந்தது.

'கௌரி! கௌரி!' என்று தாங்கினான். அவளும் மகிழ்ந்து போனாள்.

தனக்குச் செய்த பெரிய துரோகம் அவன் நெஞ்சை அழுத்துவதனால்தான் மனசாட்சியை சமாதானம் செய்து கொள்ள அவன் அப்படி நடந்து கொள்கிறான் என்பது அப்போது அவளுக்குப் புரிந்திருக்கவில்லை.

மாறாகக் கணவனின் அன்புமழை கண்டு மகிழ்ந்து போனாள்.

அந்த முறை அவளை சினிமாவுக்கு அழைத்துப் போனான்.

கடைக்கு அழைத்துப் போய் நிறையப் பொருட்களைப் பரிசாக வாங்கிக் குவித்தான். ஆனால், தனிமையில் ஏதோ சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தான்.

இது ஒரு ஆறு மாதங்களுக்குத் தொடர்ந்தது. இப்போதெல் லாம் ஊருக்கு வரச் சொல்லி அழைப்பதில்லை. கௌரியும் அது பற்றிப் பேசுவதில்லை. 'சரி! இந்த ஏற்பாடே சரியென்று



முடிவு கட்டிவிட்டார் போலும்!' என்று எண்ணிக் கொண்டாள் கௌரி.

அந்தத் தை மாதத்தில்!

அவள் தலையில் பேரிடி விழுந்தது.

ஒரு நாள் திருநாவுக்கரசு படுகோபமாக வந்தார்.

'கௌரி. புறப்படு ஏய். மருதாத்தா. நீயும் புறப்படு. டேய். பழனிசாமி காரை எடுறா!' என்றார்.

'என்னப்பா..!' என்றாள் கௌரி.

'வா.. கார்ல ஏறு! எல்லா விவரமும் வழியில பேசிக்கலாம்' என்று வழியில் சொன்ன விவரங்கள் கேட்டு கௌரி மூர்ச்சையடையாத குறையாய் அமர்ந்து விட்டாள்.

கார் போகிறாற் போலவே அவளுக்குத் தோன்றவில்லை.

காலம் அவளைப் பொறுத்தவரை அதே இடத்திலேயே நின்று விட்டது.



13

பழனியில் இருந்து பத்துக் கிலோ மீட்டர் தொலைவில் உள்ளடங்கி இருந்தது அந்தக் கிராமம்.

அவர்கள் காரில் போய் 'அருணாச் சலம் வீடு' எது என்று விசாரித்தார்கள்.

ஓட்டு வீடு.

தனி காம்பவுண்டுடன் இருந்தது.

அந்த வீட்டை அணுகும்போதே ஒரு இளம் பெண் லேசாக மேடிட்ட வயிறோடு நின்றிருந்தாள்.

'யார் வேணும்?' என்றாள்.

'அருணாச்சலம்..!' என்று பெரியவர் இழுக்க.



'வாங்க.. எங்க வீட்டுக்காரர்தான்..' என்று அவள் சொல்கையிலேயே அருணாச்சலம் உள்ளிருந்து வந்தான்.

கௌரியும், மருதாத்தாளும் ஒருவரையொருவர் அதிர்ச்சி யுடன் பார்த்துக் கொண்டார்கள்.

'தயவு செய்து உள்ளார வாங்க.. பேசலாம்..' என்றான் அருணாச்சலம். கலங்கிய குரலில் 'அடப்பாவி, மனுஷா! இப்படித் துரோகம் பண்ணிப் போட்டியே' என்று மருதாத்தா பெருங்குரல் எடுத்து அழுவதை கௌரி இரு கண்களிலும் மௌனக் கண்ணீர் வடியப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'இது.. என்னங்க.. இவுக யாரு?' என்று அந்தப் பெண் கேட்க.. அவன் கௌரியைத் திரும்பிப் பார்த்தான்.

'விஜயா!' என்று ஆரம்பிக்க அங்கே இருந்த சேரில் கௌரி பொத்தென்று அமர்ந்தாள். அவள் கையிலிருந்த மதுசூதனன் 'அப்பா!' என்று அவனிடம் தாவிக் கொள்ள விஜயாவுக்கு அப்போதுதான் விஷயம் புரிந்தது.

கொடுமை என்னவென்றால் கௌரி என்று தனக்கொரு மனைவியும், மகன் இருப்பதையும் அருணாச்சலம் விஜயா விடம் சொல்லவில்லை.

அந்த ஊருக்கு வந்து தங்கியபோது அவன் திருமணமாகா தவன் என்றுதான் எல்லாரும் நினைத்தார்கள். அவனும் பெரிதாக விளக்கம் சொல்லிக் கொள்ளவில்லை. ஆனால், அந்த ஊரில் பெரிதாக ஓட்டலோ மெஸ்ஸோ எதுவும் இருக்க வில்லை. எனவே, ஊர்ப் பெரியவர் ஒருவர் விஜயாவின் வீட்டிலிருந்து சமையல் செய்து இவனுக்குக் கொண்டு வந்து கொடுக்கிற மாதிரி ஏற்பாடு செய்தார்.

விஜயாவுக்கு அம்மாவைத் தவிர யாருமில்லை. அவன் அங்கே தங்கியிருந்த சமயத்தில் ஒரு நாள் விஜயா பரபரப்பாக ஓடி வந்தாள்.



'அம்மாவுக்கு உடம்பு சரியில்லைங்க.. ஐயா..' என்றாள்.

போனான். ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனான். உதவிகள் செய்தான். ஆனால், எல்லாவற்றையும் மீறி அந்த அம்மா இறந்து போனாள்.

தனியாக இருந்த விஜயாவுக்கு உதவிகள் செய்தான். கொஞ்சம் நிலம் வைத்திருந்தாள். தானே விவசாயம் பார்த்தாள். இவனுக்கும் சமையலும் செய்து கொடுத்தாள்.

அந்த முறை ஊருக்குப் போனவன் வருந்தி வருந்தி அழைத்தும் கௌரி வரவில்லை என்ற கோபத்தில் இருந்தான் அந்த நேரம் ஊர்ப் பெரியவர் வந்து,

'ஏப்பா! உனக்கும் ஒருத்தரும் இல்லேங்கறே. அதுக்கும் யாரும் இல்லே. நீயே கல்யாணம் பண்ணிக்கயேன்' என்றார்.

இரண்டு மூன்று நாட்கள் அச்சத்தில் இருந்தான். பிறகு துணிந்து சம்மதம் சொன்னான்.

ஊர்க் கோவிலில் வைத்து சிம்பிளாகக் கல்யாணம் செய்து கொண்டான்.

விஜயாவுடன் வாழ்க்கை நடத்துவது எளிதாக இருந்தது. கௌரியின் முன் இருக்கும் போது ஏற்படுகிற காம்ப்ளெக்ஸ் இல்லை. பயம் இல்லை. அவன் எள் என்று முன்னே அவள் எண்ணெயாக நின்றாள். ஆனாலும் உள்ளே உறுத்தல் இருந்து கொண்டே இருந்தது.

நேரம் கிடைக்கும்போது, வாய்ப்புக் கிடைக்கும்போது கௌரியிடம் சொல்லி விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தான். அதற்குப் பின்னே ஏற்படப் போகிற பிரளயங்கள் பற்றிய எண்ணம் தோன்றியவுடனே ஒவ்வொரு முறையும் சொல்லுகிற துணிவை இழந்தான்.

இப்போது இப்படிக் காரில் மாமனாரும், மனைவியும், மாமியாரும் வந்து நிற்பார்கள் என்று அவன் எதிர்பார்க்க வில்லை.

'அந்த ராமசாமி பழனியிலே வச்சு யாரோ பொம்பளை யோட பார்த்தேன்னு சொன்னாண்டா.. அதான் வந்தேன்' என்றார் திருநாவுக்கரசு.

'மாமா.. மரியாதையாப் பேசுங்க..!' என்றான் அருணாச்சலம்.

'உனக்கென்னடா.. மரியாதை ஒண்ணும் மண்ணும் இல்லாத பயலுக்குப் பொண்ணைக் குடுத்து.. மனுஷனாக்கி உட்கார வச்சேன்.. பாரு.. அதுக்கு.. நீ குடுத்த கூலியாடா?' என்றார்.

'ஆமா! பொண்ணைக் குடுத்து வூட்லயே வச்சுகிட்டா.. இப்படித்தான். எத்தனை தடவை கேட்டேன்.. அனுப்பி.. வைங்க.. அனுப்பி வைங்கன்னு.. அனுப்பி வைச்சீங்களா? இப்ப மட்டும் எதுக்குக் கூட்டிட்டு வந்தீங்க! நான் ஒண்ணும் மண்ணும் இல்லாதவனா இருந்தா.. என்ன? உங்க மகளுக்குப் புருஷன்னு மரியாதை குடுத்தீங்களா? இப்பப் பேசறீங்க? எனக்கும் ஒருத்தி கிடைக்காமயா போயிடுவா? கிடைச்சா! கல்யாணம் பண்ணிகிட்டேன்' என்றான்.

கௌரி கண்ணீர் மல்க இந்த வாக்குவாதத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தன் கணவன் மேல் இருந்த எல்லையற்ற காதலை எப்படி அவளுக்கு வெளிக் காட்டத் தெரிய வில்லையோ அப்படியே உள்ளத்தில் பொங்கிக் கொண் டிருந்த வேதனையையும் வெளிக் காட்டத் தெரியவில்லை. சத்தம் போடவோ, சண்டை போடவோ அவளுக்குத் தோன்றவில்லை.

எப்போது துரோகம், நிராகரிப்பு என்று ஆகிவிட்டதோ அதற்கப்புறம் சண்டை போட்டுத்தான் ஆகப் போவதென்ன? என்ற வறுமை உணர்வு தோன்றி விட்டது.



கேவிக் கேவி அழுத வண்ணம் அமர்ந்திருந்தாள்.

மாமனார் பேசுகிற பேச்சுக்குப் பதில் சொல்லவே அருணாச்சலத்துக்கு சரியாக இருந்ததே ஒழிய. கௌரிக்கோ, விஜயாவுக்கோ தேறுதல் சொல்ல முடியவில்லை.

எப்போதும் போல் பெற்றோரைப் பேசவிட்டு விட்டு அவள் அமர்ந்திருப்பதைக் கண்டு அவனுக்கு இன்னும் கோபம் வந்தது.

'இப்படியேதாண்டி அப்பனாத்தாவைப் பேச விட்டே என்னக் கொன்னு தீர்த்தே! இப்ப.. என்ன? ஆமா.. நான் துரோகம்தான் செஞ்சேன். ஒத்து வர்லையா ஆளை விடு. டைவர்ஸ் செஞ்சுக்கோ.. என்றான்.

அவள் அதிர்ச்சியில் இருப்பதைக் கூட அவன் உணர வில்லை.

கோபம் அடிப்படை இரக்கத்தைக் கூடக் கொன்று விட்ட அந்த நிலையில் கௌரி பேசாமல் எழுந்தாள்.

குழந்தையை எடுத்துத் தோளில் சாய்த்துக் கொண்டாள்.

வெளியில் நடந்தாள்.

அருணாச்சலம் திகைத்துப் போய் நின்றான். பிறகு சுதாரித்துக் கொண்டு.

'கௌரி! நான் சொல்றதைக் கேளு!' என்று வந்தான்.

அவள் நின்றாள். திரும்பி ஒரே ஒரு பார்வை பார்த்தாள். அந்தப் பார்வையில் தெரிந்த எல்லையற்ற சோகம் அவனை அடித்தாற் போல் தாக்கியது. கரகரவென்று கண்களில் கண்ணீர் வழிய நடைப்பிணம் போல் நகர்கிற அவளை அவன் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அவள் காரில் போய் அமர்ந்தாள். பெற்றோர்கள் இருவரும் புலம்பிக் கொண்டும் உறுமிக் கொண்டு காரில் போய்



ஏறினார்கள். அதற்குப் பிறகும் கௌரி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

இரவும் வீட்டில் வெறித்த பார்வை பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

திடீரென்று எழுந்து வெறி பிடித்தாற் போல் சிரித்தாள்.

பாத்திரங்களையும், பொருட்களையும் வீசினாள்.

பெற்றோர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. டாக்டர்களை வரவழைத்தார்கள் எல்லாரும் ஒன்று போல்

'அதிர்ச்சி தாளாமல் புத்தி பிசகி விட்டது' என்றார்கள்.

இங்கே அப்படியென்றால் -

அங்கே!

விஜயா சமையலறைக்குள் முடங்கியவள்தான் கண்ணீரும் கம்பலையுமாக அமர்ந்திருந்தாள்.

'விஜயா!' என்று அவளிடம் பேசப் போனான்.

'பேசாதீங்க.. மாமா! இவ நாதியத்தவ கேட்கறதுக்கு யாருமில்லேன்னுதானே என்னை இப்படி ஏமாத்திப் போட்டீக!' என்று அவள் ஒரு பக்கம் அழுதாள்.

செய்வதறியாது அமர்ந்து விட்டான்.

'எம்புட்டு அளகா இருக்காக. அவுகளுக்கு என்ன குறை யின்னு இப்படி ஏமாத்தினீக ஐயோ. இந்தப் பாவத்தை நான் எங்ஙன கொண்டு போய்த் தொலைக்க? எந்தத் தண்ணியிலே கழுவ! 'என்று பொங்கிப் பொங்கி அழுதாள்.

அவன் அவளருகில் அமர்ந்தான். நடந்ததையெல்லாம் சொன்னாள்.

'தப்புப் பண்ணிட்டீக! மாமோய்! தப்புப் பண்ணிட்டீக! அவுககிட்டே நீ என்ற பொஞ்சாதி. என்கூட வர்றதுதான்





நியாயம்னு சொல்லிப் புரிய வக்கிறதை வுட்டுப் போட்டு இப்படி பண்ணிப் போட்டீகளே! அவுக மனசுல எத்தனை வருத்தமோ!

எப்படிப் பார்த்தாங்க தெரியுமா? நீங்க.. மனுசனே இல்லை' என்று தன் வெறுப்பையெல்லாம் கக்கினாள்.

'ஆளுக்காளு மாத்தி மாத்தி இப்படி என்னைப் படுத்தினீங் கன்னா எனக்குத் தற்கொலையைத் தவிர வேற வழியில்லே' என்று அவன் சொல்ல அதற்குப் பிறகுதான் அடங்கினாள். ஆனால் அடுத்த இரண்டு நாட்களும் கனத்த மௌனத்தில் கழிந்தது.

அவனுக்கு ஊருக்குப் போய் கௌரியைப் பார்க்க வேண் டும் என்றிருந்தது. அதை உணர்ந்தவளாகவோ என்னவோ.

'போய்ப் பார்த்துட்டுத்தான் வாங்க' என்றாள் விஜயா.

போனான்!

பார்த்தான்!

நெஞ்சு வெடிக்க அழுதான்!

'பாரய்யா பாரு! ராசாத்தியாட்டம் நடமாடிக்கிட்டிருந்த என்ற மகளை சங்கிலியில கட்டிப் போட்டு வச்சிருக்கு. பாரு என்று முதன் முறையாக அழுத மாமனாரோடு சேர்ந்து அவனும் அழுதான்.

மாமனார் கைகூப்பினார்.

'மருமகனே! எங்களுக்கு ஏதாவது நல்லது செய்யணுமின்னு நினச்சீன்னா இனிமே எங்க மூஞ்சியில முழிக்காதே. கண்ணுலயே படாதே' என்றார்.

மாமனாரின் வார்த்தைகளால் அடிவாங்கிக் கொண்டு மனதில் வலி நிரம்ப அந்தக் காம்பவுண்டில் ஒதுக்கப்பட்டிருந்த

பெரிய அறையில் சங்கிலிகளால் கட்டப்பட்டு அமர்ந்தபடியே கௌரியை பார்த்துக் கண் கலங்கியவனாய் வெளியே வந்த போது கௌரி வெறி கொண்டவள் போல் சிரித்தாள்.

ஊருக்குப் புறப்படுவதற்கு முன்பு கிராமத்துக்குப் போன் செய்து கௌரிக்கு உடம்பு சரியில்லை என்று விஜயாவுக்குச் சொன்னதுதான் அவன் செய்த மூன்றாவது பெரிய தவறாக ஆகிப் போனது.

★ ★ ★

அவன் கிராமத்துக்கு வந்த போது!

விஜயா ஆஸ்பத்திரியில் இருப்பதாகச் சொன்னார்கள்.

பதட்டத்துடன் போனான். கொஞ்சம் ஏமாந்திருந்தால் கருக் கலைப்பு ஆகியிருக்கும். காப்பாற்றி விட்டோம் என்றார்கள்.

ஏதோ அதிர்ச்சி என்று டாக்டர்கள் சொன்னார்கள்.

அருணாச்சலம் விஜயாவின் கையைப் பற்றிக் கொண்டு

'என் வாழ்க்கையில எல்லாமே தப்பாய்ப் போச்சு' நீயும் என்னைக் கை விட்டுப் போடாதே!' என்று அழுதான்.

விஜயா மெதுவாக உடல் தேறினாள். மனம் தேறவே யில்லை என்பது அப்போது அருணாச்சலத்துக்குத் தெரியவில்லை.

ஒரு நாள் இரவு!

'நாம வேற ஊருக்குப் போயிடலாம்ங்க' என்றாள்.

'ஆமா! நானும் அதுதான் யோசிச்சேன். கோபிக்குப் பக்கத் திலே ஒரு கிராமத்துக்குப் போயிரலாமா!' என்றான்.

'போலாங்க' என்றாள்.

பத்தே நாட்களில் போய் விட்டார்கள்.

இன்னொரு நாள்!

'ஏங்க! நாம அக்காவுக்கு செஞ்ச துரோகத்துக்குப் பரிகாரம் பண்ணிப் போடோனுங்க' என்றாள்.



'என்ன செய்ய சொல்லு?' என்றான்.

'மதுவைக் கூட்டிக்கிட்டு வந்துடுங்க. அக்காகிட்டே கிடைக் காத தாய்ப்பாசத்தையெல்லாம் கொட்டி நான் அவனை வளர்க் கறனுங்க. மாட்டேன்னு மட்டும் சொல்லிப் போடாதீங்க. இதுவரைக்கும் நான் உங்ககிட்டே எனக்குன்னு எதுவும் கேட்டதில்லே. எனக்கு இந்தப் பிச்சை மட்டும் போடுங்க!' என்று அழுதாள்.

அருணாச்சலம் திகைத்துப் போய் அமர்ந்து விட்டான்.



14

'என் குழந்தையைக் குடுங்க. நானே வளர்க்கறேன்' என்று அவன் கேட்ட போது திருநாவுக்கரசு தளர்ந்து போய்ப் பார்த்தார்.

'அந்தக் குழந்தையையாவது எங்க கிட்ட இருக்க விடக் கூடாதா?' என்றார்.

'மாமா! கௌரி விஷயத்துல நான் செஞ்ச தப்பை இப்ப நான் செய்ய மாட்டேன். என் குழந்தையை நானே வளத்துக்கறேன்' என்றான்.

'குடுக்கலேன்னா?' என்றார் மருதாத்தாள்.

'கோர்ட்டுக்குப் போவேன். அது மட்டுமில்ல என்ன வேண்ணா சொல்லுவேன். ஏற்கனவே கௌரிக்குக் கொஞ்சம் பைத்தியம் இருந்தது. திடீர்திடீர்ன்னு ரகளை செய்வா. மறைச்சுக் கல்யாணம் பண்ணி வச்சுட்டாங்க. ஆனாலும் குடும்பம் நடத்த முயற்சி செஞ்சேன். முடியாதப்பத்தான் வேற கல்யாணம் செஞ்சேன். இப்பக் குழந்தை அந்தச் சூழ்நிலையில வளர்றது நியாயமில்லேன்னு வாதாடுவேன்' என்றான் அருணாச்சலம்.

மாமனாரைப் பற்றிய பயம் இப்போது முழுமையாக விட்டுப் போயிருந்தது. தலைக்கு மேலே வெள்ளம் போன



தற்குப் பிறகு சாணென்ன. முழமென்ன என்ற நிலைமைக்கு வந்து விட்டான்.

குழந்தையாவது தன்னிடம் இருக்கட்டும் என்பதில் பிடிவாதமாக நின்றார் அருணாச்சலம்.

திருநாவுக்கரசு பல வக்கீல்களிடம் ஆலோசனை கேட்டார். எல்லாரும் வழக்கு அவன் பக்கம் ஜெயிப்பதற்கே வாய்ப்பு அதிகம் என்றார்கள்.

மீண்டும் ஒரு சண்டை நடந்தது. ஆனால், பிடிவாதமாகக் குழந்தையை எடுத்துக் கொண்டான்.

மான ரோஷமுள்ள மனுஷங்களா இருந்தா.. அவனுக்கா விவரம் தெரியறவரைக்கும் வந்து தொல்லை குடுக்காதீங்க..' என்று சாடி விட்டுக் குழந்தையை எடுத்துக் கொண்டு வந்தான்.

நான்கு வயது கூட நிரம்பாத குழந்தைக்கு சூழ்நிலை மாற்றம் ஒன்றும் பெரிதாக பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

அடுத்த ஐந்தாவது மாதத்தில் விஜயாவுக்குக் குழந்தை பிறந்தது.

ஊனத்துடன் பிறந்தது. ஒரு கால் வளைந்தாற் போலிருந்தது.

'செஞ்ச பாவத்துக்கு தண்டனை மாமா!' என்று விஜயா அழுதபோது அவன் மௌனம் சாதித்தான். ஆனாலும், விஜயா மதுசூதனனிடம் பிரியத்தைக் கொட்டி வளர்த்தாள்.

அதனால் மதுசூதனனுக்கு வேறொரு தாய் என்ற எண்ணமே எழவில்லை. உண்மை அவனுக்குத் தெரிந்திருக்கவும் இல்லை.

பதினெட்டாவது வயதில் அந்த உண்மை வந்து அவன் முகத்தில் மோதும் வரை.

★ ★ ★

அந்த இரண்டு வயதானவர்களின் ஏக்கம் நிறைந்த முகங்களைப் பார்த்தான். மனம் இளகிப் போனது.



'உன்ற மாமன் போன துக்கமே எங்களைப் பாதி கொன்னு போடுச்சு. உங்கப்பன் செஞ்ச துரோகம் அதுக்கு மேலே' என்று அழுதார்கள்.

வேதனை நிறைந்த முகத்தோடு சுற்று முற்றும் பார்த்தான்.

நகரின் மையமான ராஜ வீதி ஏரியாவில் வீடு. வீட்டின் முற்பகுதியில் பெரிய ஜவுளிக்கடை. எல்லா வசதிகளும் உள்ள வீடு.

என்ன இல்லை இவர்களிடம்? ஒரு விதத்தில் பார்த்தால் ஒன்றுமே இல்லை. வெறும் வசதிகள் மட்டுமா வாழ்க்கை?

'ஒரு நாள் இல்லா விட்டால் ஒரு நாளைக்கு நீ வருவேங்கற நம்பிக்கையிலதான் உசிரோட கிடக்கறோம்' என்று மருதாத்தாள் அழுத போது,

'அழாதீங்க.. பாட்டி' என்று தேற்றினான். சட்டென்று தான் பெரிய மனிதனாகி விட்டதாக உணர்ந்தான்.

இரு குடும்பங்களுக்கும் இடையே இருக்கிற உறவுச் சிக்கல்களைத் தீர்க்க வேண்டிய பெரிய பொறுப்பு தனக்கு இருக்கிறது என்ற எண்ணம் தோன்றியது.

அம்மாவின் படத்தைப் பெரிதாக லாமினேட் செய்து வைத்திருந்தார்கள். தான் தாத்தாவின் சாயலில் இல்லை யில்லை அம்மாவின் சாயலில் இருப்பதை உணர்ந்தான்.

ஒரு முறை அப்பாவிடம் கூட அவன் கேட்டதுண்டு.

'ஏம்ப்பா. நான் யாரோட ஜாடை? உன்னோட ஜாடையும் இல்லை. அம்மாவோட ஜாடையும் இல்லே' என்று.

அதற்கு அவன் அப்பா 'டேய், கண்ணா நம்ம சாயல் சில நேரங்களில் நம்ம பெரியவங்க யாரோட ஜாடையாவது இருக்கலாம்' என்று பதில் சொன்னான்.

இப்போது புரிந்தது. ஆனால், அவனுக்குப் புரியாதது என்னவென்றால் இவர்கள் இவ்வளவு மாற்றி மாற்றி

அழுகிறார்கள். ஆனால், அம்மாவைக் காணோம். சரி அம்மா எங்கே? கேட்டான்.

மருதாத்தா கண்ணைத் துடைத்துக் கொண்டு 'அவ இருக்க முடியாத சூழ்நிலை கொஞ்சம் உடம்பு சரியில்லை. நீ இனிமே எங்களோடவே இரு சாமி. இந்த சனிக்கிழமையன்னைக்கு அங்க போயி அம்மாவைப் பார்க்கலாம்' என்றார்கள்.

அவன் யோசித்தான்.

மருதாத்தாள் கோபமாக 'ஏன்' அந்த மினுக்கி.. இங்க.. இருக்க விட மாட்டாளாக்கும்?' என்றாள்.

அவள் சட்டென்று கையை உயர்த்தினாள் 'போதும் என்பது போல்.'

'பாட்டி... நான் இங்க தங்கணும்னா முக்கியமான கண்டிஷன் என்ன தெரியுமா? நீங்க விஜிம்மாவையோ, அப்பாவையோ சும்மா குறை சொல்லிகிட்டிருக்கக் கூடாது. எது பொய்யோ எது நிஜமோ எனக்குத் தெரியாது. ஆனா, எங்க அம்மா. என் மேல் வச்சிருக்கிற பாசம் பொய் கிடையாது. அது எனக்குத் தெரியும் சரிங்களா?' என்றான்.

மருதாத்தாள் அவன் கண்டிப்பாய்ப் பேசுகிற விதம் பார்த்துத் திகைத்தும் போனாள்.

'சரிடா.. சாமி நான் ஒண்ணும் பேசலே' என்றாள்.

அவன் முகம் சட்டென்று இளகியது. பாட்டியைக் கட்டிக் கொண்டான். 'தட்ஸ் குட்!' என்று கன்னத்தில் முத்தம் வைத்தான்.

பாட்டியின் முகத்தில் பொங்கிய சிரிப்பை பார்த்து உள்ளம் நெகிழ்ந்தான். வெகு கண்டிப்பாகப் பேசி விட்டு உடனே தாஜா செய்து மகிழ்விக்கிற அவன் கண்கட்டு வித்தையைப் பார்த்துத் தாத்தா முகத்தில் கூட புன்னகை மலர்ந்தது. இத்தனைக்கும் அவர்கள் முழுமையாக விஷயத்தைச் சொல்லவில்லை.



சுருக்கமாகக் கூறியிருந்தார்கள். ஆனால் இரண்டு வயதான ஜீவன்களும் தனிமையில் வாடுவதை அவன் புரிந்து கொண்டான்.

அப்பாவுக்கு போன் அடித்தான். வெகு சுருக்கமாக.

'அப்பா! இவங்கதான் என்னைப் பெத்த அம்மாவோட அம்மா, அப்பாங்கறாங்க. உண்மையாப்பா?' என்றான்.

அருணாச்சலம் சுருக்கமாக 'ஆமாம்!' என்றார்.

'அப்பா! என்னை இங்கயே தங்கச் சொல்றாங்க.. என்ன செய்யட்டும்?'

'நீ தான் முடிவெடுக்கணும்!' என்றார். பிறகு 'எல் லாத்தையும் சொன்னாங்களா? கௌரியைப் பார்த்தியா?' என்றார்.

'இல்லப்பா அம்மா உடம்பு சரியில்லாம இருக்காங்களாம். வேற இடத்துல இருக்காங்களாம்' என்றான். அவனுக்கு இன்னும் விஷயம் முழுமையாகத் தெரியவில்லை என்பது புரிந்தது.

'ஓ!' என்றார்.' என்ன முடிவு செஞ்சே?'

'அப்பா, நா இந்த வாரம் இங்க இருக்கேன். அப்புறம் ஊருக்கு வரும்போது பேசிக்கலாம். அம்மாகிட்டே குடுங்க..' என்றான்.

விஜயா வாங்கியவுடன் தேம்பியழுதாள்.

'எங்க மேல கோபமா சாமி?' என்றாள்.

'அம்மா. உங்க மேல எதுக்கும்மா எனக்குக் கோபம் வருது. எப்பவும் நீ எனக்கு அம்மாதான். நான் உனக்கு மகன்தான். கவலைப்படாம இரு. ஹாஸ்டல்ல இருக்கறதுக்குப் பதிலா இந்த வாரம் நா இங்க இருக்கேன். ரெண்டு பெரியவங்களும் ரொம்ப லோன்லியா ஃபீல் பண்றாங்க. அதுக்குத்தான் சரியா? எதுவும் மாறிடலே சரியா?' என்றான்.



'அது போதும் சாமி. இந்த அம்மாவை வெறுத்தராதடா' என்றாள் மறுபடியும்.

'அம்மா... ஒரு விஷயம் கேட்டுக்க. எது நடந்திருந்தாலும். அதுக்கு நீ காரணமா இருந்திருக்க முடியாதுன்னு எனக்குத் தெரியும். சரியா? நா வைக்கட்டுமா?' என்று வைத்தான்.

'சரிடா தங்கம்' என்றாள் விஜயா.

தன் மகன் கூறியதையெல்லாம் மனைவியிடம் விசாரித்துக் கேட்ட அருணாச்சலம் ஒரு ஆண்மகனுக்கு ஆண் மகனாகத் தன் மகனிடம் தலை குனிந்து நிற்க வேண்டிய கட்டம் வந்து விட்டது என்பதைப் புரிந்து கொண்டான்.

★ ★ ★

எதுவானாலும் அவங்க அவங்க இடத்துல நின்னு எது தப்பு. எது ரைட்டுன்னு யோசிக்கணுப்பா.. சாமி. நம் கோணத்துல மட்டுமே யோசிக்கக் கூடாது.. தங்கம்..' என்று விஜயா சொல்லிச் சொல்லி வளர்த்திருந்தாள்.

'ஒரு தோழமை கொடுத்து வளர்த்திருந்தாள். அதனாலோ என்னவோ மதுவுக்குச் சிறு வயதிலிருந்தே ஒரு மனப்பக்குவம் இருந்தது.

எத்தனை மனப்பக்குவம் இருந்த போதும் தன்னைப் பெற்ற அம்மாவைச் சங்கிலிகள் கட்டப்பட்ட சூழ்நிலையில் பார்த்தபோது அந்த இளைஞனின் மனம் உடைந்தது.

கதறி அழுதான்.

பதினெட்டு வருடங்களாகத் தன்னைப் பாத்திருந்தாலும் கூட மகன் என்று புரிந்து கொண்டிருக்க முடியாத அம்மா!

அந்தக் கணத்தில் தாத்தாவின் தோளில் முகம் புதைத்து அழுதான்.

'ஐயோ! இது என்ன கொடுமை!' என்று வாய்விட்டுப் புலம்பினான்.



அழுது ஓய்ந்து வீடு வந்து சேர்ந்தார்கள். வாழ்க்கையில் முதல் முறையாகச் சாப்பிடப் பிடிக்காமல் அமர்ந்து இருந்தான்.

'பாவம்! இந்த இரண்டு பெரியவர்களும்' என்ற எண்ணம் முதன் முறையாக அழுத்தமாகப் படிந்தது.

'கவலைப்படாதீங்க.. பாட்டி! இனிமே நான் இருக்கேன்.. உங்களுக்கு' என்றான்.

மறுபடியும் இருவரும் அழுவதைப் பார்த்துத் தேற்றினான்.

'என்னத்துனால இப்படி ஆச்சு?' என்று கேட்டான்.

'அதான்.. உங்கப்பங்காரன் செஞ்ச துரோகத்திலே..' என்று தாத்தா ஆரம்பிக்க மருதாத்தாள் தடுத்தாள். அவளே பேசினாள்.

'தப்பு எல்லாப் பக்கமும் இருந்திருக்கு மது. என் புருஷனோட அனுப்பி வைங்கன்னு உங்கம்மாளுக்கு ஓங்கிப் பேசத் தெரியலே. என் பொண்டாட்டி என் கூடத்தானே இருக்கணும்னு உங்கப்பனாவது சண்டை போட்டிருக்கலாம். நீ இப்ப எப்படி டக் டக்குன்னு பேசறே. அப்படியில்லாம எல்லாரும் உள்ளுக்குள்ளேயே வச்சு.. கடைசில என்ற மக வாழ்க்கை பாழாப் போச்சு..' என்றாள் மருதாத்தாள்.

திரும்பத் திரும்ப அதையே பேசி ஓய்ந்தார்கள். மனதும், உடம்பும் களைத்துப் போன நிலையில் உறங்கினார்கள்.

நள்ளிரவில் அவன் விழித்துக் கொண்டான். சுய நினை வில்லாமல் பொங்கிப் பொங்கி சிரித்த அம்மாவின் முகம் அவன் கண்களில் வந்து மோதியது.

எத்தனை அழகு!

நாகம்மா என்று ஒரு அம்மாவை உதவிக்கு வைத்திருந் தார்கள். சுத்தமாகப் பராமரித்தார்கள். பெரிய பொட்டும். பின்னி விடப்பட்ட பின்னலும் நெகமம் நூல் புடவையும் ஆக என்ன அழகு அம்மா 'இப்படி ஒரு அம்மாவுக்குத் துரோகம் செய்ய அப்பாவுக்கு எப்படி மனது வந்தது?'

பலதும் எண்ணி மறுகிப் போனான்.

விஜயா அம்மாவிடம் பேச வேண்டும். எந்த இடத்தில் விஜயாம்மா நுழைந்தார். அவருக்குத் தெரிந்து நடந்ததா? தெரியாமல் நடந்ததா?

உள்ளே கோபம் பொங்கி எழுந்தது.

என் தாய்க்குத் துரோகம் செய்ய உனக்கு எப்படி மனது வந்தது என்று அப்பாவின் சட்டைக் காலரைப் பிடித்து வைத்து இழுத்துக் கேள்வி கேட்க வேண்டும் என்று மனது கொந் தளித்தது. ஆனால், அப்படிக் கேட்கும்போது விஜயாம்மாவின் முகத்தில் எழும் வேதனையை அவனால் கற்பனை செய்ய முடிந்தது.

இந்த நாளில் தன் மனதில் ஏறிய பாரம் இனி வாழ்நாள் முழுக்கத் தன் நெஞ்சத்தின் ஓரத்தில் இருந்து கொணடே இருக்கும் என்பது அவனுக்குப் புரிந்தது.

★ ★ ★

அன்றைக்குப் போலவே இன்றைக்கும் அவனுக்கு உறக்கம் வரவில்லை.

எத்தனை சரியாகச் சொல்லிவிட்டாள் இந்தப் பூங்கோதை என்று தோன்றியது.

ஓலம் இல்லை. ஆனால், இசையும் இல்லை அந்தக் குரலில் அடிவயிற்றிலிருந்து பொங்கி எழுந்த வேதனை தெரிகிறது என்று.

நியாயப்படிப் பார்த்தால் தான் அப்பாவை வெறுத்திருக்க வேண்டும். ஆனால், அன்றைக்கொரு நாள் தன் பக்கத்து விஷயங்களைச் சொல்லிவிட்டு.

'என் பக்கத்து விஷயங்களைச் சொல்லி விட்டேன். ஆனாலும் நான் செய்தது தப்புத்தான்.' என்று நின்ற கணத்தில் அவர் மேல் பரிதாபம் தானே வந்தது.



பாசம்தானே கடைசியில் வென்றது.

கையில் எடுத்த வில்லைக் கீழே போட்ட அர்ஜுனனைப் போலத் தன் கோபத்தையெல்லாம் கீழே போட்டதுதானே நிஜம்.

தளர்ந்து போய் நிற்கிற சுய பச்சாதாபத்தால் உருக்குலைந்து போய் நிற்கிற அவரிடம் இனிமேலும் பேசுவது செத்த பாம்பை அடிக்கிற மாதிரி என்று நொந்து போய் நின்ற கணம்தான் நினைவுக்கு வந்தது.

எந்தக் குறையும் சொல்ல முடியாதபடி உயிரையே கொட்டி வளர்த்த அப்பா என்ற போதும் கூட ஒரே நேரத்தில் இரண்டு பெண்களுக்குச் செய்த துரோகம் அவன் மனதில் பதிகிற மாதிரி கேள்வி கேட்டு விட்டுத்தான் ஓய்ந்தான்.

அப்பா துடித்துப் போன வேதனையை நிர்த்தாட்சண்ய மாகப் பார்த்து விட்டுத்தான் ஓய்ந்தான். அதுவும் பாதிக்கப் பட்ட இரண்டு பேரில் ஒருத்தி காலைப் பிடித்துக் கெஞ்சாத குறையாகக் கெஞ்சியதற்குப் பிறகுதான்.

இந்தப் பெண்கள்தான் எவ்வளவு உயரத்திற்குப் போகிறார்கள் சில நேரத்தில் விஜிம்மா மாதிரி. ஏன்? இந்தப் பூங்கோதை கூட பூவேந்தன் கல்யாணத்தன்றைக்கு' என்ற மனதில் ஏற்படுகிற எந்தச் சங்கடமும் அவன் வாழ்க்கையைப் பாதித்து விடும். அவனை மன்னிக்கிற மனதை எனக்குக் கொடு'ன்னு வேண்டிக்கிட்டாளாமே! 'சே! இவர்கள் பெருந்தன்மையா லேயே கொல்கிறவர்கள். குத்தீட்டியை விட மோசமானவர்கள்' என்று தன் எண்ணம் ஓடிய திசை பார்த்து அவனுக்குள் புன்னகை கூட மலர்ந்தது.

உறக்கம் பிடிக்க வெகு நேரம் ஆனது.



## 15

'குலை குலையா முந்திரிக்கா நரியே நரியே.. சுத்தி வா.'

கூச்சலும், குதூகலமுமாய் குழந்தைகள் வட்டம் சுற்றி வர பூங்கோதை நடுநாயக மாய் நின்றிருந்தாள். இயக்குநராக.

பைக்கில் வந்து இறங்கிய மது சூதனன் ஆச்சரியமாகப் பார்த்தான்.

'ஹலோ! என்ன நடக்குது இங்கே?' என்றான்.

'என்ன நடக்குது? விளையாட்டுத்தான்' என்றான் ஒரு குட்டிப் பையன்.

கௌரியின் அறைக்கு நேராகக் குழந்தைகள் கூட்டம் விளையாடிக் கொண்டிருக்க கௌரி கூட அதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரு வட்டம் முடிந்தது.

இந்த இடைவெளியில் அம்மாவின் அருகில் ஒரு சேர் போட்டு அமர்ந்து கொண்டு புன்னகையுடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அடுத்த ரவுண்டு ஆரம்பித்தது.

'கோதைக்கா... இவன் அழுகுணி ஆட்டம் ஆடறான்' என்று ஒரு குழந்தை புகார் சொன்னது.

'யாருடா ஸ்ரீராம்?' என்று கோதை கனகாரியமாக விசாரிப்பதையும்,

இவன்தாங்க்கா.. இந்த ரமேஷ்' என்று ஸ்ரீராம் காட்டிக் கொடுத்தான்.

'போடா! நீ என்கிட்டே பேசாதே. பொய் சொன்னா எனக்குப் பிடிக்காது தெரியுமா' என்று கோதை கோபித்துக் கொள்ள.



'அக்கா.. அக்கா.. நான் இனிமே பொய் சொல்ல மாட்டேன்.. சரியா? என்கிட்டே பேசாம மட்டும் இருக்காதேக்கா..' என்று அவன் கோதையின் இடுப்பைக் கட்டிக் கொள்ள அவள் சட்டென்று சிரித்து மன்னித்தாள்.

மறுபடியும் சற்று நேரம் விளையாட்டு.

'சரி.. சரி! மணி எட்டாச்சு. நீங்கள்ளாம் போகலாம்' என்று அவள் சொல்ல அடுத்த நிகழ்வுதான் அவனை ஆச்சரியப் படுத்தியது.

ஒவ்வொரு குழந்தையாக அறை வாசலில் எட்டி நின்று

'நாகம்மா பாட்டி குட்நைட். கௌரிப் பாட்டி குட்நைட்' என்று சல்யூட் அடித்து விட்டுப் போனது.

அவள் புன்னகையுடன் கையசைத்து விடை கொடுத்து விட்டு அறைக்குள் வந்தாள்.

சுவாதீனமாக அவள் வந்து உள்ளே அமர்வதை ஆச்சரியமாகப் பார்த்தான்.

'மது சார்! கௌரி ஆன்ட்டியைத் தனிமைப் படுத்தறது தப்போன்னு எனக்குத் தோணுச்சு. அதனாலதான் இப்படி ஒரு ஏற்பாடு..' என்று புன்னகைத்தாள்.

அவன் வியப்பாகப் பார்க்க.

நாகம்மா.. 'சின்னையா. இந்தப் பொண்ணு.. உங்கம்மாவுக்கு பிரண்ட்டாயிட்டா. இவகிட்டே மட்டும் கௌரிம்மா.. ஒரு ரகளையும் செய்யறதில்லே.. தெரியுமா?' என்றாள். ஆச்சரியப் பார்வையுடன்.

பூங்கோதை புன்னகைத்தாள்.

'சார்! நான் எம்.எஸ்.உதயமூர்த்தியின் கட்டுரையில படிச்சேன். நம்மளோட எண்ணங்களுக்கு ஒரு அலை இருக்காம். அதனால நான் இவர்களை நேசிக்கறேன். இவங்க

என்னைப் புரிஞ்சிக்கணும் அப்படின்னு பிரே பண்ணிகிட்டே யிருந்தேன். ஒரு வேளை அது பலிச்சிடுச்சு போலருக்கு' என்றாள்.

அவன் நம்ப முடியாதவனாய்க் கேட்டுக் கொண்டான்.

நாகம்மா குறுக்கிட்டு 'எது எப்படியோ.. சின்னையா! எதை டேஸ்டா செஞ்சாலும் எனக்கும் கொஞ்சம் கிடைச்சிருது' என்றார்.

சற்று நேரம் கலகலப்பாகப் பேசிக் கொண்டார்கள்.

'சார்! எனக்குத் தோணுது. நாம இப்படி அவங்க முன்னாடி இயல்பா இருந்தம்னா.. ஒரு வேளை அவங்களும் மாறக் கூடும் அப்படீன்னு என்றாள்.

அவன் பெருமூச்சு விட்டான்.

'கோதை! கனவுகள் ரொம்ப சுகமானவை. ஆனா, நிதர்சனம் கனமானது' என்றான்.

இருவரும் சற்று நேரம் அமைதியாகி விட்டார்கள். அவள் சட்டென்று சிரித்து.

'சார்! ரொம்ப சோகமாயிட்டீங்கன்னா, நான் செஞ்சு தரப்போற அடையை ரசிச்சுச் சாப்பிட முடியாது. வர்றீங்களா? சூடா ஊத்தித் தர்றேன்' என்று பேச்சை மாற்றி அழைத்துப் போனாள்.

'சார்! மனசு பேதலிச்சுப் போச்சுங்கற ஒரு காரணத்துக்காக நாம அவங்களைத் தனிமைப்படுத்திரக் கூடாதாம். நான் படிச்சிருக்கிறேன். அதனாலதான் நான் இப்படி யோசனை செஞ்சேன்!' என்று வேகத்தோடு பேசுகிற பூங்கோதையை ஆழப் பார்த்துக் கொண்டே அவன் அடையை ருசித்து உண்டான்.

'சார்! எனக்கு யாராவது ஒரு சைக்காலஜிஸ்டை அறிமுகப் படுத்துங்களேன். நான் ஆன்ட்டியோட கேஸை டிஸ்கஸ் பண்ணி டீல் பண்ண முடியுமான்னு பாக்கறேன்' என்றாள்.



அவன் அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். அவள் அதைக் கவனிக்கவில்லை. மாறாக வெகு வேகமாகவும், உணர்ச்சிகர மாகவும் பேசினாள்.

'சார்! அவங்க அந்தக் காலத்து லேடி பேரண்ட்ஸையோ, ஹஸ்பெண்டையோ எதிர்க்கக் கூடாதுன்னு நெனச்சிருக் கிறாங்க. இன்ட்ராவர்ட்ன்னு சொல்வாங்களே அந்த மாதிரி. ஆனா உங்கப்பாவை ரொம்ப நேசிச்சிருக்காங்க. அது புரியுது' என்றாள்.

அந்தக் கணத்தில் அவன் முகத்திலும் வேதனை தெரிந்தது. ஒரு நிமிடம் சாப்பிடுவதை நிறுத்தி விட்டான். தலை குனிந்து அமர்ந்திருந்தான்.

அதைப் பார்த்த கமலம் 'வேண்டாம்! மேற்கொண்டு பேசாதே!' என்பது போல் கண்ணைக் காட்ட பூங்கோதை சட்டென்று புரிந்து கொண்டாள். உடனே பேச்சை மாற்றினாள்.

'சார்! எங்க வீட்ல ஒரே போட்டி கமலக்கா உங்க டவுன் சமையல்ல கலக்கறாங்க. நான் கிராமத்து ஐட்டம்ஸ்' என்றாள்.

அவனும் தன்னை மீட்டுக் கொண்டான்.

'அது சரி! யார் வயித்தை யார் கெடுக்கறீங்க' என்றான்.

'நாங்க நிஜமாவே நல்லா சமைப்போம் சார்!' என்றாள். சற்றே கோபமானவள் போல் நடித்து,

'கமலக்கா! இவங்க வீட்ல நான் ஒரு நாள் சுண்டக் குழம்புன்னு ஒண்ணு சாப்பிட்டேன் பாருங்க.. சூப்பர்' என்று மூட், மாறினான் மதுசூதனன்.

'ஆமா! ஆனா, இங்கதான் கேஸ் ஸ்டவ்வாச்சே' என்றாள் பூங்கோதை.

'ஒண்ணு செய்வமா? என்கிட்டே குமிட்டி அடுப்பு ஒண்ணு இருக்கு. அதில நெருப்புப் போட்டு வச்சர்லாம்' என்றார் கமலக்கா.

'குட்! எப்படியோ நல்ல ஐட்டம்னா செஞ்சு ஆபீசுக்குக் கொண்டு வந்துடுங்க பூங்கோதை' என்றான்.

புறப்பட்டான்.

அறை வாயில் வரை அவளும் வந்தாள். 'சார்! நான் நிஜமாத்தான் சொன்னேன். எனக்கு ஒரு சைகாலஜிஸ்டை அறிமுகப்படுத்துங்க' என்றாள்.

அவன் நின்றான். குனிந்து அவள் முகம் பார்த்தான்.

அவள் உண்மையான ஆவல் கண்களில் தேங்கி நிற்கத் தன் முகத்தை நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு உருகிப் போனான். அந்தக் கணத்தில் பூங்கோதையைத் தன்னருகே இழுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்ற ஒரு கணம் திடுக்கிட்டான். பிறகு சமாளித்துக் கொண்டான்.

'கோதை! அவங்க சுயநினைவை இழந்து ரொம்ப நாளாச்சு. நீங்க நினைக்கிற மாதிரி அதிரடி மாற்றங்கள் எல்லாம் சினிமாவில் நடக்கும். ரியல் லைஃப்ல இல்லே?' என்றான்.

'அதை சைகாலஜிஸ்ட் சொல்லட்டுமே?' என்றாள் பூங்கோதை பிடிவாதமாக.

அவன் சட்டென்று சிரித்து விட்டான்.

'கோதை! உங்களுக்குப் பிடிவாதம் பிடிக்கக் கூடத் தெரியுமா என்ன?' என்றான்.

அவள் முகம் சிவந்தது.

'சரி.. நான் விசாரிக்கிறேன்!' என்றான். அவள் முகம் மலர்ந்தது கண்டு அவன் முகமும் மென்மையாக மாறியது.

'சார்!' என்றாள்.

'ம்..!'

'நான் உங்களைவிடச் சின்ன வயசுதான். சும்மா.. வா.. போன்னே பேசலாம்' என்றாள்.



'ஆணை ஏற்றுக் கொள்ளப்பட்டது!' என்று கலகலவெனச் சிரித்தான்.

'ஐயய்யோ! நான் ஆணையெல்லாம்... போடலே..' என்று அவள் கலவரமாக.

'நான் சும்மா சொன்னேன். கோதை.. டென்ஷனாகாதே!' என்று இயல்பாக அவன் ஒருமைக்குத் தாவியதை கமலம்மா கூர்மையாகக் கவனித்துக் கொண்டார்.

அவர் இதழ்களில் ஒரு விசித்திரமான புன்னகை மலர்ந்தது.

★ ★ ★

'ஹேய்! நாங்க லாயர்ஸா? நீயா?' என்று ராதா பூங்கோதையைக் கேலி செய்து கொண்டிருந்தாள்.

பழைய தீர்ப்புகளைப் பூங்கோதை சர்வ சாதாரணமாக மேற்கோள் காட்டுவது கண்டு அவர்களுக்கெல்லாம் வியப்பு.

'எனக்கு பெரிமேஸன் கதைகள்னா ரொம்ப இன்ட்ரஸ்ட். அப்புறம் சுஜாதாவோட கணேஷ் வஸந்த் கதைகள் ரொம்பப் பிடிக்கும். அப்புறம் ராண்டார்கைன்னு ஒருத்தர் நிறைய சட்டக் கருத்துக்களை அடிப்படையா வச்சு எழுதிய கதைகள் இதெல்லாம் ரொம்ப இன்ட்ரஸ்ட். அதுல எல்லாம் வந்த கேள்வி ஞானம்தான்' என்றாள்.

அந்த நேரம் அங்கே வந்த ராகவன். காந்தி இரண்டு பேரும் பேச்சில் கலந்து கொண்டார்கள்.

'ட்ரூத் இஸ் ஸ்ட்ரேஞ்சர் தேன் ஃபிக்ஷன் அதாவது உண்மை சில சமயங்களில் கதைகளில் விட அதிசயமானதாக இருக்கும் தெரியுமா?' என்றாள் கோதை.

'அப்புறம்.. ராதா.. நேத்து கோர்ட்டுக்கு நம்ம சார் வர்லையா? பாவம், தாரிணி நாலைந்து தடவை கேட்டுட்டாங்க' என்று குறும்பாகச் சிரித்தான் ராகவன்.

'ஆமா..' என்று கூட சேர்ந்து காந்தியும் கூடச் சிரித்தார்.

'பாவம், தாரிணி!' என்றாள் ராதா.

சற்றுப் பேசிக் கொண்டிருந்து விட்டு அவர்கள் எழுந்து வந்தார்கள்.

'யாரு தாரிணி!' என்றாள் பூங்கோதை.

ராதா கலகலவென்று சிரித்தாள்.

'அதுவா.. சொல்றேன்! இல்லாட்டி நீயே எப்படியும் தெரிஞ்சுக்கத்தான் போறே!' என்றாள்.

கோதை தெரிந்து கொள்ளும் நேரமும் வந்தது.

★ ★ ★

கோதை அன்றைக்குச் சொன்ன வார்த்தைகள் உள்ளே புதைந்து கிடந்த எண்ணங்களையெல்லாம் பாதை கிடைத்ததும் பாய்கிற ஊற்றுப் போல பொங்கச் செய்தது.

அப்போது கல்லூரி முடிகிற நேரம் கடைசி வகுப்பு நடக்கவில்லை.

இலக்கில்லாமல் பார்த்தபடி கைகளை வீசிக் கொண்டு மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தான். சட்டென்று பழக்கமான ஒரு உருவமும் பின்னால் காரும் நிற்பது தெரிந்தது.

'விஜிம்மா! இங்க எதுக்கு வந்தாங்க!' என்று ஆச்சரிய மானான்.

'அம்மா, என்ன விஷயம்!' என்றான் பரபரப்பாகப் போய்.

'தம்பீ! உன்கிட்டப் பேசணும்.'

'சரி. வாங்க.. பக்கத்துல இருக்கற மருதமலைக் கோயிலில் உட்கார்ந்து பேசலாம்' என்றான்.

அழைத்துப் போனான்.

சாமி கும்பிட்டு முடித்தவுடன் ஆளரவற்ற ஒரு பக்கமாக உட்கார்ந்தார்கள்.



'அப்புறம்.. சொல்லும்மா!'

'முருகன் ரொம்ப அழகா இருக்காரில்லே!' என்று சொன்ன விஜிம்மாவை அவன் கூர்ந்து பார்த்தான்.

'அம்மா அவுட் வித் இட்' என்றான் ஒரு விதமான சிரிப்புடன். ஆனால் அடுத்து விஜிம்மா பேசிய விதம் பார்த்து அதிர்ந்து போனான்.

'தம்பி! உன்னையும், கதிரையும் நான் வேறயா நினைச்சதில்லே. அந்த உரிமையிலதான் பேசறேன். நீ முதல் முதலா நல்ல மார்க் வாங்கிட்டு வந்தப்போ.. ஒவ்வொரு தடவையும் பிரைஸ். வாங்கிட்டு வந்தப்ப எல்லாம் ரொம்ப அருமையான குழந்தையை வளர்த்திருக்கேன்னு பெருமையா நினைச்சுட்டேன். ஆனா, இப்பல்லாம் ரொம்ப பயமா இருக்கு. நீ வேற யாரோ மாதிரி இருக்கு.'

'....!'

'ஏதாவது ஒரு தப்பு செஞ்சா குற்ற உணர்ச்சியோட என் பின்னாடி சுத்திகிட்டிருந்த சின்னப்புள்ளையா நீ இல்லே. உன்ற மனசுல இத்தனை வன்மம் வரக் கூடும். நீ இவ்வளவு இரக்கமில்லாத மனுஷனா... மாறிப் போவேன்னு.. நான் நினைக்கவே இல்லே. நான் தோத்துப் போயிட்டேன்' என்றவரின் குரல் தழுதழுத்தது.


அவன் வெறித்துப் பார்த்தான். தன் வளர்ப்புத் தாய் எங்கே வருகிறார் என்பது அவனுக்குப் புரிந்தது.

'அம்மா! உன்னை மாதிரிப் பெருந்தன்மைங்கிற பேரில் இளிச்சவாய்த்தனமா இருக்க எனக்குப் பிடிக்கலே. தப்பு யார் செஞ்சாலும் அவங்க அதை உணர்ந்தாகணும். வருத்தப்பட்டுத் தான் ஆகணும்' என்றான் வறண்ட குரலில்.

'தம்பீ! உங்க அப்பன் மனசளவுலே செத்துப் போய் எத்தனையோ நாளாச்சு. இப்ப உன்னையும், கதிரையும் பாத்துத்



தான் அவரு உசிரை வச்சுகிட்டிருக்காரு. உங்கம்மா புத்தி பேதலிச்சுப் போய் அவருக்குத் தண்டனை குடுத்தாங்க. நான் சுய நினைவோடவே என்ற வெறுப்பைக் கக்கிப் போட்டேன். உங்கப்பன் மனசுல வாங்கியிருக்கிற அடி லேசுப்பட்ட அடியில்ல... சாமி இனி, நீயும் செத்த பாம்பை அடிக்காதடா. என்னால கண்கொண்டு பாக்க முடியலைடா..' என்று குலுங்கி அழுகிற விஜயாவை அவன் தன் தோளில் சாய்த்துக் கொண்டான். மேலும், மேலும் அம்மா பேசுவதைத் திகைப்புடன் கேட்டுக் கொண்டிருந்தான்.



16

'விஜயா ஆஸ்பத்திரியில இருக்கா!' என்று பக்கத்து வீட்டுப் பாட்டி வந்து சொன்னபோது அருணாச்சலம் மேலும் இடிந்து போனான்.

இப்போதுதான் ஒருத்தி சுயநினை விழந்த சோகத்தைப் பார்த்து மனம் வெறுத்துப் போய் வந்திருந்தான். இவளாவது அரவணைப்பாள் என்று வந்தால்..!

ஆஸ்பத்திரிக்கு ஓடினான்.

இரண்டு நாள்!

பிறகுதான் பார்க்க அனுமதித்தார்கள். கருக்கலைப்பிலிருந்து ஒருவிதமாகத் தப்பியிருந்தாள்.

அதிர்ச்சியால் கருக்கலைப்பு என்றுதான் மற்றவர்கள் நினைத்திருந்தார்கள். ஆனால் அவனுக்குப் புரிந்துவிட்டது.

நெஞ்சு கொள்ளாத சோகத்துடன் கேட்டான்.

'விஜி! ஏன் இப்படி செஞ்சே!' என்று.



'ஆமா! அஞ்சு வருஷம் கூட வாழ்ந்தவளையே இல்லைன்னு ஆக்கிப் போட்டீங்க. ஒரு நேரம் கூட இயற்கையா அவங்க பேச்சுப் பேசாம, பேரைச் சொல்லாம, நினைப்பு வராம என்ற கூட ஒரு வாழ்க்கை வாழ்ந்திருக்கீங்க. இனி என்னைய மறக்கறதுதானா கஷ்டம்? ஐயோ! துரோகத்துக்குப் பிறந்த குழந்தைன்னு என்ற குழந்தையைப் பார்க்கறப்பவெல்லாம் எனக்குத் தோணும்' என்று அழுதாள்.

'அழுகாதே! உன்ற உடம்புக்கு நீ அழுகக் கூடாது' என்றான். பிறகு

'விஜி! என்ற தப்புக்கு கௌரி பெரிய தண்டனை எனக்குக் குடுத்துட்டா' என்றான்.

'ஐயோ! ஏதாச்சும்.. செஞ்சுகிட்டாங்களா?' என்று விஜயா பதறினாள்.

'இல்லே! உயிரோட இருக்கா. ஆனா, தன்னையும் இல்லைன்னு ஆக்கிகிட்டா. என்னையும் இல்லைன்னு ஆக்கிப் போட்டா!'

'புரியலே!'

'சித்தப் பிரமை பிடிச்சிருச்சு.'

'ஓ!'

'இனி நீயும் ஏதாவது தண்டனைன்னு குடுத்தே.. எனக்கும் சுய நினைவு போய் பைத்தியம் பிடிச்சிடும். போதும்.. நீயாவது மனசிரங்கி இனி இந்த மாதிரி வேலையெல்லாம் செய்யாதே' என்றான் கை கூப்பியபடி.

விஜயா அவன் இரு கைகளையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டாள். இரண்டு பேரும் அடிக்கடி கண்ணீருடன் நடந்த காலத்தைப் பற்றிப் பேசிக் கொள்வார்கள்.

காலம் மெது மெதுவாக ரணத்தை ஆற்றும் என்று நம்பி னார்கள்.

இதையெல்லாவற்றையும் சொல்லி முடித்த விஜயாவின் முகத்தை அவனும் பரிவுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த வாரம்!

பல நாட்களுக்குப் பிறகு அப்பாவிடம் இரண்டு வார்த்தைகள் பேசினான்.

இந்த ஓரிரண்டு வருடங்களில் -

'நல்லாயிருக்கியாப்பா?' என்று அருணாச்சலம் கேட்டால்,

'ம்!' என்று உறுமலாகப் பதில் சொல்லி விட்டு நகர்ந்து விடுவான். இந்த முறை 'நல்லாயிருக்கேம்ப்பா!' என்று நின்று பதில் சொல்லிப் புன்னகைக்கவும் மனிதர் நிலை கொள்ளாத மகிழ்ச்சியில் முழுகுவதை இளகிய முகத்துடன் பார்த்தான்.

'அண்ணா!' என்று காலை விந்தியபடி வந்த கதிர்வேலைத் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

'அப்பா! கோயம்புத்தூர்ல கங்கா நர்ஸிங்ஹோம் ரெக்ஸ் ஆர்த்தோ சென்டர், தெலுங்குபாளையம் எலும்பு முறிவு வைத்தியசாலைன்னு நிறைய இருக்கு. இவனுக்கு ஏதாவது செய்யணும்னு யோசிச்சிருக்கேம்ப்பா..' என்றான்.

கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தான்.

'விஜிம்மா.. நீ அந்தக் கொள்ளுப் பருப்பு கடைஞ்சு, கொள்ளுப் பருப்புப் பொடியெல்லாம் செய்வியே. அதைச் சாப்பிடணும்' என்று ஆசையாகச் சாப்பிட்டான்.

பத்தாவது முடித்தவுடன் கதிர்வேலுக்கு என்ன படிப்பு என்பது பற்றி சற்று நேரம் ஆலோசனை செய்தார்கள்.

'அண்ணா! உன் ஹாஸ்டல்..' என்று கதிர்வேல் சொல்ல.

'கதிரு... இந்த வருஷம் நான் ஹாஸ்டல்ல இல்லை..!' என்றான்.

தாயும், தந்தையும் திடுக்கிட்டுப் பார்க்க, அவன் அவர்களைப் பார்க்காமல் தொடர்ந்தான்.



'ஏன்?' என்ற கதிரிடம் அவன் புன்னகையுடன் தொடர்ந்தான்.

'கதிரு! நீயும் டீன் ஏஜுக்கு வந்தாச்சு. உனக்கும் சில விஷயங்கள் தெரிய வேண்டியதுதான். ஊர்ல ஒரு அம்மா இருக்காங்க. கௌரிம்மான்னு பேரு. அவங்கதான் என்னைப் பெத்தவங்க. ஆனா, அவங்களுக்கு உடம்பு சரியில்லாமப் போனதாலே குழந்தையா இருந்த என்னைப் பாத்துக்கறதுக்காகவும் அப்பா, அம்மா ஊர்ல தனியா இருக்காங்க. நான் அவங்களோட இருக்கேன்..' என்றான்.

'ஓ!..' என்றான் கதிர்வேல். சற்று கனமான மௌனத்திற்குப் பிறகு.

'அவங்களுக்கு உடம்புக்கு என்ன?' என்றான்.

'அவங்களுக்குச் சித்த சுவாதீனமில்லாமப் போயிடுச்சு..'

'அப்படியா? இப்பவும் அப்படியேவா இருக்காங்க!'

'ஆமா.'

'பாவம் இல்லே?'

'ஆமா!'

'ஏன் மது அண்ணா! நாம போய் அவங்களைப் பாக்க முடியாதா?' என்றான்.

'பாக்கலாம். ஆனா இப்ப இல்லே! கொஞ்ச நாள் கழிச்சு!'

'ஏன்?'

'ஏன்னா, நம்ம அம்மா, அப்பாவுக்கும் தாத்தா பாட்டிக்கும் கொஞ்சம் டர்ம்ஸ் சரியில்லாமப் போச்சு. சரி செய்யறதுக்காகத்தான் நான் போய்ச் சேர்ந்திருக்கேன். கொஞ்சம் சமாதானமானதும் போக்குவரத்து வச்சுக்கலாம்.. என்ன?' என்றான்.

ஒரு பெரிய விஷயத்தை லகுவாக அவனுக்குப் புரிய வைத்துக் கொண்டிருக்கிற மகனை ஒருவித வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் அருணாச்சலம். அந்தக் கணத்தில் தோன்றியது. தனக்கு இப்படிப் பேசத் தெரியாமல் போனதில்தான் எல்லாவிதமான கோளாறும் வந்து விட்டதோ? என்று.

அன்றைக்கு வெகு நேரம் விஜிம்மாவிடம் பேசிக் கொண்டிருந்தான் மதுசூதனன். வழக்கம்போல் சகோதரனிடம் சற்று நேரம் விளையாட்டுப் போல் பேசி அவன் படிப்பு விவரங்களைக் கேட்டுக் கொண்டான். பிறகு அவரவர் அறைக்குப் போனார்கள்.

தன்னறையில் அமர்ந்து சட்டம் தொடர்பான ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருக்கையில் அறை வாசலில் நிழலாடியது.

அப்பா!

'உன்கிட்ட பேசணும்!'

அவன் மௌனமாக எதிரில் இருந்த சேரைக் காட்டி எழுந்து நின்றான்.

'உட்காரு!' என்றார்.

'அமர்ந்தான்.'

'ஒரு அப்பாவா இல்லாம ஒரு ஆண் பிள்ளைக்கு ஆண் பிள்ளையா நா உன்கிட்டே பேசறேன்.'

'சொல்லுங்க!'

'மது! என்னோட முதல் தப்பு தகுதிக்கு மீறிய இடத்துல கல்யாணம் செஞ்சது. இரண்டாவது தப்பு வீட்டோட மாப்பிள்ளையாய்ப் போனது. மூணாவது பெரிய தப்பு உங்கம்மா மனசைப் புரிஞ்சுக்காம போனது. கௌரியைப் பாக்கறயில்லே! கம்பீரம்! அப்படியொண்ணும் அதட்டிப் பேசமாட்டா! ஆனா, கண்ணுலயே வேலைக்காரங்ககிட்டே



வேலை வாங்குவா. அவளோட பணம், கம்பீரம் இதெல்லாம் சேர்ந்து அவ மேலே ஒருவித பயமே ஆகிப் போச்சு.' ஒரு நிமிடம் நிறுத்தினார்.

அவன் ஆழ்ந்து கேட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்துத் தொடர்ந்தார்.

'மறுபடியும் சொல்றேன் ஒரு ஆம்பிளைக்கு ஆம்பிளையா உன்கிட்டே பேசலாம்னு வந்திருக்கேன். ஒரு மனைவிகிட்டே ஒரு ஹஸ்பெண்டுக்கு எத்தனையோ எதிர்பார்ப்புகள் இருக்கும். இதுதான் என்னோட எதிர்பார்ப்புன்னு அவளுக்குப் புரியலே! எனக்கும் புரிய வைக்கத் தெரியலே - ஒரு பயம்! காம்ப்ளெக்ஸ்! கம்யூனிகேஷன் கேப்..' என்று நிறுத்தினார். பெருமூச்சு விட்டார்.

'சரி! தனியா வந்தா எல்லாம் சரியாகும்னு நினைச்சேன். அவங்க அம்மா, அப்பா சென்டிமென்ட்ல அடிச்சே அவளை அங்கே உட்கார வச்சுட்டாங்க.'

அவன் ஒன்றும் பேசவில்லை.

'இள வயசு, தனிமை..' மீண்டும் ஒரு பெருமூச்சு விட்டார்.

'அப்புறம்.. என்னென்னவோ நடந்து போச்சு..' என்றார். 'ஆனா.. ஆனா.. கௌரி எனக்கு இப்படி ஒரு தண்டனை குடுப்பான்னு நான் நெனக்கவே இல்லை.'

குலுங்கி அழுகிற தந்தையை ஒரு வேதனையுடன் பார்த்தான். ஆனால் அழவிட்டான். தேற்ற முயற்சிக்கவில்லை. அவரே அழுது ஓய்ந்தார்.

'இன்னைக்குத் தீர்ப்புக்காக உன்கிட்டே தலை குனிந்து நிக்கறேன்..' என்றார் தழுதழுத்த குரலில்.

'அப்பா! சமீபமா நான் ஆர்ட் ஆஃப் லிவிங்னு ஒரு யோகா கிளாஸ் போனேன். அது மட்டுமில்லே.. ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர், ஜக்கி வாசுதேவ், ஓஷோ எல்லாரும் கடந்த காலத் துக்கங்களை



சுமந்து கிட்டுத் திரியாதீங்க.. மனசைத் தெளிவா வச்சுக்கங்க. நிகழ் காலத்துல இருங்க.. அப்படீங்கறாங்க..' என்று நிறுத்தினான்.

தந்தையைப் பார்த்துப் புன்னகைத்தான்.

'ஆனா, அப்பா.. விளக்கம் எதுவாக இருந்தாலும் நீங்க செஞ்சது தப்புதான். துரோகம்தான். அதுவும் ரெண்டு லேடீஸ்க்கும் செஞ்சிருக்கீங்க. கௌரியம்மாவை உட்கார வச்சு' நீ எனக்கு வேணும். உன்னை விட்டுட்டு இருக்க முடியாது. கல்யாணத்துக்கப்புறம் புருஷனோடதான் இருக்கணும் உனக்கு எப்பத் தோணினாலும் அம்மா, அப்பாவோட வந்து இருந்துட்டு வான்னு மனசு விட்டுப் பேசியிருக்கணும். தாத்தா பாட்டிகிட்டயும் பேசிப் புரிய வச்சிருக்கணும். அது ஒரு வித துரோகம்ன்னா. விஜிம்மாவுக்கு செஞ்சது இன்னொரு விதத்துல. எனக்கு இப்படி ஒரு மனைவி இருக்கா. குழந்தை இருக்குன்னு அவங்ககிட்டே பேசி அவங்க ஒத்துகிட்டிருந்தாங்கன்னா, அது வேற விஷயம்' என்றான். நிறுத்தினான்.

இந்தப் புதிய மதுசூதனனைப் பார்த்து அருணாச்சலத்துக்கே அச்சம் ஏற்பட்டது. நிதானமாகக் குரலை உயர்த்தாமல் குற்றச் சாட்டுக்களை அழுத்தமாக எடுத்து வைக்கிறான் என்று திகைத்துப் போனார்.

அவனே பேசினான்.

'போனது போகட்டும்ப்பா. இனி அதையே பேசிப் பேசி என்ன ஆகப் போகுது. மேற்கொண்டு என்ன எப்படின்னு பாக்கலாம். நான் இனி கோயமுத்தூர்லதான் செட்டிலாகணும். வேற வழியில்லே. அங்கே நிறைய நிர்வகிக்க வேண்டியிருக்கு. எப்படியும் லா முடிக்கறதுக்குள்ளே கதிர் வேலுக்கு ஏதாவது செய்யணும். இப்பல்லாம் ஆபரேஷன்லயே ஓரளவுக்கு காலைச் சரி செய்யலாம். அட்லீஸ்ட் இவ்வளவு விந்தி நடக்கறதையாவது குறைக்கலாம்ங்கறாங்க. பத்தாவது



லீவுல ஒரு ஆபரேஷன் செய்யலாம்' என்று அவன் நடைமுறைக்குத் தாவுவதையும் அருணாச்சலம் ஒரு மலைப்புடன் தான் பார்த்தார்.

'அப்பா, உங்களை நான் மன்னிக்கலே! ஆனா புரிஞ்சுக்கறேன்' என்ற மகனைப் பேச்செழாமல் பார்த்து விட்டு எழுந்தார்.

'எனி ஹவ்! நாம பிரண்ட்ஸ்தாங்கப்பா!' என்றான்.

அவர் முகம் மலர்ந்தது.

'அவன் சட்டென்று சிரித்தான்.

'அப்பா! கௌரிம்மாவுக்கு சுய நினைவில்லாம போனதும் நல்லது தான்.' என்றான்.

அவர் கேள்விக் குறி போல் பார்க்க.

'ரெண்டு அழகான பெண்களை சமாளிக்கறது கஷ்டம்தான்..' என்று மறுபடியும் சிரிக்க.

அவரும் கசப்பானதொரு புன்னகையுடன் நகர்ந்தார். ஆனால், அவர் அந்தப் பக்கம் போனவுடன் அவன் முகபாவம் மாறியது. சிந்தனையிலாழ்ந்தான்.

'எத்தனையோ நாளு உங்கம்மா படத்தைக் கையில வச்சுக்கிட்டு நடு ராத்திரியில அழுவாரு தம்பி. போதும் அவர் அனுபவிக்கிற வேதனை போதும். நீயும் வறுத்தெடுக்காதேடா சாமி. அது செத்த பாம்பை அடிக்கறதுக்கு சமம்' என்று விஜிம்மா அழுத அழுகைதான் அவன் மனத்தை லேசாக மாற்றியது.

'உன்னுடைய வாரிசைச் சுமக்க நான் விரும்பவில்லை' என்று கருவையே அழித்துக் கொள்ள முற்பட்டதன் மூலமாக விஜிம்மா தண்டனை கொடுத்து விட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

கதிர்வேல் பிறப்புக்குப் பிறகு விஜிம்மாவும், அப்பாவும் அப்படியொன்றும் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை வாழ்ந்து விடவில்லை என்றும் புரிந்தது. ஆனால், தந்தை தன்னுடைய தவறுகளை நியாயப்படுத்தவில்லை என்று அவனுக்குப் புரிந்தது. நீண்டதொரு பெருமூச்சு விட்டான். பிறகு மெதுவாக இயல்புக்கு வந்தான்.

பல நாட்களுக்குப் பிறகு மீண்டும் அந்த வீட்டில் கலகலப்பு கூடியது.

'டேய்! கதிரு, அம்மா.. மைசூர்பாகு சுடறாங்கடா. பக்கத்து வீட்டு ஆத்தாவுக்காக அந்த வெத்தலை பாக்கு இடிக்கறதுக்கு ஒரு உரலும் உலக்கையும் வச்சிருப்பியே அதை எடு' என்று மதுசூதனன் சிரிக்க.

'அண்ணா! அது வேண்டாம். இரு சுத்தியலை எடுத்தாரேன். நெய் முறுக்கு வேற சுடறாங்களாம் நேத்தே சொன்னாங்க. நான்தான்.. நான் மட்டுமே எதுக்கும்மா கஷ்டப் படணும் அண்ணன் நாளைக்கு வருதில்லே. அவரும் சேர்த்துக் கஷ்டப்படட்டும்னு சொன்னேன்' என்று கதிரும் சிரித்தான்.

விஜயாவும் அருணாச்சலமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். கண்களில் கண்ணீர் நிறைந்தது.

★ ★ ★

பழைய நினைவுகள் குபுகுபுவென்று அலை மோத தூக்கம் வராமல் தவித்தான். மதுசூதனன் எல்லாம் இந்தக் கோதை அம்மாவைப் பற்றிக் கேட்டதால் வந்த வினை எப்போதும் ஒரு எல்லைக் கோடு போட்டு எல்லாரையும் தூர வைக்கிற தான் இந்தக் கோதைக்கு அதிக இடம் கொடுக்கிறோமா என்று யோசித்தான். பாவம்! அவளும் துரோகத்தைச் சந்தித்தவள். நிராகரிப்பின் வேதனையை அனுபவித்தவள். வேதனையை மென்று விழுங்கியவள். அதனால்தான் அவள் மீது தனக்கு ஒரு பாசம்! ஈடுபாடு என்று புரிந்தது.



இப்போதெல்லாம் கோதையை அடிக்கடி நினைத்துக் கொள்கிறோமோ என்று தோன்றியது.

விரைவாக ஆங்கிலம் பேசக் கற்றுக் கொண்டு விட்டாள். இன்றைக்கு போனில் யாரிடமோ 'பெக் யுவர் பார்டன்' என்று அவள் பேசிய விதம் நினைத்துக் காண்டான்.

நல்ல பெண்!

அவளுக்கும் ஏதாவது வழி செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டே உறக்கத்தில் ஆழ்ந்தான். ஆனால் காலம் அவளுக்கு வேறு விதமான திட்டங்களை வைத்திருக்கிறது என்பது அன்றைக்கு அவனுக்கும் புரியவில்லை.

லேசாகச் சிரித்துக் கொண்டான் சூடிகையான பெண்.

இப்போது ஏனோ அவளிடம் பேச வேண்டும் என்று தோன்றியது. செல்லில் அழைத்தான்.

பிறகுதான் நேரம் பார்த்தான்.

பதினோரு மணி. அட ஆண்டவா! இந்த நேரத்தில் அழைத்தால் அந்தப் பெண் தான் என்ன நினைப்பாள்.

'சார்! இந்த நேரத்துல!' என்றாள் பூங்கோதை.

'ஒண்ணுமில்லே கோதை நாளையிலருந்து நீ கோர்ட்டுக்கு என்னோட வர வேண்டியிருக்கும்' என்றான்.

'சரிங்க சார்!' என்றாள். மறுபடியும் அவளே,

'சார்!' என்றாள்.

'என்ன கோதை!'

'ஏதாவது சங்கடமா சார்! இன்னைக்கு முகம் வாடி இருந்திங்க. நான் ஏதாவது எல்லை மீறிப் பேசிட்டேனா?' என்றாள்.



'இல்லல்லே! திடீர்னு அம்மாவைப் பத்தின பழைய விஷயங்கள்ளாம் நினைப்புக்கு வந்திருச்சு.'

'ஓ! சார் அந்த சைக்காலஜிஸ்ட்.. விஷயம்.'

'சரி.. நான் பாக்கறேன்' என்றான்.

'சார்!'

'ம்..'

'குட்நைட் சார். தூங்குங்க. நாளைக்கு முக்கியமான கேஸ் சார்' என்று அவன் எண்ணத்தைத் திசை திருப்பினான்.

'சரி!' என்று போனை ஆஃப் செய்தான்.



## 17

கார் கோர்ட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

பூங்கோதை மௌனமாக அமர்ந் திருந்தாள் புறப்படும்போது.

'தாரிணி, யாருன்னு கேட்டயே? இன்னைக்குப் பார்ப்பேயில்லே. அப்பத் தெரியும்' என்று கிசுகிசுத்தாள் ராதா.

அது வேறு ஒரு குறுகுறுப்பு.

'கோதை! என்ன நான் கூப்பிட்டுகிட்டேயிருக்கேன். எங்க இருக்கே?' என்று மதுசூதனன் சற்று வேகமாகக் கேட்கவும் தான் நிலவுலகுக்கு வந்தாள்.

'ம்..!' என்று திணறினாள்.

'காரை டிரைவ் செய்தபடியே மதுசூதனன் 'நான் இப்ப எதுக்கு உன்னைக் கோர்ட்டுக்குக் கூட்டிட்டுப் போறேன்.. தெரியுமா?' என்று முடிக்கு முன்னே.

'உங்க ஆர்க்யூமென்ட்ல முக்கியமான பாயிண்ட்ஸ் எல்லாம் குறிச்சுக்கறதுக்கு..' என்றாள்.



'அதுதான்.. இல்லே! ஆப்பனன்ட் வக்கீல் இருக்காரே. வில்லாதி வில்லன் லேசுப்பட்ட ஆளில்லே. கிரிமினல் கேஸ்ன்னா அவருக்கு லட்டு மாதிரி.. அவரு ஆர்க்யூமென்ட்ல என்னென்ன முக்கியமான பாயிண்ட்ன்னு நோட் பண்ணனும். சரியா?' என்றான்.

'சரிங்க சார்' என்றாள்.

கோர்ட்டில் சக வக்கீல்கள் அவனுக்குக் கொடுக்கிற மதிப்பைப் பார்த்து வியந்து போனாள்.

'என்னய்யா! பி.ஏ.வா? நம்ம பாயிண்ட்ஸ்லாம் நோட் பண்ணிக்கிடறதுக்குக் கூட்டிட்டு வந்தியாக்கும். பயங்கரமான ஆளய்யா! நீ' என்று எதிர்க்கட்சி வக்கீல் சிரிப்பதையும், இவன் அவரிடம் பவ்யமாகப் பேசுவதையும் அவள் ஆச்சரியமாகப் பார்த்தாள்.

'என்னம்மா! பவ்யமா நிக்கறானேன்னு பாக்கறியா. வந்து பாரு ஆர்க்யூமென்ட்ல நார் நாராகக் கிழிப்பன் தெரியுமோ!' என்று சிரிக்கிற அவரிடம் அவளும் பவ்யமாகப் புன்னகைத் தாள்.

சினிமாக்களில் வருகிறாற்போல அங்கே நீளமான வழக் காடுதல்கள் இல்லையென்ற போதும் இவர்கள் இருவரின் வாதப் பிரதிவாதங்களின் போது கோர்ட்டே கலகலத்தது. வெகு நாகரீகமாக ஆனால் நகைச்சுவையாக ஒருவரை ஒருவர் வாரிக் கொண்டாலும் அவர்கள் வழக்குக்கு அழுத்தமாக வாதங்களை எடுத்து வைத்தார்கள்.

அதே வளாகத்தில் வேறொரு பக்கம் இவன் சார்பாக காந்தியும், ராகவனும் வேறு வேறு வழக்குகளை வாதிட்டுக் கொண்டிருந்தார்கள். வாதங்கள் முடிந்து கட்சிக்காரர்களிடம் பேசிவிட்டு வெளியே வந்த போதுதான்,

'ஹலோ! மது' என்று அந்தப் பெண் வந்தாள்.

முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல்.

'வாங்க.. தாரிணி! என்ன விஷயம்' என்று நின்றான் மதுசூதனன்.

'தாரிணி' என்ற பெயரைக் கேட்டதும் பூங்கோதை கூர்மையாகக் கவனிக்கலானாள். அந்தப் பெண்.

'மது! இன்னைக்கு அந்த அய்யர் வக்கீலை நல்லா மடக்கினீங்க.. திணறிட்டாரு' என்றாள்.

'தாங்க்ஸ்!' என்றான் மதுசூதனன்.

'அப்புறம்!' என்று அவன் மேல் முட்டாத குறையாக நின்றாள் தாரிணி.

மதுசூதனன் அதைச் சுத்தமாகக் கண்டு கொள்ளவில்லை. மாறாக.

'அப்புறம்ன்னா? விழுப்புரம்தான்!' என்று சிரித்தான்.

'மது..'

'ம்..'

'நீங்க நாளைக்கு ஃப்ரீயா?'

'இல்லையே? ஏன்?'

'இல்லே! எங்க வீட்டுக்கு லஞ்சுக்குக் கூப்பிடலாம்னு பார்த்தேன்.'

'சமையல் யார். நீங்களா? வேண்டாம்ப்பா.. நான் ரிஸ்க் எடுக்கத் தயாரில்லே!'

'இந்தக் கிண்டல்தானே வேண்டாம்கறது?'

'சும்மா.. தமாஷுக்குச் சொன்னேன். ஆனா, நிஜமாவே நான் ஃப்ரீயில்லே. ஊருக்குப் போறேன்' என்றான்.

மெதுவாகவும், லாவகமாகவும் அவன் அந்தப் பெண்ணிடம் இருந்து கழன்று கொள்வதைப் பார்த்து பூங்கோதை புன்னகைத்துக் கொண்டாள்.



தாரிணியின் பார்வை அவன் முகத்தையே மொய்த்துக் கொண்டிருப்பதையும், அவன் மேல் ஆர்வம் இருப்பதை அவள் வெளிப்படையாகக் காட்டுவதையும் அவள் கூடப் புரிந்து கொண்டாள். ஆனால் மதுசூதனன் புரிந்து கொள்ளவில்லை.

மதிய உணவு ஒரு ஓட்டலில் உண்டார்கள். நேற்றே சொல்லி விட்டான்.

அவள் அவனுடைய ஆபீசுக்கு வந்து மூன்று மாதங்கள் ஓடியிருந்தது. இரண்டு வாரத்துக்கு ஒரு முறை அவன் பஸ்ஸில் புறப்பட்டு ஊருக்குப் போய் இரண்டு நாட்கள் இருந்து விட்டு வந்து விடுவான்.

வந்த புதிதில் ஒருமுறை தன்னறைக்கு அவளை அழைத்த மதுசூதனன்.

'கோதை! நான் இன்னைக்கு ஈவ்னிங் ஊருக்குப் போறேன். வந்தா டிராப் செய்றேன்' என்றான்.

அவள் புன்னகையுடன் 'அந்த ஐடியாவை டிராப் செய்துடுங்க.. சார்!' என்றாள்.

'ஏன்?' என்பது போல் அவன் பார்க்க.

'இல்லைங்க.. சார்.. நீங்க கேட்கறது உங்க பெருந்தன்மை. ஆனா அஸ் அன் எம்ப்ளாயி நான் அவ்வளவு சலுகை எடுத்துக்கக் கூடாது. தேங்க்யூ.. சார்' என்றாள்.

'அடடடா! இதிலென்ன இருக்கு?' என்று அவன் சூடாக..

'வேண்டாம்.. சார். நானும் என் தகுதி தெரிஞ்சு நடந்துக்கணும். ரொம்ப வசதிகள் பழகறது நல்லதுக்கில்லே. அப்புறம் எனக்கு மட்டும் சலுகை குடுக்கற மாதிரி மத்தவங்களுக்கு தோணக் கூடாது' என்றாள்.

அவன் பாதி எரிச்சலுடன் இரு கையையும் கும்பிட்டு,

'ஐயோ.. ஔவைப் பிராட்டி! போதும். கேட்டது தப்பு' என்று சிரிக்க அவளும் சிரித்துச் சமாளித்தாள்.

ஆனால் உடன் போகவில்லை.

தனக்கென்று சில எல்லைகள் வைத்துக் கொள்கிறாள் என்பது புரிந்து கொண்ட அவன் அவள் போக்கில் விட்டு விட்டான்.

ஊரில் இருந்து ஸ்கூட்டியை வரவழைத்துக் கொண்டாள். தினமும் அதில்தான் அலுவலகம் வந்து போனாள்.

அவனும் அலுவலகத்தில் மற்றவர்களைப் போலவே அவளையும் நடத்தினான். ஆனால் அவளுக்கு அவனிடத்தில் ஒரு சலுகை இருக்கிறது. ஒரு சாஃப்ட் கார்னர் இருக்கிறது என்பது அவனுக்கு தெரிந்துதான் இருந்தது. அவள் அதை தவறாகப் பயன்படுத்திக் கொள்ளாததுதான் எக்ஸ்பிளாய்ட் செய்யாததுதான் அவனுக்கு ஆச்சரியம்.

இன்றைக்கு ஆனால் காலையிலேயே சொல்லி விட்டான்.

'தத்துவம் எல்லாம் பேசாமே ஊருக்கு என் கூடவே வந்து சேரு அம்மிணி' என்று. அவளும் மறுக்கவில்லை.

★ ★ ★

இரண்டு பக்கமும் பசுமையான வயல்கள் நிறைந்த அந்தப் பகுதியை கார் கடந்து கொண்டிருந்தது.

'பூங்கோதை!' என்றான். தனக்குள் சொல்லிக் கொள்வதாக நினைத்து சற்று உரக்கவே சொல்லி விட்டான்.

'சார்!' என்றாள்.

'இல்லே! உங்க கிராமத்துல எப்படி ஒரு பேர் இப்படி வச்சாங்க.. எனக்கு ஆச்சரியம்தான்..' என்றான்.

அவள் சிரித்தாள்.



'சார்.. நான் உண்மையான பேரைச் சொன்னா பயந்துடு வீங்க..' என்றாள்.

'என்ன பேரு!' என்றான் சுவாரசியமாக.

'கருப்பாயி!' என்றாள்.

'வ்வாட்!' என்று அவன் சடன் பிரேக் போட்டான்.

'இவ்வளவு லட்சணமான பொண்ணுக்குக் கருப்பாயின்னு பேரா' என்றான்.

'ஆமா சார்! எங்க அம்மா அப்பா வச்ச பேரு ஆனா. பள்ளிக் கூடத்துல சேர்க்கும்போது எங்க வாத்தியார்தான் இப்படிப் புள்ளைக்குக் கருப்பாயின்னு பேரு வக்கறீங்களேன்னு பேரை மாத்தி பூங்கோதைன்னு வச்சாராம். அதனால தப்பிச்சேன்' என்றாள்.

'நல்லவேளை, நாங்களும் தப்பிச்சோம்' என்றான்.

'ஏன்?' என்று பார்க்க,

'பின்னே? ஒவ்வொரு தடவையும் கருப்பாயின்னு கூப்பிடறப்போ.. எங்க மனசு எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும் தெரியுமா?' என்றான்.

இருவரும் சிரித்தார்கள்.

'சார்! இன்னொண்ணு தெரியுமா? பூவேந்தனுக்கும் அதே வாத்தியார்தான் பேரு வச்சதாம்' என்றாள். யதார்த்தமாக. பிறகு தான் தேவையில்லாமல் அவன் பேச்சை எடுத்து விட்டோம் எனப் புரிந்தது. ஆனால் மதுசூதனன் அதைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டு,

'அதுதான்.. பூ.. பூன்னு வச்சு பூன்னு ஊதித் தள்ளிட்டாரு..' என்றான்.



அவள் சற்றே மௌனமானாள். இந்தப் பேரு ஒத்துமையை வச்சுத்தான். வேந்தன் முதல்ல பேசினது..' என்றாள்.

ஒரு கனத்த மௌனம் நிலவியது.

'ஏன், கோதை! இன்னும் அந்தக் காயம் உன் மனசுல இருக்கா?' என்றான் மென்மையான குரலில்.

'இல்லைங்க.. சார்! சுத்தமா இல்லை. ஒரு வேளை.. ரெண்டாந்தரம் வந்து பூவேந்தன் அப்படிப் பேசியிருக்காட்டி.. பாவம்.. அப்பா வார்த்தைக்கு மதிப்புக் குடுத்தாரேன்னு ஒரு அனுதாபமாவது இருந்திருக்கும்.. ஆனா, வீம்புக்காக வந்து கல்யாணம் பண்ணிக்கலாம்னு கேட்டாரே, அப்ப இருந்த கொஞ்சம் நஞ்ச மரியாதையும் போச்சு..' என்றாள்.

'தட்ஸ் ட்ரூ!' என்றான். சூழ்நிலையினால் தப்பு செய்றது வேறே. ஆனா, தெரிஞ்சே செய்றது வேற' என்றாள்.

அவனுக்குத் தன் தந்தையின் நினைவு வந்தது. இரண்டு பேரும் செய்த தவறு. தகுதியுள்ளவர்களை நிராகரித்தது. ஆனால், அம்மா அதைத் தாங்குகிற சக்தி இல்லாமல் புத்தி பேதலித்துப் போனாள். ஆனால், இந்தக் கிராமத்துப் பெண் அவனுடைய இன்டக்ரட்டி, இல்லாத தன்மையை உணர்ந்து அவனையே நிராகரித்தது எவ்வளவு பெரிய விஷயம் என்று எண்ணிக் கொண்டான்.

அந்தக் கனமான சூழ்நிலையை மாற்ற எண்ணியோ என்னவோ பூங்கோதை.

'சார்! இதெல்லாம்.. இருக்கட்டும் உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? தாரிணி மேடம் உண்மையாவே உங்களை ரொம்ப லைக் பண்றாங்க போல இருக்கு..' என்றாள்.

அவன் திரும்பிப் பார்த்தான்.



'ஆமா! பூங்கோதை.. உனக்கு உலகத்தின் விசித்திரங்கள் இன்னும் புரியலை. சில விஷயங்களைப் புரிஞ்சும் புரியாத மாதிரி போயிடறதுதான் நல்லது. காலேஜ் டேஸ்ல இருந்தே.. எனக்குப் பெண்கள் தொல்லை இருக்கு!' என்றான்.

அழகாகச் சிரித்தான்.

ஒரு நிமிடம் அவன் சிரிப்பை அவள் கண் கொட்டாமல் பார்த்தாள். பிறகு அவளும் சிரித்தபடி.

'பெண்களுக்கு உங்களைப் பிடிக்குது. அப்ப நீங்க கிருஷ்ண பரமாத்மா.. மாதிரியா?' என்றாள்.

'ஏன்.. அப்படிக் கறுப்பாவா.. இருக்கேன்?' என்று அவன் லைன் மாற்ற.

அவள் திகைத்துப் போனாள்.

அவன் முகம் சீரியஸாக மாறியது.

'கோதை! வாழ்க்கைப் போராட்டமானதுதான். இன்னும் சொல்லப் போனா பகவத் கீதை இருக்கே. அது குருக்ஷேத்திரம். என்ற போர்க்களத்தைப் பற்றிச் சொல்லுதுன்னு எல்லாரும் நினைக்கறாங்க. ஆனா, அப்படியில்லே. நம்மளோட.. வாழ்க்கை.. நம்மளோட வாழ்க்கைங்கற போர்க்களத்தைத்தான் சொல்லுது. சில சமயம்.. நம்மைச்.. சேந்தவர்களுக்கு எதிராகவே.. நாம வாளெடுக்க வேண்டியிருக்கும்..' என்றான். நிறுத்தினான்.

அவன் மனத்தில் தந்தையின் முகம் தோன்றியது. கூடவே விஜிம்மாவின் முகமும் தோன்றியது.

'ஆனா, சில காரணங்களுக்காக. நம்மைச் சேர்ந்தவர் களேன்னு வாளைக் கீழே போட வேண்டியும் வந்துடுது' என்றான்.

தன் தாய் தொடர்பான ஏதோ ஒரு அந்தரங்க வேதனையை அவன் தன்னிடம் பகிர்ந்து கொள்கிறான் என்பது புரிய அவள் மௌனமாக ஆனால் மென்மையாக அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

சுருக்கமாகத் தன் வாழ்க்கைக் கதையைச் சொன்னான். அவள் உள்ளம் நெகிழ்ந்து போய் அமர்ந்திருந்தாள். பிறகு,

'ஆனா, ஒரே ஒரு விஷயம் எங்கப்பாகிட்டே பிடிச்சுது. பதினெட்டு வயது வரை இந்த விஷயங்கள் எல்லாம் உனக்குத் தெரியக்கூடாதுன்னு ஏன் நான் நெனச்சேன்னா, ஒரு மனுஷனோட குழந்தைப் பருவம் குழந்தைப் பருவமாத்தான் இருக்கணும். அதுல எந்தக் குழப்பமும் வரக்கூடாதுங்கறதுக்காகத்தான் இப்ப உன் தீர்ப்புக்கு நான் கட்டுப் படறேன்னார்.'

'நீங்க என்ன சொன்னீங்க!'

'நான் யார் தீர்ப்பு சொல்ல? முடிஞ்சு போனதை என்ன செய்ய முடியும்? ஆனா என் தாய் என்னோட இருபத்தஞ்சு வருஷத்தை நினைவில்லாத ஒரு வாழ்க்கையாக் கழிச்சது எவ்வளவு பெரிய நஷ்டம்?'

இரண்டு பேரும் சற்று மௌனமாகி விட்டார்கள். அதன் கனத்தைத் தாங்காமல்,

'சார்! போதும். இன்னைக்கு ரொம்ப ஹெவியாப் போச்சு. ஆனா, ஒண்ணு நிச்சயம் சார். இத்தனை பிரச்சினைகளையும் தூக்கி பகாசுரன் மாதிரி முழுங்கிட்டு இப்படி நிமிர்ந்து நிக்கறீங்களே சார், அது பெரிய விஷயம். இந்த வயசுலயே பெரிய பெரிய லாயர்களையெல்லாம் கலங்கடிக்கிறீங்க?' என்றாள்.



'கோதை! ரொம்ப நாளா இப்படியெல்லாம் திட்டணும்னு திட்டம் போட்டுகிட்டிருந்தே போலிருக்கு..' என்றான் சோகமாக.

அவள் விழித்தாள்.

'கறுப்பன்கிறே! பகாசுரன்கிறே! வயசானவன்கிறே!' என்று அடுக்க..

'ஐயோ! போதும்.. போதும்.. சார் பயங்கரமான ஆள் நீங்க!' என்று மறுபடியும் சிரித்தாள்.

'மறுபடியும்.. திட்டறே!' என்றான்.

'சரண்டர் சார்!' என்றாள்.

'தட்ஸ் குட்!' என்றான் மன்னிப்பவன் போல.

சிரித்தார்கள்.

'சார்! நீங்க ரொம்ப அழகானவர்தான்' என்றாள்.

'தாங்க்ஸ்!' என்றான் மறுபடியும் தொடர்ந்து. 'ஆனா, ஒண்ணு நிச்சயம்! எப்பவுமே ஊருக்கு வரும்போது மொட்டு மொட்டுன்னு முழிச்சுகிட்டு காரோட்டிகிட்டு வருவேன். இன்னைக்குத்தான் கலகலப்பா இருந்துச்சு..' என்றான்.

கார் ஊரின் எல்லையைத் தொட்டது.

'எங்கே போறோம்?' என்றாள்.

'முதல்ல உன்னை டிராப் பண்ணிடறேன். அப்புறம் எங்க வீட்டுக்கு ஒரு நாளைக்கு வா. விஜிம்மாவுக்கு உன்னைப் பாக்கணுமாம்' என்றான்.

அவன் தனக்குக் கொடுக்கிற முக்கியத்துவம் குறித்து நெகிழ்ந்து போனாள் பூங்கோதை.





## 18

'டேய், நீ குறும்பு செஞ்சுகிட்டேயிருக்கே. உதை வாங்குவே..' என்று ஒரு குழந்தையை செல்லமாக மிரட்டிக் கொண்டிருந்தாள் கோதை.

மெதுவாகத் திரும்பி கமலக்காவிடம்.. 'அக்கா.. இவன் ரொம்ப பிரில்லியன்ட் பாய். அதான்.. இந்தக் குறும்பு.' என்று ரசித்துக் கொண்டாள்.

'இன்னைக்கு என்ன விளையாட்டு?' என்றார் கமலக்கா.

'இன்றைக்கு மியூசிக்கல் சேர்' என்றாள்.

தினம் ஒரு விளையாட்டு என்று கிராமத்து விளையாட்டுக்களைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் கண்ணாமூச்சி விளையாட்டு. இன்னொரு நாள் கில்லி விளையாட்டு. நொண்டி விளையாட்டு என்று விதவிதமாக விளையாட்டுகளைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

'அக்கா! ஒரு விஷயம். செய்யலாமா? இந்த காம்பவுண்ட்ல இருக்கறவங்களுக்கு லேடீஸ்க்கு ஒரு மியூசிக்கல் சேர். வைக்கலாமா? என்றாள்.

உற்சாகமானார்கள்.

அன்றைக்குக் கலகலப்பாக ஓடியது. அதற்குப் பிறகு மெதுவாகக் கமலாக்காவும். அவளும் தங்கள் திட்டத்தை வெளியிட்டார்கள்.

'நாம எல்லாரும் சேர்ந்து ஒரு சுய உதவிக் குழு ஆரம்பிக்கலாம்னு இருக்கோம்.' என்று மெல்லக் கருத்தை வைத்து ஒரு திட்டமிட்டார்கள். உடனே மதுசூதனனுக்கு. போன் செய்தார்கள்.



அவனும் வந்தான்.

மிகச் சீரியஸாக திட்டமிட்டு ஒரு பெரிய செயலுக்கு அவர்கள் முதலடியை எடுத்து வைத்தார்கள்.

மதுசூதனன் மிகவும் மகிழ்ந்து போனான்.

'பூங்கோதை! ஐ ம் வெரி ஹாப்பி. நான் கமலக்காவோட உன்னைத் தங்க வச்சப்ப நான் நினைக்கவே இல்லை. நீங்க ரெண்டு பேரும் இப்படி சக்ஸஸ்புல்லான இரட்டையர்கள் ஆவீங்கன்னு' என்று சொல்லிச் சொல்லி மாய்ந்து போனான்.

போன வாரம் வந்தபோது பார்த்தான்.

'விநாயகர் சதுர்த்தி கொண்டாடுகிறேன்' என்று கௌரியின் அறையில் வைத்து பூஜை செய்தாள்.

அவன் வியப்பாகப் பார்க்க.

'கௌரி ஆன்ட்டிக்கு இதெல்லாம் பாக்கறதுக்கு நல்லாயிருக்குமில்லே..!' என்றாள்.

அவன் உண்மையாகவே நெகிழ்ந்து போனான். அதற்குப் பிறகு சைக்காலஜிஸ்டிடம் அழைத்துப் போனான்.

காந்திபுரம் நூறடி ரோட்டிலே சண்முகசுந்தரம் என்று ஒரு சைக்காலஜிஸ்ட் என் பிரண்டோட பிரண்ட்' என்றான்.

அவள் வெகுநேரம் அவரிடம் பேசினாள் குறிப்புக்கள் எடுத்துக் கொண்டாள்.

'அவர்களைத் தனிமைப்படுத்தக் கூடாதுங்கறது. குழந்தை மனசு அவங்க முன்னாடி விளையாட விடறது இதெல்லாம் கரெக்ட்டான முறைகள்தான். தொடர்ந்து செய்ங்க..' என்றார் அவர்.

பூங்கோதை மகிழ்ந்து போனாள்.

அது மட்டுமல்லாமல் இப்போதெல்லாம் கௌரிக்குப் புரிகிறதோ இல்லையோ. தான் பாட்டுக்கு அவரிடம் பேசுவாள்.

நாகம்மா அதை அதிசயமாய் அவனிடம் பகிர்ந்து கொண்டாள்.

இந்த மாதிரி ஒரு அணுகுமுறை ஏன் தங்களுக்குத் தோன்றவில்லை' என்று உள்ளூர வெட்கிப் போனான் மதுசூதனன்.

அவளுடைய எல்லா முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பு தந்தான்.

பெரும்பாலும் கமலம்மாவும், பூங்கோதையும் தங்கள் ஓய்வு நேரங்களை கௌரியின் அந்தப் போர்ஷனில் கழித்தார்கள். அவளுக்கு முன்னால் அமர்ந்து கொண்டு சீட்டு விளையாடுவார்கள். கல்லாட்டம் ஆடுவார்கள். காரம் விளையாடுவார்கள்.

அந்தக் காம்பவுண்டில் வசித்த குழந்தைகள் கூட கௌரிம்மாவிடம் இருந்து நாலடி தூரத்தில் நின்றபடி கௌரியிடம் பேசுவார்கள். ஆனாலும் பக்கத்தில் போகக் கூடாது. தொடக்கூடாது என்றெல்லாம் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்திருந்தாள் பூங்கோதை.

இப்போது அதே தீவிரத்தோடு சுய உதவிக் குழு ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிடுகிறார்கள். மதுசூதனனும் அவர்களோடு கூட அமர்ந்து திட்டமிட்டுக் கொண்டார்கள்.

அவனே வங்கி மேலாளரிடம் பேசுவதாகச் சொன்னான். பெண்கள் மகிழ்ந்து போனார்கள். மறுபடியும் கூடிச் சற்று நேரம் பேசினார்கள்.



கமலம்மா பெண்களிடம் பேசினார். ஏதாவது தயாரிப்பில் ஈடுபடலாம் என்றார்கள் வெகுவாக ஆலோசித்து வற்றல் வகைகள் தயாரிக்கலாம் என்றார்கள்.

'ஏன் வற்றல்?' என்று பூங்கோதை கேட்டபோது 'மற்ற ஐட்டம்ஸ் எல்லாம் நிறையப் பேர் உற்பத்தி செய்யறாங்க. இதுன்னா வேலையும் கம்மி' என்று காரணம் சொன்னார்கள்.

'சரி!' என்று ஒத்துக் கொண்டாள்.

ஒரே வாரத்துக்குள் திட்டங்கள் உருவாயின. மதுசூதனனும் மிக ஆர்வமாக வழிகாட்டினான். நண்பர்களைப் பிடித்து அவர்கள் தயாரிக்கிற பொருட்களுக்கு மார்க்கெட்டிங் முயற்சிகள் செய்தான். முதல் முதலாகத் தயாரித்த பொருட்களின் முதல் பாக்கெட்டை கமலக்கா விற்பனை செய்ய. உற்பத்தி அவ்வளவையும் மதுசூதனனே வாங்கிக் கொண்டான். கௌரியின் முன்னிலையில்.

ஒரு சின்ன விழாவாக அதை நடத்திக் கொண்டார்கள்.

அந்த மகிழ்ச்சியான நேரத்தில் பூங்கோதை 'சார்! நம்ம காலனியில இன்னொரு ஃபங்ஷன் வைக்கணும்!' என்றாள்.

'ம்.. அவுட் வித் இட்' என்றான்.

'இந்தக் காலனிக் குழந்தைங்களுக்கெல்லாம் ஒரு ஸ்போர்ட்ஸ் டே வைக்கணும்.' என்றாள்.

'செய்வோம்! அதுல என் பங்கு என்ன?' என்றான்.

'பரிசுகள் வாங்கித் தரணும்' என்றாள்.

'செஞ்சுடுவோம். விழாவையே வேண்ணா ஸ்பான்ஸர் செஞ்சர்லாம்' என்றான்.



அவள் மகிழ்ச்சியடைந்தாள்.

ஒரு சனி ஞாயிறில் குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்தினார்கள். திருநாவுக்கரசும், மருதாத்தாளும் கூட வந்திருந்தார்கள்.

ஒரு மூலையில் ஒரு மேடை ஒன்று அமைத்து அதில் சங்கிலிகள் கட்டி கௌரியை வீட்டுக்கு வெளியே அமர வைத்திருந்தார்கள். அவரும் குறுகுறுவென பார்த்துக் கொண்டிருந்தார்.

எப்போதாவது ஒருமுறை வருகிற ஆவேசம் கூட இப்போது கௌரிக்கு வருவதில்லை. தட்டில் சாதம் போட்டு வைத்தால் அவரே சாப்பிட ஆரம்பித்திருந்தார்.

மதுசூதனன் ஒருவிதமான மனநிறைவுடன் அவர் அருகில் சேரைப் போட்டுக் கொண்டு அமர்ந்து அந்தப் போட்டிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தக் காலனியைச் சேர்ந்த பூங்கோதையின் வயதொத்த பெண்களும், இளைஞர்களும் அதில் ஆர்வமாகப் பங்கெடுப்பதையும் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

பகல் நேரங்களில் கூடி ஊர் வம்பு பேசிக் கொண்டிருந்த பெண்கள் இப்போது உபயோகமான வற்றல் தய்ாரிப்பில் ஈடுபடுவதையும், மனநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதையும் கமலம்மா மதுசூதனனிடம் ஒரு ஆச்சரியத்துடன் பகிர்ந்து கொண்டார்.

'மது! இந்தப் பூங்கோதை. லேசுப்பட்ட புள்ளையில்லைப்பா! நான் சோஷியல் வொர்க்கர்ன்னு பேரு. எனக்குத் தோணாத ஐடியாவெல்லாம் இதுக்குத் தோணியிருக்கு பாரு' என்று மாய்ந்து மாய்ந்து புகழ்ந்தார்.



விழா முடிந்து திருநாவுக்கரசு மூலமாகப் பரிசுகள் வழங்கினார்கள்.

ஒரு மியூசிக்கல் சேர் பெரியவர்களுக்கு வைத்தார்கள். திருநாவுக்கரசும், மருதாத்தாளும் கூட அதில் கலந்து கொண்டார்கள். ஆண்களுக்கென்றும், பெண்களுக்கென்றும் தனித்தனியாக நடந்த அந்த விளையாட்டில் கமலக்கா வெற்றி பெற்றார்.

கலகலப்பும், சிரிப்புமாக அந்த நாள் கழிந்தது. பகலுணவு திருநாவுக்கரசு ஏற்பாடு செய்திருந்தார். காலனியில் இருக்கிற எல்லாருக்குமே.

ஏழு மணிக்கு எல்லா நிகழ்வுகளும் முடிந்த பிறகும் கூட மதுசூதனன் தன்னுடைய தாத்தாவையும், பாட்டியையும் அனுப்பி விட்டுத் தான் மட்டுமே செல்வதற்கு மனமில்லாதவனாய் அம்மாவின் அறையில் அமர்ந்திருந்தான்.

பிறகு என்ன நினைத்தானோ என்னவோ டிரைவரை அனுப்பி அவர்களுக்கும் டிபன் வரவழைத்து அம்மாவின் அறையிலேயே அவர்களோடு அமர்ந்து தானும் சாப்பிட்டான்.

பூங்கோதை, கமலம்மாவுடன் அன்றைய நிகழ்வுகளைப் பற்றி மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டான்.

மீண்டும் குழந்தைகள் பூங்கோதையை வந்து சூழ்ந்து கொள்ள அவள் அந்தக் குழந்தைகளுக்கு ஒரு கதை சொல்லிப் பிறகு மெதுவாக,

'சரி. இன்னைக்கு டயர்டா இருக்கீங்க.. போய்த் தூங்குங்க' என்று அனுப்பி வைத்துவிட்டு வரும் வரையிலும் கூட அவன் அமர்ந்திருந்தான்.

நல்ல வேளையாக அவர்கள் இந்த விழாவைத் திட்டமிடும் போதே மறுநாள் அரசு விடுமுறை இருக்கிற நாளாகப் பார்த்துத் திட்டமிட்டிருந்தார்கள். அதனால் மறுநாள் 'ஓய்வு' என்று திட்டம்.

பிரிய மனமில்லாதவன் போல் அவன் தங்களிடம் விடை பெற்றுச் செல்வதைக் கமலம்மா ஒரு சிந்தனையுடன் பார்த்துக் கொண்டு நின்றார்.

★ ★ ★

'ஹலோ! என்ன செய்துகிட்டிருக்கீங்க எல்லாரும்' என்று காரில் எட்டு மணிக்கே வந்து அம்மாவின் அறையை எட்டிப் பார்த்தான் மதுசூதனன்.

இரவெல்லாம் உறக்கம் வரவில்லை. ஏதோ ஒரு மகிழ்ச்சி, இனிமையான பரவசமான உணர்வுகள் மனதிற்குள் பரவிய தாய் உணர்ந்தான். ஏனென்றும் புரியவில்லை.

மீண்டும் அதிகாலை எழுந்து புறப்பட்டான். விசிலடித்துக் கொண்டே நடமாடிக் கொண்டிருக்கிற பேரனைப் பார்த்து விட்டுத் திருநாவுக்கரசும், மருதாத்தாளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

'ஏண்டா! சாமி, என்னொ ரொம்பக் குஷியாயிருக்கே?' என்றார் பாட்டி.

'பாட்டி! எப்பப் பாரு கேஸு, கொலை, கொள்ளைன்னு காதுல விழுந்துகிட்டிருக்குமில்ல. நேத்து குழந்தைங்களோட விளையாட்டு பாக்க ரொம்ப சந்தோஷமா இருந்துச்சு. அந்தப் பூங்கோதை ரொம்பக் கெட்டிக்காரப் பொண்ணு இல்லே!' என்றான்.

'ஆமடா.. சாமி! நாகம்மா சொல்றா நம்ம கௌரி கூட அவகிட்டே ரொம்ப நல்ல புள்ளையா இருக்காளாமா!' என்றார்.



'ஆமா.. பாட்டி அதுதான் எனக்கு ஆச்சரியம்!' என்று கலகலவென்று சிரித்துக் கொண்டு பாட்டியைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தம் வைத்தான்.

'அது மட்டுமில்ல பாட்டி ஒரு சைக்காலஜிஸ்ட் அதான். பாட்டி ஒரு மனசு சம்பந்தமான டாக்டர்கிட்டே பேசி ஆலோசனை கேட்டுகிட்டு அம்மாகிட்டே வைத்தியம் மாதிரி ஏதேதோ செய்யறா போற போக்கைப் பாத்தா.. கௌரிம்மாவுக்கு நினைவு வந்தாலும் வந்துடும் போலருக்கு..' என்றான்.

'அப்படியாடா.. சாமி! அந்தப் புள்ளைய ஆண்டவன் நல்லா வைக்கோணும். நல்ல புருஷனாக் கிடைக்கோணும்' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டார் பாட்டி.

'பாட்டி! இதுதானே வேண்டாங்கறது' என்று அவன் சிரித் தான். 'ஒரு நல்ல ஆள் நம்ம கூடக் கொஞ்ச நாள் இருக்கட்டு மேன்னு நினைக்காம. பேக் பண்ணி அனுப்பறதிலேயே இருக்கியே!' என்றான். ஆனால், காரில் வரும்போது யோசித்துக் கொண்டு வந்தான்.

'இந்தக் கோதை வந்த மாயத்துக்குள் எல்லாரையும் கவர்ந்து விட்டாளே! என்ன காரணம்' என்று யோசித்தான்.

கிராமத்தின் கள்ளமில்லாத அன்பு. ஏதாவது ஆதாயம் மட்டுமே கருதிப் பழகுகிற நகரத்து மனிதர்களுக்கு நடுவே அவளது வெள்ளை மனம் எல்லாரையும் கவர்கிறது என்பது புரிந்தது.

சுற்று முற்றும் பார்த்தான். அறையில் யாருமில்லை.

குரல்கள் மட்டும் கேட்கிறதே! என்று வியப்பானான்.

கௌரியம்மாவைப் பூங்கோதை கமலா நாகம்மா மூவரும் கைத்தாங்கலாக அழைத்து வந்து அமர வைத்தார்கள்.



'என்ன நடக்குது இங்கே?' என்றான் மதுசூதனன்.

'அதையேப்பா.. கேட்கறே! இன்னைக்கு லீவு நாள். ஃப்ரியா இருக்குமாம். கௌரி ஆன்ட்டிக்கு எண்ணெய் தேய்ச்சுக் குளிக்க வைக்கலாம்னு கோதை பிளான் பாரு. குளிக்க வச்சுட்டோம்' என்று சிரித்தார் கமலா.

கோதை அவனை இயல்பாய்ப் பார்த்துச் சிரித்துக் கொண்டே 'ஆன்ட்டியைப் பாருங்க. எவ்வளவு ஃப்ரெஷ்ஷா இருக்காங்க..' என்றாள்.

கௌரியின் நீண்ட தலைமுடியைப் பிரித்துக் கோதினாள். தலை துவட்டினாள்.

பேச்சே எழாமல் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந் தான் மதுசூதனன்.

சற்று நேரம் பெண்கள் கலகலப்பாகப் பேசிக் கொண்டு காரியங்கள் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்னப்பா! காலையில் விஜயம்!' என்றார் கமலம்.

'இல்லக்கா! விஜிம்மா காலையில போன் செய்தாப்ல.. என்னமோ பூங்கோதையைப் பாக்கணுமாம் அதுதான். கூட்டிகிட்டுப் போலாம்னு நினைச்சேன்' என்றான்.

'இவ்வளவுதானே! ஹாஃப் அன் அவர்ல கிளம்பிரலாம்' என்றாள் கோதை. 'ஆன்ட்டிக்கு தலைமுடி காஞ்சவுடனே கிளம்பிரலாம்' என்றாள்.

'ஏய்! நீ கிளம்பு போ! தலைமுடி காயற வரைக்கும் நிக்கறாளாம். அதெல்லாம்.. நாங்க பாத்துக்கறோம்..' என்று செல்லமாகக் கடிந்து கொண்டார் கமலம்.

அனுப்பி வைத்தார்கள்.

★ ★ ★



'என்ன.. விஜிம்மா.. விசேஷம்?' என்றபடி பகலுணவு நேரத்துக்கு உள்ளே நுழைந்தான் மதுசூதனன். பின்னாலேயே பூங்கோதை.

'ஓ! இதுதான் நீ சொன்ன பூங்கோதையா? நீ சொன்ன மாதிரியேதான் இருக்கறா!' என்றார் விஜிம்மா.

'என்ன சொன்னீங்க சார்!' என்று மெதுவான குரலில் கேட்டாள் பூங்கோதை.

'என்ன சொன்னேன்? வாலு ஒண்ணு மட்டும்தான்.. இல்லே! மற்றபடி எல்லா சேட்டையும் உண்டுன்னு சொன்னேன்' என்று அவனும் மெதுவான குரலில் சொல்லிவிட்டுப் பெருங் குரலெடுத்துச் சிரித்தான்.

'இனம் இனத்தோடதான் சேரும்' என்று அவள் கொடுத்த பதிலடியையும் அவன் அதே சிரிப்புடன் வாங்கிக் கொண் டான்.

'இல்லப்பா.. நீ போன்ல நீங்க நடத்துன விளையாட்டு விழா.. அக்காவுக்கு இந்தப் பொண்ணு செய்ற பணிவிடை யெல்லாம் சொன்னியா! அதனாலே எனக்குப் பாக்கணும்னு ஆசையாப் போச்சு' என்றார் விஜயா.

பூங்கோதையை லேசாகத் தோளோடு அணைத்துக் கொண்டார்.

'இந்தப் பொண்ணு ரொம்பக் கொடுத்து வச்சவ மது. எனக்குக் கிடைக்காத பாக்கியம் கிடைச்சவளாச்சே என்ற பாவத்தையெல்லாம் அக்காவுக்கு சிசுருஷை செஞ்சு கழிக்கலாம்னு நெனச்சேன்... நடக்காமப் போச்சு..' என்றார்.

சற்று நேரம் கனமான அமைதி நிலவியது.

'விஜிம்மா.. பருப்புருண்டைக் குழம்பு செஞ்சிருக்கேன்னு சொன்னியே சோத்தைப் போடு. ஒரு பிடி பிடிக்கலாம். அத

விட்டுட்டு சென்டிமென்ட்ல தாக்காதே' என்று அந்தக் கனமான சூழ்நிலையை அவன் இதமாக மாற்றுவதைப் பார்த்துப் பூங்கோதை மறுபடியும் மெல்லிய குரலில்.

'எதுநடக்குமோநடக்காதோ... இது மட்டும் நடக்கும்' என்றாள்.

அவன் கண்களில் சிரிப்புத் தெரிய 'எது?' என்றான்.

'அதான்.. ஒரு பிடி பிடிக்கறது' என்று அழகு காட்டி விட்டுப் போனாள்.

அவன் கலகலவென்று சிரித்தான்.

'இதுக்குப் பேருதான் சேட்டை!' என்றான்.

'என்ன சேட்டை?' என்று விஜயா ஒரு பாத்திரத்தை எடுத்து வந்து டைனிங் டேபிளில் மேல் வைக்க இதை எதிர்பார்க்காத மதுசூதனன் திணறி விட்டான்.

பின்னாலேயே வேறொரு பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வந்த பூங்கோதை 'இல்லைங்க.. ஆன்ட்டி.. எங்க காம்பவுண்டில் ரமேஷ்ன்னு ஒரு குட்டிப் பையன் ரொம்ப சேட்டை அதைச் சொல்றாரு' என்று உதவிக்கு வந்தாள்.

மதுசூதனன் நிம்மதியாகப் பெருமூச்சு விட அவனும் பூங்கோதையும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

எதேச்சையாகத் திரும்பிய விஜயா அந்தப் பார்வையை மனதில் குறித்துக் கொண்டார். உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார்.



19

'என்ற ராசாத்தி, கோதை!' என்று ஆசையுடன் ஓடி வந்து அணைத்துக்



கொள்கிற அம்மாவை அவளும் மகிழ்ச்சியுடன் கட்டிக் கொண்டாள்.

'ஐயா, வாங்க!' என்று ஓடி வந்து நாட்ராயன் மதுசூதனனை வரவேற்றான்.

'பாருங்க அங்கிள்! ரெண்டு லேடீஸும் நம்மளைக் கண்டுக்கவே இல்லை. பாருங்க!' என்று கேலி செய்தான் மதுசூதனன்.

பச்சையம்மாள் வெட்கத்துடன் விலகிக் கொண்டாள். பெண்கள் இருவரும் உள்ளே போக ஆண்கள் இருவரும் விவசாயம் தொடர்பான விஷயங்கள் பேசினார்கள்.

'ஐயா! பம்பு செட் ரிப்பேர் செய்ய வேண்டியிருந்துச்சு, உரம் வாங்கினேன்' என்று கணக்குகள் கொடுத்தான் நாட்ராயன்.

மதுசூதனன் மறுக்காமல் பில்களை வாங்கிப் பார்த்துக் கொண்டான்.

அதே மாதத்தில் செழிப்பாக நிற்கிற நெற்பயிரைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தான். சுற்றிப் பார்த்தார்கள்.

அந்தப் பெரிய தொட்டிக் கட்டு வீட்டின் ஒரு பகுதியை மட்டும் உபயோகித்தார்கள். மிகவும் அழகாகப் பராமரித்தார்கள்.

திறமையுள்ளவர்களை, நம்பிக்கையானவர்களை ஊக்குவித்தால் எவ்வளவு பலன்கள் இருசாராருக்கும் கிடைக்கிறது என்று அனுபவப் பூர்வமாக உணர்ந்தான் மதுசூதனன்.

நிலத்தைச் சுற்றிப் பார்த்தார்கள்.

'ஐயா, அந்த அஞ்சு ஏக்கராவில் தென்னை வச்சு வுட்ரலாமிங்களா?' என்றான் நாட்ராயன்.



'ம்..!' என்றான் மதுசூதனன்.

'மீதியில மாத்தி மாத்தி வாழை, கரும்பு, நெல்லுன்னு போட்டுக்கலாம்..' என்றார்.

'செய்யலாம்.. உங்க பால் வியாபாரம் எப்படிப் போகுது?'

'நல்லாப் போகுதுங்கய்யா. இங்க வந்ததுக்கப்புறம் எங்களுக்கு செலவே இல்லீங்க. கோதை வேற பணம் அனுப்பறா.. காய்கறி முதற்கொண்டு இங்கயே கிடைச்சுடுதுங்களா, கூட ரெண்டு மாடு வாங்கினனுங்க..' என்றான்.

'தட்ஸ் குட்!' என்றான்.

பேசிக் கொண்டே வயலின் அந்தக் கோடிக்குப் போய் விட்டார்கள். அப்போதுதான் மதுசூதனன் சொன்னான்.

'இந்தக் கார்னரில்தான் ஒரு கெஸ்ட் ஹவுஸ் கட்டப் போறேன். சும்மா ஒரு நானூறு சதுர அடியில' என்றான்.

பக்கத்தில் கால்வாய் ஓடியது. அந்தப் பசுமையான, ரம்மியமான சூழ்நிலையை சற்று நேரம் ரசித்துப் பார்த்தான்.

'ஐயா எதுக்கு செலவுங்க? நாங்க வீட்டை எப்பக் கேட்டாலும் குடுத்தர்றம்' என்றான் நாட்ராயன்.

'இல்லல்ல. நீங்க பாட்டுக்கு இருங்க. இது என் ஆசைக்கு எப்பத் தனிமை வேணுமோ.. அப்ப வந்து தங்கறதுக்கு..' என்றான்.

மீண்டும் வீடு வந்து சேர்ந்தார்கள். பச்சையம்மாளும் விழுந்து விழுந்து உபசரித்தாள்.

'ரொம்ப உதவி பண்ணிப் போட்டீங்க.. என்று விதவிதமாய் நன்றி தெரிவித்தார்கள்.

எப்படியோ.. எல்லாருக்கும் நல்லது நடந்தாச் சரி' என்றான் மதுசூதனன்.



அப்போது நாட்ராயன் 'ஐயா, நல்லதுன்னு சொன்னவுடனே ஞாபகம் வருதுங்க. எங்க கோதைக்கும் இருபத்திரண்டு வயசு முடிஞ்சுதுங்கய்யா உங்க, கோயமுத்தூர்லயே எங்க தகுதிக்கு ஏதாவது மாப்பிள்ளையிருந்தா.. சொல்லுங்க' என்றான்.

பூங்கோதை திடுக்கிட்டு நின்றாள்.

'ஆமாமா! கோதையும் செட்டிலாகணுமில்லே. என்ன கோதை மாப்பிள்ளை பாத்தரலாமா!' என்று புன்னகைத்தான்.

அவள் மௌனமாக நின்றாள்.

'அவளுக்கு என்னத்தைங்க தெரியும்! நாமதான் பாக்கோணும்' என்றான் நாட்ராயன்.

'அது அப்படித்தான்!' என்று தோரணையாகச் சொல்லி விட்டுச் சற்று நேரத்தில் புறப்பட்டான் மதுசூதனன்.

கிட்டத்தட்ட பத்துப் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் மௌனத்திலேயே வந்த பூங்கோதையைத் திரும்பிப் பார்த்தான்.

'என்ன, கோதை பேச்சையே காணோம்!' என்றான்.

அவள் திரும்பிப் பார்த்தாள்.

'சார், இந்த ஆறு மாசமாத்தான் நான் ஏதோ நிம்மதியா இருக்கேன். அப்பா என்ன இப்படிச் சொல்றாங்க..' என்றாள்.

குரலில் ஏகப்பட்ட வருத்தம்.

'கோதை! வாழ்க்கை நம்ம இழுத்த இழுப்புக்கெல்லாம் வராது. நீ ஒரே பொண்ணு. அவங்க திருப்திக்காகவாவது நீ செட்டிலாகத்தான் வேணும். அந்த மனநிலைக்கு நீ தயாரா யிருக்கறதுதான் நல்லது' என்றான்.

'என்ன சார். நீங்களும் இப்படிச் சொல்றீங்க?'

'என்ன செய்ய? நான் உண்மையைச் சொல்றேன். நிதர்சனத்தைச் சொல்றேன்' என்றான்.

அவள் மறுபடியும் மௌனமானாள்.

அவன் சட்டென்று 'என்ன நீ இப்படிக் கவலைப் படறே? உன்னைக் கட்டிக்கப் போறவன் இல்லே கவலைப் படணும்?' என்றான்.

அவள் வியப்பாய்ப் பார்க்க.

'ஆமா, நீ பாட்டுக்கு ஊர்க் குழந்தைக்கெல்லாம் விளையாட்டுக் காட்டறேன். பைத்தியத்துக்கு வைத்தியம் பண்றேன். குழு அமைக்கிறேன்னு கிளம்பிடுவே. அவன் பாடு திண்டாட்டம்தான். எவன் சிக்கிட்டு சீக்கியடிக்கப் போறானோ' என்று சிரிக்க அவள் முகம் சிவந்தது. 'போங்க.. சார்!' என்றாள்.

அவளை ரசனையுடன் பார்த்தான். பிறகு மெதுவாக வேறு விஷயங்கள் பேச ஆரம்பித்தான். பொழுது மகிழ்ச்சியாகக் கழிந்தது. அப்போது அவர்களுக்குத் தெரியவில்லை. அடுத்த நாள் பிரச்சினை மிக்க ஒரு நாளாக இருக்கப் போகிறது என்று.

★ ★ ★

மதுசூதனனின் அலுவலகம் சற்றுப் பெரிய அலுவலகம் தான்.

சொந்தக் கட்டிடம் என்பதால் தாராளமாகவே இடம் இருந்தது.

அவனுடைய அறை பதினாலுக்கு இருபது என்று ஒரு பெரிய அறை. அதில் பாதியைத் தடுத்து புத்தக அலமாரிகள்



இருந்தன. அந்தப் பக்கம் இரண்டு கம்ப்யூட்டர்கள். அந்தப் பக்கத்தில் பூங்கோதைக்கு இடம் ஒதுக்கியிருந்தான்.

வெளியிலிருந்து ஒரு கதவு இருந்தது. அதன் வழியாக வருகிறவர்களை அமர்த்தி விவரம் கேட்டுக் கொண்டு உள்ளே அவனிடம் அனுப்புவாள் அல்லது நடவை வழியாக மற்ற லாயர்களிடம் அனுப்பி வைப்பாள்.

அவன் யாரையும் பார்க்க விரும்பவில்லை என்கிற போதோ வேலை இருக்கிறபோதோ அவன் இல்லாத போதோ அந்தக் கதவைச் சாத்தி விடுவார்கள்.

வருகிறவர்கள் காரிடார் வழியாக சற்றே நுழைந்து வரவேற்பறைக்குப் போய் விடுவார்கள். அங்கே ராதாவோ, காந்தியோ, ராகவனோ கவனித்துக் கொள்வார்கள்.

இன்றைக்கு அவன் கோர்ட்டுக்குப் போய் இருந்தான் என்பதால் பூங்கோதை அவன் கொடுத்திருந்த வேலையைக் கம்ப்யூட்டரின் முன் அமர்ந்து செய்து கொண்டிருந்தாள்.

பிற்பகல் இரண்டு மணிக்கு வந்தான் மது. ஏதோ புத்தகங்களைப் புரட்டிக் குறிப்புகள் எடுத்துக் கொண்டிருந்தான். அவன் கோதை உணவுக்குப் போய் விட்டதாக எண்ணிக் கொண்டான்.

அந்த நேரம் புயலாக உள்ளே நுழைந்தான் அந்த மனிதன்.

நிமிர்ந்து பார்த்தான்.

பூவேந்தன்.

'வா.. உட்கார்!' என்றான்.

அவனும் இறுக்கமான முகத்துடன் அமர்ந்தான்.

'இத பாரு' நீ செய்றது கொஞ்சம் கூட நல்லால்லே!' என்றான் மதுசூதனனிடம்.



மதுசூதனன் அடுத்து சொன்ன வார்த்தைகளை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஏன் மதுசூதனனே அப்படி வார்த்தைகள் தன் வாயிலிருந்து வரும் என எதிர்பார்க்கவில்லை.

'ஆமடா! அவ எனக்கு வைஃப் ஆகப் போறவ. நான் அவளைத்தான் கல்யாணம் செஞ்சுக்கப் போறேன். போதுமா முதல்ல.. எழுந்திருச்சு வெளிய போ. கெட் அவுட் மேன்...' என்றான்.

பூவேந்தன் இதை எதிர்பார்க்கவில்லை. மதுசூதனனை வெறித்துப் பார்த்தான்.

'ஆழ்ந்த அனுதாபங்கள்!' என்றான்.

'சரிதான்.. போடா! வெளியே' என்றான் மதுசூதனன் மறுபடியும்.

பூவேந்தன் கோபத்துடன் வெளியேறினான்.

'ஸ்கௌண்ட்ரல்' என்று சத்தமாகத் திட்டிக் கொண்ட மதுசூதனன் தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தவன் புத்தக அலமாரிக்கு அந்தப்புறம் அழுகைக் குரல் கேட்டுத் திடுக்கிட்டவனாய் எழுந்து வந்தான்.

பூங்கோதை மேஜை மேல் கவிழ்ந்து படுத்துக் கொண்டு விம்மியழுது கொண்டிருந்ததை ஒரு வித்க் கையாலாகாத் தனத்துடன் பார்த்தான்.

'பூங்கோதை! ப்ளீஸ்.. ஸ்டாப் கிரையிங்' என்றான்.

அவள் சட்டென்று எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அவள் அருகில் ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.



'ஐம் சாரி பூங்கோதை அவனால இனிமே உனக்குத் தொல்லை இருக்கக் கூடாதுங்கறதுக்காகத்தான் அப்படிச் சொன்னேன்' என்று விளக்கம் சொன்னான்.

'அதுக்கு இல்லே சார்! இந்த ஆளைப் போய் என் பிரண்டுன்னு நெனச்சேனே! எவ்வளவு கேவலப்படுத்தறான் சார்' என்று மேலும் பொங்கிப் பொங்கி அழுதாள்.

'அவன் கிடக்கிறான். அஞ்சாறைப் பண்ணிப் போடுவான். இத பாரு. நீ இப்ப அழறதை நிறுத்து. ஸ்ட்ரெயிட் யுவர்செல்ஃப். 'வா.. வா.. எழுந்திரு..' இது என்னோட கோட்டை கோயமுத்தூருக்குள்ள ஏதாவது லொள்ளு பண்ணினா உண்டு இல்லைன்னு பண்ணிப் போடுவேன். அதுவுமில்லாம நீ, நம்ம உறவுக்க.ரப் புள்ளை வேற. எல்லாம் நான் பார்த்துக்கறேன். எழுந்திரு.. புரியுதா' என்றான்.

அவள் மெதுவாகத் தேறிக் கொண்டாள்.

'இங்க.. பாரு.. இப்படி செங்கண்ணும், கருங்கண்ணுமா நீ நின்னா நாந்தான் உன்னை ஏதோ திட்டிட்டேன்னு எல்லாரும் நினைப்பாங்க.. கொஞ்சம்.. பவுடரைக் கிவுடரை முகத்தில் அப்பியாவது நம்ம பேரைக் காப்பாத்து தாயி..' என்று அவன் கேலி பேச அவள் சிரித்து விட்டாள்.

★ ★ ★

அன்றிரவு!

மதுசூதனனுக்கு வெகு நேரம் உறக்கம் பிடிக்கவில்லை.

தன் வாயிலிருந்து தெறித்து விழுந்த வார்த்தைகளைக் குறித்து அவனே வெகுவாக யோசிக்கலானான். எப்படி அப்படிப்பட்ட வார்த்தைகள் தன்னிடம் இருந்து வரலாம். அந்தப் பெண்ணின் நிராதரவற்ற நிலையைத் தான் பயன்

படுத்திக் கொண்டதாய் ஆகி விடாதா? அறைக்கு விஜயம்மா சொன்ன வார்த்தைகள் வேறு அவன் உள்ளத்தில் மோதியது.

முதல் முதலாகத் தானும் ஒரு இளைஞன் என்ற எண்ணம் அவன் மனத்தில் தோன்றியது. கடந்த சில நாட்களாகவே தன் உள்ளத்தில் அலை மோதிக் கொண்டிருந்த பல்வேறு விதமான உணர்வுகளை அவன் அலசிப் பார்க்க ஆரம்பித்தான்.

தான் வைத்த கேள்விகளுக்குத் தன் உள்ளம் பதில் சொன்ன விதம் கேட்டுத் திகைத்துப் போய் அமர்ந்து விட்டான்.



20

'சார்' இந்த வாரம் ஊருக்குப் போறீங்களா?' என்று தயக்கத்துடன் கேட்டாள்.

அவள் கேட்டது வெள்ளிக் கிழமை மாலையில்.

பூவேந்தன் போன திங்கட்கிழமை வந்து விட்டுப் போனதில் இருந்தே மதுசூதனின் நடத்தையில் ஒரு மாற்றம் தெரிந்தது.

வேலையில் எப்போதும் போல் இருந்தான்.

மற்றபடி கலகலப்பாகப் பேசவில்லை. அதற்காகக் கோபம் காட்டவும் இல்லை.

தேவையில்லாமல் இந்தப் பெண்ணின் தலைவலியை இழுத்துப் போட்டுக் கொண்டோம் என்று நினைக்கிறார் போலும். நியாயம்தானே என்று பூங்கோதையும் ஒதுங்கியே இருந்தாள்.



அவளும் வெகுவாகச் சிந்தனையிலாழ்ந்தாள். பலதையும் எண்ணி மண்டை குழப்பிக் கொண்டதுதான் மிச்சம்.

எப்போதும் மாலை நேரங்களில் வந்து சற்று நேரம் அம்மாவுடன் கழிப்பதோடு தங்களோடு கூட சற்று நேரம் கழிக்கிற மதுசூதனன் இப்போதெல்லாம் அலுவலக நேரத்திலேயே வந்து விட்டுப் போய் விடுகிறானாம்.

பூங்கோதை கசப்புடன் சிரித்துக் கொண்டாள். அவளும் எல்லை வைத்துக் கொண்டு ஒதுங்கி விட்டாள்.

'என்ன கோதை?' என்றான் நிமிர்ந்து ஏதோ ஃபைலில் ஆழ்ந்திருந்தவள்.

'இல்லே! இந்த வாரம் ஊருக்குப் போறீங்களா?ன்னு கேட்டேன் சார்' என்றாள்.

'ம்..!' என்று யோசித்தவன் 'கோதை! நீ பஸ்ல போய்க்கயேன். என் ப்ரொக்ராம் என்னன்னு எனக்கே தெரியலே' என்றான்.

அன்றைக்கு பஸ்ஸில் போய்க் கொண்டிருக்கும் போதே ஒரு முடிவெடுத்துக் கொண்டாள்.

இது நடந்தது போன வாரம். மீண்டும் புதன் கிழமையை விடுமுறை வேண்டும் என்று கேட்டுப் புறப்பட்டு விட்டாள்.

★ ★ ★

'என்ன புள்ளே விளையாடறியா? ஐயா, என்ன நினைப்பாங்க?' என்றான் நாட்ராயன்.

ஒண்ணும் நினைக்காத மாதிரி சொல்ல வேண்டியது உங்க பொறுப்பு. உங்களை விட்டுட்டு என்னால இருக்க முடியலை' என்று பூங்கோதை சொன்னவுடன் அவர்கள் உருகி விட்டார்கள்.



இரண்டு பேரும் சற்று நேரம் ஆலோசித்தார்கள்.

'சரி. திடீர்ன்னு சொல்ல வேண்டாம். ஒரு மாசம்.. பொறு.. சொல்லிக்கலாம்..' என்றார்கள்.

அவள் ஒத்துக் கொண்டாள்.

அந்த நேரம்!

'ஏய், கோதை எங்காவது போலாமா?' என்று சாரதா வந்தாள்.

'எங்க போறது?' என்றாள் பூங்கோதை 'பாரியூர் அம்மன் கோயிலுக்குப் போலாம்' என்றாள் சாரதா.

'அம்மா! நாங்க சாயங்காலம் தான் வருவோம்' என்று கிளம்பினார்கள்.

★ ★ ★

பிற்பகலில் யோசனையுடன் படுத்துக் கொண்டிருந்த பச்சையம்மாள் சட்டென்று அந்தக் காரியத்தைச் செய்தாள்.

மதுசூதனனுக்கு போன் செய்தாள்.

'ஐயா! என்னங்க ஆச்சு. இந்தப் பூங்கோதைக்கு? என்னமோ வேலையை விடறேன்னு குதிக்கறா!' என்றாள் ஆற்றாமையுடன் அவன் ஒரு நிமிடம் யோசனையில் ஆழ்ந்து விட்டான்.

'ஓ.. 'எப்ப சொன்னாப்ல?' என்றான்.

'இன்னைக்குத்தான்.'

'நீங்க என்ன சொன்னீங்க!' என்றான்.

'ஒரு மாசம் பொறு மெதுவா சொல்லிக்கலாம்னு சொல்லியிருக்கோம்.'



'அதுதான் கரெக்ட் இப்பக் கோதை எங்கே!' என்றான்.

'சாரதாவும், அவளும் கோவிலுக்குப் போறேன்னு போயிருக்காங்க..' என்றாள்.

'சரி.. இப்ப ஒரு கால் மணி நேரத்துல நா அங்க வரேன் பேசுவோம்' என்றான். வந்தான்.

பேசினான்.

நாட்ராயனும், பச்சையம்மாளும் சர்க்கரை டப்பாவுக்குள் விழுந்த எறும்பைப் போல் திகைத்துத் திக்கு முக்காடிப் போனார்கள்.

'என்ன ஒரே மும்முரமா வேலை?' என்று வந்த கோதையிடம்.

'ஐயா நாளைக்கே அந்த கெஸ்ட் ஹவுஸுக்கு பூஜை வச்சிரலாம்கறாங்க' என்றார்கள் தாயும் தந்தையும்.

'எப்ப சொன்னாரு?' என்றாள்.

'இன்னைக்குத்தான் வந்துட்டுப் போனாரு. காலையில அய்யரு. அவிய அம்மா, அப்பா தம்பி எல்லாரும் வாராகளாம். பண்ணையத்து ஆளுகளுக்கெல்லாம் சாப்பாடாம். உங்கப்பா அதுக்கு சமையல்காரரு ஏற்பாடு பண்ணிப் போட்டு வந்திருக்காரு' என்றாள் பச்சையம்மாள்.

'அப்படியா?' என்று அந்தக் கேள்வியை மட்டும் நிதானமாகக் கேட்ட கோதைக்கு அதற்குப் பிறகு நேரமிருக்கவில்லை.

கோயம்புத்தூரில் இருந்து கொண்டே சரியாக வேலை வாங்கி இரண்டே மாதத்தில் முடித்திருந்த அந்த கெஸ்ட் ஹவுஸ் பார்ப்பதற்கு அழகாக இருந்தது.

அந்த நேரம் கதிர்வேல் 'வாங்க தாத்தா, பாட்டி' என்று உற்சாகமாக வரவேற்றபடி வந்தான்.

மருத்தாத்தாளும், திருநாவுக்கரசும் ஒரு நிமிடம் ஒருவரையொருவர் பார்த்தார்கள். மறு நிமிடம் திரும்பி மதுசூதனனை முகத்தைப் பார்த்தார்கள்.

லேசாக வேதனை நிறைந்த முகத்துடன் அவன் பார்த்துக் கொண்டு நிற்பதைப் பார்த்தவுடன் மருதாத்தாள்தான் சட்டென்று கதிர்வேலைத் தோளோடு சேர்த்துக் கொண்டார்.

'ஏனப்பா, பேராண்டி.. நல்லாயிருக்கியா?' என்று ஆதரவாகக் கேட்கக் கதிர்வேல் மகிழ்ச்சியின் எல்லைக்கே போய் விட்டான்.

'அண்ணா! பாட்டி என்கிட்டே பேசிட்டாங்க' என்று கூக்குரலிடுவதை எல்லாரும் ஒருவித நெகிழ்வுடன் பார்க்க. திருநாவுக்கரசு கூட நெகிழ்ந்து விட்டார்.

அவர்கள் பகலுணவு முடித்த ஒரு மணி வாக்கில் கிளம்புகிற நேரம் கமலம்மா மதுசூதனனிடம் சொன்னார்.

'மது! பூங்கோதை பரவாயில்லை. என்ற செல்போன்ல கால் பேசி நாங்க கார்ல வர வர உன்ற பாட்டிகிட்டே பேசினாப்ல. சார், கெஸ்ட் ஹவுஸ் கட்டின சந்தோஷத்தை விட ஒரு விதமான கவலையில் இருக்காரு. நீங்க ஏதாவது விஜயா ஆன்ட்டியையோ கதிரையோ இன்சல்ட் பண்ணிடுவிங்களோன்னு..' என்று விவரம் சொன்னாள்.

அதற்குப் பிறகுதான் பெரியவர்கள் இரண்டு பேரும்.

'சரி, அவனுக்காகவாவது நாம அமைதியா இருந்துட்டு வந்துரணும்னு பேசி வச்சுகிட்டு வந்தாங்க' என்றார்.

'ஓ!' என்று விஷயத்தை உள்வாங்கிக் கொண்டான். அமைதியாகி விட்டான்.



'என்னப்பா! ஆளே சைலன்டாயிட்டே இப்பல்லாம்.. உனக்குப் பேச்சே எழும்பறதில்லே போல இருக்கு..' என்று கிண்டல் செய்ய., அவன் சிவந்த முகத்துடன் புன்னகைத்துக் கொண்டான்.

இப்போது கதிர்வேல் இயல்பாகப் பொழிகிற பாசம் அவர்களையும் கூட சற்றே நெகிழச் செய்து விட்டது என்று சொல்ல வேண்டும்.

'உங்க அண்ணன் கூட நம்ம வீட்டுக்கு வா!' என்று அழைத்து விட்டுப் போனார்கள்.

அவர்கள் அந்தப் பக்கம் போனதற்குப் பிறகு விஜயாவும், அருணாச்சலமும் பகலுணவுக்கு வந்தார்கள்.

மற்ற பண்ணையாட்களுக்குத் தெரியாத அளவில் எல்லாம் இயல்பாக நடத்தினாலும் மதுசூதனனின் டென்ஷன் கோதைக்குப் புரிந்தது. ஆனால், பிற்பகல் பொழுது இனிமையாகக் கழிந்தது.

அப்போது மதுசூதனன் விஜயாவிடம் 'அம்மா, நாம குடுத்த புடவையைக் கோதையைக் கட்டச் சொல்லுங்க..' என்று கிசுகிசுக்க அவளும்.

'கோதை அந்தப் புடவையை உடுத்திட்டு வாயேன். எப்படியிருக்குன்னு பாக்கலாம்' என்றார்.

அந்தப் பட்டுப் புடவையில் பாந்தமாக வந்து நின்ற கோதையின் மீது மகனின் பார்வை படிந்து மீள்வதை அவர்களும் ஒருவித சுவாரசியத்துடன் கவனித்துக் கொண்டார்கள்.

'இன்னைக்கு யாராவது இங்க தங்கணுமே?' என்று பேச்செடுத்தபோது,'

'நானே தங்கிட்டு வர்றேன்' என்றான் மதுசூதனன்.

★ ★ ★



இரவு எட்டு மணியிருக்கும்!

கெஸ்ட் ஹவுஸை ஒட்டி ஒடுகிற அந்தக் கால்வாயை இலக்கில்லாமல் பார்த்த ரசித்தபடி அமர்ந்து கொண்டிருந்தான் மதுசூதனன்.

நேரம் ஓடியதே தெரியவில்லை.

வளர்பிறைக் காலம். நாளை பவுர்ணமி என்கிற நிலையில் நிலவு கிட்டத்தட்ட முழு வட்டத்தில் இருந்தது. அந்த நிலவின் ஒளியில் அந்தக் கால்வாய் நீரின் ஓட்டம் மிக ரம்மியமாக இருந்தது.

அந்தக் கரையிலும் இந்தப் பக்கமுமாக கதிர்கள் அசைந்தாடுகிற அந்தக் காட்சியை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒருவிதமான கிளர்ச்சியான மனநிலையில் கூட இருந்தான். பக்கத்தில் ஒரு டேப்ரெக்கார்டரில் நல்ல பாடல்கள் ஒரு பக்கம் ஓடிக் கொண்டிருந்தது.

பின்னால் அரவம் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

பூங்கோதை நின்றிருந்தாள்.

'சார்! டிபன் கொண்டு வந்திருக்கேன்' என்றாள்.

'சாப்பிட்ரலாம்கறியா?' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

அவன் எழுந்து வந்தான்.

கெஸ்ட் ஹவுஸில் கூட ஹாலிலிருந்து பின் பக்கமாக ஒரு சிட் அவுட் கட்டியிருந்தான். அதில் அமர்ந்து பார்த்தால் கூட கால்வாயின் ஓட்டத்தை ரசிக்க முடிகிற மாதிரி அமைத்திருந்தான்.



அவள் அவன் ரசனையைப் புரிந்து கொண்டவனாக 'சார், டீபாயில் வைத்து அங்க பரிமாறட்டுமா?' என்றாள்.

அவன் சரி என்றான்.

'என்ன பலகாரம்?'

'சார், ஆப்பம், கடலைக் குழம்பு' என்று பரிமாறினாள்.

ஹாட்பேக்கில் வைத்துக் கொண்டு வந்திருந்ததால் சாப்பிடுவதற்கு இதமாக இருந்தது.

'சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்குங்க சார். இந்த கெஸ்ட் ஹவுஸில் வந்து தங்கினா.. நல்லா இருக்கும்' என்றாள்.

'ஆமா, செய்யணும்' என்றான் அலட்டிக் கொள்ளாமல்.

'அதுவும்.. இந்தப் பூவேந்தன் கிட்டே வேறே நீங்க எதையெதையோ சொல்லிட்டீங்க. அந்த ஆள்.. ஊரு பேரை ரிப்பேர் செய்யாம இருக்கணும். கோதை. உங்க அம்மா, அப்பா வேற உனக்கு கல்யாணம் செய்யணும்னு நினைக்கிறாங்க.. இன்னும் கொஞ்சம் குழம்பை ஊத்து..' என்றான்.

அவள் குழம்பை ஊற்றி விட்டுச் சற்று நேரம் மௌனமாக நின்றாள். பிறகு.

'ஆமாம்.. சார் வேற வழியில்லே. இனியும் தள்ளிப் போட முடியாது. ஒத்துக்கத்தான் வேணும்' என்றாள்.

'நல்ல முடிவு.. கோதை' என்றான்.

'நல்ல.. மாப்பிள்ளையா.. நானே பாக்கட்டுமா?' என்றான். அப்போது மட்டும் கண்களில் குறும்பு மின்னிய மாதிரி இருந்தது.

'ம்..!' என்றாள்.

சரியாக அப்போது செல்போன் அடித்தது.

பாக்கெட்டில் இருந்து எடுத்து நீட்டினான். 'யாருன்னு.. பாரு!' என்றான்.

அவள் பேசி விட்டு. 'விஜி.. ஆன்ட்டி.. என்றாள்.. கொடுத்தாள்.

அந்தப் பக்கம் விஜயா ஏதோ சொன்னார்.

'அம்மா.. என்னம்மா.. திடீர்னு சொல்றீங்க.. என்னது.. நீங்க அங்கயா இருக்கீங்க..' என்றான்.

'அருணாச்சலம். விஜயா, கதிர்வேல் மூவரும் ஏற்காட்டில் இருந்தார்கள். அங்கே ஒரு கெஸ்ட் ஹவுஸில் தங்கியிருக்கிறார் களாம்.

'நாளைக்குக் காலமே நீ நேரத்தில் புறப்பட்டு வந்துரு. கோதையையும் கூட்டிட்டு வந்துரு..' என்றார்கள்.

'கோதையா! என்னம்மா.. திடீர்னு சொன்னா.. எப்படி? அவங்க அம்மா, அப்பாகிட்டே பர்மிஷன் கேட்க வேண் டாமா?'

'அதெல்லாம் நான் கேட்டாச்சு. நாளைக்குக் காலையிலே கிளம்பி.. வாங்க..' என்றார்.

ஆஃப் செய்து விட்டார்.

'கோதை! என்ன இந்த விஜிம்மா.. இப்படிச் செய்றாங்க..' என்று அவன் சலித்துக் கொண்டான்.

அவள் புன்னகைத்தாள்.

'வெள்ளிக்கிழமையானா.. திடீர் திடீர்னு கோவிலுக்குக் கிளம்புவாங்க. இப்ப எப்படி திடீர்னு ஏற்காடு.. ஒண்ணும் புரியலே போ..' என்றான்.



அதற்கும் அவள் புன்னகைத்தாள்.

'கேட்டா.. நீங்க.. மூணு பேரும் ஆம்பளைங்க எனக்குத் துணை வேண்டாமா அப்படீங்கறாங்க' என்றான்.

இருவரும் சிரித்தார்கள்.



## 21

'குரங்கு.. குரங்கு..' என்று உற்சாகமாய்க் கத்தினாள் பூங்கோதை.

'ஹேய்! என்னையா சொல்றே!' என்று சற்று கோபம்போல் கேட்டான் மது.

அவள் கலவரமாகப் பார்த்தாள். 'ஐயய்யோ, உங்களைச் சொல்லலை. எத்தனை குரங்கு பாருங்க..' என்றாள்.

அவன் சிரித்தான்.

ஏற்காட்டு வளைவுகளில் கார் ஓடிக் கொண்டிருந்தது. அதிகாலை ஐந்து மணிக்கே கிளம்பி விட்டார்கள். ஈரோடு வந்து சேலம் தாண்டி இப்போது ஏற்காட்டு மலைப் பகுதியில் போய்க் கொண்டிருந்தார்கள்.

காலை எட்டு மணியிருக்கும் இதமான அந்த தட்ப வெப்ப நிலை சுகமாக இருந்தது.

'சார்! அந்தக் குரங்குகள்ளாம் எவ்வளவு அழகா இருக்கு. குட்டிக் குரங்கு.. சார்' என்று குனிந்து கூடையில இருந்த வாழைப்பழ சீப்பை எடுத்தாள்.

'ரொம்ப ஆசைப்படறே சரி' என்று நிறுத்தினான்.

இடது புறம் கதவைத் திறந்தாள். இறங்கி நின்றாள்.



ஒரு பழத்தை வீச ஒரு குரங்கு வந்து எடுத்துச் சாப்பிடு வதைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மொலு மொலுவென்று நான்கைந்து குரங்குகள் வரவும் பயந்து விட்டாள்.

'கோதை! அந்தச் சீப்பை அப்படியே வீசிட்டு உள்ள வா..' என்றான்.

ஓடி வந்து ஏறவும், அவன் கதவைச் சாத்தி விட்டு சட்டென்று காரை எடுத்தான்.

அடுத்த வளைவில் திரும்பி சற்று தூரம் போன பின்புதான் காரை நிறுத்தினார்கள்.

இருவரும் இடிஇடியென்று சிரித்தார்கள்.

'பாத்தியா.. உன் பிரண்ட்ஸ் எல்லாரும் தேடிட்டு.. வந்துட்டாங்க.. போன பிறவித் தொடர்பா இருக்கும்..' என்று கேலி செய்தான்.

'போங்க.. சார்' என்று வெட்கப்பட்டாள்.

அரை மணி நேரம் பயணத்துக்குப் பிறகு ஒரு இடத்துக்கு அழைத்துப் போனான்.

'என் பிரண்டோட எஸ்டேட்' என்றான்.

காலையில் புறப்படும்போதே ஒரு கூடையைக் கொடுத் திருந்தாள் பச்சையம்மாள்.

'அம்மா இட்லி, மிளகாய்ப் பொடி குடுத்திருக்காங்க..' என்றாள்.

'சாப்பிடலாம்' என்று இறங்கினார்கள்.

சுற்றிலும் பார்க்க மலையின் அழகு ரம்மியமாக இருந்தது.



'கோதை இந்தக் காலை நேரத்துல சூழ்நிலை பாக்கறதுக்கு எவ்வளவு நல்லா இருக்கு. பாரு..' என்றான். லேசாக விசிலடித்தபடியே சுற்றிப் பார்த்தான்.

'ம்.. என்று இரு பாண்ட் பாக்கெட்டுகளிலும் கைவிட்டுக் கொண்டு நின்று ஒரு சுற்றுச் சுற்றினன்.

'சூப்பர்ப்.. இல்லே' என்றாள்.

'கோதை.. இங்கே.. வந்து பாரு.. என்று அழைத்துப் போனான்.

விளிம்பாக இருந்தது. கைப்பிடிகள் போட்டிருந்தார்கள்.

எஸ்டேட் வேலையாட்கள் வந்து வணக்கம் போட்டு விட்டுச் சென்றார்கள்.

'கோதை! இங்க நின்னு சத்தம் போட்டுப் பாரு.. எதிரொலிக்கும்..' என்றான்.

அவள் 'பூங்கோதை!' என்று சத்தம் போட்டாள் எதி ரொலித்தது.

மிகவும் மகிழ்ச்சியாகச் சிரித்தாள்.

அவன் கைப்பிடியை இறுகப் பிடித்துக் கொண்டு ஆழ மாகப் பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு மெதுவான குரலில்.

'கோதை! உனக்கு ஒரு மாப்பிள்ளை பாத்திருக்கேன்..' என்றான்.

'சார்!' என்று அவள் வியப்படைந்தாள்.

'ஆமா! போட்டோ கூட இங்க வச்சிருந்தேன்..' சட்டைப் பையில் துழாவினான்.

அவள் அசையாமல் நின்று பார்த்தாள்.

'காணமே!' என்றான். பிறகு 'போட்டோ.. எதுக்கு..? நேர்லயே பாத்துக்க.. எதிரிலதான் நிக்கறனே..' என்றான்.

நேர்ப் பார்வையாகப் பார்த்தான்.

அவள் திகைத்து நின்று விட்டாள்.

'ஏன்? அவ்வளவு ஷாக் ஆயிட்டே. நான் நல்ல ஆளா இல்லையா? என்னைப் பிடிக்குதா.. இல்லையா? அதை மட்டும் சொல்..' என்றான்.

அவள் ஒரு நிமிடம் ஒன்றும் பேசவில்லை.

'உங்களைப்... போய்... யாருக்காவது.. பிடிக்காம இருக்குமா? ஆனா.. உங்க தகுதிக்கு' என்று அவள் இழுக்கையிலேயே அவன் தன்னை மறந்தான்.

அருகில் இழுத்தான்.

'ஹேய்! கோதை!' என்று அவள் தோளில் முகம் புதைத்துக் கொண்டு அவன் பேசிய அன்பு மொழிகள் அவளை அசைத்துப் பார்க்க முதலில் திகைத்தவள் பின் தன்னையும் அறியாமல் இசைந்து கொடுத்தாள்.

சற்றுக் கழித்து நிமிர்ந்தான். முகத்தில் வெற்றி கொண்ட மகிழ்ச்சிப் பெருமிதம் எல்லாம். தெரிய கலகலவென்று சிரித்தான்.

அவளும் வெட்கத்துடன் விலகி முகம் சிவக்க நின்றாள். ஆனால், திரும்பிக் கொண்டாள்.

'ஹேய்! இந்தப் பக்கம் திரும்பு..!' என்று தன் பக்கம் திருப்பி முகத்தைக் குனிந்து பார்த்தான்.

'ப்ளீஸ்! சார்' என்று அவள் தவிக்க.

'மது.. மது..ன்னு கூப்பிடலாம்..' என்றான்.



'ம்.. தட்ஸ் குட்' என்று மறுபடியும் நெருங்கி இழைய - அவள் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள். சற்று நேரம் உலகம் மறந்து நின்றார்கள். மெல்ல இயல்புக்கு வந்தார்கள்.

'மது! இதெல்லாம் நடக்குமா?' என்றாள் தயக்கத்துடன்.

'ஏன் நடக்காது? பூவேந்தன் வந்துட்டுப் போன அன்னைக்கு என்னிடமிருந்து அப்படி வார்த்தைகள் வரும்ன்னு நானே நினைக்கலை அப்ப இருந்து.. என்ன செஞ்சிட்டிருந்தேன்னு நினைக்கறே? யோசனைதான் உங்கம்மா அப்பாகிட்டே.. பேசியாச்சு. விஜிம்மாகிட்டே, அப்பாகிட்டே பேசியாச்சு.. உங்கிட்டே மட்டும்தான் கடைசியா..' என்றான்.

'ஓ.. இவ்வளவு நடந்திருக்கா?' என்றாள் குறுகுறுப்பாக.

'இல்லையே.. இன்னும் எதுவும் நடக்கலையே?' என்றான்.

அவள் முகம் சிவக்க திரும்பிக் கொண்டாள்.

'சரி.. போதும்.. சாப்பிட வாங்க..' என்றாள்.

'என்னடா.. வம்பாப் போச்சு. நான் இன்னும் எதுவும் ஆரம்பிக்கவே இல்லைங்கறேன் அதுக்குள்ள போதும்கிறே..' என்றான்.

'ப்ளீஸ்.. மது!' என்றாள் கெஞ்சலாக.

'ஓ..கே.. ஓ..கே..!' என்று அவன் இயல்புக்கு வந்தான் சிரித்தான்.

ஒரு திகைப்புடன் கனவுலகில் இருப்பவள் போல அவன் முகத்தை முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் பூங் கோதை.



வரப்போகிற நாட்களில் அவர்களுக்காகக் காத்திருக்கிற விஷயங்களை அறியாமல்.

★ ★ ★

'ம்மா.. அண்ணனும், அண்ணியும் வந்தாச்சு' என்று அவர்கள் காதுபட சத்தம் போட்டான் கதிர்வேல்.

அவனும் இருபதைத் தாண்டிய இளைஞன் என்ற போதும் அண்ணனிடம் எப்போதும் ஒரு சலுகை எடுத்துக் கொள்வான். மதுசூதனனும் அவனைச் செல்லமாக வைத்துக் கொள்வான்.

அவன் சத்தம் போடும் விதம் பார்த்து இருவரும் ஒருவரை ஒருவர் லேசான வெட்கத்துடன் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

விஜயா ஆரத்தித் தட்டு ஏந்தாத குறையாக வரவேற்றார்.

'அம்மா.. நீதானே.. சொன்னே.. டிலே பண்ணாதே விஷயத்தைச் சொல்லிருன்னு..' என்றான். செல்லம் கொஞ்சுகிற மகனாய் அம்மாவின் அருகில் நின்று கொண்டான் மதுசூதனன்.

அருணாச்சலம் அதிகம் பேசவில்லையென்ற போதும் மகிழ்ச்சியாய் இருப்பது தெரிந்தது.

அருணாச்சலம் உள்ளே ஒரு சேரில் அமர்ந்து கொண்டு கண்டு கொள்ளாதவரைப் போல் இருந்தாலும் முன்னறையில் ஒரே கேலியும், கிண்டலுமாய் இருந்ததை ரசித்துக் கொண்டார்.

'அண்ணி, உங்களோட சுண்டக் குழம்பு பத்தி அண்ணன் ஏகமாய் புகழ்ந்தப்பவே நினைச்சேன். என்னென்னவோ வித்துல ஆட்களைக் கவர் பண்றவங்களைப் பார்த்திருக்கேன். ஆனா, பழைய குழம்பைக் குடுத்து.. மாப்பிள்ளை பிடிச்ச



மொதோ ஆள் நீங்களாத்தான் இருக்கும்' என்று கதிர்வேல் செய்த கலாட்டாவிற்கு அவள் வெட்கப் புன்னகையையே பதிலாகத் தந்தாள்.

விஜயா குறுகுறுவென்று பார்த்துவிட்டு 'இப்படி அழகா இருந்தா.. என் மகன்தான்.. பாவம்.. என்ன செய்வான்..' என்று தானும் கேலியில் கலந்து கொண்டார்.

'டேய், கதிரு.. ஒரே நாள் சுண்டக் குழம்புல இல்லடா.. சோள தோசை, ராகிக்களி.. அப்படி.. இப்படின்னு.. நிறைய ஐட்டம்ஸ்டா..' என்று அவன்.. அடுக்க..

'சும்மாயிருங்க..' என்று வெட்கப்பட்டாள்.

அங்கே பொழுது இனிமையாகக் கழிந்த அதே நேரத்தில் தாத்தா, பாட்டி அங்கே விவாதம் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

★ ★ ★

'உன்னை யாரு மருதாத்தா, அந்த ஆகாவளிப் பயலை வூட்டுக்குக் கூப்பிடச் சொன்னாங்க' என்று கோபமானார் திருநாவுக்கரசு.

'எந்தப் பயலை?'

'அதான்.. அந்தக் கதிர்வேல் பயலை.'

'அப்புறம்..! எப்பவும் சண்டைக் கட்டிட்டே இருக்கச் சொல்றீங்களாக்கும்?'

'அப்புறம் ஒட்டகம் கழுத்தை நுழைச்சு.. கொஞ்சம்.. கொஞ்சம் முழுசா.. உள்ளே நுழைஞ்ச கதையாய் போயிடும்.. தெரிஞ்சுக்க..' என்றார்.

'சேரியெடுங்க.. அந்தப் பையன் என்னமோ ரொம்பப் பிரியமா.. வந்து பழகினானேன்னுட்டு.. வரச் சொன்னேன்' என்றார் மருதாத்தாள் இறங்கிய குரலில்.

'இருபத்தஞ்சு.. வருஷம்... இருபத்தஞ்சு.. வருஷமா.. நம்மளோட மக.. உசுரோட இருந்தும்.. இல்லாம.. நினைப்புன்னு ஒண்ணு இருந்தும்.. இல்லாம.. நடை பொணமாக் கிடக்கிறாளே.. அதுக்குக் காரணமானவங்களை வூட்டுக்குள்ள விட்டுக்கிட்டுக் குலாவப் போறியா?' குலைந்துதான் போனார்.

'உண்மைதானே! மகள் இருந்தும் இல்லாமல்தானே இருக்கிறாள்.' இருந்தாலும் கேட்டாள்.

'அதுக்காக நமது மது அவர்களையெல்லாம் வுட்டுப் போட்டு வருவானாக்கும். இப்பவும் அவர்களை வுட்டுக் குடுக்காமத்தானே பேசறான்?' என்றார்.

'ஆமா! ஆனா பதினெட்டு வயசு நிறைஞ்சு போனதுக்கப்புறம்.. நான் போயி கூட்டிட்டு வந்து நாம நியாயம் சொன்ன நாள்லேயிருந்து நம்ம கூடத்தானே இருக்கறான்!' என்றார். அதைச் சொல்லும் போது திருநாவுக்கரசின் முகத்தில் பெருமை தொனித்தது.

'நான் சொல்லறதைக் கேளு. மருதா.. அந்தக் கூட்டத்தை தூரத்துலயே வக்கோணும். உள்ள வுடக்கூடாது..' என்று மீண்டும் சொன்னார்.

'சரி.. அது என்னமோ கிடக்கட்டும் இனி அவனுக்குக் கல்யாணம் பண்ணோணுமல்லோ. அவனுக்கு வேற அந்தப் பூங்கோதையை ரொம்பப் புடிச்சுதாட்ட இருக்கு. அது வேற ரொம்ப சாதாரணக் குடும்பம்.'

'அது நா முடிவு பண்ணிப்போட்டேன். வேணுங்கற சொத்து அவனுக்குன்னு கிடக்கு. இனிப் பொண்ணு வூட்ல இருந்து சொத்து வரரோணும்கறது நமக்குக் கிடையாது. அவனுக்குப் புடிச்ச புள்ளை. அது எந்தக் கழுதையா இருந்தாலும்.. சரி.. கட்டி வச்சுப் போடறதுதான்.. என்றார்.



மருதாத்தாளுக்கு ஆச்சரியமும் திகைப்பும் ஒருங்கே தோன்றியது.

'என்னடா.. இது! தான் பெரியதாக இருக்கும் என்று நினைத்த பிரச்சினை சிறியதாகவும் சிறியது என்று நினைத்த விஷயம் பெரியதாகவும் ஆகிக் கொண்டிருக்கிறது என்று.'

மதுசூதனனுடைய கல்யாணமாவது பிரச்சினையில்லாத கல்யாணமாக இருக்க வேண்டுமென்று வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டார் மருதாத்தாள்.

அப்போதைக்கு எந்த தெய்வமும் செவி சாய்க்கப் போவதில்லையென்று அவருக்கு அப்போதைக்குத் தெரிந்திருக்கவில்லை.

★ ★ ★

பௌர்ணமி இரவு!

உயரமான மரங்களை நிமிர்ந்து பார்க்க அச்சமாகவும் இருந்தது. ஆனால், ஆச்சரியமாகவும் இருந்தது.

எத்தனை விதமான பச்சை நிறங்கள்.. மலர்கள்.. சுற்றுப்புறத்தை ரசித்து ரசித்து மாய்ந்து போனாள் பூங்கோதை.

அந்த பங்களாவே கூட ஒரு விதமான அமானுஷ்யத் தன்மையோடு இருந்தது. பழைய காலத்து வீடு. ஆங்கிலேயர் ஒருவரிடமிருந்து மதுசூதனனின் நண்பன் வாங்கியிருந்தானாம்.

மேற்கத்திய நாகரீகத்தில் கட்டப்பட்ட வீடு. அங்கே தங்குவது ஒரு வித்தியாசமான அனுபவமாக உள்ளது என்பதற்காகவே அந்த பங்களாவை வைத்திருக்கிறானாம்.





மொட்டை மாடியில் பூங்கோதையிடம் அவன் சொன்ன விஷயங்கள் இவை.

பொதுப்படையாகவும் சுவாரசியத்தோடும் கூட பேசிக் கொண்டிருந்தான்.

'என்னங்க.. மது! ஏழு மணிக்கே இப்படி இருட்டா ஆயிடுச்சு' என்றாள்.

'மலைப் பிரதேசமில்லே!' என்றவன் குரலை இறக்கி. 'எல்லாக் கதையும் விவரமாக் கேக்கறே. என் கதையும் கொஞ்சம் கேளு' என்றான்.

'நீங்கதானே? கதை நல்லா விடுவீங்களே!' என்று மெல்லிய குரலில் சிரித்தாள்.

'ஹேய்.. கோதை! இந்தப் பௌர்ணமி நிலாவில் நீ கூட பாக்கறதுக்கு அழகாத் தெரியறே' என்றான்.

அவள் மௌனமாகத் தரையைப் பார்த்தபடி நின்றாள்.

'அதென்ன.. நீ கூடன்னு சொல்றீங்களேன்னு கேட்கறியா? நிலா வெளிச்சத்துக்கு ஒரு அழகு இருக்கு.. தெரியுமா? சாதாரணமானவங்க கூட ஒரு கூடுதல் அழகோட தெரிவாங்க..' என்றான்.

அவன் பார்வை அவளை ஆழமாகப் பார்த்தது.

மெல்லத் தன்னை அவன் அருகில் இழுத்துக் கொள்ளத் தடுக்காமல் ஆனால் இயல்பான குரலில் அவள் 'ஆமாங்க! என்னை மாதிரி சாதாரணப் பொண்ணைப் போய் எப்படி உங்களுக்குப் பிடிச்சுதுன்னு எனக்கே காலையில் இருந்து ஆச்சரியம்தான்' என்றாள்.

அவன் சட்டென்று அவள் முகம் நோக்கிக் குனிந்தான். சற்று நேரம் கழித்து நிமிர்ந்து.



'பாத்தியா, இது.. இதுதான் உன்கிட்டே எனக்குப் பிடிச்சது. இந்தப் பணிவான எண்ணம் வேற யாராவது பொண்ணுகிட்டே நீ சாதாரணம்னு சொல்லியிருந்தா.. கதை கந்தலாகியிருக்கும். ஆனா.. நீ எப்பவும் உன்னைப் பத்திப் பணிவாத்தான் நினைச்சுக்கறே. இதுதான் உன்கிட்டே எனக்கு ரொம்பப் பிடிச்சது..' என்றான்.

அவள் பேச்செழாமல் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

'ஃபார்.. யுவர்.. இன்ஃபர்மேஷன். மேடம்.. நீங்க ரொம்ப அழகுதான். அதைக் காட்டிலும்.. உன்னோட ஸ்மார்ட்னஸ்.. ரொம்பப் பிடிச்ச விஷயம்... இதுவரைக்கும்... நான் சொல்லிக் கொடுத்ததெல்லாம்... டக்டக்குன்னு புரிஞ்சுகிட்ட மாதிரி.. இனிமேலும்.. நான் சொல்லிக் கொடுக்கப் போறதெல்லாமும் டக்டக்குன்னு.. புரிஞ்சுக்கணும். தெரியுமா?' என்று அவன் குறும்பாகச் சிரிக்க அவள் விலகினாள்.

'நான் கீழே போறேன்' என்று நகர அவன் எட்டி அவள் பின்னலைப் பிடித்து இழுத்தான்.

'ஹேய்! இரு, நிலா வெளிச்சம் எவ்வளவு அழகா இருக்கு..' என்றான் கெஞ்சுதலாக.

'ஆன்ட்டி... ஏதாச்சும்.. நினைச்சுட்டாங்கன்னா' என்று அவள் தவிக்க.

'ஒண்ணும் நெனக்க மாட்டாங்க. அரை மணி நேரம் பர்மிஷன் வாங்கியிருக்கேன். நான் ரொம்ப நாகரீகமான ஆளு..' என்று பெரிதாகச் சிரித்தான்.

அவள் வேறு வழியில்லாமல் நின்றாள்.

'தாத்தா.. பாட்டிகிட்டே சொல்லிட்டீங்களா?' என்று கேட்டாள் தயக்கத்துடன்.

அவன் சிந்தனையுடன் குனிந்து அவள் முகம் பார்த்தான்.

'நேரடியாப் பேசலே சொல்லணும். ஆனா, பாட்டியே ஒரு நாள் 'ஏப்பா, உனக்கு இந்தப் பூங்கோதைப் பொண்ணைப் பிடிக்குதாக்கும்ன்னு கேட்டாங்க. இதைக் கேளு.. விஜிம்மா கூட ஒரு நாளு பூங்கோதை உனக்கு ரொம்ப முக்கியமான பிரண்ட் இல்லேப்பான்னு கேட்டாங்க. எல்லாருக்கும் சீக்கிரம் புரிஞ்சுடுச்சு. எனக்குத்தான் கொஞ்சம் லேட்டாய் புரிஞ்சிருக்கு. உனக்கு என்னடான்னா சுத்தமாப் புரியவே மாட்டேங்குது..' என்றான்.

'புரியலேன்னா.. நீங்க சொல்லிக் குடுங்க..' என்றாள் மெல்லிய குரலில்.

'ம்.. அப்படியா?' என்று அவன் குரல் குழைய.

'இப்ப.. இல்லைங்க சார்! முறையா.. கல்யாணம்னு ஒண்ணு செஞ்சதுக்கப்புறம்..' என்று இப்போது விலகினாள்.

'ஹேய்!' என்று அவன் மறுபடியும் கெஞ்ச..

'ம் ஹூம்..!' என்று தலையாட்டிவிட்டு இறங்கி ஓடி விட்டாள்.

அவனும் தடுக்கவில்லை. 'ஹேய்! நில்லு ஒரே ஒரு விஷயம் கேட்டுட்டுப் போ!' என்றான்.

அவள் நின்றாள். அவன் சொன்னதைக் கேட்டு ஒருவிதமான கலக்கத்துடன் இறங்கிச் சென்றாள்.



22

'நீங்க இப்படி உட்காருவீங்களாம். நான் இப்படித் தட்டை வைப்பேனாம். நீங்க சாப்பிடுவீங்களாம்' என்று பூங்கோதை வைக்க கௌரி அமைதியாகத் தானே எடுத்து உண்டார்.



சாதம் அங்கே சிதறியது.

'பரவால்லே விட்டுருங்க.. என்றார் டாக்டர்.

ஒரு பக்கம் நின்று கொண்டிருந்த மதுசூதனன் ஒரு வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்..

'நல்ல இம்ப்ருவ்மென்ட் இருக்கு கோதை நீங்க கரெக்டான பாதையிலதான் போறீங்க' என்று பாராட்டினார் டாக்டர்.

'நாம பொதுவா சித்த சுவாதீனமில்லாதவங்கன்னா, அவர்களுக்கு சிந்தனை இருக்காதுன்னு நெனக்கறோம் ஆனா, உண்மை என்னன்னா, அவங்க தொடர்ந்து சிந்திச்சுகிட்டே இருக்காங்க. ஆனா, நம்மளைப் போல தொடர்ச்சியா, கோர்வையா சிந்திக்க மாட்டாங்க' என்றார்.

பூங்கோதை ஆர்வமாக அதெல்லாம் கேட்டுக் கொள்வதை அவன் ஆழமாகப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அவள் தொடர்ந்து 'சார், சில நேரம் நாம கேட்கற கேள்விக்குக் கரெக்டா பதில் சொல்றாங்க....' என்றாள்.

'அது நல்ல அறிகுறியாச்சே. அதுமட்டுமல்ல சில நேரம் சுயநினைவு கூட கொஞ்ச நேரத்துக்கு வரும். அப்புறம் போயிரலாம். அப்படி அடிக்கடி நடந்து அப்புறம் சுயநினைவு ரொம்ப நேரம் தக்கற நிலைமைக்கு வந்துடுவாங்க' என்றார் டாக்டர்.

'அது கொஞ்சம் மெதுவா செய்யலாம்' என்றார் டாக்டர்.

அலுவலகத்தில் தான் சொல்லி விட்டுப் போகிற விஷயங்களைக் குறிப்பெடுத்து வைத்துக் கொண்டு செய்கிற அதே தீவிரத்துடன் இப்போதும் குறிப்பெடுத்து வைத்துக் கொள்வதையும் அவன் மனதில் குறித்துக் கொண்டான்.

எவ்வளவு அற்புதமானவள் இந்தப் பெண் என்றும் எண்ணிக் கொண்டான்.



டாக்டர் சற்று நேரம் இருந்து விட்டுப் புறப்பட்டார்.

'அம்மாகிட்டே கொஞ்ச நேரம் இருந்துட்டு வரேன்' என்று அவன் சொல்ல அவள் கமலம்மாவுடன் தங்கள் வீட்டுக்குப் போனாள்.

சுய உதவிக் குழு சக்கைப் போடு போடுகிறது என்று நாகம்மா உற்சாகமாகச் சொல்ல அவள் புன்னகைத்துக் கொண்டாள்.

சற்றுக் கழித்து அவன் உள்ளே வர கமலா வரவேற்றார்.

சற்று நேரம் அவனிடம் பேசிவிட்டு அவர்களுக்குத் தனிமை கொடுத்து உள்ளே தேனீர் தயாரிக்கப் போனார்.

'மது.. என்ன ஆச்சு?' என்றாள்.

'எல்லாரையும் கவனிக்கறே என்னை மட்டும் கவனிக்க மாட்டேங்கறே. அதான் கவலை' என்றான் லேசான சிரிப்புடன்.

'பேச்சை மாத்தாதீங்க... என்னமோ பிரச்சினை... சொல்லுங்க...' என்றாள்.

'எப்படிக் கண்டுபிடிச்சே?'

'அதெல்லாம் உங்களைப் பார்த்தாலே எனக்குத் தெரியும்.'

அவன் சொன்னான். பிரச்சினையை விரிவாகச் சொன்னான். அவளும் கவலையிலாழ்ந்து விட்டாள்.

'எப்படிங்க... இதை சரி...' செய்யறது? என்றாள்.

அவன் பெருமூச்சு விட்டான்.

'கொஞ்சம் பொறுக்கத்தான் வேணும். என்னை விட்டா... நான் இப்பவே அம்மிணியை தூக்கிட்டுப் போயிடுவேன்... ஆனா, என்ன செய்யறது! அப்புறம்... எங்கப்பா... மாதிரி



நானும் என் வழியைப் பாத்துகிட்டேன்னில்ல பேச்சு வரும்...' என்றான் வருத்தம் தொனிக்கும் குரலில்.

அவள் மௌனமாகத் தலையாட்டி ஒத்துக் கொண்டாள். பிறகு ஆதரவான குரலில்.

'சரிங்க! வருத்தப்படாதீங்க... என்ன செய்யறதுன்னு பாக்கலாம்...' என்றாள்.

'அது மட்டுமில்ல... இன்னொரு பிரச்சினையும் இருக்கு. அதை வேற தீர்க்கணும்' என்றான். அதையும் சொன்னான்.

அவள் யோசித்தாள். 'சரி... அப்ப இதை முதல்ல... தீர்த்தர் லாம்...' என்றாள்.

கமலம்மா தேனீர் கொண்டு வரவும் மீண்டும் பொதுப் படையாக பேச ஆரம்பித்தார்கள்.

வழியனுப்ப கதவு வரை வந்தவள் 'மது...' என்றாள்.

அவன் நின்று அவள் முகம் பார்த்தான்.

'நீங்க எவ்வளவு பெரிய கேஸையெல்லாம் சர்வ சாதாரணமாக கையாள்வீங்க... இப்ப இப்படி வருத்தப்படறீங்களே...' என்றாள்.

'கோதை... அது வேற. இங்க சம்பந்தப்பட்டவங்க எல்லாருமே.. எனக்கு ரொம்ப முக்கியமானவங்க. அது மட்டுமில்ல... தப்பான முடிவுகளையே எடுத்து... ஏற்கனவே வேணுங்கற மட்டும் கஷ்டப்பட்டுட்டாங்க... அதனால ரொம்பக் கேர்ஃபுல்லா. டீல் செய்ய வேண்டியிருக்கு...' என்றான்.

'அது உண்மைதான்' என்றாள்.

'ஆனா, ஒரு விஷயம் மட்டும் நிச்சயம்' என்றான்.

'எது..?' என்று அவள் பார்க்க.

'இந்த ஜன்மத்துல... என் வாழ்க்கையைப் பங்கு போடறதுக்கு வந்தவ. நீதான்... நீ மட்டும்தான்... அதுல எந்த மாற்றமும் இல்லே...' என்றான்.

அவள் நெகிழ்ந்து நின்றாள்.

அவள் முகபாவம் பார்த்து அவன் முகமும் மாறியது.

'வேண்டாம்.. இனி இங்க நின்னா வம்பு இடம்... பொருள்.. ஏவல்... பாக்கமாட்டேன்' என்று அடிக்குரலில் சொல்லிவிட்டு அவன் நகர்வதை அவள் வெட்கத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அவளுக்கு ஒன்று மட்டும் புரிந்து பிரச்சினைகள் இன்னும் தீரவில்லை என்பதுதான் அது.

'இறைவா ஏன் இப்படி பொறுப்புள்ள ஒரு இளைஞரை இப்படி சோதிக்க வேண்டும்' என்று அவளுக்குக்கோபம் கூட வந்தது.

★ ★ ★

பாட்டியின் அறைக்குள் எட்டிப் பார்த்தான் மதுசூதனன்.

'என்னப்பா?' என்றார் மருதாத்தாள்.

உள்ளே வந்தான். அமர்ந்தான். 'பாட்டி... கௌரிம்மா கிட்டே நல்ல முன்னேற்றம் இருக்காம் டாக்டர் சொல்றார். எல்லாம் அந்தப் பூங்கோதையோட முயற்சியாலதான்' என்றான்.

'ஆமாண்டா... கண்ணு. நானே எதிர்பார்க்கலை என்னவோ விளையாட்டு நடத்தறா. உங்க அம்மா கிட்டே போய் உரிமையாப் பேசறா. இப்பக் கொஞ்சம் உங்கம்மா தேறிகிட்டு வர்றான்னு எல்லாருந்தான் சொல்றாங்க' என்றார்.



'பாட்டி!' என்றான். தயக்கத்துடன் அவர் முகம் பார்த்தான். பின் லேசாகச் சிவந்த முகத்துடன்.

'பாட்டி! இந்தக் கோதை ரொம்ப நல்ல பொண்ணு இல்லே!' என்றான்.

பாட்டிக்கு லேசாகப் புரிய ஆரம்பித்தது. உள்ளுக்குள் சிரிப்புடன்.

'ம்... பரவால்லே!' என்றார் அமர்த்தலாக. அவன் மீண்டும்.

'ஆளும்... நல்லாத்தான்... இருக்குது... இல்லே!' என்றான்.

'ம்...!'என்று மிடுக்காகச் சொன்னாலும் தன்னையும் மறந்து சிரித்து விட்டார்.

'உனக்குப் பிடிச்சுப் போச்சுன்னு சொல்லு...' என்றார்.

'ம்...!' என்றான்.

'கவலைப்படாத கண்ணு! என்ற பேரனுக்குப் புடிச்சது எந்தக் கழுதையா இருந்தாலும் சரி... கட்டி வச்சுப் போடறது தான்னு... உங்க தாத்தா அன்னைக்கே சொல்லிப் போட்டாரு' என்றார்.

அவன் முகம் மலர்ந்தது. 'அதுக்காகக் கோதையை கழுதை கிழுதைன்னு சொல்லாதீங்க' என்றான் மதுசூதனன் பொய்க் கோபத்துடன்.

'இத பாரப்பா! என்னா கோபம் வருது!' என்றுஅவரும் ரசித்துச் சிரித்தார்.

தன்னறையில் அமர்ந்து கணக்கு வழக்குகள் பார்த்துக் கொண்டிருந்த திருநாவுக்கரசிடம் ஓடினார்.

'ஏனுங்க... உங்க பேராண்டி என்னமோ சொல்றான். என்னன்னு கேளுங்க...' என்று அழைத்து வந்தார்.



'என்ன...தம்பி?' என்று வந்தார் தாத்தா.

'இல்லீங்க... அந்தப் பூங்கோதைப் புள்ளைய ரொம்பப் பிடிச்சிருக்காமா? அதனால கல்யாணம் செஞ்சு வைய்ங்கங் கறான்...' என்றார் மருதாத்தாள்.

'ஊரு பூராவும் கேஸுக்கு வாக்காடி ஜெயிக்கிற வக்கீலுக்கு இதைச் சொல்றதுக்கு பாட்டியம்மா... வேணுங்குதாக்கும்' என்று அவரும் கிண்டல் செய்தார்.

'அதுக்கில்ல... அம்ச்சி... நான் என்விஷயத்தைச் சொல்ல வர நீங்க பாட்டுக்கு உங்க பழைய காலத்தை நினைக்க ஆரம்பிச்சுட்டா... நான் என்ன செய்யறதாம்?' என்று அவனும் கேலியில் இறங்கினான்.

அவர் வெடிச்சிரிப்பு சிரித்தார்.

'அப்படிப் போடு!' என்றார்.

அருகில் அமர வைத்துக் கொண்டு பூங்கோதை யின் குடும்பம் பற்றிய விவரங்கள் கேட்டுக் கொண்டார். பின்னர்,

'ஒண்ணும் கவலைப்படாதீடா... ராசா! ஊரே மெச்சற மாதிரி ஜாம் ஜாம்னு கல்யாணம் நடத்திக் காட்டறேன்' என்றார்.

'தாங்க்ஸ்... அம்ச்சி...' என்றான்.

'நீ நாளைக்குப் புள்ளைய வரச்சொல்லு...' என்றார் மறுபடியும்.

'சரிங்க... அம்ச்சி!' என்று மகிழ்ச்சியுடன் மாடிக்குப் போனான்.

அதற்குள் மருதாத்தாள் கணவரிடம் 'நான் காலையில் நேரத்துலயே அந்தப் பூங்கோதைப் புள்ளைய வரச் சொல்லியிருக்கறனுங்க என்றார்.



'எதுக்கு?' என்று தாத்தா பார்க்க.

'நாளைக்குப் பயலுக்குப் பொறந்த நாளில்ல. மறந்து போட்டீங்களாக்கும்' என்றார்.

'அடப்பய புள்ளே! இப்பச் சொல்றியே' என்று அவசர அவசரமாக ஜவுளிக்கடைக்குப் புறப்பட்டார்.

★ ★ ★

தலையணையை கைகளுக்கு முட்டுக் கொடுத்தபடி சுகமான உறக்கத்தில் இருந்தான் மதுசூதனன்.

'குட்மார்னிங்!' என்ற பூங்கோதையின் குரல் கேட்டுக் காலை நேரத்துக் கனவு என்றுதான் நினைத்தான்.

'ஹேய்! காலையில மறுபடியும் தொல்லை பண்றியா?' என்று முணுமுணுத்துக் கொண்டு திரும்பிப் படுத் தவன் லேசாகக் கண்களைத் திறந்தவன் திடுக்கிட்டு விழித் தான்.

நிஜமாகவே அவள் எதிரில் நிற்பதைப் பார்த்து வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான்.

'ஹாப்பி.. பர்த் டே!' என்று ஒரு சிறிய பூங்கொத்தை நீட்டினாள்.

'அட, ஆமா! என் பர்த் டேதான். மறந்தேபோச்சு!' என்று எழுந்தான்.

'ஒரே நிமிஷம்! ஃப்ரெஷ் பண்ணிக்கறேன்' என்று அவன் நகர.

'சரி! அதுக்குள்ள டீ கொண்டு வரேன்' என்றுபோனாள் கோதை.

அவள் திரும்ப வரும்போது அவன் சுறுசுறுப்பாகி இருந் தான். டீ ஷர்ட் மாட்டிக் கொண்டு நின்றிருந்தான்.

'ஹேய்! ராத்திரியே பன்னிரண்டு மணி வரைக்கும் தொல்லை பண்ணிகிட்டிருந்தே' என்றான் அவன் புகார் போல.

'நானா? நான்... எப்ப?' என்று முதலில் ஆச்சரியமாகப் பார்த்துப் பின் மெதுவாகப் புரிந்துகொண்டாள்.

'சே! பயந்து போனேன்!' என்றாள்.

அவன் சிரித்தான்.

'யார் சொன்னா பர்த்டேன்னு?' என்றான்.

'பாட்டிதான்!' என்றாள்.

'அட்றா... சக்கை! பாட்டி வர வர ரொம்ப மாடர்னா யிட்டாங்க...' என்றான் மகிழ்ச்சியாக. சிரித்தான். சிரிக்கும் போதே அவன் பார்வை மாறியது.

'ஹேய்! காலையில... ஃப்ரெஷ்ஷா என் ரூமுக்கே தைரியமா... வர்றே! அதுவும் தனியா!' என்றான் கிறக்கக் குரலில்.

'எல்லாம் நீங்க... நாகரீகமானவங்க நம்பிக்கையிலதான்...' என்றாள் குறும்புச் சிரிப்புடன்.

'தப்புப் பண்றே! இந்த விஷயத்துக்கும், நாகரீகத்துக்கும்... சம்பந்தம் இல்லே...' என்றான் அதே குரலில்.

'அதெல்லாம்... மேரேஜுக்கு... அப்புறம்...' என்றாள் வெட்கத்துடன்.

'அதுசரி... நீங்க பாத்து... எப்பப் பர்மிட் செய்யறீங் களோ... அப்ப... ஓ.கே... ஆனா, இதுக்கு பதில் சொல்லு...' என்றான்.

'எதுக்கு...?' என்றாள் வியப்பாக.



'இல்லே! அதெல்லாம்... மேரேஜுக்கு... அப்புறம்னியே எதெல்லாம்?' என்றான்.

'மது! இன்னைக்கு ரொம்ப வம்பு பேசறீங்க...' என்று அவள் வெட்கத்துடன் நகர அவள் பின்னலை எட்டி இழுத்துப் பிடித்தான். அருகில் நெருங்கி.

'ஓ...கே...! ஓ...கே...! அது சரி... பரிசொண்ணும் இல்லையா?' என்றான்.

'ம்... இருக்கே' என்றாள். ஒரு அழகான வாட்சைத் தன் பர்ஸில் இருந்து எடுத்து அவன் கையில் கட்டினாள்.

'இதைப் பார்க்கும் போதெல்லாம் என் நினைப்பு வருமில்லே!' என்றாள்.

மதுசூதனன் மறுபடியும் அதே கிறக்கக் குரலில்... 'சொன்னா... கோபிச்சுக்குவே... ஆனா, இந்த வாட்சைப் பாத்துத்தானா... உன் நினைப்பு வரணும். என்ன முக்கியமான வேலை செஞ்சாலும்... அது பாட்டுக்கு ஓடிகிட்டே இருக்கு. சில பெரிய ஃபாக்டரிகள்ல, ஆபீஸ்கள்ன்னா... மெல்லிசா மியூசிக் ஓடுமே... அது மாதிரி... உன் நினைப்பு... ஓடிக்கிட்டேதான்.... இருக்கு' என்றான்.

அவள் சட்டென்று அவன் தோளில் முகம் புதைத்துக் கொண்டாள். அந்தக் கண நேர உணர்வில் அவன் கோதையைத் தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்து தன் மனத்து அன்பை யெல்லாம் கொட்டித் தீர்த்தான்.

அவள் நிமிராமல் கேட்டுக் கொண்டாள். பிறகு 'மது! 'ப்ளீஸ்!' என்றாள் கெஞ்சலாக.

அவனும் நிதானித்துக் கொண்டான். விடுவித்தான்.



'என்ன செய்யறது கோதை இன்னைக்கும் கோர்ட்டுக்குப் போகணுமே. சரி... ஆஃப்டர்நூன்... இங்க வந்துரு. இங்கயே சாப்பிட்டரலாம்...' என்றான்.

ஒத்துக் கொண்டாள்.

அவள் முகம் சிவக்க முதலில் இறங்கிப் போவதை ஒருவிதச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டு நின்றான்.

சற்றுக் கழித்து அவனும் இறங்கிப் போனான்.

'கல்யாண ஏற்பாடுகள் பற்றித் தாத்தா பாட்டியிடம் நாளை பேசிவிட வேண்டும்' என்று எண்ணிக் கொண்டான். ஆனால் மறுநாள் பேச ஆரம்பித்தபின்தான் பிரச்சினைகளே தொடங்கப் போகிறது என்று அவனுக்கு அப்போது புரியவில்லை.




உள்ளுக்குள் கோபம் குபுகுபு வென்று பொங்கியது மதுசூதனனுக்கு. ஆனால், கட்டுப்படுத்திக் கொண்டு கேட்டான்.

'அம்ச்சி... நீங்க என்னபேசறீங்கன்னு உங்களுக்குப் புரியுதா?' என்றான்.

சோஃபாவில் அவன் அமர்ந்திருக்க பூங்கோதை அருகில் நின்றிருந்தாள். எதிர்சோஃபாவில் தாத்தா பாட்டி அமர்ந்திருந்தார்கள்.

திருமண ஏற்பாடுகளைப் பற்றிப் பேச என்று அழைத்த தனால் அவனும் அன்றைக்கு நேரத்திலேயே வந்திருந்தான். எதற்கும் இருக்கட்டும் என்று கோதையையும் அழைத்து வந்திருந்தான். இப்போது வேதனையுடன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.



அவளுக்கும் என்ன பேசுவதென்றே தெரியவில்லை. விழித்தாள்.

'ஆமடா! அந்த விஜயா கல்யாணத்துக்கு வரக்கூடாது... அதுஒண்ணுக்கு மட்டும் ஒத்துக்க... கல்யாணத்தை ஜாம் ஜாம்ன்னு நடத்திப் போடறேன்' என்றார் திருநாவுக்கரசு.

மதுசூதனன் சற்றுப் பொறுமையாகவே கேட்டான்.

'ஏன்... அப்படி?'

'ஏன்னா... அவ என்ற மக வாழ்க்கையைக் கெடுத்தவ...'

'அம்ச்சி! நடந்த எதுக்கும் விஜிம்மா பொறுப்பில்லே' என்றான் மறுபடியும் பொறுமையாக.

'இல்லையாக்கும் பின்னே? உங்கப்பன் துரோகத்துக்குத் துணை போனவதானே? இன்றைக்கு என்ற மக நினை வில்லாம இருக்காளே அதக்கு யாரு காரணம்!' என்றார் கடுமையான கோபக் குரலில்.

மதுசூதனன் ஒரு நிமிடம் பாட்டியைத் திரும்பிப் பார்த்தான். பிறகு முகத்தில் உறுதி தெரியத் தனது தாத்தாவை நேரடியாகப் பார்த்தான். பின் சொன்னான்.

'இன்னைக்கு எங்க அம்மா சுய நினைவு இல்லாம இருக்கறதுக்கு ஒரு காரணம் எங்கப்பான்னா... இன்னொரு காரணம் நீங்க...! நீங்க ரெண்டு பேரும்' என்றான்.

பெரியவர்கள் இருவரும் திகைத்துப் போனார்கள். அவன் மேலும் தொடர்ந்தான்.

'இத்தனை நாள் நான் இப்படி யோசிக்கலே... ஆனா, இன்னைக்கு யோசிக்கறேன். இத்தனை நாள் கழிச்சு, பதினெட்டு வருஷம் பாசத்தைக்கொட்டி என்னை வளர்த்து

உங்ககையிலே கொடுத்த அம்மா மேலே இத்தனை வன்மம் காட்டறீங்களே! அதுவும் இந்த வயசுல... மனசு பக்குவ மாயிருக்க வேண்டிய இந்த வயசுல... அப்ப... எங்கப்பாவை எப்படி நடத்தியிருப்பீங்க? ஏன் அவருக்குக் கோபம் வந்ததுன்னு... இப்பப் புரியுது!' என்றான்.

எழுந்து நின்றான்.

'அம்ச்சி... எங்கப்பா... செஞ்சது தப்புத்தான். ஆனா, புருஷன் வீட்டுக்கு அனுப்ப வேண்டிய மகளை வீட்டுல வச்சுகிட்டு அழிச்சாட்டியம் செஞ்சீங்களே... அந்த மன அழுத்தமும் சேர்ந்துதான் எங்கம்மா... இந்த கதி யானாங்க...'என்றான்.

'அப்ப... உங்கப்பன் செய்தது தப்புன்னுதானே... எங்களோட... வந்து இருக்கறே?' என்றார் தாத்தா.

அவன் பெருமூச்சுடன் மறுபடியும் அமர்ந்தான்.

'அம்ச்சி... ப்ளீஸ்... அன்டர்ஸ்டான்ட் பண்ணிக்குங்க... உங்க சொத்துக்காகவோ, எங்க அப்பாவைத் தண்டிக் கறக்காகவோ நான் இங்க இருக்கலை. வயசான காலத் துல... உங்க தனிமையும் என்னைப் பாதிச்சுது. நானும் உங்க ரத்தம்தானே... உங்களுக்குத் தேவையான காலத் துல... நானாவது கூட இருக்கணும்னு... நெனச்சேன்... இருந்தேன்.'

தாத்தா... ஒன்றும் பேசவில்லை முகம் இறுக அமர்ந் திருந்தார்.

'அம்ச்சி! விஜிம்மாவை விட்டுக் கொடுக்கமாட்டேன் அம்ச்சி' அவங்க வந்தாத்தான் கல்யாணம் நடக்கும். இல்லேன்னா... நானும்... பூங்கோதையும் இப்படியே இருந்



துட்டுப் போறோம். என்ன கோதை?' என்றான் அவளிடம் திரும்பி.

அவள் மௌனமாகத் தலையாட்டினாள்.

'சரி... வா! நான் உன்னை டிராப் பண்றேன்!' என்று அவளை அழைத்துப் போகிற பேரனை ஒரு வித அதிர்ச்சி நிறைந்த பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தார் தாத்தா.

★ ★ ★

'ஹலோ 'லாயரு மதுசூதனன் இல்லீங்களா?' என்றது குரல்.

'இல்லீங்களே! வெளிய போயிருக்காரு என்றாள் ரிசப் ஷனிஸ்ட்.

'நல்லதாப் போச்சு. அந்த... பூங்கோதைப் பொண்ணு இருந்தா... கூப்பிடுங்க...' என்றது குரல்.

ரிசப்ஷனிஸ்ட் சிரிப்புடன், 'பூங்கோதைப் பொண்ணே! இங்க... வா...' என்று ரிசீவரைக் கொடுத்தாள்.

''யாரு...!' என்று ஜாடையிலேயே கேட்டாள் பூங்கோதை.

'தெரியலை...!' என்று உதட்டைப் பிதுக்கினாள் ரிசப்ஷ னிஸ்ட்.

'கோதை! நான்... விஜியா... பேசறேன்...' என்று குரல் கேட்கவும் வெலவெலத்துப் போனாள்.

'ஆன்ட்டி... அவரு... வெளியே போயிருக்காரு...' என்று கூற.

'இல்ல கண்ணு... உன்றகிட்டதான் பேசணும்...' என்றார்.





'ஆன்ட்டி... அப்ப என் செல்போன்ல... கூப்பிடுங்க' என்று தனிமை நாடினாள்.

'அம்மிணி! என்னொன்னு தெரியலை. மதுத்தம்பி... ரெண்டு மூணு நாளா ஒரு சுரத்தில்லாமயே பேசறான்... என்னாச்சும் பிரச்சினையா?' என்றார் அக்கறையாக.

பூங்கோதை தயங்கினாள்.

'பரவால்ல... சாமி... சொல்லு! பாவம்... இந்தச் சின்ன வயசுல... அவனை ஆளாளுக்குப் பந்தாடறாங்க... எனக்கு வேதனையா இருக்கு' என்று அவர் உருக்கமாகச் சொல்லவும் கோதை மனம் இளகி விட்டாள்.

நடந்ததைச் சொன்னாள்.

'ஓ...!' என்று உள் வாங்கிக் கொண்டாள் விஜயா.

'ஆன்ட்டி... நல்லா யோசிச்சு... நீங்கதான் முடிவு சொல்லோணும்... உங்களுக்கு எல்லா விதத்திலும்... நான்... ஹெல்ப் பண்றேன்' என்றாள்.

அப்போது விஜயா ஒரு வேண்டுகோள் வைத்தார்.

'சரி... ஆன்ட்டி! நான் ஏழு மணிக்கு அங்கே... இருப் பேன்' என்றாள். ஒரு வித நிம்மதியுடன் போனை வைத் தாள்.

★ ★ ★

'ஹலோ!' என்று அந்தப் பக்கம் குரல் கேட்டதுமே... பூங்கோதை புரிந்து கொண்டாள்.

'பாட்டிம்மா' யாரோ புதுக்குரலா இருக்கு. உங்ககிட்டே பேசணுமாமா?' என்று கொடுத்தாள் பூங்கோதை. மருதாத்தாள் வாங்கிக் கொண்டாள்.



அதே நேரத்தில் தானும் ரிசீவரை எடுத்திருந்த திருநாவுக் கரசு இடையிலே வைத்தால் தெரிந்துவிடும் என்பதற்காக ரிசீவரைக் காதில் வைத்துக்கொண்டிருந்தார். ஆனால் அவரே அடுத்து வந்த குரலும் பெயரும் கேட்டுச் சற்று அதிர்ந்தார். முதலில் கோபமானார். பிறகு என்னதான் நடக்குது பாப்போமே! என்று தொடர்ந்து கேட்டார்.

'அம்மா!' என்றார் விஜயா தயக்கத்துடன்.

'அம்மா... நான் உங்களைத் தாயா நெனச்சுத்தான் உங்ககிட்டே பேசறேன். போனை வச்சுப் போடாதீங்க... நான் விஜயா...' என்றார்.

மருதாத்தாள் மௌனம் சாதிக்கவே தொடர்ந்து பேசினார்.

'அம்மா! வயசானவங்க... நீங்க... மகளுக்கும் உடம்பு சரியில்லாமப் போச்சேன்னு வருத்தப்பட்டுக்கிட்டிருப்பீங் கன்னுதான்... நான் மதுசூதனனை வளர்த்தேன். அவருதான்... சொன்னாரு பதினெட்டு வயசு வரைக்கும் நடந்து போனதை யெல்லாம்... சொல்லி மதுவைக் குழப்ப வேண்டாம். நிம்மதியா வளரட்டும். அதுக்கப்புறம் அவனே முடி வெடுக்கட்டும்னாரு. அம்மா! கௌரியக்கா சுயநினை வில்லாமக் கஷ்டப்படறாங்கன்னா, நாங்க அவங்களை நினைச்சு, நினைச்சு வேதனைப்பட றோம். உங்களுக்காகவும் அவங்களுக்காகவும்தான் நான் எப்பவும் தெய்வத்தை வேண்டிக்கறேன்' என்றார் குரல் தழுதழுக்க.

மருதாத்தாள் இறுகிய குரலில், 'விஷயத்தைச் சொல்லு!' என்றார்.

இந்த மட்டில் ரிசீவரை வைத்து விடாமல் பேசுகிறாரே என்று எண்ணிக் கொண்ட விஜயா தொடர்ந்தார்.

'அம்மா... மதுவோட கல்யாணத்துக்கு நா வரக்கூடாதுன்னு சொன்னீங்களாம்...'

'அவன் சொன்னானா?' என்றார்.

'அம்மா! அவன் சொல்லலை. அவன் எப்பவும் உங்களை விட்டுக் குடுத்துப் பேசமாட்டான். அதே மாதிரி எங்களையும் உங்ககிட்டே விட்டுக் குடுத்துப் பேச மாட்டான். தப்பைக் கண்டா நேரடியாக் கண்டிப்பான். அதோட விட்டுருவான்... உங்களுக்குத் தெரியாது. அவங்கப்பாவை எப்படிக் கேள்விகள் கேட்டு வறுத்தெடுத்தாண்ணு...' என்றார்.

'.....'

மூணு நாளா சுரத்தில்லாமப் பேசறானேன்னு நாந்தான் பூங்கோதைகிட்டே கேட்டேன். அம்மா! நான் இப்ப எதுக்குக் கூப்பிட்டேன்னா, எனக்கு மதுவோட சந்தோஷம்தான் முக்கியம். நீங்க என்னை வரதுக்கு... அனுமதிக்கறேன்னு சொல்லிகிட்டே கல்யாண ஏற்பாடு செய்ங்க... கடைசியில் நான் வராம இருக்கறதுக்கு ஏதாவது வழிய பண்ணிக் கறேன். நீங்க பெரியவங்க... இதுவரைக்கும்... நீங்க என் கிட்டே எதுவும் எதிர்பார்த்ததில்லை... இப்படியாவது உங்க கட்டளையை நிறைவேத்தறேன்' என்றாள். தேம் பினாள்.

மருதாத்தாள் திகைத்துப் போனார். மனம் நெகிழ்ந்தது. 'அழுகாதே... விஜயா!' என்றார்.

'அம்மா... அந்தச் சின்னப் புள்ளை பதினெட்டு வயசிலருந்து... இந்த விவரம் தெரிஞ்ச காலத்திலிருந்தே... வயசுக்கு மீறிப் பெரியவனாயிட்டான். அத்தனை பாரம் சுமந்துட்டான். பெத்த தாயை சங்கிலிக்கட்டில பாத்து என்ன வேதனைப் பட்டிருப்பான். ஆனா, விஜிம்மா உன்னோட



பாசம் எனக்குப் புரியுதுன்னு... சொன்னானே... அது போதும்... அந்த ஒரு வார்த்தை நான் அறிஞ்சும்... அறி யாமலும் செய்த எத்தனையோ பாவத்தைக் கழுவிப் போடுச்சு. இனியாவது... அவன் மனசுக்குப் புடிச்ச பொண் ணோட அவனுக்கு நிம்மதியான வாழ்க்கை அமையட்டும்' என்றார்.

மருதாத்தாளும் அழுதார். 'நீயும் நல்லவளாத்தான்... இருக் கறே! என்ன செய்ய? அந்த மனுஷன் பிடிவாதம் பிடிக் கறாரே. எல்லாம் தலையெழுத்து... சரி... நான் வைக்கறேன்...' என்றார்.

'அம்மா! இப்பக் கூட என்னை மன்னிச்சா... நான் வந்து உங்க ரெண்டு பேருக்கும், அக்காவுக்கும் எல்லாப் பணி விடையும் செஞ்சு... என்ற பாவத்தைக் கழுவிக்குவேன்...' என்றார் வைத்தார்.

திருநாவுக்கரசும் சத்தமில்லாமல் வைத்தார். முகத்தில் சிந்தனை ரேகைகள் ஓடியது. கண்களில் கண்ணீர் வழிந்தோட மருதாத்தாள் பூங்கோதையிடம் விஷயம் பகிர்ந்து கொள்ள அவளும் சமயம் பார்த்து 'பாட்டி! மதுவுக்கு விஜயாத்தையை ரொம்பப் பிடிக்கும். ரொம்பப் பாசமா வளர்த்திருக்காங்க. எங்கம்மா, என்னைக் கைநீட்டி அடிச்சதில்லே கோதை. ஆனா, ஏதாவது தப்பு செஞ்சா போடா என்கிட்டே பேசாதேம்பாங்க... அவ்வளவுதான். துடிச்சுப் போயி மன்னிப்புக் கேட்பேன். அப்புறம் கேளு... ரெண்டு நாளைக்கு நான் கேட்டதெல்லாம் செஞ்சு குடுப்பாங்கன்னு சிரிப்பாரு. நடந்ததுல அவங்க தப்பு எதுவுமில்லே... அவங்களும் சூழ்நிலைக்கு பலியானவங் கம்பாரு...' என்றாள்.

'ஆமாடி புள்ளே! அன்னைக்கு அவங்க தாத்தானை அவன் கேட்டது கரெக்ட்டுதான். தப்பு... எங்க மேலயும்தான் இருக்கு.



கட்டிக் குடுத்த புள்ளைய வூட்டுல வச்சுகிட்டு அனுப்பாம... இருந்தது. தப்புதானே... சரி... இப்ப... என்ன செய்யறது... அதைச் சொல்லு' என்று தன்னிடம் யோசனை கேட்கிற பாட்டியை அவள் வியப்பாய்ப் பார்த்தாள்.

பிறகு சற்று யோசித்தாள்.

'பாட்டி... தாத்தாவும் ரெண்டு நாளும் யோசனையிலதான்... இருக்காங்க... பேசிப் பாருங்களேன்...' என்றாள்.

'ஐயோ! அந்த மனுஷன் வுளுந்து கடிப்பாரே!' என்றார். 'சரி! எதுக்கும் நீயும்... வா!' என்றார்.

'நானா?' என்று பயந்தாள் கோதை.

'அட.... ஆமா! நீ முன்னால போயி எதையாவது ஆரம்பி... நான் பின்னாடி வாரேன்' என்றார்.

போனார்கள்.

பூங்கோதை மென்று விழுங்கியபடி 'தாத்தா! பாட்டி உங்ககிட்டே ஏதோ பேசோணும்கிறாங்க...' என்றாள்.

அவர் எந்த வித உணர்வையும் காட்டாமல் பார்க்க பாட்டி அதையே சாதகமாக எடுத்துக் கொண்டு,

'அந்த விஜயா... பேசினா...' என்று ஆரம்பித்துப் படபடவென்று கொட்டினார்.

'ஓஹ்ஹோ' அவ நிச்சயமா வர மாட்டாளாமா? அப்ப டீன்னா... பாக்கலாம்' என்றார்.

அறைவாசலில் அரவம் கேட்டுத் திரும்பினார்கள். மதுசூதனன் நின்று கொண்டிருந்தான். அவன் முகத்தைப் பார்த்தாலே அவன் எல்லாவற்றையும் கேட்டு விட்டான் என்பது தெரிந்தது.



'அப்படியெல்லாம் பெருசா திட்டம் போடாதீங்க. அம்ச்சி... விஜிம்மா வர்லைன்னா... கல்யாணத்தை நிறுத்திப் போடு வேன்...' என்றான்.

பிறகு கோபமாகத் திரும்பி பூங்கோதையிடம் 'ஏய்! நாந்தான்... இப்படியாவது நாம ஒரு கல்யாணம் பண்ணிக்க வேண்டியதில்லேன்னு சொன்னேனே! திட்டமா... போடறீங்க' என்று எரிந்து விழுந்தான்.

அவள் பயந்து விட்டாள்.

'ஐயோ! நான் ஒண்ணுமே சொல்லலே. விஜயாத்தைதான்... இந்த ஐடியா குடுத்தாங்க...' என்றாள்.

'அவங்களா? இருக்கட்டும். அவங்களை பேசிக்கறேன்... நீ கிளம்பு. ஊர்ல நமக்கு ஒரு முக்கியமான வேலையிருக்கு' என்றான். இழுத்துக் கொண்டு நகர்ந்தான்.

இரண்டு மூன்று அடிகள் எட்டு வைத்தவன் திரும்பி நின்றான்.

'அம்ச்சி! நான் ஒரு கேள்வி கேட்கறேன். பதிலை யோசிச்சுப் பாருங்க. நான் வராட்டியும் பரவால்லே. மகன் நல்லா இருந்தாப் போதும் நெனக்கிற அந்தத் தாய் மனசு எங்கே? பேரனுக்குக் கல்யாணமே ஆகாட்டியும் பரவாயில்லே. ஆனா அவங்க வரக்கூடாதுன்னு நெனக்கிற நீங்க எங்கே?' என்றான்.

போய்விட்டான்.

நான்கு அறை வாங்கினாற் போல் நின்ற திருநாவுக்கரசு திரும்பி மனைவியைப் பார்க்க அந்த அம்மாள் 'அவன் கரெக்குட்டாத்தான் கேட்டுப் போட்டுப் போறான்...' என்றார்

மேலும் அதிர்ந்தார்.



## 24

மிக இறுக்கமான முகத்துடன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான் மதுசூதனன்.

பூங்கோதை அவனிடம் பேசவே பயந்துபோய் அமர்ந்திருந்தாள். இருந் தாலும் வெகுநேரம் மௌனத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாதவளாய்,

'எங்கே போறோம்?' என்றாள்.

அவன் திரும்பிக் கோபமாய்ப் பார்த்தான்.

'ம்...?' டூயட் பாடறதுக்கு இடம் தேடிக்கிட்டிருக்கேன்...' என்றான்.

அவள் அமைதியாகி விட்டாள். சற்று தூரம் போனதும் 'களுக்'கென்று சிரித்தாள்.

'என்ன்?' என்றான் கடுப்பாக.

'இல்லே! கோபத்திலயும் நீங்க அழகா இருக்கீங்க' என்றாள். ஓரக்கண்ணால் பார்த்தபடி.

'ஹேய்! நீ வேற... இப்படி ஓரக்கண்ணாலயெல்லாம் பாக்காதே. பெருசுக வேற நம்மளைப் படுத்தியெடுக்கறாங்க.' என்றவன் சட்டென்று சிரித்து விட்டான்.

கார் மெதுவாக ஓட ஆரம்பித்தது.

நிதானத்துக்கு வந்து விட்டான் என்பது புரிய அவள் ஆசுவாசமானாள்.

அவன் ஆழ்ந்த குரலில் கேட்டான்.

'ஏன்... கோதை! ஒரு ஆணும், பொண்ணும் இந்த ஃபிஸிகல் அட்ராக்ஷனை ஜெயிச்சு இருக்க முடியாதா?' என்றான்.



அவள் ஒன்றும் பேசாமல் அவனைத் திரும்பிப் பார்த் தாள்.

'இல்லே! தாத்தா... பாட்டி கோபமும் ஒரு வகையில் நியாயம்தான். ஒரு வைஃப் வாயில்லாப் பூச்சியாத் தனக் காகத் தவிச்சுகிட்டிருக்கிறாங்க நெனப்போ... நான் ஒருத்தன் குழந்தையா இருக்கேன்ற நினைப்போ... இருந்திருந்தா... எங்கப்பா... இன்னொருத்தியைத் தொட்டிருப்பாரா? அப்படியென்ன... சபலம் கண்ட்ரோல் செய்ய முடியாத அளவுக்கு இப்பப் பார்... நான் உன்னை ரொம்ப நேசிக்கறேன். அப்படீங்கறப்ப.... நீ என் பக்கத்துல இருந்தாலும்... இல்லாட்டாலும்... எனக்காக ஒருத்தி இருக்கறாங்கற... எண்ணம் இருக்கணுமில்லே!' என்றான்.

அவள் தான் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்பதை உணர்ந்து அமர்ந்திருந்தாள்.

மெதுவாகத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். 'ஆனா, அத்தனை வெறுப்பையும் விஜிம்மா... சுமக் கறாங்க...' என்றான் வருத்தத்துடன் பிறகு அவளைத் திரும்பிப் பார்த்து.

'ஹேய்! கோதை... நான் என்னுடைய ஆங்கிள்லயே பேசிகிட்டிருக்கேன். உன்னோட ஒபினியனை சொல்லு. பேசாம ரெஜிஸ்டர் மேரேஜ் செஞ்சுக்கலாமா... சொல்லு! உன்னுடைய கருத்துக்கும் நான் மதிப்புக் கொடுக்கணு மில்லே!' என்றான்.

'வேண்டாம்!' என்று குறுக்காகத் தலையசைத்தாள்.

'ஏன்?' என்பது போல் அவன் பார்க்க.

'நீங்க... விஜயாத்தைக்காக வாதாடறது எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. அது மட்டுமில்ல, அப்பா தாத்தா... பாட்டி



எல்லாத்துகிட்டயும் பாரபட்சமில்லாம அவங்க நியாயங் களையும் தப்புக்களையும் சுட்டிக் காட்டறீங்களே! அது பிடிச்சிருக்கு... நீங்க சொன்ன மாதிரி... ஃபிஸிகலா சேர்றது மட்டும்தானா... வாழ்க்கை! மனசால... வாழ்றதும்தான் வாழ்க்கை. பொறுக்கலாம்... எத்தனை நாளானாலும்... பொறுக்கலாம்...' என்றாள்.

அவன் நெகிழ்ந்து போய் அவளைப் பார்த்தான். 'தாங்க்ஸ்... கோதை!' என்றான். அவள் தொடர்ந்தாள்.

'நான் ஏன் பூவேந்தனை ரெண்டாம் தடவை கேட்டப்ப முகத்தில் அடிச்ச மாதிரி வெளியே போன்னு சொன்னேன் தெரியுமா? அவன் கல்யாணத்தை உடல் சார்ந்த விஷயமா சௌகரியங்கள் சார்ந்த விஷயமா... நினைச்சான். தீபா... ஒத்து வர்லைன்னவுடனே... என் மேல கருணை வந்திருச்சாம்... ஒருவேளை... தீபா... ஒத்து வந்திருந்தா? இவங்கள்லாம்... வெறும் சபலக்காரர்கள் மட்டுமில்லே! சுயநலவாதிகள். ஆனா, இப்ப வெக்ஸ் ஆயி அலையறதைப் பார்த்தா... பாவமாத்தான் இருக்கு...' என்றாள்.

'அது சரி... அவனை விடு. இப்ப சொன்னியே காத்திருக்கறதுன்னு.... அது நிஜம்தானே?' என்றான்.

அவள் உறுதியாக ஆமெனத் தலையசைத்தாள்.

'அதுவரைக்கும்... அப்படி... இப்படின்னு கொஞ்சம்... அனுமதிப்பியா?' என்றான் குறும்பாக.

அவள் அவனை அன்புடன் பார்த்தாள். 'நீங்க கேட்டு... நான் மறுக்க முடியுமா? ஆனா... இப்படி... யோசியுங்க... அதுவும் கூட இல்லாமல் நம்மால இருக்க முடியாதா?' என்றாள்.

அவன் யோசிப்பது போல் தெரிந்தது. 'பிறகு, ஏன் முடி யாம? முடியும்' என்றான்.



புன்னகைத்தாள்.

'நீ கண்ணுக்கு குளிர்ச்சியாய் எதிரில நடமாடிக்கிட் டிருந்தா அதுவே போதும் தேவி தரிசனத்துலயே சார்ஜ் பண்ணிக்க வேண்டியதுதான்' என்று விளையாட்டுப் பேசிச் சிரித்தான்.

பிறகு பேச்சை மாற்றி 'நாம எங்கே போறோம்னு கேட் டயே?' என்றான்.

'வேண்டாம்... பயப்படுத்தாதீங்க... நாம டூயட் பாடி நாட்டைக் கலக்க வேண்டாம். எனக்கு வேற இப்பத்த கதாநாயகிங்க மாதிரி டப்பாங்குத்து டான்ஸெல்லாம் ஆட வராது' என்றாள்.

அவன் சிரித்தான். பிறகு தாங்கள் எங்கே எந்த நோக்கத்திற்காகப் போகிறோம் என்பதைச் சொன்னான்.

அவள் நிஜமாகவே மலைத்துப் போனாள்.

★ ★ ★

எதுக்காக என்னைப் பாக்கணும்னீங்க!' என்றாள் அந்தப் பெண் தீபா.

'உங்ககிட்டே... சில விஷயங்கள் பேசணும்னுதான்' என்றான் மதுசூதனன்.

'ஓ!' உங்க ஆபீஸ்லதான் அந்தப் பொண்ணு வேலை செய்யறாளாம்...' என்றாள்.

'ஆமா! அண்ணி, சில விஷயங்கள் கடந்து போனவைகள். அதுகளை நாம அலசிப் பார்த்து நிகழ்கால வாழ்க்கையைக் கெடுத்துக்கக் கூடாது' என்றான்.

'அது எப்படி முடியும்? அவர் செஞ்சது ஏமாத்து இல்லையா?' என்றாள் கோபமாக.

அவன் தன் வாழ்க்கையைச் சுருக்கமாகச் சொன்னான். அம்மா அப்பாவின் நிராகரிப்பில் பைத்தியமே ஆகிப் போனது பற்றிச் சொன்னான். விஜிம்மாவைப் பற்றிச் சொன்னான்.

'நியாயப்படி பார்த்தா... நான் எங்க விஜிம்மாவை... வெறுத்திருக்கணும். ஆனா, தனி மனுஷியா... ஒரு அன்பு தெய்வமா... அவங்க என் மனசுல இடம் பிடிச்சுட்டாங்க' அது மாதிரி... நீங்க... பூவேந்தனை... மன்னிச்சிடுங்க... வாழ்க்கையை சீர்திருத்திக்குங்க... இல்லேன்னா... அவன் வெறி பிடிச்ச மிருகம் மாதிரி ஆயிடுவான்' என்றான்.

தீபா பெருமூச்சு விட்டாள். 'நானும் ஒரு நேரம் அப்படித் தான் நினைக்கிறேன். ஆனா, இவரு செஞ்ச துரோகத்தால அந்தப் பொண்ணு மனசு எவ்வளவு தூரம் நொந்து போயிருக்கும்னு நெனச்சா... எனக்குக் கோபம்தான்... வருது...' என்றாள்.

'அண்ணி! அவங்க சந்தோஷமாத்தான் இருக்காங்க...'

'அதெப்படி... உங்களுக்குத் தெரியும்!' என்றாள்.

'ஏன்னா! நான்தான் அவங்களைக் கல்யாணம் செஞ்சுக்கப் போறேன். முடிவாயிடுச்சு...' என்றான்.

திரும்பிக் காரில் அமர்ந்திருந்த கோதையைக் கையசைத்து அழைத்தான்.

அவள் எழுந்து வந்தாள்.

'சொல்லு' என்றான்.



'தீபா... மேடம்! நடந்ததையெல்லாம் மறந்து மன்னிச்சிடுங்க... எனக்கு எந்த விதத்திலும் வருத்தமில்லே. எல்லாம் ஏதோ ஒரு நன்மைக்குத்தான் நடந்திருக்கு. இவரை மாதிரி ஒருத்தர் எனக்குக் கிடைக்கணும்னு இருந்திருக்கு... நான் ஹாப்பியாத்தான் இருக்கேன். இனி... நீங்களும் சந்தோஷமாய் இருங்க' என்றாள்.

தீபா ஆழ்ந்து பார்த்தாள். 'இந்தப் பொண்ணைப் போல கனகாவும் இருந்திருக்கலாமே!' என்று தோன்றியது.

பூங்கோதை தொடர்ந்தாள்.

'அதுக்காக... ஒரே நாள்ல மாறுங்கன்னு சொல்லலே. யோசியுங்க... கல்யாணங்கறதுதான்... உண்மையான வாழ்க்கை ஒப்பந்தம்... அதனாலே... பூவேந்தனைத் திருத்திக் கொண்டு வர வேண்டியது உங்க பொறுப்பு...' என்றாள். பிறகு திரும்பி மதுசூதனனைப் பார்த்தாள்.

'ஏன்னா அவரு எங்க ரெண்டு பேருக்குமே பிரண்ட்!' என்றாள்.

ஒருவர் ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

விடைபெற்றுக் கொண்டார்கள்.

★ ★ ★

'இப்பப் பாரு வேடிக்கையை!' என்று அவன் பூவேந்தனை போனில் அழைத்த போது பூங்கோதை பதறினாள்.

காரை ஓரமாக நிறுத்தினான்.

'டேய்! நான் மது' என்றான்.

'என்ன?' என்றான் பூவேந்தன் கடுப்பாக.

'நான் இப்ப யாரைப் பாத்துட்டு வரேன்... தெரியுமா? உன் வைஃபை' என்றான்.



பூவேந்தன் அதிர்ச்சியடைந்தான். 'எதுக்கு?' என்றான் விறைப்பாக.

அவன் பேசுவது தெளிவாகக் கேட்டது பூங்கோதைக்கு.

'எதுக்கு? உன் புருஷனை அடக்கி வைம்மா. சும்மா... அடிக்கடி வந்து பூங்கோதையை தொல்லை பண்றான்னு சொல்லத்தான்' என்றான்.

பூவேந்தன் நிஜமாகவே பயந்து போனான்.

'டேய்! நிஜம்மாவா?' என்றான் கலங்கிய குரலில்.

மதுசூதனனுக்குப் பாவமாகிவிட்டது. 'சரி! சரி! பயப் படாதே! அந்த அளவுக்கு நான் நாகரீகம் கெட்டவனாகி ஆகிப்போயிடலை. பூங்கோதை நல்லா சந்தோஷமாத்தா இருக்கா. நடந்து போனதை நினைச்சு உன் வாழ்க்கையைக் கெடுத்துக்காதே... இனிமேலாவது சந்தோஷமாக இருங்கன்னு சொல்லிட்டு வந்தேன்...' என்றான்.

பூவேந்தன் சுத்தமாக இதை எதிர்பார்க்கவில்லை.

'ஓ...!' என்றான்.

மதுசூதனன் மறுபடியும் 'பாரு... வேந்தா! நீ மறுபடியும் வந்து பூங்கோதையைப் பார்த்தையோ, என்னை வந்து பார்த்ததையோ அவங்ககிட்டே சொல்லலை. சொல்லவும் மாட்டோம். இனிமேயாவது உன் லைஃபைக் கரெக்ட் பண்ணிக்கோ...' என்றான்.

'நீ இப்படிச் செய்தது கோதைக்குத் தெரியுமா?'

'அவளும்தான் கூட வந்தா' என்றான். பிறகு சிரித்து 'போதும் உனக்கு இன்னைக்கு இவ்வளவு ஷாக்... போதும்' என்று ஆஃப் செய்தான்.

★ ★ ★



'கருணை காட்டறது வேற ஏமாளியாய் இருக்கறது வேற 'ரெண்டுக்கும் வித்தியாசம் தெரியலையா?' என்று தன்னை வாங்கு வாங்கு என்று வாங்குகின்ற மகனை ஒருவிதமான இயலாமையுடன் பார்த்தாள் விஜயா.

'நான் வேற என்ன செய்யட்டும். சொல்லு!' என்றார்.

'ஒண்ணும் செய்ய வேண்டாம்... பேசாம... இருந் தாப் போதும் எல்லாத்தையும் என்கிட்டே விட்டுடுங்க...' என்றான்.

'நீ என்ன சொன்னாலும் கேக்கறேன். நீ நல்லா இருந்தாப் போதும்' என்று சொல்கிற தன் அன்புத் தாயை அவன் பாசத்துடன் கட்டிக் கொள்வதை பூங்கோதை கண்களில் குறும்பு மின்னப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மற்றவர்களுக்குத் தெரியாமல் அவனும் கண் சிமிட்டிச் சிரித்தான்.

★ ★ ★

அன்றிரவெல்லாம் பூங்கோதை ஆழ்ந்த யோசனையில் இருந்தாள்.

'எவ்வளவு அற்புதமானவன் இந்த மதுசூதனன்' என்று தோன்றியது.

எல்லா இடங்களிலும் சிறியவர்கள் தவறு செய்யப் பெரியவர்கள் திருத்துவார்கள். ஆனால், இவரோ பெரியவர்கள் தவறுகளைத் திருத்துகிறார்.

தொழிலிலும் கொடிகட்டிப் பறக்கி... ர். அது எப்படிப்பட்ட செல்வாக்குப் பெற்றவராக இருந்தாலும் சரி, 'தப்பை ஒத்துக்குங்க... தண்டனை குறைச்சு வாங்கித்தரேன்... வேற

எதுவும் செய்ய முடியாது' என்று கட்... அண்ட் ரைட்டாகச் சொல்லி விடுவான். கோடி கோடியாய்க் கொடுத்தாலும் மறுத்தால் மறுத்ததுதான். அப்படிப்பட்டவன் தன்னிடம் கெஞ்சுவதும், கிறங்கி நிற்பதும் அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

லேசாக வார்த்தைகளில் விளையாடுவானே தவிர அத்து மீறியதில்லை. ஆனால், அத்தனைக்கும் தான் பின்னால் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்பது புரிந்தது.


அதே சமயத்தில் திருநாவுக்கரசும் மருதாத்தாளும் உறங்காமல் அமர்ந்திருந்தனர். மாற்றி மாற்றிப் பேசியதையே பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு வழியாக தாத்தா ஒரு முடிவுக்கு வந்தார்.

'ஆனா, இன்னும் ஒரு கேள்வி பாக்கி இருக்கு... புள்ளே! நாளைக்குக் கேட்ற வேண்டியதுதான்.'

'அப்புறம்' என்றார் மருதாத்தாள்.

'அப்புறம் என்னத்தை, பதில் எதுவா இருந்தாலும்... நம்ம முடிவை மாத்த வேண்டாம் புள்ளே!' என்றார்.



25

விசிலடித்துக் கொண்டே தன் அலுவலகத்தின் உள்ளே நுழைந்தான் மதுசூதனன்.

அவன் வருவதைக் கண்டு பூங் கோதை எழுந்து நின்றாள்.



எதேச்சையாகத் திரும்பியவனின் பார்வை பூங்கோதையின் மேல் விழுந்தது.

நின்றான். கண்கள் விரியப் பார்த்தான்.

தழையத் தழையப் பின்னலைப் பின்னி, அழகான முத்துத் தொங்கட்டான் அணிந்து 'ஸ்கை ப்ளு' என்பார்களே அப்படி நீல வண்ணத்தில் உடையணிந்து புது மெருகோடு நின் றிருந்தாள் பூங்கோதை.

'அவன் தன்னிலை இழந்தவன் போல் அருகில் போய் நின்றான். விழுங்கினாற் போல் பார்த்தான்.

அவளும் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

'ஹேய்! என்ன இப்படி அசத்தறே?' என்றான் கிறக்கக் குரலில்.

அவள் மெல்லிய குரலில் 'நீங்கதானே சொன்னீங்க. கண்ணுக்குக் குளிர்ச்சியா தரிசனம்... தந்தாப் போதும்னு. அதான்... என்னால முடிஞ்சது... இப்படியாவது உங்களை சந்தோஷமா வச்சுக்கலாம்னுதான்...' என்றாள்.

அவன் பேச்செழாமல் கிறங்கிப் போய் நின்றான்.

'ம்... பைத்தியமாய்... அடிக்கறே?' என்றான்.

அவள் குறும்பாக ஏதோ சொல்ல வாயெடுத்தவள் சட்டென்று வாயை மூடிக் கொண்டாள். அவன் புன்னகைத் தான்.

'நீ என்ன சொல்ல வந்தேன்னு... எனக்குத் தெரியும். அப்புறம்... குடும்பமே பைத்தியக்காரக் குடும்பன்னு சொல்லுவாங்கன்னுதானே சொல்ல வந்தே?' என்றான்.



அவள் சிக்கிக் கொண்டவள் போல் விழித்தாள்.

'ஆனா, எங்கம்மா... செய்த பைத்தியக்காரத் தனத்தை நான் செய்ய மாட்டேன். அப்புறம் எதுக்குப் பைத்தியம் ஆகறேன்?' என்றான்.

மறுபடியும் அவள் விழித்தாள்.

'எங்கம்மா, எங்கப்பா மேலே வச்சிருந்த பிரியத்தை சரியா வெளிய காட்டத் தெரியாம பைத்தியக்காரத்தனம் செய்தாங்க. ஆனா, நான் அப்படியில்லே... அம்மிணி... வித விதமாய்க் காட்டுவேன்' என்றான்.

அவள் புன்னகையுடன் அவசர அவசரமாக மேஜை மேல் இருந்த பேப்பர்களை அடுக்கினாள்.

'ஆனா, ஒரு விஷயத்தில பைத்தியம்தான்' என்றான்.

அவள் மறுபடியும் நிமிர்ந்து பார்க்க, 'உன்மேல பைத்தியம் தான்' என்றான்.

'ஐயே! போதுமே விசுவோட வசனம் மாதிரி... பைத்தியம்... பைத்தியம்னு கடைசியில எனக்குப் பைத்தியம் பிடிச்சுடும் போல இருக்கு...' என்று பூங்கோதை சிரிக்க.

'உனக்கும் பிடிக்கலாம்... ஆனா, அது என் மேலயா இருக்கணும்...' என்று நெருங்கி நிற்க.

'போதும்... மது... இது ஆபீஸ்... வேலை நிறைய இருக்கு...' என்றாள் பூங்கோதை. பொய்க் கோபத்துடன்.

அப்போது சடாரென்று கதவைத் திறந்து கொண்டு காந்தி வந்தார்.

பூங்கோதை திடுக்கிட்டாள். ஆனால் மது அலட்டிக் கொள்ளாமல் நின்றான். அவர்கள் நெருக்கமாக நிற்கிற விதம் பார்த்து.



'ஓ! ஐம் சாரி!' என்று அவர் தடுமாற.

'பரவாயில்லை... ஒண்ணுமில்லே காந்தியண்ணா நம்ம வருங்கால மனைவி இது ஆபீஸாக்கும். பாத்து நடந் துக்குங்கன்னு நமக்கு அட்வைஸ் செஞ்சுட்டிகிட்டிருக் காப்ல...' என்றான் இயல்பாக. சிரித்துக் கொண்டு,

காந்தி ஒரு நிமிடம் விழித்து விட்டு பிறகு மகிழ்ச்சியாக.

'அப்படியா... விஷயம்?' என்றார்.

'ம்...!' என்றான் மதுசூதனன் மறுபடியும்.

'எப்பக் கல்யாணம்?' என்றார் காந்தி.

'அது... ஏதோ... கொஞ்சம்... டைம்... சரியில்லை யாம்... கொஞ்சம் தள்ளிப் போடலாம்கறாங்க தாத்தா... பாட்டி' என்று பேசிக் கொண்டே தனது இருக்கைக்கு அவன் போக.

'இருப்பா... வந்தர்றேன்!' என்று காந்தி மகிழ்ச்சியாக வெளியே போனார்.

'ஐயய்யோ, இப்ப எதுக்கு அவங்ககிட்டே சொன்னீங்க...? இப்பப் போய் எல்லாத்துக்கும் சொல்லப் போறாரு...' என்று பூங்கோதை பதற.

'விடு... எல்லாருக்கும் எப்படியிருந்தாலும் தெரியத்தானே போகுது?' என்றான் அலட்டிக் கொள்ளாமல்.

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் மொத்த அலுவலகமும் அங்கே கூடிவிட்டது.

'அழுத்தக்காரி! எங்கிட்டயே சொல்லவே இல்லை!' என்று ராதா கேலி செய்தாள்.

'அதென்ன, உங்களுக்கு மட்டும் சார்கிட்டே இவ்வளவு சலுகைன்னு நெனச்சேன்... இப்பத்தானே புரியுது...!' என்றாள் ரிசப்ஷனிஸ்ட்.

'இத்தனை பேர் அசிஸ்ட் பண்றதுக்கு இருக்கோம்... எதுக்குடா... பி.ஏன்னு நெனச்சேன். அது பின்னா லயே அலையறதுக்குன்னு இப்பதானே புரியுது!' என்றான் ராகவன்.

'சும்மாயிரப்பா... ராகவா!' என்றான் மதுசூதனன்.

'அதெப்படி சும்மாயிருக்கறது? இப்பத்தானே நாங்க மிரட்ட முடியும்? கேக்கறதெல்லாம் கிடைக்கும்?' என்றார் காந்தி.

'அண்ணா, நீங்க கூடவா?' என்றாள் பூங்கோதை. வெட்கத்துடன்.

'என்ன வேணும்?' என்றான் மதுசூதனன்.

'என்ன கேப்போம்? ட்ரீட்தான்.'

'சினிமா கூட்டிட்டுப் போங்க...' என்றான் ராகவன்.

'சரி இவ்வளவுதானே 'நாளைக்கு மாட்னி சினிமா! பகல் சாப்பாடு... போதுமா?' என்றான்.

'ம்...' என்றார்கள் மகிழ்ச்சியாக.

'சரி... வேலையைப் பாக்கலாமா?' என்றாள்.

'ம்... ஆனா, பூங்கோதை ட்ரீட் எப்ப எடுக்கறது?' என்றார்கள்.

'சரி... இப்பப் பத்தரை மணிக்கு ஸ்வீட், காரம், காபி வாங்கித் தர்றேன்' என்றான்.



அன்றெல்லாம் பூங்கோதையை அவர்கள் செய்த கேலிக்கு அவள் வெட்கப் புன்னகையையே பதிலாகக் கொடுப்பதை அவனும் ரசித்துக் கொண்டான்.

மாலை அவனே காரில் அழைத்துப் போனான். அப் போது அவள் கேட்டாள். 'எதுக்கு இப்படி லீக்... செஞ்சீங்க!' என்று.

'எல்லாம்... காரணமாத்தான்' என்று சிரித்தான்.

அவளுக்குப் புரிந்தது. விஷயம் பரவினால் தாத்தாவுக்கு ஒத்து கொள்வதைத் தவிர வேறு வழியிருக்காது என்று நினைக்கிறான் என்று புரிந்தது.

'ஐயோ! பயங்கரமான ஸ்கீமர்!' என்றாள்.

'எனிதிங் இஸ் ஃபேர் இன் லவ் அண்ட் வார்' என்றான்.

அவள் அதற்கும் புன்னகைப்பதை மனம் நிறையப் பார்த்துக் கொண்டான்.

★ ★ ★

பத்து மணிக்குத்தான் வீட்டிற்குள் நுழைந்தான்.

அதுவரையிலும் அம்மாவின் அறைக்குப் போய் கௌரியின் கையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான்.

பூங்கோதை அவனுக்குப் பிடித்த டிபனாய் செய்து எடுத்துக் கொண்டு வந்து அவனுக்கும் கொடுத்து விட்டு கௌரியையும் சாப்பிட வைப்பதைப் பார்த்துக் கொண்டு அங்கேயே நேரம் செலவழித்தான்.

பூங்கோதை டிபன் செய்யப் போயிருந்தபோது கமலக் காவும், நாகம்மாவும் மாற்றி மாற்றி அவளை நல்ல பெண் என்று புகழ்வதை ஒருவிதப் பெருமையுடன் கேட்டுக்



கொண்டான். அதற்குப் பிறகு பத்தரை மணிக்குத்தான் கிளம்பினான்.

புறப்படும்போது பூங்கோதையிடம் சொன்னான்.

'கோதை! தாத்தாவை மிரட்டறதுக்காக மட்டும் நான் விஷயத்தை லீக் செய்யலை. நாம நிக்கற விதத்தை காந்தி யண்ணா பாத்துட்டார். அவர் ரொம்ப நல்லவர். புரிஞ்சுப்பார். ஆனா, எப்படியிருந்தாலும் நம்மையறியாம நம்ம நடத்தை யிலே எங்கயாவது விஷயத்தை வெளிய காட்டிடுவோம். உன்னைப் பத்தி கிசுகிசு பேசுவாங்க. அதனாலதான் சொல்ல வேண்டியதாப் போச்சு. உனக்கொண்ணும் கஷ்டமில்லையே' என்றான்.

அவள் நெகிழ்ந்து போய் 'தாங்க்ஸ் மது' என்றாள்.

'அவன் நின்றான்.

'ஹேய்! இனிமே எனக்குத் தாங்க்ஸ் சொல்லாதே' என்றான் கடுப்பாக.

அவள் புரியாமல் பார்க்க 'எல்லாத்தையும் குறிச்சு வச்சுக்க. அப்புறம் மொத்தமாய் வாங்கிக்கறேன்.'

இப்போது கோபிப்பது அவள் முறையானது. 'இந்தக் கோயமுத்தூர் லொள்ளுதானே வேண்டாங்கறது' என்று முணுமுணுத்தாள் வாய்க்குள்.

'என்ன திட்டினே? சத்தமாச் சொல்லு' என்று வம்புக்கு நின்றான்.

அவள் 'க்ளுக்'கென்று சிரித்துக் கொண்டு சொன்னாள்.

அவன் கலகலவெனச் சிரித்துக் கொண்டு நகர்ந்தான்.



இதையெல்லாம் நினைத்துக் கொண்டு மாடிக்குப் படி யேறிப் போகிற அவனைப் பாட்டி அழைத்தார்.

அந்தக் கட்டிடத்தின் முற்பகுதியை பெரிய ஜவுளிக் கடைக்குக் கொடுத்திருந்தான். இவர்கள் பகுதியில் ஒரு கார் நிற்கிற அளவுக்கு வழி... உள்ளே சென்று படியேறினால் பதினாறுக்கு இருபது என்று ஒரு ஹால் வலது புற ஓரத்தில் மீண்டும் மாடிக்குச் செல்லும் படிகள். நேர் எதிராக ஓரத்தில் கதவு ஒன்றிருக்க படுக்கையறை அந்தப் பதினாறு அடிக்குள் பத்தடியில் படுக்கையறை. இடதுபுற ஓரத்தில் நாலடிக்கு நடவை ஒன்று அதன் முடிவில் சமையலறை. அதைத் தொடர்ந்து ஸ்டோர் ரூம் என்று நீளமாகச் சென்றது வீடு. பின்னால புழக்கடை. ஒவ்வொரு சதுர அடிக்கும் அங்கே நல்ல விலை கிடைக்கக் கூடிய நகரத்தின் மையப்பகுதி என்றபோதும் அவன் தனியாக வாடகைக்குக் கட்டிடம் எடுத்துத்தான் முதலில் அலுவலகம் வைத்தான்.

'என்ற பேரன் வாடகைக் கட்டிடத்தில் இருப்பதா' என்று அவரே அந்தக் கட்டிடத்தை வாங்கி அவன் பெயரில் எழுதி வைத்திருந்தார்.

அவன் தாத்தாவிடம் அது வேண்டும் இது வேண்டும் என்று எப்போதும் கேட்டதில்லை. மருதாத்தாள் தங்கள் விவாதத்தின் போது கணவனிடம் அதைத்தான் சொன்னார்.

'என்னைக்கு இந்தப் பாழாப் போன பிரச்சினையெல்லாம் அவனுக்குத் தெரிஞ்சுதோ அன்னைக்கு இருந்தே அவன் வயசுக்கு மீறி யோசிக்கறவனாய்ப் போய்ட்டான். இப்பத் தான்... அவனோட வயசுக்குத் தகுந்த மாதிரி நினைப்புகளே. அவனுக்கு வருது. இதுவரைக்கும் நம்மகிட்டே எதுவுமே அவன் கேட்டதில்லே. இன்னைக்குக் கேட்கறான். விட்டுக் குடுத்தாத்தான் என்னொ?' என்றார். காட்டமாக.

திருநாவுக்கரசு ஒன்றும் பேசவில்லை. மௌனமாகவே அமர்ந்திருந்தார். கேட்கிற விதத்தில் இருக்கும் போதே சொல்லிவிட வேண்டும் என்று அவர் மேலும் பேசினார்.

'நம்மளுக்குத்தான்... இரத்த பந்தம். ஆனா, அந்த விஜயாவுக்கு என்ன? நான் வராட்டியும் பரவால்லே. அவள் சந்தோஷமா இருந்தாப் போதும். கல்யாணம் பண்ணி வைங்கன்னு கதர்றாளே. அவளல்ல மனுஷி...' என்றார்.

'சரி... சும்மா... தொண தொணக்காதே மருதாத்தா...' என்று அவர் எரிந்து விழவும் தன் பேச்சை நிறுத்தினார்.

மனைவியும் பேரனும் கேட்ட கேள்விகள் அவர் மனத்தையும்தான் குடைந்தது.

'டேய்! மது!' என்ற தாத்தாவின் குரல் கேட்டு அவன் திரும்ப இறங்கி வந்தான்.

'என்னங்க அம்ச்சி!' என்றான்.

'சரி... கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யறேன். அந்த விஜயாப் புள்ளையும் வரட்டும். நான் வேண்டாங்கலே. ஆனா, என்ற கேள்விக்குப் பதில் சொல்லு' என்று ஒரு கேள்வியைப் போட்டார்.

அவன் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லக் கொஞ்சம் திணறித்தான் போனான்.

தன் பதிலில் அழுத்தமில்லையென்பது அவனுக்கே புரிந்தது.

★ ★ ★

'ராகவா! லேடீஸ் எல்லாம் வராங்க. பாத்து நல்ல படமா டிக்கட் புக் பண்ணு' என்றுதான் சொல்லியிருந்தான் மதுசூதனன்.



'நல்ல படந்தானே?' என்று அவன் திரும்பத் திரும்ப கேட்டதைப் பார்த்து ராகவனே வெறுத்துப் போய்,

'எல்லாம் நல்ல படம்தாப்பா... எப்படிப்பட்ட படத்துலயும் ரெண்டு மூணு லவ் சீனாவது வராம இருக்குமா? நீ கேக்கற மாதிரிப் படம்னா 'பக்த பிரகலாதா' பக்த ஆஞ்சநேயா இப்படித்தான் பாக்கணும்'என்று கேலி செய்ய எல்லாரும் சிரித்தார்கள்.

'சரி... சரி... விடு' என்று அவனும் சிரித்துக் கொண்டான்.

'சார், ஐஸ்கிரீம் வாங்கிக் குடுங்க... ஸ்நாக்ஸ் வாங்கிக் குடுங்க' என்று ஆளாளுக்கு அவனைக் கேலி செய்ய அவனும் சளைக்காமல் செலவு செய்தான்.

பாக்ஸில் கடைசி இரண்டு சீட்டில் பேசி வைத்துக் கொண்டு அவர்களை அமர வைத்தார்கள்.

'டேய்! மூட்டைப் பூச்சி கிச்சி இருக்கப் போகுது...' என்று அவன் புலம்ப.

'இப்போதைக்கு நீதான் பெரிய மூட்டைப் பூச்சி, என்று கேலி செய்து பேச்சை மாற்றி விட்டான் ராகவன்...

அவள் வெட்கம் புரிந்து கொண்டு பொதுப்படையாகவே பேசிக் கொண்டிருந்தான். அவன் பேசுகிற நகைச்சுவைக்கு எல்லாரும் சிரித்தார்கள்.

ராதா, ராகவன் இருவரும் அவனுக்கு கல்லூரி தோழர்களாம். கல்லூரியின் போதே இப்படித்தான் சிரிக்க சிரிக்கப் பேசுவானாம்... ராதா சொன்னாள்.

படம் ஓட ஆரம்பித்தவுடன் எல்லாரும் அதில் லயித்து விட்டார்கள் என்ற போதும் ஒரு டூயட் காட்சி வரவும் பூங்கோதைக்கு கொஞ்சம் படபடத்துப் போய் விட்டாள்.

அவன்தான் மெல்லிய 'ஹேய்! இத்தனை பேருக்கு... நடுவே... என்ன செய்வேன்னு இப்படி பயப்படறே! நான் பார் உன்னைத் தொடக் கூட இல்லே... ரிலாக்ஸ்... ரிலாக்ஸ்...' என்று ஆசுவாசப்படுத்தியவுடன்தான் அமைதியானாள்.

முதன் முதலாகப் பூவேந்தனின் ரிசப்ஷனின் போது இதேபோல 'ரிலாக்ஸ்' என்று ஆசுவாசப்படுத்தியது நினைவுக்கு வந்தது. அது நடந்து ஏழெட்டு மாதமிருக்கும். இந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகத் தன் வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்கள் வந்து விட்டது என்று எண்ணிக் கொண்டாள்.

இடைவேளையின் போது மதுசூதனன் 'கோதை' தாத்தா கிட்டத்தட்ட சம்மதம் சொல்லீட்டாரு. ஆனா, நானே பதில் சொல்ல முடியாத மாதிரி ஒரு கேள்வி கேட்டாரு' என்றான். கேள்வியையும் சொன்னான்.

பூங்கோதை முகம் மலர்ந்தபடி அதற்கொரு தகவலைச் சொன்னாள்.

அவன் அதிசயித்தான். 'நிஜமாவா? நிஜம்மாவா?' என்றான்.

அவள் சிரித்தாள்... ஆமாங்க... நான் ஒண்ணும் பொய் சொல்லலே... நீங்க வேண்ணா நாகம்மாவைக் கேளுங்க' என்றாள்.

'அப்ப சரி! பெரியவர்கிட்டே போய் இந்தாங்க... நீங்க கேட்ட கேள்விக்கு பதில். சீக்கிரமா அம்மிணியைக் கல்யாணம் செஞ்சு வையங்கன்னு... போர்க்கொடி தூக்க வேண்டியதுதான்' என்று சிரித்தான்.

இடைவேளைக்குப் பிறகு வந்த அந்தக் காட்சியின் போது அவனும் கொஞ்ச இழைய ஆரம்பித்தான்.



'என்னமோ... வாக்குறுதியெல்லாம் குடுத்தீங்க' என்றாள் பூங்கோதை பொய்க் கோபத்துடன்.

'அது... கல்யாணம் லேட்டாக் கீட்டா... ஆச்சுன்னா... அம்மிணியை டிஸ்டர்ப் செய்யக் கூடாதேன்னுதான். இப்பத்தான் சீக்கிரமா ஆகப்போகுதே...' என்று அடிக் குரலில் சிரிக்க அவள் முகம் சிவக்க பேசாமல் அமர்ந்து விட்டாள்.

'தட்ஸ் குட்!' என்று மறுபடியும் சிரித்தான்.



## 26

'உடனே புறப்பட்டு வாங்களேன்' என்ற பதட்டமான பூங்கோதையின் குரல் கேட்டு மதுசூதனன் ஆச்சரியமானான்.

காலை மணி ஏழு.

'ஹேய்! இந்நேரத்துல என்ன வம்பு பண்றே?' என்றான் லேசாகச் சிரித்தபடி.

'ஐயோ, விளையாட்டு இல்லைங்க... கௌரி ஆன்ட்டி தெளிவாப் பேசறாங்க. சுயநினைவு வந்திருக்கிற மாதிரித் தெரியுது' என்றாள்.

'வாட்!' என்றான் மகிழ்ச்சியுடன்.

'எனக்கு எப்படி ஹேண்டில் பண்றதுன்னு தெரியலே. சண்முகசுந்தரம் சாருக்கு போன் செய்தேன். அவரும் வந்துகிட்டிருக்காரு. நீங்க உடன் புறப்பட்டு வாங்க. பாட்டி தாத்தாவை வரச் சொல்லுங்க' என்றாள்.

அவன் காற்றாய்ப் பறந்தான்.

சண்முகசுந்தரம் கௌரியிடம் பக்குவமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்.

'மதுசூதனன் இப்ப லாயரா இருக்கார்' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

'அப்ப... இத்தனை நாள் எனக்கு என்ன ஆச்சு?' என்றார் கௌரி மெல்லிய குரலில்.

'அது... உங்களுக்குத் தலையில் அடிபட்டு சுயநினைவு போயிருச்சு...' என்றார் சண்முகசுந்தரம்.

மதுவைப் பார்த்தவுடன் அடையாளம் கண்டுகொண்டார்.

'மது... மதுக்குட்டிதானே...?' என்று கைநீட்ட அவன் மகிழ்ச்சியோடு கண்கள் கலங்க கட்டிக் கொண்டான்.

'அப்பா... எங்கப்பா?' என்றார்.

மது பதில் சொல்லு முன்னே சண்முகசுந்தரம் குறுக்கிட்டார்.

'அவருக்குக் கோபிப்பக்கம் வேலையாச்சுங்களா? வாரத்துக்கு ஒரு தடவை சனி. ஞாயிறுதான் வர முடியும்' என்றார்.

'ஓ... அப்படியா?' என்றார். அந்த நேரம் சட்டென்று மது பூங்கோதையைக் கைகாட்டி அருகில் அழைத்து,

'அம்மா' இது பூங்கோதை. இவளைத்தான் நான் கல்யாணம் செஞ்சுக்கலாம்னு இருக்கேன்' என்று சைகை செய்ய இருவரும் காலில் விழுந்தார்கள்.

எப்போதும் காலை நீட்டியபடியே தரையில் அமர்ந்திருக்கிற அம்மா இன்றைக்கு சோஃபாவில் அமர்ந்திருக்கப் பார்த்தான். கௌரியும் புன்னகைத்தபடி.



'பொண்ணு நல்ல பொண்ணாமே... இப்ப எல்லாரும்... சொன்னாங்க. நல்லாயிருப்பா' என்று ஆசீர்வதித்தார்.

அரைமணி நேரத்துக்கு மேல் எல்லாரும் பேசிக் கொண்டிருக்க... கௌரியின் அம்மாவும், அப்பாவும் வந்தார்கள்.

கௌரி அம்மாவையும், அப்பாவையும் பார்த்துப் புரிந்து கொண்டார். சட்டென்று எல்லாமும் நினைவுக்கு வந்தது போலும்... சற்று மௌனமானார். பிறகு மயங்கி விழுந்தார். நினைவு போய்விட்டது. மீண்டும் உளற ஆரம்பித்து விட்டார்.

முதன் முறையாகத் தன் முன்னாலே வாய்விட்டு அழுகிற மதுசூதனனைப் பார்த்து பூங்கோதை சட்டென்று அவனை சோஃபாவில் அமர்த்தினாள். தன் தோளில் சாய்த்துக் கொண்டாள்.

'ஏங்க... அப்செட்டாகாதீங்க... சண்முகசுந்தரம் சார், அன்னைக்கே சொன்னாங்க. இப்படி அப்பப்ப நினைவுக்கு வர்றதே நல்ல அறிகுறி. அப்புறம் சுயநினைவு இருக்கிற நேரம் அதிகமாகி அப்படியே நிலைச்சாலும் நிலைச்சிரும்ன்னு' என்றார்.

''ஆமா... சார்! இதுவரைக்கும் பூங்கோதை எப்படி அவர்களை இயல்பா நடத்தினாங்களோ... அதே மாதிரி இயல்பா இருங்க. புரியல்லேன்னாலும் நீங்க பாட்டுக்கு எல்லா விஷயங்களையும் சொல்லிகிட்டிருங்க...' என்றார்.

'எங்க கிட்டே ஒண்ணும் பேசலையேடா' என்று புலம்பிய தாத்தாவையும், பாட்டியையும் தேற்றினாள் பூங்கோதை.

'இத்தனை வருஷம் கழிச்சுப் பேசுவாங்கன்னு நினைச்சமா... இனிமே... நல்ல இம்ப்ரூவ்மென்ட் இருக்கும். ஹெல்த்



இம்ப்ரூவாகறதுக்கு மட்டும் நல்லா கவனம் குடுங்க...' என்றார் டாக்டர்.

'பாத்திங்களா? நாகம்மாப் பாட்டி. அவளுக்கு என்ன புரியும்னு அவகிட்டே எல்லாத்தையும் சொல்றேன்னு கேட்டீங்களே... இனிமே புரியும் பாருங்க... அவங்களுக்குப் புரியுதோ... இல்லையோ... அவங்களுக்குப் புரியுதுன்னு நெனச்சுகிட்டு நாம பேசணும்...' என்றாள் பூங்கோதை.

'ஆமா... பூங்கோதை' என்று அவளும் ஒத்துக் கொண்டாள்.

'கோதை! நாந்தான் என்னமோ பெரிய சோஷியல் வொர்க்கர்ன்னு எல்லாரும் சொல்றாங்க உண்மையில நீதான் சோஷியல் வொர்க்கர்' என்றார் கமலக்கா.

முதலில் எல்லாரும் கலவையான உணர்வுகளுடன் பேசிக் கொண்டிருந்தாலும் குடும்பத்தவர்கள் மட்டும் கடைசியில் மிஞ்சினார்கள்.

இப்போது தாத்தா மீண்டும் கேட்டார். 'பாத்தியாடா... இத்தனை நாள் உங்கப்பன் வந்து பார்த்தானாடா? உன்ற விஜிம்மா வந்து எட்டிப் பார்த்தாளாடா? என்னமோ வந்தா நாங்க அவமானப்படுத்திடுவோம்னு நீ சொல்றே? ஆனா, அவளைப் பாக்கணும்னு நினைப்பிருந்தா... அதையும் மீறி வந்திருப்பாங்கதானடா...' என்று கேட்டார்.

'தாத்தா... நீங்க நினைக்கிற மாதிரி இல்லே! அப்பா மாசத்துக்கு ரெண்டு மூணு தடவையாவது வந்து பாத்துட்டுத்தான் போறாரு. தினம் ஒரு தடவையாவது நாகம்மாவுக்கு இல்லேன்னா கமலக்காவுக்கு போன் பண்ணி அம்மாவைப் பத்தி விசாரிச்சுக்கறாரு...' என்றான்.



தாத்தா நாகம்மாவைப் பார்த்தார். 'நாகம்மா இது நிஜமா?'

'ஆமாங்கய்யா... எனக்கென்னங்கய்யா தெரியும்? அவுங்க வூட்டுக்காரரு வந்து பாக்கறேன்னு கேட்டா... நா எப்படிங்க மாட்டேன்கறது. அவருதான் உங்ககிட்டே சொல்ல வேண்டாம்னு கெஞ்சிக் கேட்டுகிட்டாரு. அதான் சொல்லலே!' என்றார்.

தாத்தா தன்னுடைய கடைசி அஸ்திரமும் சரிந்து விழுவதைப் பார்த்து அடங்கி விட்டார். மதுசூதனன் 'அம்ச்சி! எது எப்படியிருந்தாலும் சரி... போனது போகட்டும். இனியாவது அம்மாவுக்கு முழுசா சுயநினைவு வரும்போது நாம கொஞ்சம் ஒத்துமையா இருக்கலாம்னு நினைக்கறேன். மறுபடியும் ஏறுக்கு மாறா நின்னா... அவங்க உடம்புதான் பாதிக்கப்படும்' என்றான்.

அது உண்மை என்பதால் யாருக்கும் எதுவும் பேச வழியில்லாமல் போனது.

'அது சரி... எப்படியோ என் மக சுயநினைவுக்கு வருவான்னு நம்பிக்கையாவது வந்திருக்கு. இனிப் பேரனுக்குக் கல்யாணம் நல்லாப் பண்ற வழியைப் பாருங்க' என்றார் மருதாத்தாள்.

அப்போது பூங்கோதை ஒரு யோசனை சொன்னாள்.

யோசனைக்குப் பெரும் வரவேற்புக் கிடைத்தது பார்த்து பூங்கோதையே கொஞ்சம் மிரண்டுதான் போனாள்.

★ ★ ★

மகிழ்ச்சியும், சோகமும் கலந்த உணர்வே அன்றைக்கு எல்லாருக்கும் இருந்தது.

'கௌரி பேசினாளா? அப்படியா? அவ என்னை நாக்கைப் பிடுங்கற மாதிரி கேள்வி கேட்டாக் கூடப் பரவால்லே. இல்லே... வேற என்ன தண்டனை வேண்ணாலும் குடுக்கட்டும்... மறுபடியும் நினைவு வந்து மனுஷியா நடமாடினாப் போதும்' என்று உருகிப் போனார் அருணாச் சலம்.

நினைவு கொஞ்ச நேரமாவது வந்ததே என்பது மகிழ்ச்சி என்றாலும் நிரந்தரமாய் இல்லாமல் போய்விட்டதே என்ற வருத்தம் வேறு.

மதுசூதனன் மட்டும் மகிழ்ச்சியின் எல்லையில் இருந் தான்.

அம்மா தன்னிடம் பேசி விட்டார். சுயநினைவோடு தன்னிடம் பேசி விட்டார் என்பதில் அவனுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி.

பூங்கோதை கூட அன்று அலுவலகத்துக்கு வரவில்லை. அத்தைக்கு ஸ்ட்ரெயினாகியிருக்குமோ என்னமோ நான் கூட இருக்கிறேன் என்று இருந்து விட்டாள்.

அவனும் கோர்ட்டுக்குப் போய்விட்டு பிற்பகல் போக வேண்டும் என்று நினைத்தான். போக முடியவில்லை.

மாலையில் தாத்தா பாட்டி மூட் அவுட்டாகி இருந்தார்களே என்று அங்கே வந்து விட்டான். அவர்களுடன் சற்று நேரம் அளவளாவினான்.

தனது அறைக்கு வந்தவுடன் மீண்டும் சிந்தனையி லாழ்ந்தான்.

திடீரென்று அவனுக்கு அது மனதில் பட்டது. இத் தனைக்கும் காரணம் பூங்கோதை என்று.



முதன் முதலில் அவள் குழந்தைகளை அம்மாவின் எதிரில் விளையாட விட்டது. சைக்காலஜிஸ்டைப் பார்க்க வேண்டும் என்று தன்னைத் துளைத்தெடுத்தது என்று எவ்வளவு முயற்சிகள் எடுத்தாள்.

சண்முக சுந்தரம் கூட சொன்னார். அடிக்கடி அவரிடம் அப்பாயின்மென்ட் வாங்கி டிஸ்கஷன் செய்து விட்டு வருவாளாம்.

'ரொம்ப நம்பிக்கையுள்ள பெண். பாஸிடிவ் திங்கிங் உள்ள பெண்' என்று பாராட்டினான்.

இந்த எண்ணம் தோன்றியதும் அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

மணியைப் பார்த்தான் ஏழு.

தாத்தா பாட்டியிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

'புறப்படு... பூங்கோதை!' என்று அவன் படுத்திய அவசரத்தில் அவளே சலித்துப் போனாள்.

'என்னங்க... இது! எங்கே போகணும்' என்றாள் வியப் பாக.

'எங்கெங்கயோ... போகணும். நீ... வா' என்று இழுத்துக் கொண்டு போனான்.

முதலில் நகைக்கடையில் நுழைந்தான். 'எனக்கெதுக்கு இதெல்லாம்' என்று சொல்லிப் பார்த்தாள்.

'ஏய்... கொன்னே போடுவேன். மரியாதையாய் ஏதாவது வாங்கிக்க' என்று அவன் பாதி உண்மையும், பாதிப் பொய்யுமாய் மிரட்ட அவள் பணிந்தாள்.





புத்தகக் கண்காட்சிக்கு அழைத்துப் போனான். அவளுக்குப் பிடித்த புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தான்.

ஜவுளிக் கடையில் சுடிதார், புடவை என்று அவனே தேர்ந்தெடுத்தான்.

கடைசியாக ஒரு நல்ல ஓட்டலுக்கு அழைத்துப் போனான்.

'கல்யாணத்துக்கு... முன்னாடி இப்படி எல்லாம் வாங்கிக்கக் கூடாதுங்க' என்று அவள் முணுமுணுக்க.

'வாயைத் திறக்காதே! பேசாம உட்கார்' என்று மிரட் டினான்.

அவள் ஒன்றும் செய்ய இயலாமல் தவிப்பதைப் பார்த்துச் சிரித்து விட்டான்.

'ஹேய்! கோதை பொதுவாப் பொண்ணுங்க இப்படி வாய்ப்புக் கிடைச்சா அள்ளிக்கப் பாப்பாங்கன்னுதான் கேள்விப் பட்டிருக்கேன்... நீ என்ன... இப்படி?' என்று சிரித்தான். பிறகு தொடர்ந்து.

'பாரு... தங்கம்ஸ்... இது கல்யாணத்துக்காக இல்லே. இன்னைக்கு அம்மாவுக்கு சுயநினைவு வந்து நம்ம ளோட பேசினாங்க இல்லே... நம்மளை ஆசீர்வதிச் சாங்க... இல்லே... அந்த சந்தோஷத்தைக் கொண்டாட...' என்றான்.

'ஓ...!' என்று அவள் சமாதானமானாள்.

அவன் அவளை ஆழமாகப் பார்த்தபடி 'கோதை!' உண்மையில் இது உனக்குக் கிடைச்ச வெற்றி. நாங்கள்ளாம். இப்படி யோசிக்கவேயில்லை... பாரு. நீதானே... சைக்கால ஜிஸ்ட் உளவியல் ரீதியான அணுகுமுறைன்னெல்லாம்



யோசிச்சே... அதுக்குப் பாராட்டு விழான்னு வச்சுக்கயேன்' என்றான்.

'போதும்... ரொம்பப் பெரிசு பண்ணாதீங்க' என்றாள் வெட்கத்துடன்.

அதற்குள் இனிப்பு வந்தது. உண்டார்கள். அவன் மேலும் தொடர்ந்தான்.

'அது மட்டுமில்லே! 'சூப்பர் ஐடியா வேற குடுத்திருக்கே!' என்று மேலும் நெகிழ்ந்தான்.

பூங்கோதை திருமணத்தை அவர்கள் வாடகைக் குடி யிருப்பில் ஒரு பகுதியில் இருக்கிற அந்தக் காலியிடத்திலேயே நடத்தலாம் என்று ஆலோசனை சொன்னாள்.

'எதுக்கு?' என்று மற்றவர்கள் கேட்ட பொழுது.

'இல்லே! இங்கேன்னா கௌரி ஆன்ட்டியையும் கல்யாணப் பந்தல் தெரியற மாதிரி ஒரு போர்ஷன்ல உட்கார வச்சர்லாம். அவங்க முன்னாடியும் கல்யாணம் நடந்த மாதிரி இருக்கு மில்லே!' என்றாள்.

அது எல்லாருக்கும் பிடித்துப் போனது.

'ஆமா... அதுவும்... நல்லதுதான்... கல்யாண் மண்டபத்துல தேதி கிடைக்கணும்னு அலைய வேண்டாம்... பெரிசா பந்தல் போட்ரலாம்' என்று தாத்தா, பாட்டி திட்டம் போட ஆரம்பித்தார்கள்.

தாத்தா அப்போதே ஒரு தேதியைக் குறித்தார். பிறகு என்ன நினைத்தாரோ,

'டேய்... மது! இந்தத் தேதி உங்க அப்பனுக்கும், உன்ற விஜிம்மாளுக்கும் சௌகரியப்படுமான்னு கேட்டுச் சொல்லு...' என்றார்.

அவன் போன் செய்து கேட்டான்.

'பெரியவங்க எப்படிச் சொன்னாலும் சரி' என்று சொல்லி விட்டார்கள் என்பதில் எல்லாருக்கும் மகிழ்ச்சி.

எல்லா மகிழ்ச்சியையும் பங்கு போட்டுக் கொள்ளவே இந்த விருந்து என்றான் மது.

'அப்ப நானும் உங்களுக்கு வாங்கித் தரணுமே...' என்றாள் பூங்கோதை.

'சரி... வாங்கிக் குடு' என்றான்.

'மோதிரம் வாங்கித் தரட்டுமா? ஆனா, பணம் கொண்டு வர்லையே?' என்றாள்.

'சரி... நான் கடனாத் தரேன். அப்புறம் குடு...' என்றான்.

மகிழ்ச்சியாகத் திட்டம் போட்டுக் கொண்டார்கள். பேசிக் கொண்டிருக்கையிலேயே மறுபடி ஸ்வீட் வர.

'மறுபடியுமா?' என்று அவள் விழிக்க...

'நீ... பாதி... நான்... பாதி... கண்ணே!' என்று அவன் பாட்டுப் பாடினான்.

சாப்பிட்டு முடிக்கும் வரை அவளை சீண்டியபடி ஏதோ சொல்லிக் கொண்டே இருந்தான்.

அவன் மகிழ்ச்சி புரிந்து அவளும் வெட்கத்துடன் அவன் பேசியதையெல்லாம் கேட்டுக் கொண்டாள்.

திரும்ப நகைக் கடைக்கு வந்து மோதிரம் வாங்கிக் கொண்டு வந்து அவளை வீட்டில் இறக்கி விட்டான்.

'உள்ளே வாங்க!' என்றாள்.

போனான்.



'கமலக்கா... ஏதோ கூட்டம்னு போயிருக்காங்க' என்றவள்.

'சூடா... பால் கலக்கித் தரட்டுமா?' என்றாள்.

'ம்... குடு...' என்றான் அவன் புத்தக அலமாரியில் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டு நின்றிருந்தான்.

புறப்படுகிற நேரத்தில் அவளிடம் நெருங்கி நின்றான்.

'வெறும் மோதிரத்துடன் தப்பிச்சர்லாம்னு பாத்தியா!' என்றான்.

மதுசூதனனின் கைகள் அவளை வளைத்துப்பிடிக்க... 'ஐயோ! என்ன இது!' என்று அவள் திகைக்க.

'உண்மையான பரிசை இப்பத்தான் வாங்கிக்கப் போறேன்...' என்று அவள் முகம் நோக்கிக் குனிந்தான். சற்று நேரம் கொஞ்சி மகிழ்ந்தான்.

அவனது அன்பு மழையில் அவளும் தன் துன்பம் எல்லாம் மறைந்தவளாய் இடம் கொடுத்து நின்றாள்.



27

'ஹேய்! இன்னும் மாநாடு முடியலயா? எப்பத்தான் மேல வரப் போறே?' என்ற மதுசூதனனின் குரல் கேட்டு எல்லாரும் நமுட்டுச் சிரிப்புச் சிரித்தார்கள்.

'வரேன்! வரேன்! எதுக்கு டென்ஷனாகறீங்க?' என்று சத்தமாகப் பதில் குரல் கொடுத்தாள்.



'சட்டாம்பிள்ளை ஆரம்பிச்சுட்டான்' என்று சிரித்தார் அருணாச்சலம்.

'நாளைக்கு ஒரு முக்கியமான கேஸ் இருக்கு. நிறைய பாயிண்ட்ஸ் எடுக்க வேண்டியிருக்கு வா...' என்று மறுபடியும் அவனிடம் இருந்து பதில் வந்தது.

'நான் போறேன்... அத்தை... நரசிம்ம மூர்த்திக்குக் கோபம் வந்துடும்...' என்று சிரித்துக் கொண்டே எழுந்தாள்.

மதுசூதனனுக்கும், பூங்கோதைக்கும் திருமணம் முடிந்து ஆறுமாதங்களாகி இருந்தன.

அவ்வப்போது துண்டு துண்டாக நினைவுக் கீற்றுகள் வந்து போய்க் கொண்டிருந்த கௌரிக்கு கடந்த மூன்று மாதத்துக்கு முன்பு முழுமையாகவே நினைவு வந்து விட்டது.

குடும்பமே மகிழ்வில் ஆழ்ந்து விட்டது. மெது மெது வாகப் பழைய நினைவுகள் அவருக்கு வந்த போதும் யாராவது ஒருவர் கூட இருந்து கொண்டே இருந்தார்கள். தனிமையில் அவரை விட்டு விடாமல் மிக எச்சரிக்கையாக நடத்தி முழுமையாக மனோபலம் பெறுகிற மாதிரி செய்தார்கள்.

ஆர்.எஸ்.புரத்தில் இருந்த பங்களாவை விரிவுபடுத்தினார்கள். தாத்தாவும் பாட்டியும் பின்னாலே கெஸ்ட் ஹவுஸில் இருந்தார்கள்.

பூங்கோதை நேரம் கிடைக்கும்போது விஜயா மதுசூதனனை வளர்த்த விதம் பற்றிச் சொல்லி வந்தாள். படிப்படியாக விஜயாவின் மேல் நல்லபிப்பிராயம் ஏற்படுத்திய பின் கௌரியே பார்க்க விரும்பினார்.



பார்த்த மாத்திரத்தில் ஆனால் ஒட்டிக் கொண்டார்கள். இன்னமும் கௌரி உடலளவில் முழுபலம் பெற்று விட வில்லை என்பதால் விஜயா அவரை முழுமையாகக் கவனித்துக் கொண்டார்.

அருணாச்சலமும் கோவைக்கே மாற்றல் பெற்று வந்து விட்டார். விஜயா கோபிக்கு அருகே இருந்த அவர்கள் நிலத்தில் தானே விவசாயம் பார்ப்பதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டார். ஏற்கனவே கதிர்வேலுக்கு ஒரு பெரிய ஆட்டோ மொபைல் என்ஜினியரிங் வொர்க் ஷாப் வைத்துக் கொடுத்திருந்தார்கள்.

ஒன்றிரண்டு முறை கௌரியும் அங்கே காரில் போய் வந்தார்.

இன்றைக்கு எல்லாரும் கூடியிருந்தார்கள். அதனால் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். கிட்டத்தட்ட மணி பதினொன்றரைக்குப் பின்தான் மதுசூதனன் அப்படிக் குரல் கொடுத்தான்.

அந்தப் பெரிய படுக்கையறையில் நான்கு பக்கமும் தனிக் கட்டில்கள்.

ஒன்றில் அருணாச்சலம். மற்றொன்றில் கௌரி. மற்றொன்றில் விஜயா. இன்னொன்றில் கதிர்வேல். இவர்களுக்கு நடுவே படுக்கையை விரித்து போட்டுக் கொண்டு நாகம்மா என்றுதான் உறங்குவார்கள்.

கதிர்வேல் கௌரியின் செல்லப்பிள்ளையாகி விட்டான். இப்போதெல்லாம் எது வேண்டுமானாலும் அவன் கௌரியிடம் தான் கேட்பது. இன்றைக்கு சற்று நேரம் முன்பு வரை அவன் தன் சகோதரனை ஏகமாய்க் கேலி செய்து கொண்டிருந்தான்.

'கௌரிம்மா... ஸ்வீட் குடுத்து காக்காய் பிடிப்பாங்க. கேக் குடுப்பாங்க. விதவிதமாய்ச் சமையல் செய்து ஆளைக் கவர் பண்ணுவாங்க. ஆனா, எங்கண்ணி மாதிரி எங்கயுமே பார்த்திருக்க மாட்டீங்க... தெரியுமா?' என்று ஆரம்பித்தான்.

'ம்...' என்று கௌரி சுவாரசியமாகக் கேட்க.

'பழைய குழம்பு... தெரியுமா?' சுண்டக்குழம்பு... அதைக் கொடுத்து... கோயமுத்தூரோட ஃபேமஸ் லாயரையே வளைச்சுப் போட்டுட்டாங்கன்னா நம்புவீங்களா?' என்றான்.

பூங்கோதை வெட்கத்துடன் 'சும்மாயிருங்க... கதிர்...' என்றாள்.

'டேய் தள்ளிப் படுடா' என்று அம்மாவின் அந்தப் பக்கம் மடியில் படுத்துக் கொண்ட மதுசூதனன் சிரித்தான்.

'ஆமா... அதுக்கு என்னங்கறே...? இப்போ? எனக்குப் பிடிச்சுது... உனக்கென்ன அதைப்பத்தி...' என்றான்.

'எனக்கென்னப்பா... அதைப் பத்தி... எனக்கொண்ணும் இல்லே. ஆனா, விஜிம்மா... ஒரு நாளைக்குப் பழைய குழம்பு ஊத்தினா சாப்பிடுவியா? நீ...' என்றான்.

அதற்கும் சிரித்தான் மதுசூதனன்.

'டேய்... சுண்டக் குழம்பு... நிஜம்மாவே டேஸ்ட்டுடா...' என்றான்.

'ஐயோ! இந்தக் சுண்டக்குழம்பு... புராணம் சலிச்சுப் போச்சு... விட்டுருங்க...' என்றாள் பூங்கோதை.



'நாங்க அண்ணனும் தம்பியும்... என்னவும் பேசுவோம். நீ உன் வேலையைப் பாரு... ஏற்காடு...' என்றான் மதுசூதனன்.

உடனே பூங்கோதை முகம் சிவந்து 'ஷெல்ஃபில் என்னத்தையோ வைக்க மறந்துட்டேன்' என்று எழுந்து ஓடினாள்.

கௌரிம்மாள் சிரித்துக் கொண்டே 'அதென்னடா... அவளை சும்மா ஏற்காடு ஏற்காடுங்கறே...' என்றார்.

அதற்கு மதுசூதனன் 'அது... முதல் முதல்ல... என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியான்னு... ஏற்காட்ல வச்சுத்தான் கேட்டேன். அதுதான்...' என்று சமாளித்தான்.

'பொய்...! பொய்!' என்றான் கதிர்வேல்.

'அண்ணி சொல்லீட்டாங்க!' என்றான்.

'போச்சு... சொல்லீட்டாளா!' என்றான் சோகமாய்.

'கௌரிம்மா... ஏற்காட்டில் குரங்குங்களையெல்லாம் பார்த்து அண்ணி ரொம்ப ரசிச்சாங்களாம். குட்டிக் குரங்குகள்ளாம் எவ்வளவு அழகுன்னு சொல்லிச் சொல்லி மாஞ்சு போனாங்களாம். அதிலிருந்து அண்ணன் அவர்களுக்குக் குட்டிக் குரங்குன்னு பேர் வச்சுட்டாங்க... அதுக்குக் கோட் வர்ட்தான் ஏற்காடாம்' எனவும் எல்லாரும் சிரித்தார்கள்.

'கோதை!' இங்கே வா...' என்று அழைத்தார் கௌரி.

அவள் தயக்கத்துடன் வந்தாள். 'இதோ பார்... இவன் பண்ற லொள்ளையெல்லாம் நீ தாங்கிக்கணும்னு அவசியம் இல்லே!' என்கிட்டே சொல்லு... அவனை என்னன்னு



நான் கேட்கறேன்' என்று அழைத்து அருகில் அமர்த்திக் கொண்டார்.

'டேய்... நமக்குப் போட்டிக்கு வரா... பாரு...' என்றான் மதுசூதனன்.

சிரிப்பும், கேலியுமாக அவர்கள் நேரம் கழிப்பதை அருணாச்சலம் மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டார்.

இப்போது மதுசூதனின் குரல் கேட்டதும் சபை கலைந்தது. விஜயா சமையலறையில் எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்த எழுந்து போனார். நாகம்மாவும் உதவிக்கு எழுந்து போனார்.

கதிர்வேல் 'நான் கொஞ்ச நேரம் டி.வி. பார்க்கறேன்' என்று எழுந்து அடுத்த அறைக்குப் போனான்.

அருணாச்சலம் கௌரியைப் பார்த்துப் புன்னகைத்த படி கட்டிலில் சாய்ந்து அமர்ந்தார். கௌரி அப்போது கேட்டார்.

''ஏங்க... ஆபீஸ்லயும் இப்படிச் சிரிச்சுகிட்டுத்தான் இருப்பாங்களோ?' என்று. 'கிளையண்டுகளுக்கு இவங்க ரெண்டு பேரும் ஹஸ்பெண்ட் அண்ட் வைஃப்ன்னு கண்டு பிடிக்கவே நாளாகுமாம்..' என்றார்.

'ஓ..!' என்றார் கௌரி. அருணாச்சலமே சற்று நேர மௌனத்திற்குப் பிறகு சொன்னார்.

'ஏன்.. கௌரி மதுவெல்லாம்.. வாழ்க்கையை எப்படி நடத்தணும்னு ஒரு வரையறை. அணுகுமுறை வச்சிருக்கான். நமக்கெல்லாம் இப்படி வாழத் தெரியலே.. பாரு..' என்றார்.



'ஒரு வேளை நம்மளைப் பார்த்துத்தான் எப்படி வாழக் கூடாதுன்னு கத்துகிட்டாங்களோ.. என்னமோ..'! என்றார் கௌரி ஒரு பெருமூச்சுடன்.

'சரி.. விடு போனது போகட்டும்.. இனியாவது நிம்மதியா இருக்கப் பார்ப்போம்' என்றார் அருணாச்சலம்.

★ ★ ★

அதே நேரம்!

'ஏங்க, நாளைக்கு என்ன முக்கிய கேஸ் எனக்கே தெரியாம?' என்று வந்தாள் பூங்கோதை.

'அது எனக்கேத் தெரியாதே!' என்று அவன் சிரித்தான்.

'என்னது?' என்று அவள் திகைக்க அவன் குறும்பாகக் கண் சிமிட்டினான்.

'ஹேய்! கோதை, இந்தக் கதிர் பய வேற சுண்டக் குழம்பு அது இதுன்னு சொல்லி பழைய ஞாபகத்தையெல்லாம் கிளறி விட்டுட்டான். அப்புறம்.. ஏற்காடு பத்தி வேற பேச்சு வந்துடுச்சு. அதான்..' என்று வாக்கியத்தை முடிக்காமல் இழைகிற கணவனைப் பார்த்து அவள் முறைத்தாள்.

'இன்னைக்கு எல்லாரும் இருக்காங்க.. கொஞ்ச நேரம் பேசலாம்ன்னா..' என்று கோபித்தாள்.

'போதும்.. பேசினதெல்லாம்.. நீ என்னைக் கொஞ்சம் கவனி. போனவாரமெல்லாம் ஒரு வெட்டுக் குத்துக் கேஸ். நொந்து போனேன் ஸோ.. நீயாவது கொஞ்சம் மருந்து போட்டு விடு..' என்றான்.

அவளுக்கு பாவமாகிப் போனது.

'வர வர ரொம்ப வேலை செய்றீங்க! கொஞ்சம் கேஸ்களைப் பிரித்து விடுங்க..' என்றாள்.

'இல்ல.. கோதை. இது கொஞ்சம் விவகாரமான கேஸ்.. அதான் நானே பாக்க வேண்டியதாப் போச்சு..' என்றான் விளக்கம் போல.

'அது சரி.. ஆளுக்கேத்தபடிதானே கேஸ் வரும்..' என்றாள்.

அவன் கண்களைச் சுருக்கியபடி பார்த்து 'அப்படீன்னா?' என்றான்.

அவள் கிளுகிளுப்பாய்ச் சிரித்தாள். பின்,

'அப்படீன்னா..! விவகாரமான ஆளுக்கேற்ப விவகாரமான கேஸ்..' என்றாள்.

'ம்.. லொள்ளுப் பேச ஆரம்பிச்சாச்சு..' என்று அருகில் இழுக்க.. இசைந்து கொடுத்தாள்.

'மது!' என்றாள் கிறக்கக் குரலில்.

'ம்..!' என்றான்.

'எல்லாரும் ஒரே டிமாண்ட்ஸ் வைக்கிறாங்க' என்றாள்.

'யாரு? என்ன டிமாண்ட்?'

'இல்லே!' கௌரி அத்தைக்கு ஒரு பேரக் குழந்தை வேணுமாம். அதுவும் பையனாம். ஏன்னா நாலு வயசிலே யிருந்து நீங்க வளர்ந்ததைப் பார்க்கலையாம். அதுவும் உங்க ஜாடையிலயே வேணுமாம்..' என்றாள்.

'ம்..!' என்றான் தொடர்ந்து அதே குரலில்.



'விஜியத்தைக்குப் பொண்ணு வேணுமாம். ஏன்னா ரெண்டு வம்புக்காரப் பசங்களை வளர்த்துப் போரடிச்சிருச்சாம். அதனால என்னை மாதிரி சாதுவாய் ஒரு பொண்ணு வேணுமாம்..' என்றாள்.

'நீ..? ரொம்ப.. சாதுவா..? யாரு சொன்னது?' என்றான்.

'ஏன்.. அப்படிச் சொல்றீங்க? என்றாள்.

'பூவேந்தனை வெளியே போய்யான்னு சொன்ன ஆளாச்சே..!' என்றான்.

அவள் சட்டென்று மௌனமாகி விட்டாள்.

'ஹேய்! கோதை. அதுதான் உங்கிட்டே எனக்கு ரொம்பப் பிடிச்சது. கிராமத்துல வளர்ந்த பொண்ணு, ரொம்ப வெளி யுலகம் தெரியாத பொண்ணுங்கறபோது கூட எப்படிக் கரெக்டா.. முடிவெடுத்தே. அது மட்டுமில்லே. முதல்ல. அவனோட நிராகரிப்பை எப்படி டாக்கிள் செஞ்சே. அம்மா.. பாரு.. நிராகரிப்பைத் தாங்க முடியாம.. ஆகிப் போனதை' என்றான்.

குரல் ஆழமாகிக் கொண்டே போனது.

கோதை சிந்தனையுடன் பேசினாள். 'மது! அவங்க மாமாவோட வாழ்ந்தவங்க. ஆனா, எனக்கு வாழ்க்கைன்னா என்னன்னு தெரியல. இப்பப் புரியுது. எதுவும் புரியாமே நான் அவன் பாவம்ன்னு நினைக்கச் சம்மதம் சொல்லீட்டேங்கறது. அனுதாபங்களின் அடிப்படையிலயோ.. கவர்ச்சிகளின் அடிப்படையிலயோ வாழ்க்கை அமையக் கூடாதுங்க..' என்றாள்.

'ஆமா.. வாழ்க்கைன்னா.. அது புரிதலின்.. அடிப் படையில.. இருக்கணும்..' என்றான்.



'அது சரி.. பாயிண்டுக்கு.. வாங்க..' என்றாள் கோதை.

'என்ன.. பாயிண்ட்?'

'அதாங்க.. ஆண் பொண்ணுன்னு மாத்தி மாத்திக் கேக்கறாங்களே!' என்றாள்.

அவன் விரல் விட்டு எண்ணினான்.

'ஒண்ணு, ரெண்டு மூணு..'ன்னு.

'மூணாவதா? ஐயோ வேண்டாம்..' என்றாள்.

'ஆமா.. இவர்களுக்கு ஆளுக்கு ஒண்ணு கொடுத்திட்டா.. நமக்கு.. மூணாவது..' என்றான். அவள் கழுத்தில் முகம் புதைத்து.

'நான் குடுக்கறதாவே இல்லையே?' என்றாள்.

'ஏன்?' என்றான்.

''நம்ம... குழந்தைகளையெல்லாம்.. நீங்கதான் வளர்க் கணும். உங்களைப் பாத்துத்தான் அவங்க.. வாழ்க்கையைக் கத்துக்கணும்.. உங்களைத்தான் அவங்க ரோல் மாடலா வச்சுக்கணும். உங்க நேர்மை, தெளிவான முடிவு.. எல் லாருடைய தவறுகளையும், கூட்டிக் காட்டறது. ஆனா, மன்னிச்சு ஏத்துக்கறது.. இந்த அருமையான குணமெல்லாம் அவங்களுக்கும் வரணும்..' என்றாள்.

'ஹேய்!' ரொம்பக் குளிருது பொண்ணே! ஏகமா ஐஸ் வைக்கிறே..' என்றான்.

'ஐஸ் இல்ல மதுசூதனன்... நிஜம்தான்..' என்றாள்.

அவன் கண்கள் மின்னச் சிரித்தான்.

'ஓஹோ.. இது சரியில்லைடாப்பா..' என்றான் கலகல வெனச் சிரித்தபடி.



பிறகு அவனே 'சரி.. விடு.. ஏதாவது டிராமா.. பண்ணிரலாம்' என்றான்.

'டிராமாதானே.. அது நல்லாச் செய்வீங்களே?' என்றாள்.

'டிராமா.. மட்டுமில்லே.. கருப்பாயி வேற நிறைய விஷயங்களும் எனக்குத் தெரியும்..' என்றான்.

அப்படி அழைத்தால் அவன் வேறு மூடில் இருக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்து விடும்.

அவன் சட்டென்று சீரியஸாக 'கோதை என்ட்ரன்ஸ் எழுதி லா படிக்கறேன்னு ஒரு ஐடியா இருந்ததே.. என்னாச்சு?' என்றான்.

வேண்டாங்க.. நான் பி.ஜி.எல். கம்ப்ளீட் செஞ்சுட்டு அப்புறம் எம்.ஏ. சைக்காலஜி போறேன்..' என்றாள்.

'சைக்காலஜியா.. அது எதுக்கு?' என்றான்.

''நிறைய டைவர்ஸ் கேஸ்ங்க. வருதில்ல. அவங்களுக் கெல்லாம் கையிடன்ஸ் குடுத்து. காம்ப்ரமைஸ் பண்ணத்தான்' என்றாள்.

'தட்ஸ் குட்.. செய்.' என்றான். பிறகு தொடர்ந்து 'எப்படியோ சைக்காலஜி அப்ளை செய்து ஒரு ஆளைக் குணமாக்கிட்டே. இன்னொரு ஆளைப் பைத்தியமாக்கிட்டே' என்றான்.

அவள் புரியாதவளாய்ப் பார்க்க 'என்னைத்தான்.. கோதை.. கோதைன்னு ஒரே பைத்தியமாக்கிட்டே...' என்றான்.

அது எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் தெரியுமா? என்று அவள் மகிழ்ச்சியாய் சிரித்தாள்.

இயற்கையான யதார்த்தமான அந்தக் கள்ளங் கபடமற்ற கிராமத்து முகத்திலிருந்து உதிர்ந்த சிரிப்பில் கரைந்து போய்க் கண்ணிமைக்காமல் பார்த்தான் மதுசூதனன்.

அந்தப் பார்வையில் தெரிந்த காதலில் அதிலிருந்து உதிர்ந்த அன்பு மொழிகளின் ஆட்சியில் அவள் தன் துன்பங்களுக் கெல்லாம் விடை கொடுத்தாள்.

இரண்டு அறிவார்ந்த நெஞ்சங்களின் இணைப்பில் உறவின் உன்னதம் அங்கே ஆட்சி செய்து கொண்டிருந்தது.

இனிய குழலோசை எங்கோ காற்றில் மிதந்து வந்தது.